விலை: ரூபா 30.00

# உதயன்

பக்கம் - 64

சுடர் 28 | கதிர் 111 | வள்ளுவர் ஆண்டு 2044 | பங்குனி 4 ஞாயிறு 17.03.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com



# வெள்ளைக் கொடியுடன் முகாமுக்குள் புகுவோம்

## என்ன விலை கொடுத்தும் சொந்த மண் திரும்புவோம்

## வலி.வடக்கு மக்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

"எங்களைச் சொந்த இடங்களுக்கு வெகு விரைவில் விட வேண்டும். இல்லையேல் நாங்கள் வெள்ளைக் கொடியுடன் எங்கள் மண்ணுக்குச் சென்றே தீருவோம். படையினர் சுட்டாலும் பரவாயில்லை.

விடுவார்கள் விடுவார்கள் என்று எதிர் பார்த்துக் களைத்துப் போனோம். எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. நாங்கள் சொந்த மண்ணுக்குச் செல்வதற்காகச் சூடு வாங்கவும் தயாராக இருக்கிறோம்."

இவ்வாறு 23 வருடங்களாக இடம் பெயர்ந்து இன்னமும் அகதிகள் என்ற பெயருடன் வாழ்ந்துவரும் வலி.வடக்குப் பகுதியின் மயிலிட்டி, பலாலி, காங்கேசன் துறை மக்கள் தெரிவித்தனர்.

வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் படையினரின் கட்டுப்பாட்டில் உயர்பாதுகாப்பு வலயமாகவே உள்ளன. இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்வதற்காக 28 ஆயிரம் பேர் வரையில் பதிவுசெய்துவிட்டுக் காத்திருக்கின்றனர்.

இருப்பினும் உயர்பாதுகாப்பு வலய

பார்க்க பக்கம் 04

## காணாமற்போன எவரும் தடுப்பு முகாமில் இல்லை

**வன்னிக் கட்டளைத் தளபதி**

யாழ்ப்பாணம்,மார்ச் 17

இலங்கையில் காணாமற்போன எவரும் தடுப்பு முகாம்களிலோ, புனர்வாழ்வு நிலையங்களிலோ, இராணுவ முகாம்களிலோ இல்லை. நீங்கள் சுலோகங்கள் ஏந்திப் போராடுவதாலேயோ, இராணுவத்தையும், அரசையும் குற்றம் சுமத்துவதாலேயோ எந்தப் பயனும் இல்லை.

இவ்வாறு வன்னிப் பிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

வவுனியா ஜோசப் படை முகாமில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

காணாமற்போனவர்கள் எவரும் எந்தவொரு முகாம்களிலும் இல்லை. இதனை நான் இராணுவத்தின் உயர் அதிகாரி என்ற வகையில் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன்.

மக்கள் காணாமல் போனவர்கள் தொடர்பாகச் சுலோகம் ஏந்திப் போராடுவதாலேயோ அல்லது அதற்காக

பார்க்க பக்கம் 04

## போராட்டங்களை முடக்க முடியாது

**மாணவர்கள் தமிழக அரசுக்கு எச்சரிக்கை**

சென்னை,மார்ச் 17

கல்லூரிகளையும், விடுதிகளையும் தமிழக அரசு மூடலாம். எங்களுக்கு வழங்கப்படும் உணவையும் நிறுத்தலாம். ஆனால் எங்களின் போராட்டத்தை முடக்க யாராலும் முடியாது. எனவே இந்தச் செயலை வன்மையாக கண்டிக்கிறோம். எத்தனை தடை வந்தாலும் எங்கள் போராட்டம் தொடரும்.

இவ்வாறு தமிழக மாணவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்த தமிழ்

பார்க்க பக்கம் 04

## பிக்குகள் மீது தாக்குதல்



தஞ்சை, மார்ச் 17

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக ஒட்டுமொத்த தமிழகமும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், அங்கு சுற்றுலா சென்ற இலங்கைப் புத்த பிக்குகள் தஞ்சாவூரில் ஓட ஓட விரட்டித் தாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை இனப்படுகொலைக்கு எதிராக அர

பார்க்க பக்கம் 04

## இலங்கை சார் நாடுகளை குறிவைக்கிறது அமெரிக்கா

(ஜெனிவாவிலிருந்து ஆர்.சிவராஜா)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக பிரேரணையை முன்வைத்திருக்கும் அமெரிக்கா, அதனை பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்திலுள்ள ஒரு சில நாடுகளையும் தமது பக்கம் வளைத்துப்போடும் இராஜதந்திர முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

அமெரிக்காவின் இந்த அதிரடிப் போக்கு இலங்கைக்கு மேலும் அதிர்ச்சியை கொடுத்திருக்கும் அதே

பார்க்க பக்கம் 04

**காணாமற்போனோரின் உறவுகளை**

## மிரட்டுகின்றனர் புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 17

காணாமற் போனவர்களின் உறவினர்களால் கொழும்பில் கடந்த வாரம் நடத்தப் படவிருந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுக்கச் சென்ற யாழ்ப்பாணத்து மக்கள் குறித்துப் புலனாய்வாளர்கள் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 7 ஆம் திகதி கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்குக் காணாமல் போனோரின் உறவினர்கள் திட்டமிட்

பார்க்க பக்கம் 04

யாழ்ப்பாணம், மார்ச் 17

சுதுமலை வடக்கிலுள்ள வெற்றுக் காணி ஒன்றில் 4 கைக்குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸ் குழுவினர் கைக் குண்டுகளைக் கைப்பற்றினர்.

பார்க்க பக்கம் 04

## நெடுந்தீவில் தாங்கமுடியாத நாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

நெடுந்தீவுக் கடற் பகுதியில் வைத்துக் கடந்த வியாழக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 34 பேரும் நேற்றுச் சனிக்கிழமை தமிழகம் திரும்பினர்.

இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட போது இவர்களின் ஐந்து படகுகளும் பிடிக்கப்பட்ட

பார்க்க பக்கம் 04

பக்கம் 1 மூன்றாவது அம்பயர்



சூரியகாந்தி

பக்கம் 5 மாற்றுத் திறனாளிகளுக்கு தெரிய வராத உதவிகள்

பக்கம் 6 இடைவிலகிய மாணவர் விவரங்கள் திரட்டு

பக்கம் 22 இலங்கை ஆதிக்கம்



## இலங்கையின் உறுதிமொழி உதட்டளவிலேயே

*-நவிப்பிள்ளை*

ஜெனிவா, மார்ச் 17

"இலங்கைக்கு பயணம் செய்யுமாறு அரசு விடுத்த அழைப்பை நான் இன்னமும் புறந்தள்ளவில்லை. அதற்கு முன்னர் மனித உரிமைகள் சபையிடம் அளித்துள்ள உறுதிமொழி

பார்க்க பக்கம் 0




## சிங்கர் காட்சியறை திறப்பு விழா அழைப்பிதழ்

18.03.2013 திங்கட்கிழமை மதியம் 12.17 மணிக்கு SINGER Plus சுன்னாகம் காட்சியறை புதுப்பொலிவுடன் மீள திறந்து வைக்கப்படவுள்ளதால் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

உங்கள் வீட்டிற்கு, அலுவலகத்திற்கு தேவையான சகல தளபாடங்களையும் மற்றும் அனைத்து வகையான இலத்திரனியல் உபகரணங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்

25.03.2013 வரை கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு விசேட சலுகைகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

(சி/6061)(6.7)




Digitized by Noolaham Foundation.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கை கிரிக்கெட் சபைத் தேர்தல் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 17

இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகிகளைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதம் 30ஆம் திகதி இடம்பெறவிருந்த இந்தத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி இடம்பெறும் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது. (த)

# இலங்கையின் இறைமைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்

### சர்வதேச சமூகத்திடம் கோருகிறது சீனா

பீஜிங், மார்ச் 17

இலங்கையின் இறைமைக்கு மதிப்பளிக்க வேண்டும் எனச் சீனா ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தைக் கோரியுள்ளது. ஒரு நாட்டில் உள்விவகாரங்களில் தலையிடுவதைச் சர்வதேச சமூகம் நிறுத்திகொள்ள வேண்டுமென்றும் பிரச்சினைகளைப் பாரபட்சமின்றி அணுகவேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை தொடர்பான மீளாய்வின்போது பல நாடுகள் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தன. இதன்போது கருத்து வெளியிட்ட சீனப் பிரதிநிதி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

போர் முடிவடைந்த பின்பு இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திகளைச் சர்வதேச சமூகம் அறிந்துகொள்ள வேண்டும். இலங்கை சர்வதேச சமூகத்திடம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு இந்த அபிவிருத்தித் திட்டங்கள் சாதகமாக அமைந்துள்ளன' என பாகிஸ்தான் அங்கு கருத்து வெளியிட்டது. (த)

## மத்தள விமான நிலைய எல்லைக்கு மின்சாரவேலி

கொழும்பு, மார்ச் 17

யானைகளின் உள்நுழைவைத் தடுப்பதற்காக மத்தள விமான நிலையத்தின் எல்லையைச்சுற்றி மின்சார வேலி அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் காட்டு யானைகளின் பாதுகாப்புக் கருதி இவ்வாறு மின்சார வேலி மத்தள விமான நிலையத்தைச் சுற்றி அமைக்கப்படவுள்ளதாகவும் விமான நிலைய அதிகாரிகளினால் இந்த மின்சார வேலி அமைக்கப்படவுள்ளதாகவும் வன விலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பேச்சாளர் ஹசினி சரத்சந்திரா தெரிவித்தார்.

இதேவேளை, இப்பிரதேசத்தில் வன விலங்குப் பாதுகாப்பு தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (த)

## பணத்தையும் நேரத்தையும் வீணாக்கி தமிழ் அரசியல்வாதிகள் ஜெனிவாவுக்கு

### கவலைப்படுகிறார் ஹத்துருசிங்க

இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள் பணத்தையும், நேரத்தையும் விரயம் செய்து வீணாக ஜெனிவா செல்கின்றனர். அந்தப் பணத்தை வாக்களித்த மக்களுக்காகச் செலவு செய்திருக்கலாம் என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கவலை தெரிவித்தார்.

புத்தூர் (ஜே/278) கிராம சேவையாளர் பிரிவில் வறுமைப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 511 ஆவது படைப்பிரிவினரால் வீடு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அது நேற்றுக் காலை கையளிக்கப்பட்டது. இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் படையினர் பல்வேறுபட்ட உதவிகளை மக்களுக்கு வழங்கி வருகின்றனர். இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக அவர்கள் பாடுபடுகின்றனர்.

ஆனால் இங்குள்ள சில அரசியல்வாதிகள் இராணுவத்தினர் என்ன செய்கின்றனர். அதிகளவான இராணுவத்தினர் ஏன் இங்கு இருக்கின்றனர் என்றெல்லாம் கேட்கின்றனர்.

நாங்கள் அவர்கள் சொல்வதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்த மக்களுடைய வாழ்வாதாரத்தை முன்னேற்ற நாங்கள் தொடர்ந்தும் உதவுவோம்.

இங்குள்ள சில அரசியல்வாதிகள் பணத்தையும் நேரத்தையும் வீணடித்து ஜெனிவாவுக்குச் செல்கின்றனர். அங்கு சென்று தேவையற்ற கலந்துரையாடல்களை நடத்துகின்றனர். இவர்கள் இவ்வாறு செலவு செய்யும் பணத்தை, வாக்களித்த மக்களுக்காக செலவு செய்து அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பாடுபட்டாலே போதும்-என்றார். (த-5)

## மேற்குலக நாடுகளின் அரசியலில் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு

### கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 17

தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்குலக நாடுகளின் அரசியலில் தாக்கம் செலுத்தி வருவதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் தேர்தல் அரசியலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் செல்வாக்கு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கனடா, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இந்த நிலைமை நீடித்து வருவதாக கோத்தபாய தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே குறித்த நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் போர் முனையில் தோற்கடிக்கப்பட்டாலும் பிரசார மற்றும் ஏனைய வழிகளில் தொடர்ந்தும் சில நாடுகளில் வலுவாக இயங்கி வருகின்றார்கள் என்பதனை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினார்.

இந்தத் தருணத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போரின் பின்னர் பெரிய அளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ள போதிலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சிலர் நாட்டுக்கு எதிராக போலிப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிடுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## தாளையடியில் தபாலகம் இன்று திறப்பு

இந்தத் தபாலகக் கட்டடம் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடமராட்சி- தாளையடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தபாலகக் கட்டடம் முற்பகல் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் தபாலகக் கட்டடம் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நிறைவடைந்த போதும் அதைத் திறந்து வைப்பதில் தாமதம் ஏற்பட்டு வந்தது.

மத்திய தபால் திணைக்களம் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு அனுமதி வழங்குவதில் இழுத்தடிப்பை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அடுத்து தபாலகக் கட்டடம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (த-17)

## உலக வங்கிக் குழுவினர் யாழில்

உலக வங்கியின் நிதி உதவியில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களை, உலக வங்கியின் தென்னாசியப் பிராந்திய முகாமையாளர் தலைமையிலான குழுவினர் நேற்று மீளாய்வு செய்தனர்.

உலக வங்கியின் தென்னாசியப் பிராந்தியத்துக்கான கிராமிய பொருளாதார அபிவிருத்தி முகாமையாளர் ஷோபா ஷெட்டி, பிராந்திய நிபுணர் மனோகரன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்திருந்தனர்.

இவர்கள் யாழ். மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற 'நெல்சிப்' வேலைத் திட்டங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். சுன்னாகம் பிரதேச சபையின் புதிய கட்டடம் மற்றும் கரணவாய் கிழக்கு, வத்திராயனில் மீள்எழுச்சித் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைகள் என்பவற்றையும் ஆராய்ந்தனர்.

உலக வங்கிக் குழுவினரை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்ஷ்மி ரமேஷ் இருவரும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டிய 'நெல்சிப்' திட்டம் மாகாண சபையால் மீளப் பெறப்பட்டமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தின் நிதித் தேவைப்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (த-5)

## 11 புதிய சட்ட வரைவுகளுக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, மார்ச் 17

நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ள 11 சட்டவரைவுகள், அரசியலமைப்புக்கு அமைவாக இல்லையெனக் கூறி அவற்றை எதிர்க்கும் 15 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இறை முகாமைத்துவப் பொறுப்புடைமை (திருத்தம்) என்னும் பொருளிலான சட்டவரைவுகளை எதிர்க்கும் மனுக்கள், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் வை.எம்.புஞ்சிபண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவரைவுகள் தொடர்பில் உயர்நீதிமன்றம் விசேட தீர்மானம் ஒன்றை வழங்க வேண்டும் என மனுதாரர்கள் கேட்டுள்ளனர்.

புதிய வரிமுறை தொடர்பான 11 சட்டவரைவுகள் மார்ச் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## தம்புள்ள விகாரையில் தேரரின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 17

தம்புள்ள, லேனவ பிரதேசத்திலுள்ள விகாரையில் வசித்து வந்த பௌத்த தேரர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. தம்புள்ள பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

ஜோதிடத்துக்குப் புகழ் பெற்றிருந்ததாகக் கூறப்படும் மேற்படி தேரர், கழுத்தில் சுருக்கிட்டு மரணமான நிலையிலேயே மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# மாணவர் போராட்டத்தை முடக்கினால் தமிழகத்தில் மக்கள் புரட்சி வெடிக்கும்

### டாக்டர் ராமதாஸ் எச்சரிக்கை

கல்லூரிகளை மூடி மாணவர்களின் போராட்டத்தை முடக்க முயன்றால் மக்கள் புரட்சி வெடிக்கும் என்று தமிழக அரசுக்கு பா.ம.க நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குக் காலவரையற்ற விடுமுறை அளிக்குமாறு அரசு மற்றும் தனியார் கல்லூரி நிர்வாகங்களுக்கு தமிழக அரசு வாய்மொழி உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகள் குறித்து பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இந்தியாவே பிரேரணை கொண்டுவர வேண்டும், தனித் தமிழீழம் அமைப்பது தொடர்பாக உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. மூலம் பொதுவாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி [illegible] வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தப் போவதாக மாணவர் அமைப்புகள் அறிவித்திருந்தன. இந்த நிலையில், அவர்களின் போராட்டத்தை ஒடுக்கும் வகையில் தான் இந்த நடவடிக்கையை மாநில அரசு எடுத்திருக்கிறது.

கடந்த 8ஆம் திகதி தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா,' இலங்கையில் இனப்படுகொலையை நிகழ்த்திய போர்க்குற்றம் புரிந்தவர்களைப் போர்க்குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐ.நா சபையை இந்தியா வலியுறுத்த வேண்டும் - இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார். இதே கோரிக்கையை வலியுறுத்தித்தான் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். முதலமைச்சரின் இந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் போராடுவதற்காக, மாணவர்களுக்குத் தமிழக அரசு ஆதரவு அளித்திருக்கவேண்டும்.


மாறாகக் கடந்த 10 நாள்களாக நடைபெற்றுவரும் மாணவர்களின் போராட்டத்தால் சிறு வன்முறையோ அல்லது பதற்றமோ ஏற்படாத நிலையில், அந்தப் போராட்டத்தை ஒடுக்க நினைப்பது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. இதன்மூலம் இலங்கைப் பிரச்சினையில் தமிழக முதலமைச்சர் மீது வைத்திருந்த சிறிதளவு நம்பிக்கையைக் கூட ஈழத்தமிழர்களும், தமிழ் உணர்வாளர்களும் இழந்துவிட்டனர். இலங்கை பிரச்சனையில், இனப்படுகொலையாளர்களை தண்டிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துக்காக மாணவர்கள் நடத்திவரும் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து, அவர்களின் போராட்டத்தை அனுமதிக்க வேண்டும்-என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரைப் புத்தாண்டுக்குமுன் பணிக்கொடை கிடைக்கும்

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய சாலைகளில் பணியாற்றிய 56 பேருக்கான பணிக்கொடைகள் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வழங்கப்படும் என்று வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

ஓய்வுபெற்றுள்ள பணியாளர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பணிக்கொடை தொடர்பாகக் குறித்த பணியாளர்கள் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)



கொழும்புத்துறைக்கும் செம்மணி வீதிக்கும் இடைப்பட்ட ஆனந்தன் வடலி வீதி 'காப்பெற்' வீதியாக அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (ம-153)

## மருதபுரம் கிராமத்துக்கு மின்சாரம் கிடைத்தது

யாழ்ப்பாணம், மார்ச் 17

காரைநகர், மருதபுரம் கிராமத்துக்கு நீண்ட காலத்தின் பின்னர் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்த மின்சார இணைப்பு இந்தப் பிரதேசத்தின் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மின்சாரத்துக்கு விண்ணப்பித்த மக்களில் ஐம்பது பேருக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிலர் மின்சார இணைப்பை ஏற்படுத்தித் தருமாறு மின்சார சபைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இந்த மின்சாரத்துக்கு விண்ணப்பித்த ஏனையோருக்கும் மின்விநியோகத்தை வழங்கவும் மின்சார சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**நிர்வாகத் தெரிவு**

அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை மத்தி முடிமன்னர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**ஜெயந்தி விழா**

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 178 ஆவது ஜெயந்தி விழா காலை 8 மணிக்கு உரும்பிராய்ச் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**கலந்துரையாடல்**

ஊழியர் சேமலாப நிதி பெறுதல் தொடர்பான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் அண்மையில் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பொது அமைப்புச் சார்ந்தவர்கள் கலந்து கொள்வர். (ம-14)

**மகளிர் தினம்**

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மனித வள முகாமைத்துவ துறைத் தலைவி திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-14)

**பொதுக்கூட்டம்**

வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு மிருசுவில் றோ.க. த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பன்னிரெண்டு கல்வி வலயங்களிலும் ஆசிரிய ஆலோசகர்களாக கடமையாற்றும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய ஆலோசகர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து ஆசிரிய ஆலோசகர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-450)

* * *

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் வருடாந்த பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவு வைத்திய சாலை மண்டபத்தில் சு.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி வசந்தகுமார் மதுமதியும் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனும் கலந்துகொள்வர். (ம-86)

# கரையோர பாதுகாப்பு திணைக்களத்தால் 78 வேலைத் திட்டங்களுக்கு அனுமதி

## கடந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது

*யாழ்ப்பாணம், மார்ச் 17*

*கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடற்கரையோர மூல வள முகாமைத்துவ திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 78 வேலைத் திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

கடற் கரையில் இருந்து 300 மீற்றர் தூரம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு உரிய பகுதியாகும்.

இந்தப் பிரதேசத்தில் ஏதாவது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக இருந்தால் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் 292 கிலோ மீற்றர் நீளமான பகுதி கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரியது. கடந்த 2011 ஆம் ஆண்டு 8 வேலைத் திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

கடந்த வருடம், வீட்டுத் திட்டங்களுக்கு 6 அனுமதிகளும், கடல் அட்டை வளர்ப்புக்கு வேலைத்திட்டங்களுக்கு 5 அனுமதிகளும், சுற்றலாத்துறை மற்றும் விடுதி அமைப்பது தொடர்பான வேலைத் திட்டத்திற்கு ஒரு அனுமதியும் மீனவர் இளைப்பாறும் மண்டபத்துக்கு அனுமதியும், மீனவர்கள் கடலுக்குச் சென்று வரும் பாதையிலுள்ள முருங்கைக்கற்கள் அகற்றும் வேலைத் திட்டங்கள் இரண்டுக்கும் மணல் அகழ்வுக்கு ஒரு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளன.

ஐஸ் தொழிற்சாலை, மீன் சந்தை, படகுகள் நங்கூரமிடும் இடம், புனரமைப்புக்கு, தடுப்பு சுவர் அமைப்பதற்கு, குளிர்களி நிறுவனம் அமைப்பதற்கு, மேலதிக மழை நீர் கடலுக்கு விரைந்தோடும் கால்வாய் அமைப்பதற்கும் தலா ஒவ்வொரு அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## யாழ். பெண்கள் சமாச மகளிர் தின நிகழ்வு



யாழ்ப்பாணம்,மார்ச் 17

யாழ்.மாவட்ட பெண்கள் சமாச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெற்றன.

யாழ்.மாவட்ட பெண்கள் சமாசத் தின் தலைவி திருமதி ஈஸ்வரி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மங்கல விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

நிகழ்வில் வட பிராந்திய பிரதேச முகாமையாளர் ச.கீர்த்திசீலன், மாவட்ட உள சமூக இணைப்பாளர் கு.கௌதமன், மாவட்ட பெண்கள் அபிவி ருத்தி இணைப்பாளர் செல்வி நவரட்ணம் உதயனி, பால் நிலை பெண்கள் உரிமைகள் நிபுணத்துவ ஆலோசகர் திருமதி ரஜனி சந்திரசேகரம் உட்பட பலர் உரையாற்றினர்.

நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி வங்கி இருபத்தெட்டுப் பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடன் உதவிகளை வழங்கியது.

அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் சு.சிவலோகநாதன் ஆகியோர் கடன் உதவிகளை வழங்கினர். (ம-7)

## சைக்கிள் திருட்டுகள் யாழ். நகரில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். நகரில் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன.

நகரில் சிலர் சைக்கிள்களை வீதியோரம் தரித்து விட்டு தமது தேவைகளுக்குச் செல்லும் சமயம் பார்த்து திருடர்கள் சைக்கிள்களை மிகவும் தந்தி ரமாகத் திருடிச் செல்கின்றனர்.

கடந்த புதன்கிழமை நகரில் ஆஸ்பத்திரி வீதியில் சைக்கிளை நிறுத்திவிட்டு வங்கி ஒன்றுக்கு சென்ற ஒருவரின் பூட்டப்பட்ட நிலையில் இருந்த சைக்கிள் இவ்வாறு திருட்டுப் போயுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கே.கே.எஸ். வீதியிலும் கடந்த வாரத்தில் வீதியோரம் தரித்துவிடப் பட்ட சைக்கிள் ஒன்றும் காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வீதியோரங்களில் போதிய பாதுகாப்பின்றி தரித்துவிடப்படும் பூட்டப்பட்ட சைக்கிள்களைக் கூட திருடர்கள் அபகரித்து வருகின்றனர். (ம-17)

## இடியன் துவக்கால் சுட்டவர் அகப்பட்டார்

மகா சிவராத்திரி தினத்தன்று இரவு பாலாவி வடக்கு ஆலயம் ஒன்றில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இடியன் துவக்கால் சுட்டு ஒருவரைக் காயப்படுத்திய நபர் நேற்றுமுன்தினம் இரவு கிராம மக்களிடம் அகப்பட்ட போது முறையாக கவனிக்கப் பட்டார்.

தகவல் அறிந்த கொடிகாமம் பொலிஸார் அவரை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

பாலாலி வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் இராசகுமார் (வயது-36) என்ற இந்த நபரே வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இடியன் துவக்கால் சுடப்பட்டு காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## மின் வெளிச்சத்தில் சோரன்பற்று, இயக்கச்சி

தென்மராட்சி, மார்ச் 16

பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கு உட்பட்ட சோரன்பற்று, இயக்கச்சி ஆகிய பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இந்தக் கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழான மின் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகளும் பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (வ-9)




எல் பி மோட்டார் சைக்கிள் லீசிங்

காப்புறுதி பணத்தில் 50% சேமிப்பு

அங்கு இங்கு எங்கு சென்றாலும்
குறைந்த பகுதிக்கட்டணம் எம்மிடமே!

தொடர்புகளுக்கு 0777 571082

யாழ்ப்பாணம் - 0212 219455, 0214 920310-1 நெல்லியடி - 0777 718426, 0214 923358-9
சுன்னாகம் - 0777 718412, 0214 920331-9 சாவகச்சேரி - 0777 718428
மானிப்பாய் - 0212 255955, 0214 923356-7 கிளிநொச்சி - 0777 718407, 0214 923362-3

LB FINANCE

எல் பி பினான்ஸ் பி எல் சி
இல.275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. www.lbfinance.com
தொலைபேசி 011 4 521000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறியோருக்கு உதவியளிக்கும் திருச்சபையை விரும்புகின்றேன்

## ஊடகவியலாளர்களிடம் புதிய பாப்பரசர்

வத்திக்கான், மார்ச் 17

வறிய மக்களுக்கு உதவுவதை இலக்காகக் கொண்ட ஒரு வறிய திருச்சபையைத் தான் விரும்புவேன் என்று செய்தியாளர்களிடம் முதற்தடவையாகப் பேசிய, புதிய பாப்பரசரான பிரான்ஸிஸ் கூறியுள்ளார்.

நூற்றுக்கணக்கான செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பாப்பரசர், புனித பிரான்ஸிஸ் அசிசியாரின் பெயர் கொண்டு தன்னை அழைப்பதை விரும்புவதாகக் கூறியுள்ளார். (அமைதி, சுபீட்சம் மற்றும் வறிய மக்களுக்கான சேவைகளின் அடையாளமாகக் காணப்பட்ட புனிதரே, பிரான்ஸிஸ் அசிசியார் ஆவார்)

இந்த நகர்வு வெளிப்படைத் தன்மையின் அறிகுறி என்று வத்திக்கானால் விபரிக்கப்பட்டுள்ளது.

தான் பாப்பரசராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே தனக்கு இந்தப் பெயர் கிடைத்ததாக கூறிய அவர், தன்னுடையை தலையில் தட்டிய கார்தினால்கள், ஏழைகளை மறந்துவிடாதே என்று தன்னிடம் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவரது பேச்சின் பாங்கு இயல்பானதாகவும், ஓரளவு நகைச்சுவையுடன் கூடியதாகவும் இருந்ததாகவும், முன்னைய பாப்பரசருடன் ஒப்பிடுகையில் இவரது பேச்சு அதிகாரபூர்வமானதாக இல்லாமல், நட்பு ரீதியானதாக இருந்ததாகவும் செய்தியாளர்கள் கூறுகிறார்கள். (த)

## இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வேளை, கொழும்புக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவு செய்திருந்த சில நாடுகளுக்கு பெரும் திரிசங்கு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இம்முறை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆசிய நாடுகள் என்ற வகையில் இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கசகஸ்தான், குவைத், மலேஷியா, மாலைதீவு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், கட்டார், கொரியக் குடியரசு, தாய்லாந்து, ஐக்கிய அரபு ராஜ்ஜியம் என்பன அங்கம் வகிக்கின்றன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் வரிசையில் எஸ்தோனியா, செக் குடியரசு, மொண்டேநேக்ரோ, போலந்து, மோல்டோவா குடியரசு, ரொமேனியா ஆகியன அங்கம் வகிக்கின்றன.

ஆபிரிக்க நாடுகளில் பெனின், அங்கோலா, பொட்ஸ்வானா, புர்கினோ பாஸோ, கொங்கோ, ஐவரிகோஸ்ட், எத்தியோபியா, கபோன், கென்யா, லிபியா, மொரிடானியா, சியரா லியோன், உகண்டா ஆகியன அங்கம் வகிக்கின்றன. இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் தீவுகள் வரிசையில் ஆர்ஜன்ரீனா, பிரேஸில், சிலி, கொஸ்டரிக்கா, ஈக்வடோர், கௌதமாலா, பெரு, வெனிசியூலா ஆகியவை இடம்பெறுகின்றன.

மேற்கு ஐரோப்பிய மற்றும் இதர நாடுகள் பட்டியலில் அமெரிக்கா, ஒஸ்ரியா, ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன.

இவற்றில் சுமார் 40 வரையான நாடுகள் அமெரிக்காவின் பிரேரணைக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வந்துள்ளதாக ஜெனிவாவில் உள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு ஆதரவளிக்க உத்தேசித்துள்ளதாகக் கருதப்படும் சுமார் ஆறு அல்லது ஏழு நாடுகளுடன் இது விடயத்தில் நாளை திங்கள் முதல் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இலங்கைக்கு ஆதரவான நாடுகளை தங்களது பக்கம் வளைத்துப் போட அமெரிக்கா இறுதி நேரத்தில் எடுக்கும் இந்த முயற்சி இராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (த-சி)

## 4 கைக்குண்டு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மானிப்பாய் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் மல்கமே தலைமையில் சார்ஜண்ட் சுரவீர, கொன்ஸ்டபிள்கள் சந்தனசிறீலால், வசிவன், ஹரிச்சந்திர ஆகியோரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஒ-115)

## பிக்குகள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சியல் கட்சிகளின சார்பில்லாமல் தன்னெழுச்சியாகத் தமிழக மாணவர்கள் பெரும் போராட்டத்தை முன்னெடுத்து நடத்தி வருகின்றனர்.

தமிழகமே உணர்வு அலைகளால் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் குக்கிராமங்களிலும் கூட இந்தப் போராட்டம் வெடித்திருக்கிறது. இந்நிலையில் இலங்கையிலிருந்து சிங்கள புத்த பிக்குகள் குழு ஒன்று தஞ்சாவூருக்கு சுற்றுலா சென்றுள்ளனர்.

அவர்கள் தஞ்சாவூர் பெரிய கோயிலைப் பார்வையிடச் சென்றபோது இது குறித்துத் தகவலறிந்து அங்கு வந்த, பழனி ராஜேந்திரன் தலைமையிலான தமிழ்த் தேச பொதுவுடைமைக் கட்சியை சேர்ந்தவர்கள், புத்த பிக்குகளைச் சுற்றி வளைத்து அவர்களை விரட்டி அடித்தனர்.

இதன்போது ஒரு புத்த பிக்கு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதர புத்த பிக்குகள் ஆளுக்கொரு திசையில் ஓடிப் பொலிஸார் உதவியுடன் அங்குள்ள தொல்லியல்துறை அலுவலகத்தில் தஞ்சமடைந்தனர். (த)

## மிரட்டுகின்றனர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

டிருந்தனர். இதற்காகக் கொழும்பு செல்வதற்கு வடக்குப் பகுதியைச் சேர்ந்த காணாமற் போனோரின் உறவுகள் கடந்த 6 ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் ஒன்று கூடினர்.

இந்த மக்கள் பஸ்களில் கொழும்பு நோக்கிப் புறப்பட ஆயத்தமான போது பொலிஸார் அந்த மக்களைத் தடுத்து நிறுத்தினர் . சிங்களப் பகுதியில் வைத்து இந்த பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் கூறியே பொலிஸார் மக்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

இதனையடுத்து அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வவுனியா மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தொடர்பான விவரங்களைப் புலனாய்வாளர்ங்கள் திரட்டி வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

தற்போது யாழ்ப்பாணத்தின் தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களிலேயே இந்தத் தகவல் திரட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களிலுள்ள சீருடையினரின் முகாம்களிலிருந்து வரும் புலனாய்வாளர்கள், மக்கள் அமைப்புக்கள், சங்கங்களிடமே மேற்படி விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## இலங்கையின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

களை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும். அது செயலில் இருக்க வேண்டும். வெறும் வார்த்தைகளில் அல்ல.''

- இவ்வாறு உதயனிடம் கருத்து வெளியிட்டார் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார்.

மனித உரிமைகள் சபையின் அரச சார்பற்ற பிரதிநிதிகளுக்கான கூட்டமொன்று கடந்த வாரம் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர் அவருடன் உரையாடுவதற்கு உதயனுக்கு வாய்ப்பு கிடைத்தது.

அப்போதே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார் நவநீதம்பிள்ளை அம்மையார்.

மேலும், இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணையகமான உங்கள் அலுவலகம் பல விமர்சனங்களை முன்வைத்துள்ளதே. இந்தச் சூழ்நிலையில் இலங்கைக்கான உங்கள் பயணத்தில் ஏதேனும் தாக்கத்தை அது ஏற்படுத்துமா என்றுகேட்டபோது -

''இல்லை. அங்கு வருமாறு இலங்கை அரசு விடுத்த அழைப்பை நான் புறந்தள்ளிவிடவில்லை. அது இன்னமும் எனது நிகழ்ச்சிநிரலில்தான் உள்ளது. ஆனால் அது நடைமுறைக்கு வர வேண்டுமானால் இலங்கை, தான் வழங்கிய உறுதிமொழிகள் சிலவற்றை நிறைவேற்றி பொறுப்புக் கூறும் கடப்பாட்டுக்கு தனக்கு உள்ள அக்கறையை வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் சில கருமங்கள் இலகுவாக இருக்கும்'' - என்று கூறினார் அம்மையார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணை குறித்து உங்களின் கருத்து என்ன என்று கேட்டபோது புன்னகைத்தபடியே ''நோ கொமெண்ட்'' என்றார் ஆணையாளர். (த-சி)

## நெடுந்தீவில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மீன்களுடன் நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்தப் படகுகளில் இருந்த மீன்கள் பழுதடைந்தமையால் அந்தப் பகுதி எங்கும் ஒரே துர்நாற்றம் வீசியது. அத்துடன் இலையான்களின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்தப் படகுகள் நெடுந்தீவுக் கடற்கரைக்குச் சமீபமாக நெடுந்தீவு மீனவர்கள் தொழில் செய்யும் பகுதிகளில் நின்றிருந்த சமயமே கடற்படையினரால் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

மூன்று படகுகள் துறைமுகத்தின் உள்ளேயும் இரண்டு படகுகள் வெளிப்பகுதியிலும் நிறுத்தப்பட்டிருந்தது. (த-7)

## போராட்டங்களை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வர் கூட்டமைப்பைச் சேர்ந்த தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒருங்கிணைப்பாளர்கள் நேற்றுச் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர். இதன்போதே அவர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

அவர்கள் அங்கு மேலும் கூறியதாவது:-

தமிழீழ மக்களுக்காகத் தமிழகம் முழுவதும் கல்லூரி மாணவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். எங்களின் போராட்டங்களை முடக்குவதற்காக தமிழக அரசு கல்லூரிகளுக்கும், கல்லூரி விடுதிகளுக்கும் காலவரையற்ற விடுமுறை அளித்துவிட்டது..

அவர்கள் கல்லூரிகளையும், விடுதிகளையும் மூடலாம். எங்களுக்கு வழங்கப்படும் உணவையும் நிறுத்தலாம். ஆனால் எங்களின் போராட்டத்தை முடக்க யாராலும் முடியாது. எனவே இந்த செயலை வன்மையாக கண்டிக்கிறோம். எத்தனை தடை வந்தாலும் எங்களது போராட்டம் தொடரும்.

அமெரிக்கப் பிரேரணையை ஒருபோதும் நாங்கள் ஏற்கமாட்டோம். அதனை வன்மையாக கண்டிக்கிறோம். தமிழீழ மக்களின் இனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணையும், பொது வாக்கெடுப்பு நடத்துவதுமே தீர்வாக இருக்கும். உடனடியாக இலங்கை மீது இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும். இலங்கையின் போர்க்குற்றத்தை விசாரிக்க விசாரணை குழு அமைத்து, அந்த விசாரணைக் குழுவில் ஆசிய நாடுகள் எவையும் இடம்பெறக்கூடாது.

எங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி, எதிர்வரும் 20ஆம் திகதி ஒரு கோடி மாணவர் தொடர் முழுக்க போராட்டம் நடத்த இருக்கிறோம். அன்றே அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையைத் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டம் நடத்த இருக்கிறோம். எங்கள் கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்ற எந்த இயக்கத்துக்கும் நாங்கள் ஒத்துழைப்புக் கொடுப்போம். அவர்கள் நடத்தும் போராட்டத்தில் கலந்து கொள்வோம்.

பொலிஸார் மற்றும் எங்கள் கல்லூரிகளை மூடச் செய்து மிரட்டுகிறவர்கள் தீய சக்திகள். அந்தத் தீய சக்தியை முறியடிப்போம். 20ஆம் திகதி நடக்கும் போராட்டத் தில் பொதுமக்களும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம். எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் மத்திய அரசுக்கு எந்த வரியையும் நாங்கள் செலுத்த மாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். மாணவர்களாகிய நாங்கள், இதுவரை அமைதியாக போராடி வருகிறோம். ஆகவே தமிழக அரசு எங்கள் உணர்வுகளை புரிந்து கொண்டு கல்லூரிகளை உடனே திறக்க வேண்டும்-என்றனர். (த)

## காணாமற்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இராணுவத்தையோ, அரசையோ குறைகூறுவது காணாமற் போனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று நான் எண்ணவில்லை.

போரில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 300 படையினர் காணாமற்போயிருந்தார்கள். அவர்களின் பெற்றோர் காணாமற் போன தமது பிள்ளைகள் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்து விகாரைகளுக்குச் சென்று வழிபட்டார்கள்.

ஒரு வருடத்துக்கு இவ்வாறு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அதன் பின்னர் அவர்களை இறந்தவர்களாகக் கருதி பதிந்தும் விட்டார்கள்.

போரில் இராணுவத்தினரும் உயிரிழந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் உயிரிழந்தார்கள். புலித் தலைவர்களுக்குத்தான் தெரியும் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்று.

அமெரிக்கா, சீனா இடையேயான இலங்கைப் பிராந்தியத்தின் மீதான போட்டியின் வெளிப்பாடே ஜெனிவாப் பிரேரணை. இலங்கையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா அமைத்துக் கொடுக்கிறது. இதனால் இலங்கை சீனா பக்கம் சாய்கின்றது. இதுவே ஜெனிவாப் பிரேரணையின் வெளிப்பாடு.

எந்தவொரு சர்வதேச சக்தியாலும் நாட்டைப் பிரித்துக் கொடுக்க முடியாது. அதற்கு அயல்நாடான இந்தியாவும் அனுமதிக்காது-என்றார். (த-5)

## வெள்ளைக்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மாக அடங்கும் பகுதிகளில் உள்ள காணிகள் இராணுவத்தினருக்கே உரியவை என்று யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவும், படையினருக்குத் தேவையான காணிகள் சுவீகரிக்கப்பட்டு அதற்கு நஷ்டஈடும் வழங்கப்படும் என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து பருத்தித்துறையிலும் சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ளனர். இடம்பெயர்ந்து தங்கியுள்ள இந்த மக்களை நேரடியாகச் சந்தித்த போதே அவர்கள் தமது உணர்வுகளைக் கொட்டித் தீர்த்தனர்.

இதன்போது அவர்கள் வெளியிட்ட உள்ளக் கிடக்கைகள் வருமாறு :-

''1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி எங்களது சொந்த மண்ணில் இருந்து போர் காரணமாக இடம்பெயர்ந்தோம். இன்று வரை வீடுகள் மாறி மாறி அகதியாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

23 வருடங்களாகியும் சொந்த இடத்துக்கு மீளத்திரும்ப முடியாமல் இருக்கும் நாங்கள் இந்தப் பகுதியில் நெருக்கடி நிலைமைக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

பருத்தித்துறை கரையோரக் கடல் பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள எமக்குத் தொழில் செய்வதற்கு நிறையக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இங்குள்ள மக்கள் தொழில் செய்ய இடவசதிகள் இல்லாத நிலையில் எங்களுக்கும் இடம்தருவதில் அவர்கள் சில கட்டுப்பாடுகள் விதிக்கின்றனர்.

அத்துடன் நாங்கள் தங்கியுள்ள வீடுகளில் இருந்தும் எம்மை [illegible] எழுப்புகின்றனர். பருத்தித்துறை மக்கள் தமது பிள்ளைகளுக்குக் காணி, வீடு வழங்கவேண்டியிருப்பதால், இடம்பெயர்ந்து நாங்கள் தங்கியிருக்கின்ற வீடுகள், காணிகளை அவர்களுக்குக் கொடுக்கின்றனர். இதனால் நாங்கள் நடுத்தெருவுக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாங்கள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். 'இந்தா விடுவம் விடுவம்' என்று சொல்லியே 23 வருடங்களை இழுத்தடித்துவிட்டனர்.

இனியும் நாங்கள் பொறுத்திருக்க முடியாது. யாரையும் நாங்கள் இனி நம்பப்போவதுமில்லை. எங்கள் மண்ணுக்குச் செல்லும் முடிவில் உறுதியாக இருக்கின்றோம். எங்களுக்கு இரண்டு வழிகள் தான் இருக்கிறன. ஒன்று நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எங்கள் மண் விடுவிக்கப்படும் வரை, மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டுத் தொடர்போராட்டம் நடத்துவது. [illegible] மீளவும் எங்கள் சொந்த மண்ணுக்குக் கையில் வெள்ளைக்கொடி ஏந்திச் செல்வது. நாங்கள் மண்ணுக்குப் போவதை யாராலும் தடுக்க முடியாது. படையினர் சுட்டுக் கொன்றாலும் பரவாயில்லை. நாங்கள் எங்கள் சொந்த மண்ணுக்குச் சென்றே தீருவோம் - என்று அவர்கள் திடமாகக் கூறினர்.

உங்கள் காணிகளை சுவீகரித்துக் கொண்டு நஷ்டஈடு வழங்குவதாக அரசு தெரிவித்துள்ளதே என அந்த மக்களிடம் கேட்டபோது,

''யாருக்குப் பணம் தேவை? எங்களைப் பணத்தைக் கொடுத்து வாங்கமுடியாது. எங்கள் சொந்த மண்ணை யாருக்கும் கொடுக்க மாட்டோம்.

நாங்கள் அந்தக் காசை கை நீட்டி வாங்கினால் தற்போது தங்கியுள்ள வீட்டிலிருந்து வீட்டு உரிமையாளர் கலைத்துவிடுவார். அதன் பின்னர் நாங்கள் அந்தக் காசை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

எங்களுக்குத் தேவையானதெல்லாம் எங்கள் சொந்த மண்ணுக்கு நாங்கள் செல்லவேண்டும் என்பதுதான்'' என்றனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் புரிந்துணர்வு அழைப்பை நிராகரித்துள்ளார் அமைச்சர் பஸில்

கொழும்பு, மார்ச் 17

அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிவிப்பைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசின் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பிலும் இலங்கை தொடர்பான ஐ.நாவின் நடவடிக்கை குறித்துப் பேசுவதற்கும் எந்தத் தார்மீக உரிமையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அரசின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் ஜெனிவா சென்று ஜனாதிபதி சார்பாகப் பேசுவதற்குத் தயாராகவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தயார் என அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை அறிவிப்பொன்றை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## மரண அறிவித்தல்

### கந்தையா பரமநாதன்

சந்திரந்தை களபூமி காரைநகரைச் சேர்ந்த கந்தையா பரமநாதன் நேற்றுமுன்தினம் (15.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா(வாழைப் பழக் கந்தையா)-இராசம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயகாந்தன், ஜெயரூபன், ஜெயந்தினி, ஜெயதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காஞ்சனன், கௌசலியா, மகேஸ்வரன் ஆகியோரின் மாமனும், பிரசன்னா, விதுசா, அனிர்த்தினி, அச்சுதன் ஆகியோரின் பேரனும், நீலாம்பிகை, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியயோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சுடுகாட்டடி இன்பம் மண்டபத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று(17.03.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி.ப. 2மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரந்தை களபூமி,
காரைநாகர்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா கந்தையா



கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கந்தையா நேற்று(16.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், பாலச்சந்திரன், வசந்தாதேவி, இராமச்சந்திரன், இராசேந்திரன், ஞானச்சந்திரன், வசந்தராணி, வசந்தகுமாரி, பிரேமச்சந்திரன், வசந்தமலர், வசந்தமாலா ஆகியோரின் அன்புத் தாயும், உருத்திராதேவி, புஸ்பராணி, ஈஸ்வரி, பரமேஸ்வரன், ஆனந்தநடராசா, இன்பராணி, தவராசா, வரதராசா, காலஞ்சென்றவர்களான செல்வராசா, பாலாம்பிகை ஆகியோரின் மாமியும் ஆவார்.

மருதனார் மடத்தில் நடைபெறவுள்ள அவரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி, மருதனார் மடம்,
சுன்னாகம்.
0777699991, 0212241634

தகவல்:
குடும்பத்தினர்.


## O/L மாணவர்களே! உங்கள் வெற்றிக்கான கையேடு

இதோ! வெளிவந்துவிட்டது

படி 03

எதிர்பார்க்கை வினாத்தாள்கள்

உள்ளடங்கலாக

உள்ளே...




படி : 03 | 15.03.2013 - 31.03.2013 | 20 பக்கங்கள்

முற்றிலும் புதிய பாடத்திட்டத்தைத் தழுவிய மாதிரி வினாக்கள் உள்ளடங்கலாக பரீட்சையை நோக்கிய வழிகாட்டல் கையேடு

நாடெங்குமுள்ள தலைசிறந்த கல்விமான்களின் ஒன்றிணைந்த சேவை

ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைய அவசியமான ஆக்கங்களைத் தாங்கிவரும் முன்னணிக் கையேடு

தமிழ்
கவிதைகள், மாதிரி வினாத்தாள்
ஆங்கிலம்
Sexual Division &
Pro - Noun, மாதிரி வினாத்தாள்
கணிதம் - ஆரைச்சிறை, மாதிரி வினாத்தாள்
விஞ்ஞானம்
பொறிமுறை அலை, மாதிரி வினாத்தாள்
வரலாறு - புதிய தகவல்கள் - திகாமடுல்ல
வர்த்தகம் - மாதிரி வினாத்தாள்
சிங்களம் - சொல் அறிவு
தகவல் தொழில்நுட்பம்
மாதிரி வினாத்தாள்

இவ்வாரப் படிகளின் நிர்மாணச் சிற்பிகள்



ஏ. ஹபீப் சம்மாந்துறை | எம். சித்திக் கொழும்பு | கே. பிரதீபா கொழும்பு | பொ. உதயரூபன் மட்டக்களப்பு | எம். இஜாஸ் கொழும்பு
சி. நவநீதன் யாழ்ப்பாணம் | எம். மபாஸ் நிந்தவூர் | ஆர். குமரன் யாழ்ப்பாணம் | ஜோன் கிங்ஸ்லி கம்பளை | எம். தப்ஸார் மருதமுனை
நபீக் மொஹிடீன் பேருவளை | எம். மர்ஜூக் மருதமுனை | த. அகிலன் திருகோணமலை | எம். முஜீப்கன் கல்முனை

புதிய இணைப்புக்கள் :
- நம்மை நாமே ஆள்வோம் - படிப்பிணை
- ஆங்கிலத்தில் தெளிவு - கேள்வி - பதில் தொடர்
- துணுக்குகள் - Learn by heart easily
- பொன்மொழிகள், அறிவியல் துணுக்குகள்

விழாமல் இரு! விழுந்தாலும் எழுந்திரு!

## உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 077 2374191, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - [illegible], 021 5677222



### விற்பனைக்கு

மல்ரிபாம் இராமநாதன் வீதி, யாழ்.

அல்சேஷன் (ஜேர்மன் செப்பேட்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 4985400, 0759880000

### வாடகைக்குண்டு

வீதியில் அன்னசத்திர சந்திக்கு அருகில் அலுவலமாகவோ அல்லது களஞ்சியமாகவோ பயன்படுத்தக்கூடிய அறை வாடகைக்குண்டு.

தொடர்பு 0777062349

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 12 அடிப்பாதையில் உள்ள 3பரப்பு 10 குளி காணி விற்பனைக்குண்டு(சுகந்தநிலா மெடிக்கல் சென்றருக்கு முன்)

தொடர்பு:- 021 2053988
0777 037058

### மணமகள் தேவை

கொழும்பு, இந்து கௌரவ குடும்பம், (இந்திய வம்சாவளி) 1966, கார்த்திகை, UK Citizen, Postmaster ஆக இருக்கும் அழகான மாப்பிள்ளைக்குப் படித்த அழகான பெண்தேவை. சீதனம் தேவை இல்லை,

www.thaalee.com
Mob: 011-2523127 (திருமணசேவை)
Profile Number: 4135

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, யாழ்பாணத்தில் மூன்று கடைகளுடன் சேர்ந்த களஞ்சிய அறைகளுடன் கூடிய மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0777 301 248
RG ads

### மணமக்கள் தேவை UK citizan

18/12/1977 இந்து கௌரவ குடும்பம் உத்தராடம்-கி.பா 15 (Australia citz) Account ஆக கடமையாற்றுபவர் படித்த மணமகனையும் 15/04/1973 பரணி MBBS Doctor கி.பா.20 (UK citz) பட்டதாரி மணமகளையும் எதிர்பார்க்கிறார்கள்.

T.P.No-00447833819736 (miss போடவும்)
Fax-00442085488847
chihra004@yahoo.co.uk

### நாய்க்குட்டி விற்பனைக்கு

வெளிநாட்டு இன Benji ரக பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. உடல் முழுவதும் Wool
(விலை 25000/-)
T.P 0779690080

### காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு பிரதேசத்தில் 3½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(34034)(5.6.7) தொடர்பு-021 568 0298,0777111716

### கார் விற்பனைக்குண்டு

NISHAN SUNNY, N-16 JJ, Super Saloon, Silver Color, Manual gear,
Price 23 இலட்சம்
T.P-0774521392

### விற்பனைக்கு

டல்மேசன் ஆண், பெண் நாயும், அல்சேசன் பெண் நாயும், பொமேரியன் ஆண் பெண் நாயும், டசென் ஆண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், மணிநாரா, கினிக்கோழி, முயல் ஆகியவை விற்பனைக்கு.

தொடர்பு:- [illegible]

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

திருத்தக்கூடிய நிலையில் உள்ள வீட்டுடன் 4 பரப்புக் காணி சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு-0115685387


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரிசங்க உறுப்பினர் தெரிவுக் கூட்டம்

அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையின் நோயாளர் நலன்புரி சங்க நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறவுள்ளது. இதில் உறுப்பினராகச் சேரவிரும்புவோர் இந்த மாத இறுதிக்குள் வைத்தியசாலை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மாவட்ட வைத்திய அதிகாரி
பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி

(34653 6-16-17)

## பாடசாலை மட்ட பட்டிமன்ற போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

மகளிர் தினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலகத்தால் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட பட்டி மன்றப் போட்டிகளில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிவஸ் கந்தஸ்ரீ, ஜி. சஜிவன், அ.திருமருகன் ஆகியோர் முதலாம் இடத்தையும்-

செங்குந்தா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மு.சியானி, ஜெ. சிந்துஜா, யு.வளர்மதி ஆகியோர் இரண்டாம் இடத்தையும் மூன்றாம் இடத்தை யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சி.கௌசலா ந.துவாரகா, த.விதுர்சன் ஆகியோரும் பெற்றுள்ளனர். சிறந்த பட்டி மன்றப் பேச்சாளராக யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிவஸ்கந்தஸ்ரீ தெரிவு செய்யப்பட்டுள்ளார். (3-7)


# மலேசியா

## தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 34,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் — முற்றும் இலவசம்

Labour Licence No.1785

**Rizviya Travels & Tours**

46/B, (1st Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011-3091521, Hotline : 077-3179592


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் வீட்டுக்கிரித்திய அழைப்பும்

பிறப்பு 09 * 11 * 1949



இறப்பு 16 * 02 * 2013

### அமரர் சின்னத்துரை பாலசுப்பிரமணியம்
### (பாக்கியநாதன்- உரிமையாளர், நாதன் சவுண்ட்ஸ்)

**அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் பண்பின் இருப்பிடமாய் இருந்து எம்முடன் வாழ்ந்த அப்பாவே உந்தன் இன்னுயிர் இறையடி சேர பிரார்த்தனை செய்யும் உன் குடும்ப உறவுகளாம் நாம் என்றென்றும் இறையடி வேண்டுகின்றோம்**

கடந்த (16.02.2013) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைதொடர்பு மூலமும் இதர ஊடகங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர் வளயம் வைத்தவர்களுக்கும், நினைவு மலர் சிறப்புற பிரார்த்தணை உரை, அனுதாப உரை வழங்கியவர்களுக்கும், மற்றும் பல வகையிலும் உதவிகள் வழங்கியவர்களுக்கும் எமது நண்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (18.03.2013) திங்கட்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

அச்சுவேலிமார்ச் 17

நீர்வேலி "சேவி" கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் சேமலாப நிதியை பெற்றுக் கொள்வதற்கான விசேட கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோயில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சேவியர் கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்ட ஊழியர் பொது அமைப்பின் தலைவர் ந.கனகலிங்கம் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் "யாழ், மாவட்ட தொழில் திணைக்கள உதவித்தொழில் ஆணையாளர் கலந்து கொண்டு ஊழியர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க விருப்பதால் பாதிக்கப்பட்ட ஊழியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு " செயளார் ஆர்.ஜி.சிவகுமார் தெரிவித்துள்ளார். (ஓ-11)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் கற்பகம்



மிருசுவில் வடக்கு, மிருசுவிலை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் கற்பகம் நேற்று(16.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்புமனைவியும், காலஞ்சென்ற நமசிவாயம், அப்பாக்குட்டி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, சண்முகநாதன், புவனேஸ்வரி, காலஞ்சென்ற வைத்தியநாதன், மற்றும் மகேஸ்வரி, யோகேஸ்வரநாதன், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சிவலோகசுந்தரம், சிவலோகநாதன், கமலநாதன், மகேந்திரராசா, பாலசுப்பிரமணியம், ஜெயபூபதிஅம்மா, உதயசந்திரிகா, சரஸ்வதி ஆகியோரின் மாமியும், சிவகௌரி, சிவகுமார், திருச்செந்தூரன், ராதிகா, ரேவிகா, சுயத்திரா, சிவநேசன், சிவறூபி, சிவமதி, சிவச்செல்வி, அசோகன், கண்ணன், புஸ்பலீலா, அகிலன், கைலைவாசன், மயூரன், விஜேந்திரா, நிரோசா, சுபா, நிவேதா, கோகுலன், தட்சாயினி, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கம்சாயினி, சங்கீத், சஞ்சய், ஆதவன், ரிசானுஜன், அக்ஷயன், மகீசன், ஷானுகா, பபீனன், திசானா, ததுர்சிகா, அபிதரன், அபிவரன், தனுசியா, லதுசாந், அபிசன், அக்சயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.03.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பெரியானோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மிருசுவில்வடக்கு,மிருசுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை வித்தியானந்தன்

(முன்னாள் கூட்டுறவு முகாமையாளர், திருநெல்வேலி ப.நோ.கூ.சமாசம்)



கோப்பாய் வடக்கு, நாவற்கட்டையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வித்தியானந்தன் கடந்த (13.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராசையா-செல்வராணி தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மாலினி, தாரணி மற்றும் ரஜனி(பொறியியலாளர்-ஒட்டாவா), நிர்ஷன்(A.C.STUDENT OF U.F.T) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, ஈஸ்வரி, தணிகாசலம், மயில்வாகனம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, நவதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராசரத்தினம், மற்றும் சண்முகலிங்கம், முத்துத்தம்பி, வேலும்மயிலும், கலாராணி, கணேசலிங்கம், தேவராசா ஆகியோரின் மைத்துனரும், குகன் (பொறியிலாளர், ஒட்டாவா), லீலாவதி ஆகியோரின் அன்பு மாமனும், அனோஜன், அருண் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.03.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். நாவற்கட்டை கோப்பாய் வடக்கில் உள்ள கணேசலிங்கம் மகேஸ்வரியின் இல்லத்தில் நினைவு கூரல் நினைவு நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்கட்டை, கோப்பாய்.


தகவல்:
கணபதிப்பிள்ளைகுடும்பத்தினர்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பர் தர்மகுலசிங்கம் (ஸ்ரீ அண்ணா)
அவர்களின் மருமகன்

### சரவணமுத்து பிறேமச்சந்திரன்



அவர்களின் திடீர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஐங்கரன் களஞ்சியம்,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(34658)(10.6)

கந்தவேள் களஞ்சியம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933,
2229944, 5679933, 5679944
விளம்பரம்:021 5671111
விநியோகம்: 021 5677222
தொலைநகல்
செய்தி:021 5678844,
விளம்பரம்:021 2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நிதியில் சிங்களக் குடியேற்றம்

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த கையோடு, வடக்கு-கிழக்கு தொடர் நிலப்பரப்பைத் துண்டாடும் நோக்குடன் பதவியாவில் சிங்கள மக்களை தட்டிக்கேட்பாரின்றி குடியேற்றியது ஐக்கிய தேசியக் கட்சி அரசு.

அதன் தொடர்ச்சியாக மணலாற்றில் சிங்களக் குடியேற்றத்தை நடத்தி வடக்கையும் கிழக்கையும் இரு வேறு துண்டுகளாக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டன.

அதன் மூலமும் திருப்திப்படாத பேரினவாத அரசுகள், காலத்துக்குக் காலம், தமிழ் மக்கள் தமது சொந்தப் பிரதேசங்கள் என்று உரிமை கொண்டாடாமல் தடுக்கும் பொருட்டு சிங்களப் பிரதேசங்களைத் தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பரப்புகளுடன் இணைக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படுகின்றன ; அன்றுமுதல் இன்றுவரை.

அவற்றுள் ஆகப்பிந்திய வஞ்சகச் செயற்பாடு, அனுராதபுரம் மாவட்டத்துக்குள் அடங்கியிருந்த ஒன்பது சிங்களக் கிராமங்களைச் சேர்த்து வெலிஓயா என்ற புதிய செயலர் பிரிவு உருவாக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டில், போர் முடிவுற்ற ஒன்றரை வருடங்களில், முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதாகும்.

அதுவும் போதாது என்று, புதிய சிங்களப் பிரதேச செயலர் பிரிவுடன் தமிழ்க் கிராமங்கள் ஐந்தினை இணைப்பதற்கான ஆயத்தங்கள் இப்போது தடல்புடலாக நடைபெற்று வருகின்றன.

கிழக்கில் தமிழர்களின் பிரதேசங்களில், அரச அனுசரணையுடன் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி இணைத்த அதே பாணியில் வடக்கிலும் சிங்களப் பிரதேசங்களுடன் தமிழ்ப்பிரதேசங்களை இணைக்கும் திட்டம் இப்போது தடுப்பார் எவருமின்றி, அரங்கேற்றப்பட்டுள்ளது.

கிழக்கிலும் சரி வடக்கிலும் சரி தமிழ் மக்களுக்கென தனிப்பிரதேசங்கள் உண்டென உரிமை கொண்டாட இடம் வைக்கலாகாது என்ற கடும் கோட்பாட்டுடன்-

துவேசமான, துரோகமான செயற்பாட்டில் அரசு அப்பட்டமாக, நயவஞ்சகத் தனத்துடன் செயற்படும் என்பதற்கான வெற்றிகரமான முன்னோட்டமான உதாரணம் மணலாறை வெலிஓயா ஆக்கியமை.

அதன் பின்னோட்டமாக, வடக்கில் 15,000 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படும் என்று அரசு இரண்டு வாரங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது. குடியேற்றப்பட உள்ள மக்களுக்கு இப்போது வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும், வடக்கு மாகாண அபிவிருத்திக்கு என சர்வதேச நாடுகள் வழங்கும் நிதியிலிருந்து சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றப் போவதாகவும் அரச உயர் அதிகாரிகள் இருவர் சேர்ந்து தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

ஜப்பானியத் தூதுவரின் பிரசன்னத்தில் ஜனாதிபதி செயலாளர் எஸ்.பி. திவரத்னவும், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாசவும் தமிழர் பிரதேச காணிகளைத்தை நூறு வீதம் பிறநாட்டவர் பிரசன்னத்தில் உறுதி செய்துள்ளனர்!

போரினால் பாதிப்புற்று தமது குடியிருப்புகளை இழந்து மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும், மண் சுவர்தானும் இல்லாத தகரக் கொட்டகைகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பாம்புகள் மற்றும் ஆபத்தான விஷ ஜந்துக்களின் மத்தியில் பொழுதுகளை எண்ணிக்கொண்டு நாள்களைக் கழிக்கிறார்கள்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கென அனைத்துலக நாடுகள் வழங்கும் நிதி அவர்களுக்கு உரிய முறையில், போதிய அளவில் வழங்கப்படுகிறதா? அத்தகைய நிதி வளங்களில் காற்பங்கேனும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகின்றதா என்ற விடை தெரியாத வினா உயர்ந்து நிற்கிறது!

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க, கல்லோயா அபிவிருத்தித் திட்டமென அகரம் எழுதி ஏடு தொடக்கி வைத்துத் தமிழர்களின் காணிகளை கபளீகரம் செய்த "வரலாறு" இப்போதும் தொடர்கிறது. தமிழ், முஸ்லிம் மக்கள் மிகப்பெரும்பான்மையினராக வாழ்ந்த கிழக்கில் இப்போது சிங்கள மக்கள் இருபத்து மூன்று வீதமாகப் பெருகிவிட்டனர்!

அதேபோன்ற நிலையை, வடக்கிலும் உருவாக்குவதற்கு போரின் வெற்றியை வெகு தந்திரமாகவும் அதிகாரத்தனத்துடனும் ஆரம்பித்துள்ளது அரசு; ஜெனிவாவில் நியாயம் பேச முனையும் இந்நாட்டு அரசு...!?



# சமூக சேவை அமைச்சின் உதவிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு தெரியாது

### இதனால் உதவித் திட்டங்கள் முடக்கப்படுகின்றன என்கிறார் இமெல்டா

யாழ்ப்பாணம், மார்ச் 17

சமூக சேவைகள் அமைச்சால் மாற்று வலுவுடையவர்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்கள் தொடர்பாக மாற்றுத் திறனாளிகள் பலர் அறிந்திருக்கவில்லை.

இதன் காரணமாக மாற்று வலுவுடையவர்களுக்கு அமைச்சால் கிடைக்கக் கூடிய உதவித் திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளன என்று சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூக சேவைகள் அமைச்சால் மாற்றுவலுவுடையவர்களுக்கு மருத்துவ உதவிகள், அணுகு முறைகளுக்கு தேவையான உதவிகள், சுயதொழிலுக்கான உதவிகள் உட்படப் பல்வேறு உதவித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்த வரையில் சமூக சேவைகள் அமைச்சால் மாற்றுவலுவுடையவர்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்கள் தொடர்பாக மாற்று வலுவுடையவர்களுக்கு அதிகம் தெரியாத நிலையே இருக்கிறது. இதன் காரணமாக அமைச்சால் வழங்கப்படும் உதவித் திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளன.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதேச மட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சமூக சேவைகள் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்று வலுவுடையவர்கள் சுயமாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய அணுகுமுறை வசதிகள் அங்கங்களை இழந்தவர்களுக்கு அங்கங்களைப் பொருத்துவதற்கான ஏற்பாடுகள், மருத்துவ வசதிகள், உட்பட சுயதொழில்களுக்கான கடன் வசதிகளையும் வழங்கி வருகிறது.

மாற்று வலுவுடையவர்கள் தமக்குத் தேவையான உதவிகளை பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அமைச்சுக்கு தெரியப்படுத்தலாம் - எனவும் தெரிவித்துள்ளார். (ம-14)

## புற்று நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த விழிப்புணர்வு

வலி. வடக்கு, மார்ச் 17

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் புற்று நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்வதால் மருதனார்மடத்தில் அமைந்துள்ள 'கேன்' என்னும் அமைப்பினர் யாழ். மாவட்டத்தில் புற்றுநோய் சம்பந்தமான விழிப்புணர்வுச் செயற்பாட்டை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

யாழ். மாவட்ட மக்களிடையே புற்று நோய் அதிகரிப்பதற்குக் காரணமாக உணவுப் பழக்க வழக்கம் மற்றும் அதிகரித்த பசளைப் பயன்பாடு என்று பல காரணங்கள் முன் வைக்கப்பட்ட நிலையில் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்த நடவடிக்கையை 'கேன்' நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

கிராம மட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் பொது அமைப்புக்கள் போன்றவற்றின் மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த அமைப்பு, புற்று நோயால் பாதிக்கப்பட்டு பராமரிக்க ஆள்கள் அற்றவர்களை விடுதியில் வைத்துப் பராமரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-86)

## ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று கொடியேற்றம்

காரைநகர், மார்ச் 17

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வருடாந்த பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த பெருந் திருவிழாவில் 20 ஆம் திகதி புதன்கிழமை கைலாச வாகனமும், 23 ஆம் திகதி சனிக் கிழமை வேட்டைத் திருவிழாவும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பெரிய சப்பறத் திருவிழவும் இடம் பெறும்.

25ஆம் திகதி திங்கட்கிழமை பஞ்சரத பவனியும், 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை திருக் கல்யாணமும் இடம்பெறும். (ம-250)

## இனங்காணப்பட்ட மலேரியா நோயாளர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்

வலி. வடக்கு, மார்ச் 17

கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் மலேரியா நோயால்பாதிக் கப்பட்ட 15 பேர் இனம் காணப்பட்ட போதிலும், இவர்கள் எவரும் யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்கள் அல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மலேரியாத் தடுப்பு அமைப்பின் பதில் பொறுப்பதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு கடந்த ஆண்டு வருகை தந்த வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மூவர் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் வெளிநாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தவர்களில் 12 பேரும் மலேரியா நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

வெளிநாட்டில் இருந்து வந்த பன்னிரண்டு பேரும் விமான நிலையத்தில் வைத்து அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை, வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியா நோயின் தாக்கத்தில் இருந்து விடுபடும் வகையில் மலேரியா நோய்த் தடுப்பு ஊசியை ஏற்றுவது சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ம-86)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 17

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் "தாளையப் பதிகம்" எனும் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆளுநரின் செயலாளர் எஸ். இளங்கோவனும் சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி ஆறு.திருமுருகன், வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் சி.பிரகாஷ் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (ஒ.ரி)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் பங்குனித் திங்களில் பரீட்சை நடக்காது

### வலயக் கல்விப் பணிப்பாளருக்கு நன்றி தெரிவித்தன இந்து அமைப்புகள்

தென்மராட்சி, மார்ச் 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்து ஆலயங்களில் இடம்பெறும் பங்குனித் திங்கள் பொங்கல் நாள்களில் பாடசாலைகளில் பரீட்சை நடத்தப்படமாட்டாது என்று வலயக்கல்விப் பணிப்பாளர் உறுதியளித்தமைக்குத் தென்மராட்சி பிரதேச இந்து அமைப்புகள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு நன்றி தெரிவித் துள்ளன.

பங்குனித் திங்கள் பொங்கல் மார்ச் 18, 25, ஏப்ரல் 1, 8 ஆகிய திங்கட்கிழமைகளில் நடைபெறவுள்ளன.

இந்தக் காலப் பகுதியில் பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சைகள் நடத்தப் படுவதால் மாணவர்கள் ஆலயங்களில் பொங்கல் நேர்த்திகளை செய்யமுடியாத நிலை உள்ளது.

இந்த நிலையில் குறித்த நான்கு திங்கட்கிழமைகளிலும் தவணைப் பரீட்சை நடத்த வேண்டாம் என்று பிரதேசத்தில் உள்ள இந்து அமைப்புகள் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

இதனை ஏற்றுக் கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் அ.கிருஷ்ணகுமார் குறித்த நான்கு திங்கட்கிழமைகளில் தவணைப் பரீட்சைகள் நடத்தப்படமாட்டாது என உறுதியளித்துள்ளார் என்று பிரதேச இந்து அமைப்புகள் தெரிவித்தன. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இடைவிலகிய மாணவர்கள் விவரம் திரட்டு

## அவர்களை மீள இணைப்பதற்காக

அக்கராயன், மார்ச் 17

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினர் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களின் விவரங்களை திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இறுதியாக இடம்பெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் இடைவிலகிய மாணவர்களின் விவரங்களைத் திரட்டும் பொருட்டு அதற்கான விண்ணப்பப் படிவங்கள் அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

போருக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்த மாணவர்கள் கிளிநொச்சி வலயப் பாடசாலை களில் இருந்து இடைவிலகுவது அதிகரித்துள்ளது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் உள்ள போக்குவரத்து நெருக்கடியே அவர்களின் இடை விலகலுக்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது.

பூநகரி மேற்கு, அக்கராயன், கண்டாவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் தற்போதும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீடுகளில் நிலவும் வறுமையும் இடைவிலகலுக்கு மற்றுமொரு காரணம். பாடசலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகிய பின்னர் பல்வேறு வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் 'யுனிசெப்' போன்ற அமைப்புக்கள் இடை விலகிய பாடசாலை மாணவர்கள் தொடர்பான நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இடைவிலகிய மாணவர்கள் விவரம் திரட்டப்படுவது அவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பதற்காகவே என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (த-18)

# சொந்தக் காணி இல்லாததால் உதவிகளைப் பெறமுடியாத நிலை

## கண்டாவளையில் 1050 குடும்பங்கள் பரிதவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து 50 குடும்பங்கள் சொந்தக் காணிகள் இல்லாததால் உதவித் திட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சுமார் 7 ஆயிரத்து 200 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்களில் ஆயிரத்து 50 குடும்பங்களுக்கு சொந்தக் காணிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் தற்காலிக நிரந்தர வீட்டுத் திட்டங்கள் என்பனவற்றை வழங்குவதற்கு அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். இதனால் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இந்தக் குடும்பங்கள் மேலும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன. (க-6)

சொத்தழிவு கொடுப்பனவு;

# விண்ணப்பிக்க இறுதிநாள் 31

கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்களுக்கான சொத்தழிவுக் கொடுப்பனவுக்குரிய விண்ணப்பங்களை புனர்வாழ்வு அதிகார சபைக்கு (றேப்பியா) எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மட்டுமே சமர்ப்பிக்க முடியும் என்று அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் கால நீடிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது. இதுவரை விண்ணப்பிக்காதோர் இந்தக் கால எல்லைக்குள் விண்ணப்பித்து முடிக்க வேண்டும். பொதுமக்கள் தமது விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களினூடாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும்-

அரச உத்தியோகத்தர்கள் தமது திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6-9)

## பயிர்ச் செய்கைகள்

வவுனியா தாண்டிக்குளம் விவசாயப் பண்ணையில் பயிர்ச்செய்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பெரும்போக நெற்செய்கை நிறைவடைந்ததைத் தொடர்ந்தும், அண்மையில் பெய்த மழையின் காரணமாகவும் வவுனியா தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள அரச விவசாயப் பண்ணையில் பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விவசாயப் பண்ணையில் சிறந்த விதைகள் தயார் செய்யப்பட்டு பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# ஜெனிவா பிரேரணைக்கு எதிர்ப்பு மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்




மன்னார், மார்ச் 17

ஜெனிவா பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று சனிக்கிழமை காலை மன்னாரில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

மன்னார் வாழ் தமிழ் பேசும் மக்கள் என்ற பெயரில் குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

முற்பகல் 11 மணியளவில் மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது. இந்தப் பேரணி பஸார் வீதியூடாகச் சென்று மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது.

பின் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை ஏற்பாட்டுக் குழுவினர் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல்லிடம் கையளித்தனர். குறித்த ஆர்ப்பாட்ட பேரணியின் போது சுமார் 100 பேர் வரை கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-12)

# போலி வாக்குறுதிகள் வழங்கப்பட்டு ஆர்ப்பாட்டத்துக்கு மக்கள் அழைப்பு

ஜெனிவா பிரேரணைக்கு எதிராகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் நேற்று சனிக்கிழமை மன்னாரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கு கொள்ள வைக்க, போலியான வாக்குறுதிகள் மற்றும் போலியான தகவல்கள் வழங்கப்பட்டு தம்மை அழைத்துச் சென்றதாக மீள்குடியமர்த்தப்பட்ட வெள்ளாங்குளம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் குறைவான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். அந்த மக்கள் அனைவரும் போரின் பின் மீள் குடியமர்த்தப்பட்ட வெள்ளாங்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர். "வெள்ளிக்கிழமை இரவு வெள்ளாங்குளம் கிராமத்துக்கு அரசு சார்ந்த கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் சிலர் வந்து எம்முடன் கலந்துரையாடினர்.

உங்கள் கிராமத்தில் மின்சாரம், குடிதண்ணீர், வீதி, போக்குவரத்து வசதி போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் நாளை (நேற்று) சனிக்கிழமை மன்னாரில் நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது." என்று தெரிவித்தனர். இதில் கலந்து கொள்ளுமாறும் எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நேற்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் எமது கிராமத்துக்கு பஸ் ஒன்று வந்தது. அந்த பஸ்ஸில் நாங்கள் கைக் குழந்தைகளுடன் வந்தோம். குறித்த இடத்துக்குச் சென்று பார்த்தபோதுதான் எங்களுக்கு விடயம் தெரிய வந்தது.

எனினும் அச்சத்தின் காரணமாக நாங்கள் ஜனாதிபதியின் படங்களையும், சுலோக அட்டைகளையும் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோம் - என்று குறித்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த மக்கள் மேலும் தெரிவித்தனர். (ம-12)

# டெங்கு பரவும் சூழலுக்காக இருவருக்கு நீதிமன்றம் தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சியில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்தவர்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரிலும் நகரை அண்மித்த பகுதிகளிலும் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த பலர் கடந்த வாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த நிலையில் கிளிநொச்சி நகரில் வர்த்தக நிலைய வளாகத்தினுள் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த இருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கடந்த 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இவர்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (க-6)

# வன்னி மாணவரின் கல்வி வளர்ச்சியில் அதிகாரிகள் அக்கறை காட்ட வேண்டும்

## முல்லைத்தீவு கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது

முல்லைத்தீவு, மார்ச் 17

வடமாகாணத்திலுள்ள உயர் அதிகாரிகள் வன்னி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படவேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தில் முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களின் போது முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு 37 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும் 16 ஆசிரியர்களே தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். ஏனையவர்கள் இதுவரை தமது பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் முல்லைத்தீவு வலயத்திலிருந்து இடமாற்றம் பெற்ற 27 ஆசிரியர்களும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவிட்டனர். இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வன்னிக்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்களால் உரிய பயன்கள் கிடைப்பதில்லை.

எனவே நிபந்தனை அடிப்படையில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களை விடுத்து இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இங்கு வலியுறுத்திக் கூறப்பட்டது.

வடமாகாணத்திலுள்ள உயர் அதிகாரிகள் வன்னி மாணவர்கள் மீது பாரபட்சம் காட்டாது அவர்களின் கல்வி முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு செயற்பட வேண்டுமென கலந்துரையாடலில் கலந்து கொண்டோர் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (க-410)

# முள்ளிவாய்க்கால் படுகொலைகளை மூடிமறைப்பதற்கே ஆர்ப்பாட்டங்கள்

## செல்வம் அடைக்கலநாதன் கண்டனம்

மன்னார், மார்ச் 17

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு எதிராகவும் அரசுக்குச் சார்பாகவும் மன்னாரிலும், கிளிநொச்சியிலும் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் அவர்களுடைய சுயநலத்துக்காக மேற்கொள்ளப்பட்டதோடு பாதிக்கப்பட்ட மக்களைத் தொடர்ந்தும் துன்பத்தில் தள்ளும் ஒரு செயற்பாடாகவே காணப்படுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சுயநலத்துக்காக இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பவர்கள் சற்று மனச்சாட்சியைத் தட்டிப்பாருங்கள். முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலைகள், துன்பங்கள், இழப்புக்களை மூடி மறைக்க நினைக்காதீர்கள் என்றும் செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னாரிலும் கிளிநொச்சியிலும் அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் ஜெனிவா பிரேரணைக்கு எதிராகவும், அரசுக்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது கலந்து கொண்ட மக்கள், எதற்காக தம்மை அழைத்தார்கள் என்று தெரியாத நிலையில் கலந்து கொண்டுள்ளனர். [illegible] மற்றும் மீனவர்களின் பிரச்சினைகள் உடன் தீர்த்துத் தரப்படும் எனக் கூறப்பட்டு அவர்கள் வாகனங்களில் ஏற்றிவரப்பட்டுக் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வைக்கப்பட்டனர். ஆனால் விவரம் அறிந்த மன்னார் நகர மக்கள் இதில் கலந்துகொள்ளவில்லை. இதேபோன்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கிளிநொச்சி [illegible] ஆசிரியர்கள் [illegible] அழைத்து வரப்பட்டுக் கலந்துகொள்ள வைக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் அனைத்தும் உண்மை இல்லையா என்பதை இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியவர்களிடம் நான் கேட்க விரும்புகின்றேன். சுயநலத்துக்காக இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பவர்கள் சற்று உங்கள் மனச்சாட்சியை தட்டிப்பாருங்கள். முள்ளிவாய்க்காலில் நடந்தவற்றை மூடி மறைக்க நினைக்காதீர்கள். முள்ளிவாய்க்காலில் நடந்த சம்பவம், எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி ஆகியவற்றைக் கொச்சைப் படுத்துகின்ற வகையில் குறித்த இரண்டு ஆர்ப்பாட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றே நாங்கள் கருதுகின்றோம்.

தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்களைச் செய்யத் துடிக்கின்றீர்கள். தயவு செய்து தமிழ் மக்களின் துன்ப துயரத்தில் குளிர் காய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்- என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில்
சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில்
A9 வீதியில் 45 பேச்சில் அமைந்துள்ள வீடு
விற்பனைக்கு அல்லது நீண்டகால
குத்தகைக்கு. வங்கிகள், தொண்டர்
நிறுவனங்களுக்கு ஏற்றது.

தொடர்புக்கு - 077 9773252

உதயன்
விளம்பரங்களுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## திருமதி சிவசக்தி தர்மராசா

சின்னாலடி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், பழைய றோட், கனகராயன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசக்தி தர்மராசா நேற்றுமுன்தினம் (15.03.2013) வெள்ளிக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் தர்மராசாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவகுமார், செல்வகுமார்(குமரன் ஹாட்வெயர் உரிமையாளர்-கிளிநொச்சி), தர்மினி ஆகியோரின் அன்புத்தாயும் கோடீஸ்வரனின் அன்பு மாமியும் துரைராஜசிங்கம், பகவத்சிங்கம், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதிமலர், புஸ்பராணி, மனோன்மணி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் தனுஜாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு கனகராயன் குளம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனகராயன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய றோட்,
கனகராயன்குளம்.

(24297)(8.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

**STUDY IN ABROAD**

**UK, USA & NEW ZEALAND**
- O/L OR AL
- with or without IELTS
- part time 20hrs
- Tuition Fee After Visa

RG ads

**AUS** - O/L , IELTS 5.5

**Switzerland, Germany, Latvia, Malta, Canada & Netherland**

**Australian based Courses in Sri Lanka from - May**

CHARLTON BROWN
- Early Childhood
- Child Care
- Age Care

Register Now...! No age limit

MALAYSIA transfer programmes for USA / FINLAND/ UK/CANADA/ NZ/AUS

More Infomation:
**Miss. Zaarah**
**0770 131 959**
**0770 131 960**

IELTS , TOEFL Preparation Classes

Reliance 37th Lane, Wellawatta, Colombo 06.
info.reliance.edu@gmail.com

**வீடு விற்பனைக்கு**

கரவெட்டி கோவிற்சந்தை ஞானாசாரியார் வீதியில், பாடசலை, கோவில் அருகாமையில் 5 அறைகள் கொண்ட சகல வசதியுடனான 4 ½ பரப்பு காணி தென்னை வளத்தடன் நாலு பக்க சுற்று மதில். Level Sheet அடித்த வீடு விற்பனைக்கு உண்டு. Survery Plan, Pedgree Title Report Available.

தொடர்பு
**0773 171 947 / 0776 315 961 / 0212 263 555**

**REALMATRIMONY யின்**
**மணப்பந்தல்**

- 1985, பூரம் Accountant,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1994,அத்தம் Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1978, ரோகினி, Programme Assistant, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1989,உத்தரம் 2, Teacher,Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1983, உத்திரட்டாதி, Draughtsman,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1975, அனுஷம்,Dental Surgent,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1972, அஸ்வினி, Cleark,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1986, அவிட்டம் 1, Doctor Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1979, கேட்டை, Teacher,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1970, அவிட்டம் 2, Bussiness,France Citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1977, ஆயிலியம், Programme Officer, Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1983, திருவாதிரை, Doctor,Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை

MMW

**Real Matrimony(Pvt)Ltd**
இல.05, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel : 021 4923 739 / 864 / 738
WWW.realmatrimony.com ,E-Mail : support@realmatrimony.com

**Study Abroad**
வெளிநாட்டில் உயர்கல்வி

**UK - USA - Canada - New Zealand- Japan Australia - Poland, Swiss, Czech Republic Cyprus Europe-Singapore-Malaysia - India**

15 வருட நம்பகரமான சேவை.

City & Guilds Approved Centre

- Diploma, Advanced, BA, BBA,
- Bsc Bcom, MA, MSC, MBA,
- விரும்பிய துறைகளை தெரிவு செய்யலாம்.
- 1st Year or Final Year Entry.
- வங்கிகளில் ஸ்பொன்சர் ஏற்பாடுகள்.
- கணவன், மனைவி ஒன்றாக செல்லும் வாய்புகள்.
- பகுதி நேர வேலைவாய்ப்பு, தங்குமிடவசதிகளும்
- ஆங்கிலம் குறைவானவர்களுக்கு விசேட பயிற்சிகள்
- அனைத்து வித விசா பற்றிய இலவச ஆலோசணைகள்.

FREE BOOKLET:
பெயர் + முகவரி + செல்லவிரும்பும் நாடு ஆகியவற்றை SMS செய்யும் முதல் 100 மாணவர்களுக்கு இலவச வெளிநாட்டு கல்வி வழிகாட்டல் புத்தகம் இலவசம்.

வெகு விரைவில் யாழ்நகரில் புதிய வசதிகளுடனும், பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத்துடனும் புதிய கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

**GREENWICH COLLEGE**
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

அரசாங்க வியாபார பதிவிலக்கம் PV67191

IELTS REGISTRATION CENTRE FOR THE BRITISH COUNCIL

தொடர்புகளுக்கு : 0777341498, 0728342490,0722 419418

**மலேசியா**
**வேலை வாய்ப்பு**

**இலவசம்! இலவசம்! இலவசம்!**

வெளிநாட்டு முகவர் மூலம் நேர்முகத் தேர்வு
மார்ச் 28,29ம் திகதிகளில் எமது நிறுவனத்தில் நடைபெறும்

| பதவி | தொகை | சம்பளம் |
|---|---|---|
| பணிப் பெண் Housemaid | 14 | 850RM (Rs. 36,000/-) |

சேவைகள் மற்றும் நிபந்தனைகள்.
- ஒப்பந்த காலம் 2 வருடங்கள். நாளொன்றுக்கு 12 மணி வேலை நேரம்
- உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருந்துவ வசதி அனைத்தும் இலவசம்.
- ஏனைய வசதிகள், சட்டதிட்டங்கள் மலேசிய தொழிற்சங்க சட்டத்திற்கு அமைவானது.
- ஒப்பந்த முடிவில் நாடு திரும்ப விமான டிக்கட் இலவசம்.
- வயது 21 முதல் 35 வரை

**011 5300100 / 0722-500700 / 077-3140788**

PAN GLOBAL வெளிநாட்டு வேலை வாய்ப்பு LL 1980

**பான் குளோபல்**
351/1, ஆர். ஏ. டிமெல் மாவத்தை, கொழும்பு 3.
(மஹநாம கல்லூரிக்கு அருகில்)

AL/1980/ADVT/ 03/13
FLEX Graphic

**L.L.B.(UK)கற்கைநெறி**

**யாழில் சட்டக்கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்**
Prince City Campus **இன்** EdHat IHD in Law Leading to LL.B(UK)

Batch - 4 **இற்கான பதிவுகள் தற்போது நடைபெறுகின்றன.**



- உலக தரம் வாய்ந்த கற்கைநெறி.
- இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
- யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- இலகு தவணைக் கொடுப்பனவு முறை
- இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்.

(C/2030)(5.6.7)

**Prince City Campus** இல. 275,மணிக்கூட்டு கோபுரவீதி,(Clock Tower Road) யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 492 3855
Hotline: 0775 949 272

**பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!**
**ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர் (PVT)LTD.**

**யாழ்ப்பாணம்**

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**Tel : 0756271966**



**17.03.2013 முதல் 23.03.2013 வரை**

07 தினங்கள் மட்டுமே!

**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள்**
**பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**
பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும்,எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.

**பழைய டிஸ்யூ புடைவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.**


(34547)(2.6.7)

குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது.

**வேலை நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பற்களின் கூர்உணர்ச்சிக்கு எதிராகப்



போராடுவோம்

GREY

## பற்களின் கூர்உணர்ச்சி என்பது நீங்கள் எண்ணுவதை விடவும் பாரதூரமான ஒன்றாக அமையலாம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா?

சூடான, குளிரான, புளிப்பான அல்லது இனிப்பான, ஏதேனும் ஒன்றை நீங்கள் உள்ளெடுக்கும் சமயத்தில் உங்களுடைய பற்களில் சிறிய நேரத்திற்கு ஏற்படுகின்ற கூரிய வலியே பற்களின் கூர் உணர்ச்சி எனப்படுகின்றது. பற்களில் கூர்உணர்ச்சி உள்ள போது கூரிய வலி ஏற்படுவதும், பின்னர் அற்றுப்போவதுமான நிலைமை காணப்படுகின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சையை மேற்கொள்ளாத பட்சத்தில் நிலைமை மோசமாக மாறலாம்.

## உரிய காலத்தில் சிகிச்சையை மேற்கொள்ளாது அலட்சியமாக இருந்து உங்களுடைய வாழ்வில் மோசமான பாதிப்பிற்கு முகங்கொடுக்க வேண்டாம்

பற்களின் கூர்உணர்ச்சிக்கு உரிய சிகிச்சையை மேற்கொள்வது மிக முக்கியமானது. உங்களுடைய பல்வைத்தியரிடம் இது தொடர்பான மேலதிக விபரங்களையும், உரிய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கியத்திற்கான இச்செய்தியை உங்களுக்கு வழங்குவது இலங்கை பல் மருத்துவர்கள் சங்கம்

வர்த்தக சமூக நலன்புரி முன்னெடுப்பு - கிளக்ஸோஸ்மித்கிளைன்


SRI LANKA DENTAL ASSOCIATION

GlaxoSmithKline



edexcel

ICBT CAMPUS



# Part Time HND in Civil Engineering

HND யும் ஏனைய பட்டங்களும் காலத்திற்கேற்றவாறு விசேடமாக வகுக்கப்பட்டுள்ன. நீங்கள் தொழில் செய்பவராயின் அதை முன்னெடுத்தவாறு தங்களது கல்வித் தகைமைகளை உயர்த்திக் கொள்ளவும். வளம் மிக்க பொறியியல் துறையில் நவீன கல்வித் தகைமைகளைப் பெறவும் இத்திட்டம் கலவியுலகில் முதல் தெரிவாகவுள்ளது.

**Entry Requirment**

GCE O/L or A/L with related basic qualifications or industry experience or combination of all above areas

**Duration**

2 Years

National Business Excellence Award Winner 2012.

ICBT CAMPUS RECOGNIZED AS THE BEST EDEXCEL CENTRE IN SRI LANKA 2010 & 2011

HND → BSc → MSc

Degree Completion in Sri Lanka

ICBT CITY CAMPUS
317 A, GALLE ROAD, BAMBALAPITIYA, SRI LANKA
TEL: +94 (0) 114 869999
www.icbt.lk *Where Life Begins...*

HOTLINES:
0773 427 287
0777 809 885


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



வயாவிளான் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு கேடயம் வழங்கப்படுகிறது. [ம]



யாழ்.றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் அராலி மத்தியில் உள்ள பாடசாலைச் சிறுவர்களுக்குக் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் யாழ்.றோட்டறிக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.அனுராஜ் மாணவர்களுக்கு பரிசில் வழங்குகிறார். [ம-50]



சங்கானை 'பட்டர்பிளை' சர்வதேச பாடசாலையில் மாணவர்களிடையே இடம்பெற்ற மாலை கட்டுதல் போட்டியில் வெற்றி பெற்றவர்கள். [ம]



யாழ்.சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய அதிபர் அருட் சகோதரி ஜீவந்தி தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், சிறப்புவிருந்தினர் அருட்தந்தை ஜெயக்குமார், பாடசாலை அதிபர் அருட் சகோதரி ஜீவந்தி ஆகியோர் பாடசாலை மாணவர்களின் அணி வகுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். [ம-167]



காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொ.சிவானந்தராசா, காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.ஸ்ரீவிக்னேஸ்வரன், பாடசாலை அதிபர் சுந்தரலிங்கம் ஆகியோர் வெற்றிபெற்ற இல்ல தலைவர்களிடம் வெற்றிக் கேடயம் வழங்குகின்றனர். [ம-250]



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரன், அலையன்ஸ் நிறுவன முகாமையாளர் கோ.ஸ்ரீவரதன் ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கான வெற்றிக்கேடயம் வழங்குகின்றனர். [ம-250]




மாதகல் நுணசை வித்தியாலய பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் மாதகல் நுணசை வித்தியாசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கியது.

நிகழ்வில் பாடசாலை அதிபர், பழைய மாணவர்கள், மானிப்பாய் மேற்கு இளைஞர், கழக அங்கத்தவர்கள், மாணவர்கள் [illegible] கலந்து கொண்டனர். [ம]



கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் இருந்து கல்வி கற்று ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் மூன்று 'ஏ' சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவனுக்கு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கிறார். [ம-41]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)

**பதிவு இலக்கமும் திகதியும் :- P/46, 08.02.1971**

### அறிவித்தல்

**கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் 23.03.2013, 24.03.2013.**

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.16ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு சிற்றம்பலம் தவராசா ஆகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23க்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின்படி நடத்துவதற்கு அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | காலம் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | கணேசபுரம் | திரு க.செந்தூரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | கிளை நிலையம், கணேசபுரம். |
| 02 | கனகபுரம் | திரு ந.நாவேந்தன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | கிராம அபிவிருத்திச் சங்கம், கனகபுரம். |
| 03 | திருநகர் | திரு இ.ஜெகதீபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | முன்பள்ளி, திருநகர் வடக்கு |
| 10 | கிளி-கிழக்கு | திரு க.செல்வகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | சென்திரேசா பெண்கள் கல்லூரி, கிளி |
| 11 | இரணைமடு கிழக்கு | திரு இ.விஜயகுமார். கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | சென்திரேசா பெண்கள் கல்லூரி, கிளி |
| 12 | கனகாம்பிகைக்குளம் | திரு வி.சிவபாலன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | ஆரம்ப சுகாதார நிலையம் கன.குளம். |
| 13 | திருவையாறு | திரு சி.சிவாகரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | திருவையாறு மகாவித்தியாலயம் |
| 14 | இரத்தினபுரம் | திரு க.சசிகரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | கிளை நிலையம், இரத்தினபுரம் |
| 17 | உதயநகர் | திரு வே.ஸ்ரீஸ்கந்தராசா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | முன்பள்ளி உதயநகர் மேற்கு |
| 18 | அம்பாள்குளம் | திரு செ.ஜெயராசா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | அம்பாள்குளம் அதக பாடசாலை |
| 19 | செல்வாநகர் | திரு சோ.கிருஸ்ணகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | செல்வாநகர் அ.த.க பாடசாலை |
| 04 | ஜெயந்திநகர் | திரு க.செல்வகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | இந்து ஆரம்ப வித்தியாலயம், ஜெயந்திநகர். |
| 05 | கிளி-மேற்கு | திரு இ.விஜயகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | சென்திரேசா பெண்கள் கல்லூரி, கிளி |
| 06 | உருத்திரபுரம் மேற்கு | திரு வே.ஸ்ரீஸ்கந்தராசா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளை நிலையம், உருத்திரபுரம் மேற்கு |
| 07 | உருத்திரபுரம் கிழக்கு | திரு இ.ஜெகதீபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளைநிலையம் உருத்திரபுரம் மேற்கு |
| 08 | சிவநகர் | திரு க.செந்தூரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | சிவநகர் அ.த.க.பாடசாலை |
| 09 | புதுமுறிப்பு | திரு சி.சிவாகரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளை நிலையம், புதுமுறிப்பு |
| 15 | ஆனந்தபுரம் | திரு வி.சிவபாலன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளி-மத்தியகல்லூரி ஆரம்ப பாடசாலை. |
| 16 | பாரதிபுரம் | திரு சோ.கிருஸ்ணகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | பாரதி வித்தியாலயம், பாரதிபுரம். |

கிளை பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.16 ஆம் திகதிய 1028/6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் அறிவுறுத்தலுக்கு அமைய கூட்ட அறிவுறுத்தல் வழங்கப்படும்

கிளைக்குழு தெரிவுசெய்வதற்கான கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவுறுத்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கிளை பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களை குறித்த அறிவுறுத்தலின் படி கிளைப்பொதுச் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுத்திணைக்களம்,
கிளிநொச்சி.

திரு சி.தவராசா,
கூட்.அபி.உதவி ஆணையாளர்,
கிளிநொச்சி.

(சி/7484)(5.6.7)

---

# ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவாக



தோற்றம்
16.03.1932

மறைவு
28.03.2012

## அமரர் மயிலுப்பிள்ளை கனகரட்ணம்

(விராங்கொடை, தெல்லிப்பழை)

**திதி: பூர்வபக்க ஷஷ்டி 17.03.2013**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
பார்போற்ற எம்மை நன்மக்களாக வாழ வைத்த ஐயாவே!
வருடம் ஒன்று ஆனாலும் எந்நாளும்
அருகில் இருக்கும் நினைவு ஐயா!

இன்று (2013.03.17) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்
குடும்பத்தினர்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

யாழ். வீதி,
தெனியம்பை, வல்வெட்டித்துறை.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(34493) (45.6.7)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**தங்கமலர் மகேந்திரன்**

மலர்வு
12.10.1947

உதிர்வு
17.03.2012

ஒரு வருடம் ஆனாலும் ஆறவில்லை
எம் துயரம் என்றென்றும் ஆறாது
இது எமக்கு நிரந்தர துயரமே அம்மா!
எந்நாளும் உங்கள் நினைவலைகளை
இதயத்தில் சுமந்து நிற்கின்றோம் அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

எங்கள் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி கிரியைகள், ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் எதிர்வரும் (06.4.2013) சனிக்கிழமை காலை 8 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் **கொழும்பு முகத்துவாரம், கோயில் வீதி, இலக்கம் 40 A இல் அமைந்துள்ள சைவ பரிபாலனசபை நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ள** மதிய போசனத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இல.197/1, சென் ரீட்டா மாவத்தை,
தும்மேலிய, வெலிகம்பிட்டிய,
ஜா-எல.

தொ.பே. 011 2230 265,
077 6203 599. (34493) (45.6.7)

கணவர், பிள்ளைகள்,
சகோதரர், சகோதரி,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 105



# நீரிழிவுக்கு முந்தைய நிலை

எல்லா விதமான நீரிழிவு நோய்களையும் எம்மால் தடுக்க முடியாவிட்டாலும், வகை II (type II) நீரிழிவு நோயை எம்மால் தடுக்க முடியும். இது உலகில் அதிக அளவில் காணப்படும் நீரிழிவு நோய் வகைகளில் ஒன்று இதனை உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, தியானம், யோகா, மன அமைதி போன்றவற்றின் மூலம், நீரிழிவை அல்லது தள்ளிப் போடவோ முடியும்.

ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்பட முன்பு நீரிழிவுக்கு முற்பட்ட நிலையை Prediabetic Stage கடந்தே அவர் நீரிழிவை நோக்கி நகர முடியும். உதாரணம்: அவரது குருதிப் பரிசோதனையை சாப்பிடுவதற்கு முன்பு FBstny Blood Sugar

FBS -100- 125 mg நீரிழிவுக்கு முந்தைய நிலை

FBS- 126 அல்லது அதிகமாயின் அவருக்கு நீரிழிவு உண்டு.

இதேபோல் வைத்தியரின் ஆலோசனையுடனும் கீழ்க் குறிப்பிட்ட வகையினர் நீரிழிவுக்கான குருதிப் பரிசோதனைகளைச் செய்வதன் மூலம் தான் நீரிழிவுக்கு முந்தைய நிலையில் உள்ளவர்களா? என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

1. உங்கள் பெற்றோர், சகோதரர், சகோதரிகளுக்கு நீரிழிவு நோய் இருக்குமாயின் (மரபு வழி)

2. நீங்கள் கர்ப்பம் தரித்து இருக்கும் போது நீரிழிவு நோய் இருந்திருப்பின் அல்லது உங்கள் பிள்ளை பிறக்கும்போது அந்தப் பிள்ளையின் நிறை 9 இறாத்தல் அல்லது 4½ kg க்கு மேல் இருப்பின்;

3. அதிக குருதி அமுக்கம் உடையவர்கள்.

4. உங்கள் குருதிக் கொலஸ்ரோலில் உள்ள கொழுப்புச் சத்தைப் பரிசோதிக்கும் போது நல்ல கொலஸ்ரோலின் HDL - 35 mg க்கு குறைவாக இருத்தல் அல்லது முக்கிளிசறைட்டின் அளவு triglyceride- 250 mg/dl க்கு அதிகமாக உள்ளவர்கள்.

5. உடற்பயிற்சி அப்பியாசம் குறைவானவர்கள். உடல் உழைப்புக் குறைவான வர்கள்.

6. இருதய நோய் உடையவர்கள்.

7. அதிக அல்லது அதீத நிறை உடையவர்கள்.

8. புகைத்தல், அதீத மதுப்பாவனை உடையவர்கள்.

9. வயிற்றுப் பகுதியில் கொழுப்பு உடையவர்கள் ஆண்களாயின் வயிற்றின் சுற்றளவு 102 cm க்கு கூடவும், பெண்களாயின் வயிற்றின் சுற்றளவு 88 cm க்கு கூடவும் உடையவர்கள்.

10. செறிவான கலோரி உடைய உணவுகளை அதிகம் உண்பவர்கள் (உதாரணம் Cake,Biscuit)

11. 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் உங்கள் நிறை, உங்கள் உயரத்துக்கும் ஏற்ற நிறையை விட அதிகமாக இருக்குமாயின், பொருத்தமான உணவுக் கட்டுப்பாட்டு முறை, வாழ்க்கை முறை மாற்றங்கள், போதிய உடற்பயிற்சி, என்பவை மூலம் உடல் நிறையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் நீரிழிவு வராமல் தடுக்கலாம்.

**எஸ்.சுதாகரன்,**
தாதிய உத்தியோகத்தர்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்.
யாழ்.போதனா வைத்தியசாலை.

## விஷமாகும் உணவு! விழித்திடுக

அன்றைக்கு நாம் வாழ்ந்த நலமான வாழ்விழந்தோம்
இன்றைக்கு நாட்டில் எங்கே திரும்பிடினும்
புற்றுநோய்!, எங்கிருந்து புதிதாக முளைத்ததிது?
மற்றுச் சில உணவுகளில் மரணத்தைத் தேடுகிறோம்.

தகரத்தில் அடைத்ததுவும், பிளாஸ்ரிக்கில் நிரப்பியதும்
நிகரற்ற பொருள் என்று நீட்டி முழக்குகிறோம்!
நகரத்து வாழ்க்கைக்கு நாளாந்தம் பழகியதால்
நுகரும் பொருளிலெல்லாம் நோய் சேர்த்தே வாங்குகிறோம்.

உரம் தெளித்துப் பளபளப்பாய் மினுங்கும் மரக்கறிகள்
மரத்தோடு சேர்த்து வைத்து மருந்தடித்த மாங்கனிகள்
நிறத்தால் நமைக் கவரும் வாழைப்பழக் குலைகள்
திறமென்று வாங்குகிறோம் தீயதெல்லாம் தேடுகிறோம்.

செயற்கை நிறமூட்டிச் சுவையூட்டி மணமூட்டி
இயற்கை விதிகளுக்கு முரணாக முளைத்த பல
மயக்கும் பொருள்களின்று மலிவாகச் சந்தையிலே
தயக்கம் எதுவுமின்றித் தாராளம் காட்டுகிறோம்

மரபணுவை மாற்றி வைத்து மாசாக்கி பல சேர்த்து
உரம் போட்டு நஞ்சு உடலெல்லாம் ஊறவிட்டுத்
தரமற்ற தென்று அவர் தம் நாட்டில் ஒதுக்கியதை
வரமென்று வாங்கியுண்டு வலி சுமந்து வாடுகிறோம்

ஊர்க்கோழி அடித்து உச்சுக் கொட்டிச் சாப்பிட்டு
போர்க்கோலம் பூண்டு புடைத்துத் திரிந்தவர்கள்
ஏர்க்கால் பிடித்துழுது ஏற்றமுடன் வாழ்ந்தவர்கள்
சேர்க்காத தீனையெல்லாம் தின்று நிதம் சாகின்றோம்.

**கதிரேசபிள்ளை தர்ஸனன்**
மாவட்ட பொது வைத்தியசாலை
சிலாபம்.



**சி.அக்னஸ், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** நான் 73 வயதுடைய பெண். நான்கு வருடங்களுக்கு முன்பு நெஞ்சில் ஓரளவு வலி ஏற்பட்ட போது மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டேன். இதயத்தில் ஒரு பகுதி தடித்துள்ளதாகவும், ஒரு silent attack ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் குருதி அமுக்கம், கொலஸ்றோல் உள்ளதாகவும் கூறி மருந்துகள் தந்தனர். அந்த மருந்துகள் வாழ்நாள் பூராகவும் பாவிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மருந்துகள் Atenolol 50 mg, Atovastatin 10mg, ecosprin 75 mg, clopidogrel 75 mg.

கடந்த நான்கு வருடங்களாகத் தினமும் இவற்றைப் பாவித்து வருகிறேன். இடைக்கிடை தனியார் மருத்துவ மனையில் பரிசோதித்த போது எல்லாம் Normal என்று கூறினார்கள். நான் உண்ணும் உணவில் உப்பு, கொழுப்பு குறைத்து காய்கறி, பழங்களை அதிகம் சாப்பிட்டு சுகமாக இருக்கிறேன்.

தொடர்ந்தும் இந்தமருந்துகளைப் பாவிக்க வேண்டுமா அல்லது நிறுத்தலாமா? தொடர்ந்து மருந்துகளை எடுப்பதால் பக்க விளைவுகள் ஏற்படுமோ என்று அஞ்சுகிறேன். தயவு செய்து ஆலோசனை தரவும்.



**பதில்:** உங்களுக்கு உயர்குருதியமுக்கம், இருதயத்திற்கான இரத்தக் குழாய்களில் கொலஸ்ரோல் படிவு மற்றும் இரத்தத்தில் அதிகரித்த கொலஸ்ரோல் ஆகிய நோய் நிலைகள் இருப்பதை உங்கள் கடிதத்தின் மூலம் அறியமுடிகின்றது. நீண்ட காலமாக மருத்து வத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள், நீங்கள் தொடர்ந்தும் Aspitin (Ecospirin), Atorvastatin மற்றும் Atenolol ஆகிய மருந்துகளை உள்ளெடுப்பது உங்களுக்கு எதிர்காலத்தில் இந்நோய்களால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைக்கும் என்பதை நிரூபித்து இருக்கின்றன.

இவை உங்களுக்கு மீண்டும் ஒரு மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்ற இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க உதவும். இது உங்கள் ஆயுட்காலத்தை அதிகரிக்கும்.

நீங்கள் உள்ளெடுக்கும் Clopidogrel என்னும் மருந்தை வைத்தியருடன் கலந்தாலோசித்த பின் நிறுத்த முடியும். உங்கள் Ecg யில் புதிதாக மாற்றங்கள் எதுவும் ஏற்படாவிடத்தே அவ்வாறு செய்யமுடியும்.

**மருத்துவர்**
**திருமதி. பிரதீபனாசெல்வகரன்,**
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு

துன்னாலை காசிநாதர் வித்தியாசாலையில் டெங்கு ஒழிப்பு நிகழ்வு நடைபெற்றுள்ளது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு நெல்லியடி பொலிஸார், பொதுமக்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

டெங்கு ஒழிப்பு நிகழ்வின் மூலம் பாடசாலைக் காணி, சுற்றுப்புறங்கள் என்பன சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (3-253)

## விநியோகஸ்தர் தேவை

Lanka Cola (Pvt) Ltd Soft drinks நிறுவனத்துக்கு விற்பனை விநியோகஸ்தர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங் களுக்குத் தேவை.
தகைமை: விற்பனையில் முன் அனுபவம், களஞ்சியசாலை, வாகனம், வங்கிப்பிணை என்பன இருத்தல் வேண்டும்.

தொடர்பு :118/36, ST.Anthonys Mawatha
Old Negombo Road, Wattala.
Land Line-0114697696, Mobil-0773551060
E.mail-sm@lankacola.com (34584)(6,7,11)



## கடை ஏலம் விடுதல்



கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 26.03.2013 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த பொங்கல் உற்சவத்தின்போது வாணிபம் செய்ய விரும்புகின்றவர்களுக்கான கடை ஏலம் விடும் நிகழ்வு இன்று (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெற வுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

**முக்கிய குறிப்பு:**
உணவு வாணிபங்கள், ஐஸ்கிறீம் வாணிபங்கள் என்பனவற்றை மேற்கொள்ள விரும்புவோர் உள்ளூராட்சி மன்றத்தின் அந்த வாணிபத்துக்கான உரிமம் பெற்றவர்களாக இருப்பது அவசியமானது.

**புளியம் பொக்கணை, நாகதம்பிரான் ஆலயம், பரந்தன்.** **ஆலய பரிபாலன சபை.** (சி/7402)(10,6,7)

## ENGLISH ACADEMY
**புதிய பிரிவுகள் ஆரம்பம்** — Duration 40 hrs

| | |
|---|---|
| IELTS Academy& General | ✱ இலகு படுத்தப்பட்டதும் நவீன மயப்படுத் தப்பட்டதுமான கற்பித்தல் நுட்பங்கள் ✱ இலவச இறுவட்டுக்கள்(சீடி), கையேடுகள் |
| A1, A2 B1,B2 KET,PET | Sponser மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு UK அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகள். |
| 100% சித்தி பெற உத்தரவாதம் | By: Mr.B.MURALI, M.Sc. No.27,10th, Lane, Vairavapuliyankulam, Vavuniya. 024 222 6747 |
| FRENCH Spoken with Grammer | இலகு படுத்தப்பட்டதும் நவீன மயப்படுத்தப் பட்டதுமான கற்பித்தல் நுட்பங்கள் இலவச இறுவட்டுக்கள் (சீடி) கையேடுகள் பிரான்ஸ், ஜேர்மன் போன்ற வெளிநாடுகள்செல்பவர்களுக்கான கற்கைநெறி |
| 100%பேச்சுப்பயிற்சியும் எழுதி வாசிக்கவும் 3 மாதத்தில் உத்தரவாதம் | உங்கள் வசதிக்கேற்ற நேர அட்டவணை |

By:Mr.Lowrance No.27,10th Lane, Vairavapuliyankulam, Vavuniya. 024 222 6747 (26175)(5-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 18 ★ 05 ★ 1938

ஆண்டவன் மடியில் 20 ★ 03 ★ 2012

திதி: 08.04.2013

**அமரர் முருகேசு இராசையா**
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன ஊழியர் D.O.A)

ஆண்டொன்று மறைந்ததையா நீர் எம்மைப் பிரிந்து
நாள்தோறும் தவிக்கின்றோம் உம்மை இழந்து.
வாழவைத்த தெய்வம் எங்கள் அன்பு அப்பா
சென்ற தெங்கே. தினம் தோறும் தேடுகின்றோம்.
காலமெல்லாம் வாழ்வோம் உம் நினைவோடு உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்..

சாந்தி! சாந்தி! சாந்தி!

நீங்கா நினைவுகளுடன்
அன்பு மனைவி, மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (C/7431)(10,6,7)

## வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது



**திருமறைக் கலாமன்றம்**
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை



# காவிய நாயகன்
(திருப்பாடுகளின் காட்சி)

காலம்:- மார்ச் 21, 22, 23, 24 - 2013
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
- நான்கு நாள்களுக்கு -
நேரம்:- மாலை 6.45 மணி
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம்:- திருமறைக் கலாமன்ற அரங்கு
பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் இன்றுமுதல் மேற்கொள்ளலாம்.
இறைமகனின் பாடுகளில் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2393 (ரீ/7481)(2,6,7) - **திருமறைக் கலாமன்றம்.**

## வேலை வாய்ப்புக்கள்

நீங்கள் முகாமைத்துவத் துறையில் நாட்டம் கொண்டவரா? அத் துறையில் சிறந்த வருமானம் பெற விரும்புபவரா? அப்படியானால் எமது கனேடிய நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு (முல்லைத் தீவு, வவுனியா, யாழ்ப் பாணம்) பணிபுரிய இதோ அரிய வாய்ப்பு

பயிற்சியின் பின் 40,000/= இற்கு மேல். குறுகிய காலத்தில் பதவி உயர்வும் மற்றும் சிறந்த சலுகைகளும்

தகைமை: O/L, A/L (19-25 வயது)
தொடர்பு: 0773999155
077 929 7992 (34585)(10,6,7)

## வீடு விற்பனைக்கு உண்டு

கஸ்தூரியார் றோட், இந்து பிறைமெரி பாடசாலை எதிரில் ஒரு பரப்புக் காணியில் அமைந்துள்ள பெரிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0772106155 (34581)(6,7,11)

## வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
அழையுங்கள்: 077 303 2004 (26180)(5,7,11)

## பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்பு: 077 3033 803 (26181)(6,7,11)

## கட்டடப் பொருள்கள் விநியோகம்

கருங்கல், $3/4''$ சல்லிக்கல் போன்றன குறைந்த விலையில் தேவையான பிரமாணத்தில் விநியோகிக்கப்படும்.
தொடர்பு: 0775166170 (34521)(6,7,11)

## பதவி வெற்றிடம்

தொடர்ந்து 18 வருடங்களாக இயங்கிக் கொண்டி ருக்கும் எமது பல் தேசிய கம்பனியின் முகாமைத்துவத்துறை சார்ந்த புதிய பதவி வெற்றிடங்கள். அனுபவம் தேவையில்லை, குறுகிய காலப் பயிற்சி, பயிற்சியின் போது 10,000/=, -15,000/= வரை.
தகைமை O/L அல்லது A/L
தொடர்பு: 077 8213839 (26178)(6,7,11)

## விற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போக்கு முன்பாக ஆழ்துளை கிணறு, மின் வசதி என்பன வற்றுடன் காணி ($2\frac{1}{2}$ பரப்பு) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778658862, 0774140599. க.சகுந்தலா (34501)(6,7,11)

## வாகனம் வாடகைக்குண்டு

ISUZU அலுமினிய BODY ($10\frac{1}{2}$ அடி) Shellvan வவுனியா/யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு நாள்/மாத வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0778502319, 0773877552 (26174)(6,7,11)

## SALES EXECUTIVES - VACANCIES IN JAFFNA
## "RANHOMES"

*Home is the one place in this entire world where hearts are sure for each other...*

The company invites Sales professionals with sound intellect profound inspiration and innovative.

- With a good command of Tamil and fair knowledge of English and be computer literate.
- Must possess valid motor-bike riding license.

An attractive and negotiable remuneration package including sales commission commensurate with qualifications and experience await the right candidates. If you are confident that you are the right person for the above position please apply within seven days with contact details of two non-related referees:

RanHomes (Pvt.) Ltd.,
No: 841, Hospital Road, Chundikuli, Jaffna
Tel: 021 222 0400
Web: www.ranhomes.com
(34576) (6.7)

## வாடகைக்கு

தாவடி சந்தி, கே.கே.எஸ் வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் தாவடி சுதுமலை வீதி முகப்பைக் கொண்ட 3 அறை வீடு குடியிருப்புக்கோ, வியாபார நடவடிக்கைக்கோ வாடகைக்கும், சிங்கர் குளிர் சாதன பெட்டி விற்பனைக்கும் உண்டு.
(34402)(6,7,11) தொடர்பு: 0779935844

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வு பெற்ற RMP/MD/MBBS வைத்தியர்கள் தேவை.
தொடர்பு: 0779465467 (34496)(6,7,11)

## வீடு வாடகைக்குண்டு

வண்ணார் பண்ணை, அரசடி வீதியில் 3 பேருக்குட்பட்ட குடும்பம் வசிக்கக் கூடிய வசதியான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0773548333 (34338)(6,7,11)

## கடை வாடகைக்கு

இல. 08, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்த 40×19 சதுர அடி கொண்ட மாபிள் பதித்த கடை வாடகைக்கும், மின் பிறப்பாக்கி விற்பனைக்கும் உண்டு.
தொடர்பு: 0775632526

## விநியோகஸ்தர் தேவை


பரிசுப் பொருள்கள், அலங்கார, ஆடம்பரப் பொருள்கள், வழிபாட்டுப் பொருள்கள், சிலைகள், பொம்மைகள் (ORNAMENTS),KEY CHAIN வகைகள் போன்ற இன்னோரன்ன பொருள்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வரும் நிறுவனம் ஒன்றுக்கு யாழ்-வன்னி, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான விநியோகஸ்தர் தேவை. முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ ஈடுபடலாம்.குறைந்த முதலீட்டில் மாதம் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பாதிக்க முடியும்.

★ வாகனம் ஒன்றை வைத்திருப்பவராக இருக்க வேண்டும். வாகனக் கொடுப்பனவு வழங்கப் படும்.

தொடர்பு: 0777664094
**CRISTO MARKETING** (C/7479)(6,7,11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஜனசக்தி மோட்டர் கிளினிக்



ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனம் மூலம் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த வாகன உரிமையாளர்களுக்கு அனுகூலம் வழங்கும் வகையில், இலவச மோட்டர் கிளினிக் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரையும், நேற்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரையும் யாழ்ப்பாணம் மாநகர சபை பழைய வளாகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அனைத்து வாகனங்களினதும் கோளாறுகள் இலவசமாக பரிசோதனைகளின் மூலம் இனங்காணப்பட்டு, அவற்றின் நிலைமைகள் குறித்த வாகன உரிமையாளர்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஜனசக்தி நிறுவனம், மோட்டார் வாகன ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் ஆகியோரை ஈடுபடுத்தியதுடன் அவர்களது ஆலோசனைகள் நேரடியாக வாகன உரிமையாளர்களுக்குச் சென்றடையக்கூடிய வசதிகளை ஏற்படுத்தியிருந்தது.

ஜனசக்தி நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் அல்லாத வாகன உரிமையாளர்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றி அனுகூலங்களைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது மோட்டர் கிளினிக் நிகழ்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (த-14)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்காக 'மா பிய மெஹெவர' திட்டம்

சிலோன் பிஸ்கட் லிமிடெட் நிறுவனத்தின் மஞ்சி வர்த்தக நாமத்தின் மூலம் கர்ப்ப காலத்தில் மற்றும் பிரசவத்தின் பின் அறிந்து வைத்திருக்க வேண்டிய பராமரிப்புகள் குறித்து இளம் பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'மா பிய மெஹெவர' திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாதத்தின் 3ஆவது சனிக்கிழமைகளிலும் காலை 8.30 மணிக்கு ஹோமாகம மருத்துவ அதிகாரிகள், மேலதிக மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார அதிகாரிகள், obstetricians, gynecologists மற்றும் தாதியர்கள் உள்ளடங்கிய குழுவினரின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பங்கேற்கும் இளம் பெற்றோர் மத்தியில் கர்ப்ப காலத்தில் பின்பற்ற வேண்டிய ஊட்டச்சத்து தேவை, முறையாக பாலூட்டும் விதம் மற்றும் தந்தைமார்களுக்கு பிரசவத்திற்கு முன்னதான தகவல்கள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்படுகிறது. மேலும் பங்கேற்பவர்கள் சுகாதார அதிகாரிகளை தனியாக சந்தித்து ஆலோசனைகளை பெறவும் முடியும். சிபிஎல் நிறுவனத்தின் மூலம் பங்கேற்பவர்களுக்கு சத்தான காலை உணவு மற்றும் பகல் உணவு போன்றவை வழங்கப்படுகின்றன.

குழுப் பணிப்பாளர் மற்றும் சந்தைப்படுத்தல், விற்பனை தலைவர் நந்தன விக்ரமகே இச் சமூக அபிவிருத்தி திட்டத்தின் மூலம் சமுதாயம் பெறும் நன்மைகள் குறித்து விளக்கினார்.

**"இத்திட்டத்தில் பங்கேற்கும் இளம் பெற்றோர் மத்தியில் கர்ப்ப காலத்தில் பின்பற்ற வேண்டிய ஊட்டச்சத்து தேவை, முறையாக பாலூட்டும் விதம் மற்றும் தந்தைமார்களுக்கு பிரசவத்திற்கு முன்னதான தகவல்கள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்படுகிறது.**

'இவ் விழிப்புணர்வு திட்டத்தின் சமூகவியல் தாக்கம் மிகப் பெரியது. குழந்தையின் பராமரிப்பு, பரஸ்பர புரிதல் மற்றும் ஸ்திரத் தன்மையில் பெற்றோரின் பங்கு அளப்பரியது என்பதால் இத்திட்டத்தில் தாய், தந்தை இருவரினதும் பங்கேற்பு முக்கியமானதாகும்'.

'இலங்கையின் பொறுப்புமிக்க நிறுவனம் என்ற ரீதியில், இலங்கை மக்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த விரும்புகிறோம் என்றார். அவர் மேலும் மாபிய மெஹெவர திட்டமானது அடுத்த தலைமுறை குழந்தைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது' எனவும் தெரிவித்தார். (த)




ஆயுட் காப்புறுதி கூட்டுத்தாபன (எல்.ஐ.சி) சாவகச்சேரி கிளை வாடிக்கையாளரான ஏழாலை மேற்கு, தம்புவாவத்தையைச் சேர்ந்த செல்வி சத்தியநாதன் பவிதா அகால மரணமடைந்ததையடுத்து, அவருக்கான இழப்பீட்டுத் தொகையை அவரது தாயாரிடம் கிளை முகாமையாளர் ம.கோபிதாஸன் கையளிக்கிறார். அருகில் விற்பனை மேற்பார்வையாளர் ஜோன் வெஸ்டல் கெனடி, காப்புறுதி ஆலோசகர் எஸ்.பிரதீபன் ஆகியோர் உள்ளனர்.





மல்லாவி சம்பத் வங்கிக் கிளையின் இடமாற்றமும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் மிகவும் சிறப்புடன் நடைபெற்றன. சம்பத் வங்கியின் கிளை முகாமையாளர் பிரவின் பெர்ணான்டோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புதிய கட்டடத்தை சம்பத் வங்கியின் சிரேஷ்ட பொது முகாமையாளர் சமன் கெரத் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (த-15)



சர்வதேச மகளிர் தினம் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி கிளையில் கொண்டாடப்பட்டபோது விருந்தினர்களுடன் வடவலய பிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தம், கிளை முகாமையாளர் க.சிவகுமாரன் ஆகியோர் அமர்ந்துள்ளனர். தங்க நாணயம் பரிசிலை பிராந்திய முகாமையாளர் வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்குகிறார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 17

மிருசுவில் உசன் கந்த சாமி ஆலயத்தில் திரவிய அபிஷேக ஸ்கந்த ஹோம மகாயக்ஞம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

40 விஷேட திரவியங்களினால் மஹா பாஞ்ஞசன்ய சகித 108 வலம்புரிச் சங்காபிஷேகமும் ஸ்கந்த ஹோமமும் நடைபெறவுள்ளன. (3-9-13)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஏழாலை மத்தி பத்திர காளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறும் இந்த திருவிழாவில் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்த திருவிழாவும், பிற்பகல் 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

எதிர்வரும் 1 ஆம் திகதி 3ஆம் பங்குனித் திங்கள் அன்று விசேட பூசைகளும் நடைபெறும். (3-13)



சங்கானையைச் சேர்ந்த முத்துக்குமாரு கதிரவேலு மல்லாகம் நீதிவான் எச்.எம்.எம்.பஸீல் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் காணிநல சேவைகள் திணைக்கள முன்னாள் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் ஆவார். (ம)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

அல்வாய் வடக்கு ஐயாவத்தை முருகமூர்த்தி ஆலயத்தில் முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.17 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 17

உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்துதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 17

தொல்புரம் உடையார்வளவு மகா சக்தி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியில் இருந்து மாலை 4 மணிவரை பால்காப்பு சாத்துதல் நடைபெறும். (3-78)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஞானாசாரியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் பி. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (3-253)

# மாணவர்களின் கல்விச் சாதனைகளே பாடசாலையின் வளர்ச்சிக்கு ஏதுவாகிறது

## மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் உரை

தென்மராட்சி, மார்ச் 17

மாணவர்களின் கல்விச் சாதனைகளே பாடசாலையின் தர உயர்ச்சிக்கு வழி வகுக்கின்றன. கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்கள் வருடாவருடம் சாதனை படைப்பார்களாயின் அது பாடசாலையின் வளர்ச்சியாகவே கருதப்படும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உறுப்பினர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பெற்றோரின் ஒத்துழைப்பு, அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டல், மாணவர்களைச் சாதனையாளர்களாக மாற்ற உதவுகிறது. மாணவர்களை கல்வித்துறையில் ஊக்குவிக்க அனைவரும் பாடுபட வேண்டும்.

படையினரின் பாவனையிலிருந்த இந்த மைதானக் காணி ஒரு மாதத்திற்கு முன்பு மீளப் பெறப்பட்டு கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. இந்த இடத்தை அன்று கையளித்த போது இருந்த நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் பெரிய வேறுபாடு காணப்படுகின்றது. புனரமைப்புக்கு கல்லூரிச் சமூகத்தினர் வழங்கிய ஒத்துழைப்பினால் தான் இதனை எட்டமுடிந்ததாக அதிபர் தெரிவித்திருந்ததைக் கேட்டு மகிழ்வடைந்தோம்.

பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர்களும், பெற்றோரும், கல்விச் சமூகத்தினரும் ஆர்வத்துடன் கலந்து கொள்கிறார்கள் என்பதிலிருந்து இந்தக் கல்லூரி வழங்கிய அர்ப்பணிப் பான சேவை யின் தன்மை புரிகிறது. இவ்வாறான ஒத்துழைப்பு பாடசாலைக்கு கிடைக் கும் போது மாணவர்கள் சாதனை யாளர்களாக மாற முடியும்-என்றார். (எ-9)

## தாளையடியில் உப தபாலகம் திறப்பு

வடமராட்சி, மார்ச் 17

வடமராட்சி கிழக்கு, தாளையடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாளையடி உபதபால் நிலையம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார். போரினால் பாதிக்கப்பட்ட இப் பிரதேசத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 7மில்லியன் ரூபா செலவில் இப்புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (3-8)

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், மார்ச் 17

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் இலட்சார்ச்சனை நிகழ்வு கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகியது.

தொடர்ந்து 21 தினங்கள் நடைபெற்று வரும் இலட்சார்ச் சனையில் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு கணபதி ஹோமம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று இலட்சார்ச்சனை நிறைவு பெறும். (3)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** நீங்கள் ஒன்று பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். யாரை மனக் குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள். வேலைச் சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** அநாவசிய செலவுகளைக் குறையுங்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் ஏற்படும்.

**மிதுனம்:** பழைய கடனில் ஒரு பகுதியை வசூல் செய்வீர்கள். முக்கியஸ்தர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாக பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**சிங்கம்:** கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும்.

**கன்னி:** உணர்ச்சிவேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டிவரும். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியத்தைத் தவிர்க்கவும். அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

## நாளை

பங்குனி-05 திங்கட்கிழமை 18.03.2013

திதி: ஷஷ்டி காலை 07.32 வரை

நட்சத்திரம்: ரோகிணி மு.இ. 10.51 வரை

சுபநேரம்: 12.18- 01.48 வரை

இராகுகாலம்: 07.48- 09.18 வரை

**துலாம்:** உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**விருச்சிகம்:** அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியாகச் சில திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**தனுசு:** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள். நட்புவழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்:** நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்:** தன்னிச்சையாகச் சில முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.

**மீனம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த சோர்வு நீங்கும். எதிர்பார்த்த [illegible] கிடைக்கும். உத்தியோகத்தில் [illegible]யர்கள் ஒத்துழைப்பார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | | | 8 | 4 | | | |
| 8 | | 9 | | 7 | | | 5 | |
| 1 | | 4 | | 2 | | | | 3 |
| 2 | | | 6 | | | 8 | | |
| | | 3 | | 4 | | 9 | | |
| | | 6 | | | 2 | | | 5 |
| 6 | | | 9 | 3 | | 5 | | 8 |
| | 5 | | | 6 | | 2 | | 1 |
| | | | 2 | 5 | | | 6 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 7 | 1 | 8 | 4 | 6 | 9 | 2 |
| 8 | 2 | 9 | 3 | 7 | 6 | 1 | 5 | 4 |
| 1 | 6 | 4 | 5 | 2 | 9 | 7 | 8 | 3 |
| 2 | 9 | 5 | 6 | 1 | 3 | 8 | 4 | 7 |
| 7 | 1 | 3 | 8 | 4 | 5 | 9 | 2 | 6 |
| 4 | 8 | 6 | 7 | 9 | 2 | 3 | 1 | 5 |
| 6 | 4 | 2 | 9 | 3 | 1 | 5 | 7 | 8 |
| 9 | 5 | 8 | 4 | 6 | 7 | 2 | 3 | 1 |
| 3 | 7 | 1 | 2 | 5 | 8 | 8 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டிப்பாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு கடல்தொழில் அபிவிருத்திக்கு 1500 மில்லியன் ரூபா செலவிட முடிவு

## கடற்தொழில் அமைச்சு முன் வந்தது

வலி.தென்மேற்கு, மார்ச் 17

வடபகுதி மீனவர்களின் நலன்கருதி ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் கடல்தொழிலை அபி விருத்தி செய்யக் கடல்தொழில் அமைச்சு முன்வந்துள்ளது.

இதனை அடுத்து சம்பந் தமான தரவுகளைத் திரட்டு வதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்டக் கிராமிய கடற்றொழில் அமைப்புக் களின் சம்மேளனம் மேற் கொண்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங் களுக்கு மேலாக இடம் பெற்று வந்த சூழ்நிலை கார ணமாக வடமாகாணத்தில் கடத்தொழில் பல வழிகளி லும் பாதிக்கப்பட்டிருந்தது.

பல வசதியீனங்கள் மத்தி யில் கடல்தொழிலாளர் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இதனால் அவர் களுடைய வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுச் சமாதானச் சூழ் நிலை உருவானதைத் தொடர்ந்து, வடபகுதியில் கடல்தொழிலை அபிவி ருத்தி செய்ய வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டு ள்ளது.

இதனால் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் கடல்தொழிலை அபி விருத்தி செய்யக் கடற்றொழில் அமைச்சு முன்வந்துள்ளது.

கடந்தவாரம் கடற்றொழில் அமைச்சின் கேட் போர் கூடத்தில் நடைபெற்ற கடல்தொழில் தேசிய மகா சபையின் பொதுக் கூட் டத்துக்குத் தலைமை வகித்த கடல்தொழில் அமைச்சர் வட பகுதியில் கடல் தொழிலை அபி விருத்தி செய்வதற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களை விரைவாக மேற்கொள்வதற்கு வசதி யாக இது சம்பந்தமான தரவுகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட கடல் தொழில் தேசிய மகா சபையின் உப தலைவரும் யாழ். மாவட்ட கிராமியக் கடல் தொழில் அமைப்புக்களின் சம் மேளனத் தலை வருமான என்.பொன்னம்பலத்திடம் தெரிவித்துள் ளார்.

அமைச்சரின் அறி வுறுத் தலைத் தொடர்ந்து மேற் கொள்ள வேண்டிய அபி விருத்தி சம்பந்த மான தரவுகளை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி சம்மேள னத்துக்கு அனுப்பி வைக்கு மாறு சம்மேளனத் தலை வர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடல் தொழில் அபிவிருத்தி சம்பந் தமாக ஆராய் வதற்கான கூட்டம் நாளை 18 ஆம் திகதி குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சகல கிரா மிய கடல்தொழில் அமைப் புக் களின் தலை வர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ம-115)

# கடந்த ஆண்டு விபத்துக்களில் காயமடைந்தோர் 2974 பேர்

### அவர்களில் 25 பேர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் வீதிவிபத்துக்களினால் காயமடைந்து 2 ஆயிரத்து 974 பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

அவர்களில் சிகிச்சை பயன ளிக்காது 25 பேர் உயிரி ழந் துள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்த ராஜா தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள் மற் றும் வாகனங்களில் போக்கு வரத்து யாழ்.குடாநாட்டில் அதிக ரித்ததோடு வீதிகளும் ''காப் பெற்'' ஆக மாறிவருவ தனால் வாகனச்சாரதிகளும் அதிவேகத் தில் பயணிக் கின்றனர். ஒரு வரையொரு வர் விஞ்சுமளவுக்கு போட்டி போட்டு அவர்கள் வாகனங் களைச் செலுத்துகின் றனர். இதனால் வீதி விபத்துக் கள் அதிகரிக்கின்றன.

இன்னொரு சாரார் மது போதையில் மெய்மறந்து, வாக னம், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் செல்கின்றனர். இவர்கள் எங்காவது மோதி தாம் விபத்துக்குள்ளாவதோடு வீதி யில் பயணிப்பவர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தி விடுகிறார் கள்.

பலர் வீதிகளில் விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளனர். பலர் படு காயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பயனளிக் காது உயிரிழக்கின் றமை தொடர்ந்து கொண்டிருக் கின்றது. (த-4)

# விளையாட்டுக் கழகங்கள் பதியப்பட்டு இலக்கங்கள்

தென்மராட்சி, மார்ச் 17

யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு வடமாகாண விளையாட்டு அமைச்சால் பதிவு செய்யப்பட்டு பதிவு இலக்கங்கள் வழங்கப்பட் டுள்ளன.

மாவட்ட பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கான பதிவு இலக்கங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் தென்ம ராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 26 விளையாட்டுக் கழகங் களுக்கான பதிவு இலக் கங்கள் பிரதேச செயலகத்துக்கு வந்துள்ளன.

விளையாட்டுக் கழகங் கள் தமது பதிவு இலக்கத் தைப் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் இதுவரை பதிவுக்காக விண் ணப்பிக்காத விளையாட்டுக் கழகங்கள் பிரதேச செயல கத் தில் உரிய விண்ணப்பப் படி வத்தைப் பெற்று விண் ணப்பிக்குமாறும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம-9)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமாகிய சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் எதிர் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள் ளது. கூட்டத்துக்கு திணைக்களத் தலை வர்களும் பிரதேச திணைக்களத் தலை வர்களும் அரச, அரச சார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகளும் தவறாது சமுகமளிக்குமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் த.ஜெயசீலன் தெரிவித் துள்ளார். (3)


## வீடு/ கடை வாடகைக்கு

- வீடு: தொழில் நுட்பக் கல்லூரி முன்பாக சகல வசதிகளுடன் கூடிய வீடு முதலாம் மாடியில் உள்ளது. (தனியார் நிறுவனங் கள் விரும்பத்தக்கது)
- கடை: தொழில் நுட்பக்கல்லூரி முன்பாக கடை வாடகைக்கு உண்டு.
- விற்பனைக்கு: Concrete mixer இரண்டு Vibrator விற்பனை க்கு உண்டு.

தொடர்பு: 0772336238 (34546) (10,6,7)

## MBBS / MD

UKRAINE (யுக்கிரேன்) EUROPE

- LUGANSK STATE MEDICAL UNIVERSITY - UKRAINE
- Sri Lanka Medical Council இனால் அங்கிகரிக்கப்பட்டது.
- 6 வருட பாடநெறி.
- எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 30 மேற்பட்ட யாழ்பாணத்தை சேர்ந்த மாணவர்கள் தற்பொழுது கல்வி கற்கின்றனர்.



Call: 0777 - 767818 (34538)(10,6,7) Scholars Information Centre, No. 01, Veverset Place, Colombo 06.

## இந்தியாவில் உயர்கல்வி

**ENGINEERING COURSES**
- Aeronautical Engineering
- Electronics and Communication
- Mechanical Engineering
- Civil Engineering
- Information Technology
- Textiles Technology
- Textile Chemistry

**SCIENCE DEGREES**
- Bsc Microbiology
- BSc Biotechnology
- BSc Genetics
- BSc Nursing
- BSc Computer Science
- BSc Physiotherapy
- BSc Fashion and Apparel Design

❑ Bachelor of Computer Application (BCA), ❑ Business Management (BBM), ❑ Business Administration (BBA), ❑ Hotel Management (BHM), ❑ BA Journalism, ❑ Textiles and Fashion Designing, ❑ B.Com, ❑ BSc Maths,

ANNA ENGINEERING UNIVERSITY, BANGALORE UNIVERSITY, PERIYAR UNIVERSITY affiliated Colleges

- இந்தியாவில் சேலம், பெங்களூர் இல் உள்ள சிறந்த கல்லூரிகளில் அனுமதி.
- Engineering Courses 4 வருடம், மற்றய Degreeகள் 3 வருடங்கள்.
- எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்கின்றனர்.
- Degree ஐ பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் UK, CANADA, USA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு குடும்பம் சகிதம் Permenant Residental Visa பெறுவதற்கான வாய்ப்புண்டு.

Scholars Information Center
# 01, Vaverset Place,
Wellawatte,
Colombo 06.
Call : 0777-767818

மார்ச் 20ம் திகதி (புதன்கிழமை) எம்மை யாழ்பாணத்தில் சந்திக்க முடியும்.

MBBS LUGANSK MEDICAL UNIVERSITY (Ukraine) யுக்கிரேனில் அனுமதி பெறமுடியும் (34537)(6.7)

## காணி விற்பனைக்கு

நாவன்மாருக்கு சந்தி, கைலாசபிள்ளையார் வீதியில் தென்னை மற்றும் பயன் தரு மரங்களுடன் கூடிய 1 பரப்பு 11.47 குழி விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்கு உண்டு.
T.P: 0776913124 (27888)(6.7.11)

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள குளிர்சாதன பெட்டி (WEST-POINT RGK 143) விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0777906287 (34556) (10,6,7)

## அறைகள் வாடகைக்கு

யாழ்.மணிக்கூட்டு வீதியில் அறை வாடகைக்கு உண்டு. படிக்கும் மாணவர்கள் அல்லது சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0772752513 (34491)(6.7.2)

## கார் விற்பனைக்கு

TOYOTA MARK II (JAPAN CAR) JD-xxxx தொடரிலக்கமுடைய (Lady used, Full Option) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778488428 (34562) (10,6,7)

## சிங்கள வகுப்பு

உங்கள் இடத்துக்கு வந்து சிங்களம் கற்பிப்பதற்கு
தொடர்பு: 0777-732214 (34418) (10,6,7)

## கார் விற்பனை



Toyota Coralla 141 கார் விற்பனைக்கு உண்டு
Milage-53000 km, விலை 3775000/=
தொடர்பு: 0715562370 (34577) (10,6,7)

## காணி விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில் 5பரப்புக் காணி உடன் விற்பனைக் குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 075 510 9327 (34574)(5.6.7)

## URGENT STAFF VACANCIES FOR OUR NEW LOCATIONS

இலங்கையில் வேகமாக வளரும் U.A.E யை மையமாகக் கொண்ட எமது நிறு வன வலையமைப்பில், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோண மலை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளில் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்து க.பொ.த சா/த, உ/த பரீட்சையில் தோற்றியுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகள் மூன்று பிரிவுகளில் பயிற்சியாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள் பல பதவி வெற்றிடங்களில் உடனடி வேலை வாய்ப்புகள் காணப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ் காணப்படும் தொ.பே இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

Free accommadation,Trainee income up to Rs 30,000/= after Rs.60,000/=+

*021 221 9995,075 098 5088*
*275 1/3,Clock tower Road, Jaffna.*

## Study in MALAYSIA
## மலேசியாவில் உயர்கல்வி

மலேசிய அரசாங்கத்தினால் அங்கிகரிக்கபட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

HOTEL MANAGEMENT & CATERING FACULTY
**Pastry Certificate Course - 1 Year**

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்றபின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகமை: கணிதம், ஆங்கிலம் உற்பட O/L சித்தி.


மார்ச் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

**Call : 0777-767818**

Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte,
Colombo 06.
(34536)(6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கந்தையா பாஸ்கரமூர்த்தி

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாஸ்கரமூர்த்தி கடந்த (13.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் நாகம்மா (தொல்புரம்) தம்பதியரின் மூத்த மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், யுகநேசன், யதுகுலன், டாயினி, காலஞ்சென்ற நிதாலஷ்சுமி மற்றும் மோகனராம், ராதாலக்ஷ்மி, வரலஷ்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான முக்கணமூர்த்தி, வைத்தியநாதலிங்கம், முத்தையா, தவச்செல்வம், திருச்செல்வம் மற்றும் கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, அருட்செல்வம், முத்தீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவஅருள், சிவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனிற்ரா, ஜெயகுமரேஷ், குகராஜ், விஜிதரன் ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணவி, சங்கவி, டிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03. 2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தொடர்புகளுக்கு:- யுகநேசன் (மகன் - லண்டன்), செ.பேசி. 00447929363732
யதுகுலன் ( மகன் - லண்டன்) 00447455217464
மோகனராம் (மகன் -இலங்கை) 0783255664
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

(2.6.7)(34598)

# மரண அறிவித்தல்

## திருமதி தையல்நாயகி சிவயோகநாதன்



கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி சிவயோகநாதன் 14.03.2013 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சிவயோகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கமலாதேவி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திரிக்கா, மதூஷன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், குணசீலனின் (இ.போ.ச.கோண்டாவில்) மாமியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் செல்வராணி, சூரியகலா, தெட்சணாமூர்த்தி, ரூபகலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இந்திராணி, சிவஸ்கந்தகுமார், கணேஸ் காந்தன், பராசக்தி, காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, கமல்நாதன் மற்றும் சறோஜினிதேவி, பத்மலோஜினி, குகநாதன், சாவித்திரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(17.03.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மு.ப.11.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு.**

தகவல்:
**சி.சிவயோகநாதன் (கணவர்),**
**கு.மூர்த்தி (சகோதரர்), ந.குணசீலன்(இ.போ.ச).**

(34545)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் தினத்தில் கருத்தமர்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மாநகர சபை சுகா தார வைத்திய அதிகாரி பணிமனையால் மகளிர் தினத்தன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக விசேட கருத்தமர்வுகள் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இடம் பெற்றன.

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அ.எ.ஞானசோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், ஏனைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்கள், குடும்ப நல உதவியாளர்கள், சுகாதார பாதுகாவலர்கள், தொண்டர்கள், சமூக சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குடும்பதிட்ட வழிமுறைகள், இள வயதுக் கர்ப்பம் தரித்தல் போன்ற தலைப்புகளில் விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் நடத்தினர். இந்தக் கருத்தமர்வுகள் அரியாலை, நாவாந்துறை, குருநகர் II, குருநகர் I, நல்லூர், யாழ். நகர், கொழும்புத் துறை, வண்ணார் பண்ணை ஆகிய இடங்களில் நடைபெற்றன.

(3-14)

# மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரிப்பு

திருநெல்வேலி பரவைக்குளம் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்தப் பகுதியில் இரவு வேளைகளில் அறிமுகமில்லாத இளைஞர்கள் சிலர் காணி ஒன்றில் ஒன்று கூடி மது அருந்தி வருகின்றனர்.

இவ்வாறு மது அருந்திய பின் வெற்றுப்போத்தல்களை வீதியோரங்களில் வீசியெறிந்து விட்டுச் செல்கின்றனர். அது மட்டுமல்லாது அந்தக் காணியினுள் வெற்று மதுப்போத்தல்கள், பியர்ரின்கள் என்பனவும் அளவுக்கதிகமாக வீசியெறியப்பட்டுள்ளதாகவும் இதனால் காணி முழுவதும் வெற்று ரின்களாகக் காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(3-7,400)


## பன்னிரண்டு அகவை நிறைவு வாழ்த்து

### செல்வன் ஸ்ரீஸ்கந்தராஜா நவீன்



யாழ்ப்பாணம் உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட உளவள பயிற்றுநரும் ஹோமியோபதி வைத்தியருமாகிய ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் நவீன் தனது 12 ஆவது அகவை நிறைவு விழாவை 15.03.2013 அன்று லண்டன் மாநகரில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார். இவரை லண்டனில் வசிக்கும் கணேஸ் பெரியப்பா, விக்கி பெரியப்பா, கனடா வாழ் ஞானம் பெரியப்பா, ஈசன் சித்தப்பா, உதயா மாமி வவுனியாவில் வசிக்கும் யோகா மாமி ஆகியோரும் அன்புநிறை அப்பா, அம்மா தங்கைகள் அட்சயா, தவ்யானா, தம்பி ரிஷோபன், உரும்பிராய் வாழ் நண்பர்கள் அனைவரும் நவீன் பல்கலைகளும் கற்றுத் தேர்ந்து வாழ்வில் உயர் நிலை அடைய நல்லூர் ஸ்ரீ சந்திரசேகர விநாயகரை வேண்டி உளமார வாழ்த்துகின்றோம்.

38, இராஜவீதி, நல்லூர். நா.விமலநாதன் (ஆசிரியர்)

## ஓராண்டு நினைவு நாள்



வசந்தம் மலர்ந்தது 19★07★1955

வாடிப்போனது 29★03★2012

### திருமதி கந்தசாமி வசந்தமலர் (வசந்தா)



வசந்த மலர் வாடி வருடம் ஒன்றாச்சு
அந்த மலர் அங்கு சென்று ஆண்டும் ஒன்றாச்சு
நீ மலராய் இருக்கையிலே எம் வாழ்வும் வசந்தம்
நீ உதிர்ந்து போனதாலே நாள் முழுதும் சோகம்
அரணடிக்கே சேவை செய்ய அவசரமாய் நீ சென்றாய்
அறிவோம்! அறிவோம்! ஆனாலும்!!!
ஆறமுடியவில்லை அழுகையும் நிற்கவில்லை
அரவணைக்கும் அன்பை இன்னும் நினைக்கின்றோம்
ஆறு நூறு ஆண்டானாலும் எந்நாளும் துதிப்போம்
அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

V.H.லேன், இருபாலை, கோப்பாய். குடும்பத்தினர்.

(34589)(2.6.7)

## சிற்பவேலைகளில் புதிய அத்தியாயம்

இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ள ROBO-X5 அதிநவீன டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் முதிரை, வேம்பு, தேக்கு போன்ற வைரமான மரங்களில் யாழ் மக்களின் மனங்கவர்ந்த அன்னம், தீபநாயகி, மயில் போன்ற சிற்பங்களை மிகத்துல்லியமான வடிவமைப்புடன் மூன்று நாள்களில் உங்கள் கனவு இல்லங்களின் கதவுகள், நிலைகள், இல்லங்களின் பெயர்ப்பலகைகள் போன்றனவற்றை ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தம் புதிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள

### மூர்த்தி டிஜிற்றல் சிற்பாலயம்

62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0212221358



Vacancy Announcement

MAG
saves lives builds futures

**Roving Medic**
Vavuniya
[Contract Position]

**MAG** is a not-for-profit organization clearing landmines, unexploded ordnance (UXO) and other remnants of conflict for the benefit of communities worldwide.

MAG is seeking to recruit an experienced individual for the position of Medic. To be considered for this post, you need to demonstrate competency in the following criteria.

**Requirements:**

- Give medical cover to teams as and when required, usually in the absence of a medic.
- Plan and coordinate the QA medical schedule in the absence of the senior medic.
- Prepare site medical folders for tasks and update staff details such as blood groups, allergies and medical conditions of all staff for inclusion into the medic's folder.
- Assist Senior Medic by ensuring that all medical items dispensed to team medics are accounted for.
- In the absence of the Senior Medic, report deficiencies in the trauma bag to the TOM and arrange replacement thereof in coordination with the Logistics Coordinator.
- Assist the Senior Medic in preparation for any medical training that may be required.
- Teach and train staff how to conduct first aid correctly, refresh their skills when called upon.
- Assist Senior Medic in evaluating competencies of medics.
- Perform medic duties, if there is no medic on the task site to support the compliance team during clearance sampling in preparation for the handing over of a task.
- Be actively involved in ensuring that staff keep their field accommodation clean and maintain basic hygiene, also provide advice to all staff on disease prevention.
- Test the quality of drinking water in the field on a weekly basis and report your finding to TOM.
- Maintain a healthy working relationship with the Government and private hospital in MAG's AoR
- Oversee the maintenance of the MDD test and accreditation areas.

Salary will be based upon the MAG Salary Scale on a fixed term contract basis. Applications are to be submitted by email to info@magsrilanka.org. Please indicate, "Roving Medic" on the subject line of the email. Applications should include a cover letter that describes your relevant experience as well as your current curriculum vitae with details of two non-related referees. A full job description is available upon request by sending an email to the above email address.

**Deadline: 5:00 pm Friday 27 March 2013**

We thank all applicants, but only those short-listed will be contacted. This post is on a fixed term contract basis, with possibility of renewal subject to donor funding. MAG is an equal opportunities employer; women are highly encouraged to apply.

(26183)(6.7)

### விற்பனைக்கு

- MOBILE PHONES I PHONE 4.S 16 GB Full செற் U.K 02
- SONY ERICSSON SAT 10 3G
- I PHONE, I POD SAMSUNG GALAXY

சகல போன்களுக்கும் சார்ச் செய்து கொள்ளக் கூடிய PORTABLE POWER BANK BATTERY யும் விற்பனைக்கு உண்டு.
(தனியாகவும், மொத்தமாகவும்)
தொடர்பு: 0776657771

### கன்ரர் விற்பனைக்கு உண்டு

LK- E கோட் அசோக் லேலண்ட் -16 அடி நீளம் அலுமினியம் பொடியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0772106155

### பணிப்பெண் தேவை

வீட்டில் இருந்து குழந்தை பராமரிப்பதற்கு மற்றும் ஏனைய வேலைகள் செய்வதற்கும் தகுந்த பணிப்பெண் தேவை.
(கொழும்பில் வசிப்பவர்கள் மட்டும்)
தொடர்பு:0711393460, 0777718120

(34607)(6.7.11)

### வீடு வாடகைக்கு

நாவலர் வீதி(கஸ்தூரியார் வீதி நாவலர் வீதிச்சந்தி அருகில்) மாடி வீடு மேல்தளம் 06 அறைகள் கீழ்த்தளம் 6அறைகள், 04குளியல் அறைகள் மற்றும் வாகனத்தரிப்பிட வசதிகளுடன் கூடிய 2000சதுர அடி வீடு அரசசார்பற்ற நிறுவனம் அல்லது கம்பனிகளுக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0716179216

(34697)(5.6.7)

### விற்பனைக்கு

DR Sunny Foglamp·model பவர்Shutter, சைட் கண்ணாடி ஸ்பீட்லெக்Tint body security log, (DVD bluetooh dasahboard TV, ரிவேஸ் கமரா, 1400CC
தொடர்பு: 0717969654

### கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தியில் அமைந்துள்ள கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி லேனில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு மாடிக் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 0776062842


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்னொளி பெறும் கரப்பந்தாட்ட மைதானம்

மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்தாட்ட மைதானம் மின்னொளி பெறவுள்ளது.

இதற்கான நிதியை கழகத்தின் முன்னாள் உறுப்பினரும் தற்போது வெளிநாட்டில் வதிபவருமான சீவரத்தினம் சிவகுமார் என்பவர் கழகத்திற்கு வழங்கியுள்ளார்.

இவர் ஏற்கனவே கழக வீரர்களுக்கான விளையாட்டுச் சீருடைகள் கொள்வனவு செய்ய நிதி உதவி வழங்கியுள்ளதாகவும் கழகத்தினர் தெரிவித்தனர். (3-9)


## உடனடியாகத் தேவை

இதோ அழையுங்கள் கட்டட நிர்மாணத்துறையில் யாழ்/கொழும்பு பிரதேசத்தில் மேசன், கை உதவியாளர், இலற்றீசன்/பிளம்பர்/ செடலின் பாஸ் உடனடியாகத் தேவை. உணவு தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் தொழில் அடிப்படையில் 20,000/= 45, 000/= வரை மற்றும் கப்பல் துறைமுகம் (தனியார்) விமான நிலையம் (தனியார்)/ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

தொடர்பு: 0775561883 (25184) (6.7.11)

## காணி பராமரிப்பாளர் தேவை

கிழக்கு அரியாலையில் உள்ள தென்னந் தோட்டக் காணியை பராமரிப்பதற்கு வேலையாள் ஒருவர் தேவை. தங்குவதற்கேற்ற வீட்டு வசதிகள் உண்டு. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0772359560 (34548)(6.7.11)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கென்ஸ்மன் லேன், முதலாவது ஒழுங்கையில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (2 பக்கம் மதில்)

(27894)(6.7.11) T.P: 0777563525

## காணி விற்பனைக்கு

கச்சேரி,நல்லூர் வீதியில் (கச்சேரியில் இருந்து 150m தூரத்தில்) ஹோட்டல் நடத்துவதற்கு வசதியான கட்டடத்துடன் 2 பரப்பு 6.44 குளி விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

(34037) தொடர்பு: 021 222 3252, 077 946 7807


## யாழ். மைந்தனுக்கு கொழும்பில் புகழாரம்






யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்தவரும் அகில இலங்கைச் சமாதான நீதிவானும் இன்னும் பல சமய சமூக அமைப்புக்களின் தலைவரும் எமது இனிய நண்பருமான

**கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன்**

அவர்களுக்கு அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் சார்பில் கடந்த 28.01.2013 அன்று கொழும்பு நகர மண்டபத்தில் இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் அமைச்சர் **றெயினோல்ட் குரே** மற்றும் **ஏ.எச்.எம். அஸ்வர்** ஆகியோரால் **சாமசிறி தேசகீர்த்தி** என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டமை கண்டு எல்லையில்லா மகிழ்வு கொள்கின்றோம்.

**கொட்டடி நண்பர்கள்,**

**யாழ். ஆதரவாளர்கள், கொழும்பு நண்பர்கள்.**

(34605)(45.6.7)

## மரண அறிவித்தல்

### மருதப்பு யோகம்மா



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 254, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு யோகம்மா நேற்று (16.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- அம்மிணிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகநாதர்- தெய்வானப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மருதப்புவின் மனைவியும், விமலாதேவி (கலா)யின் பாசமிகு தாயும், தனபாலசிங்கத்தின் மாமியும், காலஞ்சென்ற பொன்னுசாமி மற்றும் காவேரி , கிருஷ்ண பூபதி, தில்லைநாதன், நவநீதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, வள்ளிப்பிள்ளை, பொன்னம்மா, நாகம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஹம்சா-பிரதீபன், கௌசிகவதனி- திருக்குமரன், திவாஜினி-ஆனந்தபாபு, தனுஷா-துஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தருண், தியா, பவின் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

254, கோயில் வீதி,
நல்லூர்.

(34603)(6.7.11)

தகவல்:
த.விமலாதேவி(கலா)
மகள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

வேலணை, இந்து கௌரவ குடும்பம், 1977, பூரட்டாதி, CIMA, Business, மிக அழகான USA மாப்பிள்ளைக்கு, வெளிநாட்டு Citizen உள்ள பெண் தேவை. 7 இல் செவ்வாய்.

www.thaalee.com
Mob: 011-2523127 (திருமணசேவை)
Profile Number: 9095

## விற்பனைக்குண்டு

நீர்கொழும்பு பெரியமுல்லை சிலாபம் வீதியில் பாமசி ஒன்று அனுமதிப்பத்திரம், மருந்துகள், தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு

தொடர்பு :
0718 216 576 / 0776 966 793

## காணி விற்பனைக்கு

யாழ் உரும்பராயில், இந்துக் கல்லூரிக்கு அருகாமையில், பலாலி வீதியில், 9 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விலை:- பரப்பு: 15 லட்சம்

தொடர்பு:0773658485

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111

கல்வி மேம்பாட்டிற்குரியவை



## போட்டோக் கொப்பி

இருபக்கம் : 2/= மட்டும்.
கலர்பிறிண்ட் : 10/= முதல்
யாழில் கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
666, கே.கே.எஸ் வீதி, யாழ். 0771974875

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜெர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
**Saving Book - FD- Statement**

விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.

077 4789289
077 9122334

No. 52 Davidson Road,
Colombo 04.
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.

FLEX Graphic

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 18 பாவம் கொண்ட வியாபாரம் செய்யும் ஆண் ஒன், 30 வயது மணமகனுக்கு ஆண் ஒன் ஆரோக்கியமான் ராஜயோகமுள்ள நற்குண முள்ள மணமகளைத் தேடுகின்றோம்.
தொடர்பு: 0112735380 (7045)(6.7.2)

## வீடு வாடகைக்கு

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகிலுள்ள இரண்டு அறைகள் கொண்ட வீடும், தனி அறை ஒன்றும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0775497437 (34657)(6.7.2)

## விற்பனைக்கு

2000Kg எடையைத் தாங்கக்கூடிய புதிய யுஜின் வாகனம் விற்பனைக்கு உண்டு.
(34661)(6.7.2)
தொடர்பு: 0779789182

## உடனடி வேலை வாய்ப்பு

பிரபல தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்துக்கு யாழ், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கு விற்பனை பிரதிநிதிகள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.
நாள் ஒன்றுக்கு 1000 ரூபாய்க்கு மேற்பட்ட ஊதியம் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:
0785020539, 0788966999,
**Sungeetha Agent**
412, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (34651)(6.7.2)

## முகூர்த்தம் திருமணசேவை

எம்மிடம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மணமகன்/மணமகள் ஜாதகங்கள் உண்டு. நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்டு உங்கள் மகன்/மகள் பொருத்தமான வரன்களை தேடிப்பெற்று திருமணத்தை நடத்தி முடிக்கலாம். தற்பொழுது முன்பதிவு இலவசம்.
மேலதிக விபரங்களுக்கு உங்கள் ஜாதகம் மற்றும் இரண்டு புகைப்படங்களுடன் எம்மை தொடர்பு கொள்ளவும்.
E-mail- mugoorththam@gmail.com
Tel- 00447593007117 Tel- 0774229665

## THE ROYAL COLLEGE OF JAFFNA

கூலாமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426, (302) கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
பிளாக்வீதி,சங்கானை.
தொ.பே.:077 675 1649
(34656)(5-6-7)

## காணி விற்பனைக்கு

பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் முகவரியில் நன்னீர் கிணற்றுடன் கூடிய 5பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 114 8031, 077 311 6996
(34663)(5-6-7)

## லொறி HIRE ஓட்டத்துக்கு வழங்கப்படும்

தொடர்ச்சியான ஓட்டமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 071 8452548 (26186)(6.7.2)

## நான்காம் ஆண்டு நினைவினில்...



அமரர்
சபேஷன்
இராசேந்திரம்



அன்னை மடியில் 27.05.1984
ஆண்டவன் அடியில் 17.03.2009
திதி:-பூரணைக்குப் பின்வரும் சப்தமி

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
ஐயா உனை இழந்து
பரிதவிக்கும் கொடூர நாள்கள்
நான்காண்டுகள் தான்
கரைந்தோடி விட்டன
ஆறவில்லை எம் மனம் ஓயவில்லை
கண்ணீர் மழை
ஆறுதலுக்கு உங்களிடம்
வந்துவிட்ட அம்மாவோடு
ஆண்டவனடியில் அகமகிழ்ந்திருந்து
எங்களையும் காத்திடுவீர்கள்
காவல் தெய்வங்களாக....

சோ.இராசேந்திரம் (தந்தை),
ஒலுமடு, மாங்குளம்.
தற்காலிகமுகவரி **பொன்னாவரசங்குளம், வவுனியா.** T.P.0779664138

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Peugeot 300 - xxxx கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773126374 (34609)(6.7.2)

## பணிப்பெண் தேவை

கைதடியில் வீட்டு வேலைக்குப் பெண் தேவை. (தங்கியிருப்பது விரும்பத்தக்கது) (34550)(6.7.2)
தொடர்பு: 0772224913

## உடனடி வேலைவாய்ப்பு

- ★ உணவு பரிமாறுபவர் (ஆண்/ பெண்)
- ★ சமையல் காரர் (இந்தியன்)
- ★ சிற்றுண்டி உணவு தயாரிப்பாளர்
- ★ கொத்து/ பிறைட் றைஸ் தயாரிப்பாளர்

மேற்படி வேலைக்கு அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது
தொடர்பு: 021 5685 135

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள சிசில் வேல்ட் (SISIL WORLD) காட்சியறையில் பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆள்கள் தேவை.
Recovery Officer
Sales Assistant
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்
இல. 106, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே.இல. 021 2219 291, 077 3501 812

## முகாமையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் விருந்தினர் விடுதி ஒன்றுக்கு மும்மொழிகளும் பேசத் தெரிந்த மற்றும் கணினி அறிவுடைய முகாமையாளர் தேவை. விண்ணப்பங்களை 25.03.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
29/33, உடையார் லேன், ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 071 44 61812
(34549)(6.7.2)

## யா/இணுவில் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2013

தலைவர்: அ.சதானந்தன்
காலம் : 31.03.2013 ஞாயிறு மாலை 4 மணி
இடம் : பாடசாலை ஆரம்ப பிரிவு மண்டபம்
மேற்படி கூட்டத்தில் சகல பெற்றோரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.
(34608)(6.7.2)

## Banking CBF இற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 6Th April 2013- 10.00 மணி

April 5 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளும் அனைவருக்கும் புலமைப் பரிசில் திட்டங்கள் காத்திருக்கிறது.

**A/L 3 Passes with 1'A' Pass 20% discount**
**A/L 3 Passes with 2'A' Passes 30% discount**
**A/L 3'A' Passes 40% discount**

Special offer get Bank staff get 50% Fee rerfund ! Against DBF September Exam Course Fee. மற்றையவர்களுக்கு 10% discount
தொடர்புகளுக்கு:
Spectra skills
19,Stanley Road, Jaffna.
T.P- 0212221422
0212221423
(34611)(6.7.11)

## பாதுகாப்புச் சேவை

தனியார் வீட்டு நிர்வாக பாதுகாவலர், தனிநபர் பாதுகாவலர், காரியாலயங்கள், தனியார்விடுதிகள், கல்யாண மண்டபங்கள், Shopping Complex, ரெஸ்ரோரன்ட் Hotel School (Pvt) அரசசார்பற்ற அனைத்துச் நிறுவனங்கள் Jso, ASO, SO ,VO, OIC, A/O, F/O, O/M மற்றும் கிளினிங் சுத்திகரிப்பாளர். இவை அனைத்தும் சேவைகளையும் உடன் தொடர்பு கொண்டு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருபாலரும் தேவை. மற்றும் கிளினர் கேற்றிங் சேவிஸ் அனைத்து வெற்றிடங்களும் உண்டு. (100) ஆண்கள், பெண்கள்(50) N.I.C, Photo உடன் நேரில் வரவும். நிலாவரை, இணுவில், யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவில், புன்னாலைக்கட்டுவன் அனைத்து இடங்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை .
PERFECT Security Services PVT LTD,
NO.125 B K.K.S ROAD,
KOKUVIL.
Mobil-0778919367
T.P- 021 7200170
(34612)(6.7.11)

## மரண அறிவித்தல்

### சீவரத்தினம் அன்னப்பிள்ளை



நந்தாவில் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சம்பியன் லேன் கொக்கு விலை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் அன்னப்பிள்ளை நேற்று முன் தினம் (15.03.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-சுந்தரம் தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சீவரத்தினத் தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இராசநாயகம்(ரதிமில்), காலஞ்சென்ற சண்முகலிங்கம் (இலங்கை வங்கி), மற்றும் ஈஸ்வரி(மலேசியா), கனகமணி (கிளி-வெள்ளவத்தை, கொழும்பு), முருகையா(கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ் சென்ற இராஜேஸ்வரி(பேபி), மற்றும் புஸ்பராணி, யோகராணி, சண்முகதாஸ்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் துரைராசா (கனடா), காலஞ்சென்ற துரைராசா மற்றும் ரகுநாதன்(ஓய்வு பெற்ற ஆசிரியர்), சரோஜினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ரஜினி (ஜேர்மனி), ரஜிதா(கனடா), ரஜீவன் (கனடா), காயத்ரி(யா/பல்கலை மாணவி), ரகுவர்னன்(நில அளவையாளர் மன்னார்), சந்தியா (கனடா), நிசாந்தி(கனடா), சத்தியகீத்(கனடா) ஆகியோரின் பிரியமுள்ள பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.ரகுநாதன் (மருமகன்),
சீ. சண்முகதாஸ் (மகன்),

சம்பியன் லேன், கொக்குவில்.
0212052323 (சி//484)(6.16.14)

## மணமகள் தேவை

73 ஆம் ஆண்டு, பூரட்டாதி, செவ்வாய் குற்றமற்ற கி.பாவம் 17 ¼ கனேடிய குடியுரிமை பெற்று கனடாவில் இருந்து வந்துள்ள மண மகனுக்கு செவ்வாய்க் குற்றமில்லாத, படித்த, அழகிய மணமகள் தேவை.

**துர்க்கா திருமண சேவை,**
இல.16, அரசடி லேன், 4 ஆம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு 077 81 85 978 (34608)(6.7.2)

## நிரந்தர வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் நிரந்தர வேலை வாய்ப்பு பிஸ்கட், சொக்லேட், பெப்சி, மைகோலா, க்ளவுஸ், பொலித்தீன் போன்ற மேலும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி,லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு ஆண்/பெண் (வயது 17-50 வரை) உடனடியாகத்தேவை. சம்பளம் (20,000/=, 25,000/=, 32,000/=)உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் தரப்படும். வருகை தரும் நாளில் வேலை வாய்ப்பு உண்டு. தம்பதியினர், நண்பர்கள் குழுக்களாகவும் ஒரே தொழிற்சாலையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.
தொடர்பு: 0776838240
(26183)(6.7.11)

ஓம் விராட் விஸ்வப் பிரமணே நம

## அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம் யாழ்ப்பாணம் பொதுக் கூட்டம்

காலம் : 07.04.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
இடம் : பத்திரகாளி அம்பாள் பொதுநோக்கு மண்டபம் இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
தலைவர் : திரு.தி. கிருஷ்ணகுமார்

**விஸ்வகர்மகுல மக்கள் அனைவரையும் தவறாது வருகை தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.**

அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்
213/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ஜெ. மனோகர்
செயலாளர்.
(34604) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்புவதால் பயனில்லை நாமே கொதித்தெழுவோம்

தில்லாலங்கடி

ஒரு வயலினுள் நான்கு குருவி குஞ்சுகளுடன் தாய்க் குருவி ஒன்றும் வசித்து வந்தது. வயலில் அருவி வெட்டும் நேரம் வந்துவிட்டது. ஒரு நாள் தாய்க் குருவி இரைதேடவெளியில் புறப்பட்டுச் சென்றுவிட்டது. அப்போது அங்கு வந்த வயல் உரிமையாளன் நாளைக்கு வேலையாள்களை வைத்து அருவி வெட்டப் போவதாகச் சொன்னான். தாய்க் குருவி கூட்டுக்கு வந்ததும் குஞ்சுகள் வயல் உரிமையாளன் சொன்னதை அப்படியே சொல்லின.

அதற்கு தாய்குருவி சரியென்று விட்டு மறுநாளும் இரைதேடப் புறப்பட்டுச்சென்றுவிட்டது. வயல் உரிமையாளன் சொன்னபடி மறுநாள் அருவி வெட்டு நிகழவில்லை. இந்த வேலைக்காரர்களை நம்பிப் பலனில்லை, நாளை சொந்தக்காரர்களை அழைத்து வந்து அருவி வெட்ட வேண்டும் என்று வயல் உரிமையாளன் மறு நாள் சொன்னான். இதையும் குஞ்சுகள் தாய்க் குருவிக்கு சொல்ல, தாய்குருவி சரி என்று விட்டு மறுநாளும் இரை தேடப் புறப்பட்டு விட்டது.

மறுநாள் வயலுக்கு வந்த உரிமையாளன், இது சரிப்பட்டு வராது, நாளை தானே அருவி வெட்டப் போவதாகச் சொன்னான். இதை இரை தேடி திரும்பிய தாய்க் குருவியிடம் குஞ்சுகள் சொல்லின. உடனே தாய்க் குருவி தன் குஞ்சுகளை தூக்கிக் கொண்டு வேறிடம் தேடிச் சென்றது.

அப்போது குஞ்சுகளுக்கு ஒன்றும் புரியவில்லை. தாய்க் குருவி சொன்னது, மற்றையவர்களை நம்பியதால் அவனது வயலில் அருவி வெட்டு நிகழாது என்று தங்கியிருந்தோம். நாளை அவனே அருவி வெட்டுவதாகச் சொன்னதால் நிச்சயம் அது நடக்கும் என்பதாலேயே பாதுகாப்பாக வேறிடம் நோக்கி நகர்வதாகத் தெரிவித்தது.

இவ்வாறான பல தத்துவக் கதைகள் நம் தமிழரிடம் உள்ளது. இவை சொல்லும் தத்துவங்களைத் தான் இன்னமும் நாம் வாழ்வில் கடைப்பிடிப்பதாக இல்லை.

போர் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் முடிவை எட்டியதைத் தொடர்ந்து, தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை முன்னர் இருந்ததைக் காட்டிலும் பல மடங்கு அதிகரித்தது. இனப் பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் அரசால் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

போரின் பின்னர் புதிதாக முளைத்த பிரச்சினைகள் இவை. அதே நேரம், 23 வருடங்களுக்கு மேலாக தொடரும் அகதி வாழ்க்கை, காணாமல் போனவர்கள், எந்தவித விசாரணையுமின்றி தடுப்பில் வைக்கப்பட்டுள்ளவர்கள் என்று பழைய பிரச்சினைகளும் தமிழர்களுடன்கூடவே தொடர்கின்றன.

இவ்வாறானதொரு நிலைமையால் - தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடம் - இயலாமை என்பனவற்றால், கிடைக்கும் எதையாவது பற்றிப் பிடித்து தப்பிச் செல்ல நினைக்கின்றனர். இந்த நிலைமையில் 2012 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக அமெரிக்க அரசினால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீர்மானம் தமிழர்கள் மீதான அக்கறையினாலேயோ அல்லது இலங்கை அரசு மேற்கொண்ட இனப்படுகொலையை விசாரணை செய்ய வேண்டும் என்ற மனச்சாட்சியின் பிரகாரமோ கொண்டு வரப்படவில்லை. மாறாக, இலங்கை அரசு மேற்குலகை எதிர்க்கும் இராஜதந்திர நடவடிக்கையை மாற்றியமைப்பதற்காக அமெரிக்க அரசின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலிலேயே கொண்டு வரப்பட்டது. எப்போதும் இலங்கையின் நண்பனாக இருக்கும் இந்தியா, அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சரத்துக்களினை வலுவற்றதாக்கி விட்டு இறுதியில் ஈழத் தமிழர்களுக்காக ஆதரிப்பதுபோல் - பிரேரணையை ஆதரித்தது.

இந்த ஜெனிவாத் தீர்மானம் பயனற்றதொன்றாக இருந்த போதும் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், எதுவுமே இல்லாத நிலையில் எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேசம் உதவும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது. சர்வதேசமும், எங்கள் தொப்புள் கொடி உறவுகளுமான இந்தியாவும், இலங்கை அரசு தமிழர்கள் மீது மேற்கொள்ளும் அராஜகங்களுக்கு முடிவு கட்டும் என்று நம்பினர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு உலக வல்லரசு அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஒருவாறாக நிறைவேற்றப்பட்டது. இதனால் தமிழர்களுக்கு இன்றுவரையில் எந்த விடிவும் கிடைக்கவில்லை. ஆனாலும் சர்வதேசம் எதையாவது செய்யும் என்ற நம்பிக்கையை தமிழர்கள் இன்னமும் கைவிடவில்லை.

ஜெனிவாவில் கடந்த ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரே தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் பலமடங்கு அவிழ்த்து விடப்பட்டுள்ளன. திட்டமிட்ட ஒடுக்குமுறைகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மார்ச் மாதத்தின் பின்னர், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்காக நினைவேந்தல் அனுஷ்டிக்க முற்பட்ட யாழ். பல்கலைக் கழக சமூகம் புலனாய்வாளர்களால் தாக்கப்பட்டது. மே 18 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த் தாக்கப்பட்டார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் வவுனியாச் சிறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக டில்றொக்ஷன், நிமலரூபன் இருவரும் அடித்துக் கொல்லப்பட்டனர்.

தமது சக கைதிகளை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றி அங்கு அவர்களை சிங்கள சிறைக்காவலர்கள் சித்திரவதை செய்வதற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்த வவுனியாச் சிறைக் கைதிகள் மீது அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்தினர். இந்த இருவரும் கொல்லப்பட்டனர்.

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் காரணமாக பெரும்பான்மையினக் கைதிகள் 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்க முற்பட்ட யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மீது இராணுவப் புலனாய்வாளர்கள் தாக்குதல் நடத்தினர். அத்துடன் பெண்கள் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர்.

இதனை எதிர்த்து அமைதியான முறையில் போராடிய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். அத்துடன் இராணுவத்தினரும் புகுந்து மாணவர்களை கண்டபடி தாக்கினர். பாதிக்கப்பட்ட மாணவர்கள் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் சென்ற போதும் அங்கு வந்த இராணுவப் புலனாய்வாளர்கள் மாணவர்களை சிகிச்சை பெற விடாமல் மிரட்டி திருப்பியனுப்பினர்.

இதன் பின்னர் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை தொடர்ச்சியாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு கைது செய்தது. இறுதியில் 4 மாணவர்கள் எந்தவித காரணமும் இன்றி நீதிமன்றில் முற்படுத்தப்படாமல் இரண்டு மாதங்களுக்கு மேலாக புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா பதவியிலிருந்து விரட்டப்பட்டார். 'திவிநெகும சட்ட மூலத்தில் அரசுக்கு ஆதரவாக அவர் நடக்கவில்லை என்பதே இதற்குக் காரணம். உயர்நீதிமன்றத்த தீர்ப்பையும் மீறி அவர் பதவியிலிருந்த அரசால் அகற்றப்பட்டார்.

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் ஊடகங்கள் விநியோகத்திற்கு கொடுத்துச் செல்லப்படும் போது விநியோக ஊழியர்கள் தாக்கப்பட்டு பத்திரிகைப் பிரதிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

யாழ்.மாவட்டத்தின் நுழைவாயிலில் திட்டமிட்ட ரீதியில் அரசால் சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டு அது நிரந்தரமானதாக மாற்றப்பட்டது.

மக்கள் தமது வாழ்வுரிமையைக் கோரி தெல்லிப்பழையில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் சிவில் உடையில் வந்த 4 பேர் குழப்பம் ஏற்படுத்த முயன்றனர். ஆனால் அவர்களை கைது செய்ய பொலிஸார் மறுத்தனர். தப்பியோடியவர்களை இராணுவத்தினர் பாதுகாப்பாக இராணுவ முகாமுக்குள் கொண்டு சென்று சேர்த்தனர்.

காணாமல்போன உறவுகளைத் தேடி கொழும்பில் போராட்டம் நடத்துவதற்காக புறப்படவிருந்த மக்களை, பொலிஸார் வவுனியாவில் தடுத்து நிறுத்தியதுடன், வாகனச் சாரதிகளையும் மிரட்டினர்.

இவையனைத்தும் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கைத் தீவில் நடந்தேறிய, ஊடகங்களால் பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள். இதில் பிரதம நீதியரசர் விவகாரம், வெலிக்கடைச் சிறைக் கைதிகள் விவகாரம் தவிர்த்து ஏனையவை தமிழ் மக்களுக்கு எதிரானவையே.

இவை தவிர, அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் பல்வேறு ஒடுக்குமுறைத் திட்டங்களும், இனக்கொலைத் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும்- தமிழர்கள் எதிர்பார்க்கும்- சர்வதேசம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் படையினரிடம் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்ட காட்சிகள் அதிலும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின், 12 வயதான கடைசி மகன் படையினரின் காவலரணில் வைக்கப்பட்டிருப்பதையும், அவன் கொறிப்பதற்கு ஏதோ கொடுக்கப்பட்டிருப்பதையும், இறுதியில் அவன் கொல்லப்பட்டு கிடப்பதையும் காட்டும் ஒளிப்படங்கள் வெளியாகிய பின்னரும்கூட. உலகின் மனச்சாட்சி திறக்கவில்லை.

கடந்த ஆண்டு ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீது தொடரும் அடக்குமுறைகள், இலங்கைப் படையினர் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களுக்குரிய காணொலிகள் என்பன வெளியாகியுள்ளன. அமெரிக்காவால் இலங்கைக்கு எதிரான பிரேரணை மீளவும் இப்போது சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்தப் பிரேரணையும் இராஜதந்திர விளையாட்டுக்களால் சூழப்பட்ட தொன்றே.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் உலகின் வல்லரசாக அது தன்னை நிலைநாட்டிக் கொள்ளும் அதேவேளை, தனது எதிரியான சீனாவின் பக்கம் இலங்கை சாய்வதை அது விரும்பவில்லை. அத்துடன் ஜனாதிபதி மஹிந்தவின் மேற்குலக எதிர்ப்பு இராஜதந்திர நடவடிக்கைகளையும் அது ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இலங்கையை மிரட்டவே தமிழர் விடயங்களை கையில் தூக்குகிறது அமெரிக்கா உட்பட சர்வதேசம்.

இலங்கை சமரசத்திற்கு இணங்குமாக இருந்தால் அமெரிக்காவின் பிரேரணை அந்த நாட்டாலேயே குப்பைத் தொட்டிக்குள் போடப்படும். ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின் நடப்பு அமர்விலும் அமெரிக்காவால் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை இலங்கை அரசின் நேரடியான சமரசங்கள், இந்திய மத்திய அரசின் ஊடான சமரசங்களால் வலுவிழந்து போகின்றது.

மொத்தத்தில் வல்லரசுகளின் இராஜதந்திரப் போட்டியில் தமிழர்கள் வெறும் பேச்சுப் பொருள்தான்.

இந்த நிலையில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் சொல்லப்படும், "ஒடுக்கப்பட்ட மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக் கட்ட முன்வர வேண்டும்" என்ற வாக்கு நிதர்சனமானதே.

எங்களுக்காக நாங்கள் தான் போராட வேண்டும். அமெரிக்காவோ, இந்தியாவோ எங்களுக்கு எந்தத் தீர்வையும் பெற்றுத் தரப் போவதில்லை. தமிழர்கள் ஓர் அடி பாய்வதைக் கண்டே சிங்கள அரசு பயந்து நடுங்குகின்றது. அதன் வெளிப்பாடுதான் தெல்லிப்பழையில் மக்களின் அஹிம்சைப் போராட்டத்தைக் குழப்ப எடுத்த முயற்சியும், மக்களை கொழும்பு செல்ல விடாமல் வவுனியாவில் தடுத்ததும்.

எனவே 'அஹிம்சை' ஆயுதத்தைக் கையில் எடுத்து எமக்காக நாம் போராடினால் எங்களுக்கான தேசத்தில் நாங்கள் வாழலாம்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

சிலாபத்திற்கு அருகில் அமைந்துள்ள எஸ்பெஸ்டோர்ஸ் கூரைத்தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு யாழ்ப்பாணப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி

**(Sales Executive)** தேவை.

தொடர்பு கொள்ளவும்

சீகிரி ரூபின்ங்ஸ் பிறைவேற் லிமிட்டெட்

தாரவில்லுவ, பத்துலோய

பக்ஸ் - 011 2942059 (C/7031)(6.7.2)

மொபைல்:- 0772632155

e-mail.sigiriroofing@gmail.com


## மரண அறிவித்தல்கள்

## மகாலிங்கம் தவமணி



ஏழாலை தெற்கு மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் தவமணி நேற்று(16.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-தெய்வாணை தம்பதியரின் அன்பு மகளும், மகாலிங்கத்தின் பாசமிகு மனைவியும், கிருஸ்ணா, கனகம், சின்னத்துரை, நவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயக்குமார், ஜெயபாலா, ஜெயசீலன், ஜெயமோகன், ஜெயச்சந்திரன், ஜெயகௌரி அகியோரின் பாசமிகு தாயும், ஜெயக்குமாரி, ஜெயலட்சுமி, றஜிதா, சோபனா, சர்மிலா, பிரதீசன் ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிஷாந், தர்சிகா, கௌசிகன், கோபி, டிலக்சிகா, மிதுனன், பபிசன், தமிழினியன், கஜவிந், கர்சலன், அபிசேகா ஆகியயோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் கமலகம் என்னும் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கமலகம்"
உரும்பிராய் கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள்.

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்



பூநகரி கல்முனையைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்று முன்தினம்(15.03.2013) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பொன்னு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், நடராசா, செல்வராசா, அன்னலட்சுமி, சிவபாக்கியம், சரஸ்வதி மற்றும் சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் மகாசீலன், கமலாவதி, தியாகராஜா, புனிதவதி ஆகியோரின் மைத்துனரும், மனோகரன் (இலங்கை), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி (இலங்கை), ஸ்ரீதரன் (ஜேர்மனி), கமலேஸ்வரன் (பிரான்ஸ்), கவிதா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் சிவராசா, ஜெயந்தி, கலைவாணி விஜயன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ரஜீவ், சாம்பவி, யாழினி, யமிலா, யகிர்தன், விவினா, கவிப்பிரியா, லவன், நிதர்சன், கிருஜன், மிதுஜா, தீபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் இல.75, பொன்னம்பலம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப் பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

75, பொன்னம்பலம் வீதி,
அரியாலை.

(34614)(5.6.7)

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 17

கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத்துறை, பண்ணைப் பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிப் பாற்பண்ணைப் பிரதேசம், அச்சுவேலிப் பிரதேசத்தின் இடைக்காடு, தம்பாலைப் பிரதேசங்கள், சுன்னாகம் நகரப் பகுதி ஆகிய இடங்களில் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ-ரி)

## தெற்கு அரசியல் புலத்துடன் கிளிநொச்சியில் காணி அபகரிப்பு

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி தொண்டமான் நகரில் , தெற்கு அரசியல் பின்புலமும் நாடாளுமன்ற அங்கத்துவமும் கொண்ட ஒருவரின் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் என அறிமுகப் படுத்தும் சிலரால் தமது கழகக் காணியை அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஞான வைரவர் விளையாட்டுக்கழகத்தினர் தெரிவிக்கின்றனர்.

தொண்டமான் நகர் , உருத்திர வேங்கை வைரவர் கோயிலுக்கு முன்பாக உள்ள காணியையே இவர்கள் அபகரிக்க முயற்சித்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

''முதற்கட்டமாக இவர்கள் குறித்த காணிக்குள் உத்தரவின்றி உட்பிரவேசிக்கக் கூடாது'' என ஆங்கிலத்தில் எழுதி பெயர்ப் பலகை ஒன்றை நட்டுச் சென்றுள்ளனர்.

இதுகுறித்து கவலை வெளியிட்டுள்ள ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தினர், ''தாம் 30 வருடங்களாக குறித்த மைதானத்தைப் பயன்படுத்தி வருவதாகவும் இதனையும் மீறியே குறித்த அரசியல் பின்புலம் உடையவர்கள் காணியை அபகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.(ஐ-426)

## சடலம் ஒப்படைப்பு

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக கைவேலி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சடலமாக ஒப்படைக்கப்பட்டவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையான, இடைக்காடு வள்ளிபுனத்தைச் சேர்ந்த மாடசாமி மனோகரன் (வயது-46) என்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குடும்பத் தகராறுகாரணமாக இவர் கிருமிநாசினி உட்கொண்ட நிலையில் தாமதமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-555)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
adv t@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்

### நீக்கிலஸ் ஞானராசா றொகாந்தன்

*(புனித பத்திரிசியார் கல்லூரி 2005 A/L மாணவன்)*



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீக்லஸ் ஞானராசா றொகாந்தன் நேற்று முன்தினம் (15.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானராசா -ஜெயசீலி தம்பதியரின் அன்பு மகனும், நிசாந்தினி, நிசாந்தன், றொக்சன், டிபேசன், நிதர்சினி, நிலைக்கிளி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் றோட், நாவாந்துறை.

தகவல்: குடும்பத்தினர்.


## Vacancies For Marketing Executives

**JOIN US TODAY!**

பல்தேசிய நிறுவனத்துக்கு Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Benefits:**

* Unlimited income potential
* Comprehensive Training
* Basic Salary / Travel Allowances / Commission incentives
* Overseas Travel/ Coferences for Achievers
* Management positions within 6 month - 1Year
* Motor Bike / Car Allowances

**Requirement:**

* Age above 35 Years.
* G.C.E. (A/L) Qualification
* A Positive attitude with a pleasing personality

**Education Technologies**


No:100, 2nd Floor Manipay Road, Jaffna.

**Contact-** Manager -Mr.G.ANTHANY.

**0773434823**

WWW.Pioneerhouselearning.Com

## OUR SALES TEAM BRINGS CUSTOMER SUCCESS!



**Analytical Instruments (AI) group is a Sri Lankan organization representing many global giants in the Scientific/Diagnostic field. Founded in 1989, the Company is a premier high technology total solutions, instrumentation and service provider serving a wide scope of technology transfer needs of the Healthcare, Diagnostic, Scientific and Agricultural sectors of the country.**

**When asking any of our 240 employees "What does AI group mean to you?" you'll often hear the word "opportunity". AIPL offers Employees the opportunity to advance in specific segments we specialize in with world-class products and the chance to enjoy a variety of professional and personal rewards. Our employees are offered the opportunity to make a difference - for themselves, their families, and for the country in which we all live.**

*"Your opportunity to positively impact health begins here. Whether you're an experienced job seeker or newer to the field, we offer a range of career opportunities in the medical division of AI group."*

### REGIONAL SALES COORDINATOR - Medical Division

**The Job:**

Responsible for planning and implementing sales activities and taking corrective action when necessary in order to achieve company goals and objectives while maintaining the consolidating of existing business & growth of top 20 customer segments.

**Qualifications and Experience:**

- Degree in Science with Chemistry or equivalent or G.C.E A/L Science with minimum of 02 years experience in Sales & Marketing.
- The candidates from Jaffna, Kilinochchi and Vavuniya will be given priority

**Knowledge & Skills:**

- Computer literacy in MS Office packages
- Good communication & interpersonal skills
- Industry/ Company Product application, support & service knowledge

**The Successful candidate will have the opportunity to:**

- Participate on Company's comprehensive training & development programs
- Monthly salary Rs: 25,000.00 and other fringe benefits

Interested candidates are requested to forward updated CV with contact details of two non related referees within 07days of this advertisement by Post or E-mail stating the job title on the CV and subject bar or envelop.

ANALYTICAL INSTRUMENTS
Technology for Customer Success

Human Resources Manager
**Analytical Instruments (Pvt) Ltd.,**
100, Elvitigala Mawatha, Colombo 08
**E-mail: recruitment@aipl.lk**
www.aipl.lk


ISO 9001 : 2008
Certified Company


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலையில் முடிந்தது வடக்கின் பெரும் போர்



இரு கல்லூரியின் அதிபர்களும் வெற்றிக் கிண்ணத்தை அணித் தலைவர்களிடம் வழங்கிய போது....




சிறந்த பந்துவீச்சாளர், ஆட்டநாயகன் விருதுகளை வென்ற லோகதீஸ்வர் (சென்.ஜோன்ஸ்)



சகலதுறை ஆட்டநாயகனாகத் தெரிவாகிய அலன்ராஜ் (மத்திய கல்லூரி)



சிறந்த துடுப்பாட்ட வீரராக தெரிவாகிய அமிர்தயன்




சிறந்த களத்தடுப்பாளராகத் தெரிவாகிய அலன்டிலான் (மத்திய கல்லூரி)

யாழ்ப்பாணம்,மார்ச் 17

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான 107 ஆவது துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

சென் . ஜோன்ஸ் கல்லூரிக்கும் மத்திய கல்லூரிக்கும் இடையேயான 107 ஆவது வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டி கடந்த மூன்று நாள்களாக யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி சகல இலக்குளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதனைத் தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி இரண்டாம் நாள் நிறைவில் 7 இலக்குளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

நேற்றுக்காலை மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகியது. இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடைந்த போது ஆட்டமிழக்காதிருந்த அலன்ராஜும், நிறோஜனும் துடுப்பெடுத்தாடக் களமிறங்கினர். இவர்கள் இருவரும் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வார்கள் என நம்பப்பட்ட போதும் நிறோஜன் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். இதனைத் தொடர்ந்து அலன்ராஜ் நிதானமாகத் துடுப்பெடுத்தாட முயற்சித்த போதும் பின்வரிசை வீரர்கள் எவரும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்ததால் ஆட்டத்தின் போக்கே மாறியது. அடுத்தடுத்து இலக்குகள் இழக்கப்பட நேற்றைய இறுதி நாளில் மேலதிகமாக 20 ஓட்டங்கள் பெற்ற நிலையில் மத்திய கல்லூரியின் ஆட்டம் 146 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

அந்த அணி சார்பாக அலன்ராஜ் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களைப் பெற்றார். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்துவீச்சில் லோகதீஸ்வர் 5 இலக்குகளையும் காணாமிர்தன், நிலோசன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து தனது 2 ஆவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்.ஜோன்ஸ் அணியினர் நேற்றைய தேநீர் இடைவேளைக்குப் பின் 6 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தினர்.

அந்த அணி சார்பாக துவாரசீலன் 29 ஓட்டங்களையும் ,அமிர்தயன் 28 ஓட்டங்களையும், பிரிய சங்கர் 20 ஓட்டங்களையும் சயன், கபில்ராஜ் ஆகியோர் 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். அந்த அணியின் காணாமிர்தன், விந்தாகரன், லோகதீஸ்வரன் மற்றும் கவாஸ்கர் ஆகியோர் களமிறங்காதிருந்தனர்.

மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் நிரூபன் 3 இலக்குகளையும், சௌமிதரதன் 2 இலக்குகளையும், ஹரிகரன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் 185 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மத்திய கல்லூரி அணி நேற்றைய மூன்றாம் நாள் இறுதியில் 29 பந்துப்பரிமாற்றங்கள் துடுப்பெடுத்தாடி 4 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டது.

மத்திய கல்லூரியின் இரண்டாவது இன்னிங்ஸில் டார்வின் 33 ஓட்டங்களையும்,நிறோஜ் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 3 இலக்குகளையும், விந்தாகரன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இரு அணி வீரர்களினதும் நிதானமான துடுப்பாட்டம் மற்றும் துல்லியமான களத்தடுப்பு மூலம் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இந்தப் போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக மத்திய கல்லூரியின் இலக்குகளை வேட்டையாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரன் லோகதீஸ்வர் தெரிவுசெய்யப்பட்டார். இவரே சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த களத்தடுப்பு வீரராக மத்திய கல்லூரி வீரர் அலன்டிலானும் சகலதுறை ஆட்டநாயகனாக மத்திய கல்லூரியைச் சேர்ந்த அலன்ராஜும், சிறந்த துடுப் பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித் தலைவர் அமிர்தயனும் தெரிவு செய்யப்பட்டனர். (த-23-86-400)

## இளைஞர் கரப்பந்தாட்டத்தில் இமையாணன் மகளிர் சம்பியன்

கரணவாய், மார்ச் 17

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பெண்களுக்கான ஆட்டத்தில் இமையாணன் மத்திய இளைஞர் கழக அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று சனிக்கிழமை இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய இளைஞர் கழக அணியும், அல்வாய் மனோகரா இளைஞர் கழக அணியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களை கொண்ட இந்த ஆட்டத்தில் இமையாணன் மத்திய இளைஞர் கழக அணி எதிரணியின் கடும் எதிர்ப்புக்கள் இன்றி 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

முதலாவது செற்றை வெற்றி கொண்டது போல இரண்டாவது செற்றையும் வெற்றி கொண்டு கிண்ணத்தை தம் வசமாக்கலாம் என்ற எண்ணத்துடன் களமிறங்கிய இமையாணன் மத்திய அணியால் இலகுவில் வெற்றியைப் பெறமுடியாது போனது.

அல்வாய் மனோகரா அணியினர் முதல் செற்றில் தாம் விட்ட தவறுகளை திருத்தியவாறு நேர்த்தியாக விளையாடினர்.

இதனால் இந்தச் சுற்றை வெல்வது இமையாணன் மத்திய அணிக்குக் கடும் சவாலாக இருந்தது. இருந்த போதும் 25: 23 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாம் [illegible] இமையாணன் மத்திய இளைஞர் கழக அணி சம்பியனாகியது. (த-400-8)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 17

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கூட்டம் இன்று மு.ப 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கூட்டம் மு.ப 11 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இதில் வலைப் பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் ஏ, பி, சி தரங்களில் சித்தியடைந்த மத்தியஸ் [illegible] கொள்ளுமாறு [illegible] சங்கத்தின் தலைவர் திருமதி ரூபசிங்கம் கேட்டுள்ளார். (த-23-400)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு,

இரவு - 7மணி

ஆலடிசிந்து 'பி' அணி எதிர் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ வி.க

★ ★ ★

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு :-

பி.ப 4 மணி

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மாலி சந்தி மைக்கல் வி.க

★ ★ ★

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலய மட்ட கரம் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(த-8-288-23-400-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது டெஸ்டில் இலங்கை ஆதிக்கம்





ரங்கன ஹேரத்தின் சுழலில் சிக்கிய பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்ஸில் 240 ஓட்டங்களுக்குள் சுருண்டது. முதல் டெஸ்டில் இரட்டைச்சதம் அடித்து அசத்திய பங்களாதேஷ் அணித்தலைவர் ரஹிம் ஒற்றை இலக்கத்துடன் வெளியேறினார்.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பங்களாதேஷ் அணி விளையாடி வருகின்றது. இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்த நிலையில் இரண்டாவது ஆட்டம், கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி ஹேரத்தின் சுழலில் திணறியது. இறுதியில் சகல இலக்குகளையும் இழந்து 240 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. முதலாவது இலக்கை 16 ஓட்டங்களுக்கு இழந்த அணியினர் தொடர்ந்து சீரான இடைவெளியில் இலக்குகளை இழந்துகொண்டே இருந்தனர்.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மொமினுல் ஹக் அதிகபட்சமாக 64 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். நஸீர்ஹுசைன் 48 ஓட்டங்களையும், ஜக்குறுல் இஸ்லாம் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் ரங்கன ஹேரத் 5 இலக்குகளையும் நுவான் குலசேகர 3 இலக்குகளையும், எரங்க ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் டில்ஷானின் இலக்கை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

டி.எம். கருணாரத்ன ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 3 ஓட்டங்களையும் பெற்று களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பாக றொபியுல் இஸ்லாம் டில்ஷானின் இலக்கைக் கைப்பற்றினார்.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும்.

(த-400)

# ஆஸியின் கொட்டத்தை அடக்கி இந்தியா அதிரடி




இந்திய அணியின் அறிமுக வீரர் தவானின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி பலமான நிலையை எட்டியது. கன்னிச் சதத்தை சாதனையுடன் கடந்த தவான், ஆஸி. பந்து வீச்சாளர்களை நொருக்கித் தள்ளினார்.

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் இடம்பெற்று வருகிறது. மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் முதல் நாளில் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் இறுதியில் 7 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஆஸ்திரேலிய அணி நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. நேற்றைய நாளில் ஆஸி.யின் பின்வரிசை வீரர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். இதனால் ஆஸி. 408 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஸ்டீவன் ஸ்மித் மற்றும் பின்வரிசை வீரர் மிற்சல் ஸ்ராக் என்போரின் உதவியுடன் இந்த கௌரவமான இலக்கை எட்டியிருந்தது ஆஸ்திரேலிய அணி.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக எட் கோவான் 86 ஓட்டங்களையும், டேவிட் வோர்ணர் 71 ஓட்டங்களையும், ஸ்மித் 92 ஓட்டங்களையும், மிற்சல் ஸ்ராக் 99 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக இர்ஷாந் சர்மா, ரவீந்திர ஜடேஜா தலா மூன்று இலக்குகளையும், ரவிசந்திரன் அஸ்வின், ஓஜா தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி, டெஸ்ட் அறிமுக வீரர் தவானின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இலக்கு இழப்பு இன்றி 283 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர்களாகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய முரளிவிஜய் ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களையும், தவான் ஆட்டமிழக்காது 185 ஓட்டங்களையும் (168 பந்துகளில்) பெற்றனர்.

இன்று போட்டியின் நான்காம் நாளாகும். (த-400)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் செல்வி பிரேமினி சபாரத்தினம் கலந்து கொள்கின்றார். (ஒ-11)







இலங்கை மனவளக் கலை மன்ற அறக்கட்டளை பெருமையுடன்
வழங்கும்
சிறப்பு யோகா வாழ்வு பற்றிய கருத்தரங்கு
- வழங்குபவர் -
**பேராசிரியர் அருள்நிதி A.S.இராதாகிருஷ்ணன் அவர்கள்**
**அருட் தந்தை தத்துவஞானி வேதாத்ரி மகரிஷி**
அவர்களுடன் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக உடனிருந்து அருட்பணியாற்றியவரும், வேதாத்ரிய விழுமியங்களோடு வாழ்ந்து வருபவருமான புகழ்பெற்ற பேராசிரியர் அருள்நிதி ஏ.எஸ்.இராதா கிருஷ்ணன் அவர்களால் சிறப்பு யோகா வாழ்வுபற்றி அழகு தமிழில் எளியமுறையில் கருத்துரை வழங்கப்படவுள்ளது. பெறுமதிமிக்க இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உங்களிடமும் உள்ள சக்தி மிக்க அனுபவங்களோடு இணைத்துக் கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்:- 18.03.2013 திங்கட்கிழமை மாலை 5 மணி
இடம்:- துர்க்கா மணி மண்டபம் - நல்லூர், யாழ்ப்பாணம்.

**இலங்கை மனவளக் கலைமன்ற அறக்கட்டளை.**

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து பிறேமச்சந்திரன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பிறேமச்சந்திரன் (சந்திரன்) (13.03.2013) புதன்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், தர்மகுலசிங்கம் (சிறி-சுதுமலை) மகேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும், றொசாந்தியின் (டயானா) அன்புக் கணவரும், பிரவீன், பிறித்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், புனிதரஞ்சிதம், பத்மரஞ்சிதம், சுகிர்ரஞ்சிதம், செல்வரஞ்சிதம், ஜீவரஞ்சிதம், நவீனசந்திரன், யோகரஞ்சிதம் ஆகியோரின் சகோதரனும், றொசாந்தன் (பிரான்ஸ்), துஷாந்தினி, அருள்ராஜன், ஜெகதீசன், பாஸ்கரன், அமிர்தராஜா, உதயகுமார், மலர்விழி, சுஜீதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.03.2013) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஈஞ்சடி வைரவர் கோயிலடி,**
**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**தர்மகுலசிங்கம்**
**(சிறி) [illegible]**
**தொ.பே. [illegible]**

(34659)(10.6)

## மரண அறிவித்தல்

### சிவகுரு மாசிலாமணி

**(Rtd.S.L.A.S & JP-Whole Island)**



கரணவாய் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு மாசிலாமணி 13.03.2013 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு-சீதேவி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் சின்னாச்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும் உதயகுமார், வசந்தகுமார், சந்திரகுமார், மாலதி, மைதிலி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சகீலறோஜினி, சுபோதினி, தயாபரன், செந்தூர்வாசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லகுமிகா, டிருக்ஷிகா, யதீசன், வருண், லக்ஷ்மி, ஹரிணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.03.2013) திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணிவரை பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 19.03.2013 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பி.ப 1.00 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**102 1/2,**
**Manning Place,**
**Colombo-06.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(34659)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

Nissan Super Sallon FB 15, HB xxxx.. Manufacted year-2000....1st owner... Full option, accident Free.... Superb Condition....

Pho. Num. - 0777427027

## SANKEN CONSTRUCTION (PVT) LTD JAFFNA

உங்களது கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான சகலவிதமான கொங்கிறீற்களுக்கும் நாடவேண்டியது **சங்கென்**

விவரங்களுக்கு

தவநிரூபன் - 0718643645, நிரஞ்சன் - 0718643636

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் ஹோட்டலுக்கு (HOTEL) கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை

**01. கணக்காளர்** **02. களஞ்சியக்காப்பாளர்** **03. சாரதி**

**04. சமையலாளர்** (அனைத்து வகையான யாழ். உணவு வகைகளையும் தயாரிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.)

★ மேற்படி பணிநிலைகளில் முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு 23.03.2013 இக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.4443, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வயது ஒரு தடையா!

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலை வாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு!!

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.

- 2 வார பயிற்சிக் காலமுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:- யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, நெல்லியடி, கிளிநொச்சி.

அடிப்படைத் தகைமைகள்:

★ G.C.E(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

★ 18வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 28.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 4440
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(34271)(6-6-7)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna *மட்டுமே*. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள். புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093

61, Kachchery-Nallur Road, Jaffna

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில் மகளிர் கல்லூரிக்கு அருகில் 3¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

T.P- 0776667771

## BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 17.03.2013**

| | |
|---|---|
| Fundamental English | - அடிப்படையிலிருந்து ஆங்கிலம் கற்க |
| PROFESSIONAL SPOKEN ENGLISH | - தனிப் பேச்சுப் பயிற்சி |
| Advanced Dip in Eng | - தொழில்புரிவோர், பல்கலை மாணவர், A/L, தோற்றிய மாணவருக்கு |
| IELTS, TOEFL | - வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வோருக்கு |
| A1 | - U.K இல் Settle ஆக இருப்போருக்கு |

விரிவுரையாளர் - British Council மற்றும் America மொழியாளர்களிடம் பயின்றவர்.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் அனுமதிகள் மாணவரின் தனிக்கவனம் கருதி

23, பலாலி வீதி, யாழ். (Apollo Hospital எதிரில்) 077 1327 818 / 021 373 4121 181, யாழ். பிரதான வீதி, நெல்லியடி.

(06736)(10,6,7) (வி/4411) (65,6,7)

## பதவி வெற்றிடம்

சங்கென் ஸ்தாபனத்தால் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு (யாழ்ப்பாணத்தில்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- உதவி பொறியியலாளர்கள் - கட்டடத்துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள்
- மேற்பார்வையாளர்கள் - கட்டடத்துறையில் அனுபவமுள்ள துடிப்பான இளைஞர்கள்.
- Data Entry Operators cum store keeper - கட்டட பொருள்களில் அனுபவமுள்ளவர்கள் (பெண்கள் விரும்பத்தக்கது.)

விவரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி

The Manager,
Sanken Construction (Pvt) Ltd,
No 31, Wyman Road, Jaffna.
Email - jayanthi@sankenconstruction.lk

## கடை வாடகைக்கு

1 தளம் 1500 சதுரஅடி கொண்ட 3 மாடி கடை தனியாகவோ பிரித்தோ வாடகைக்கு கொடுக்கப்படும் (கஸ்தூரியார் வீதியில் உள்ள செம்மா தெரு பள்ளி வாசல் அருகில்) அரச/தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு - 0777324648, 0777324637

(33884)(3,6,7)

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது

April/ May Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனையடைந்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**

EXPONET

379 - ½, Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.நகர மத்தியில் உள்ள பாங்சால் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 0777179778

## தேவை

முள்ளியவளையில் அமைந்துள்ள பொதிகள் அனுப்பும் காரியாலயத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. (முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீர் ஊற்று வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு - 0773818799

## தற்போது யாழ் நகரில்...



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

Leading to **BSc (Hons)** From **UK**

### Why Choose BCAS for QS & Civil Engineering ?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

Macro Ads

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| **IELTS** ACADEMIC & GENERAL Duration: 48 hrs Week/ Week ends | •ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் •முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி •IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம் •இலவச Tutorial Facilities |
| **City & Guilds A1 A2 B1 B2** Duration: 48 hrs Week/ Week ends | •UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது. •இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி. •காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும். •ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும். |
| Certificate In **SPOKEN ENGLISH WITH GRAMMAR** (Quick learning programme) Duration: 60 hrs Week/ Week ends | •ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி. •ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி. |
| **DIPLOMA IN ENGLISH** Duration: 3 Months Week/ Week ends Writing - 60Hrs Reading - 48Hrs Listening - 48Hrs Speaking - 48Hrs Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM | •தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி. •Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறைமூலம் விரிவாக கற்பிக்கப்படும். •மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும். •O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படும். |

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்மானம் நிறைவேறும்
ஆனால் தீர்வு கிடைக்குமா ?

04

## தகிக்கும் தமிழகம்



02- 03



22

மாணவர் போராட்டம்



20

ஜெனிவாவில் நடப்பது என்ன?

இந்திய மீனவர்கள் கைது
ஜெனிவா எதிரொலியா.......?



24


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் | 17 மார்ச் 2013 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: இருபத்துநான்கு



# மூன்றாவது அம்பயர்

நிலாந்தன்

இலங்கை இனப்பிரச்சினை முதலும் கடைசியுமாக ஒரு பிராந்தியப் பிரச்சினைதான். இரண்டாவதாகத்தான் அது ஓர் அனைத்துலகப் பிரச்சினை. சுமாராக கால் நூற்றாண்டுக்கு முன்பு இந்திய-இலங்கை உடன்படிக்கை உருவாகிய போது அது ஒரு பிராந்தியப் பிரச்சினையாகவே காணப்பட்டது. அதன் பின் நிகழ்ந்த திருப்பகரமான மாற்றங்களால் அது அதன் தர்க்க பூர்வ விளைவாக ஓர் அனைத்துலகப் பிரச்சினையாக மாறியது.

அதில் முதலாவது திருப்பம், ரஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டமை. அதன் தொடர்ச்சியாக புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டது. அதோடு அதன் உயர் தலைவர்கள் இருவரும் இந்தியாவில் சட்டப்படி தேடப்படும் குற்றவாளிகளாகினர். எனவே, ரஜீவ் வழக்கிலிருந்து தொடங்கி புலிகள் இயக்கத்திற்கும் புதுடில்லிக்கும் இடையில் ஒரு சட்டப்பூட்டு உருவாகிவிட்டது.

இதிலிருந்து தொடங்கி இனப்பிரச்சினையானது பிராந்தியமயப்படுவதில் குறிப்பிடத்தக்க அளவிற்கு நடைமுறைத் தடைகள் ஏற்பட்டன. இது முதலாவது காரணம்.



இரண்டாவது காரணம் ஏறக்குறைய இதே காலப்பகுதியில் அமெரிக்காவானது ஏகப்பெரு வல்லரசாக எழுச்சி பெற்றமையாகும். கெடுபிடிப் போரின் கடைசிப் படை விலகல்களில் ஒன்றாக இந்திய அமைதிப் படையின் விலகல் காணப்படுகிறது. கெடுபிடிப் போரின் முடிவையடுத்து உருவான ஒரு துருவ உலக ஒழுங்கின் கீழ் உலகில் காணப்பட்ட எந்த ஒரு மோதலும் ஏதோ ஒரு விகிதமளவிற்கு அமெரிக்க மயப்படுத்த வேண்டிய ஓர் உலகச் சூழல் உருவாகியது. இது இரண்டாவது காரணம்.

மூன்றாவது காரணம் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் எழுச்சியாகும். சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பு இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபோது முன்னணிக்கு வந்திருக்காத ஒரு தோற்றப்பாடு இது. தமிழ்ப் புலப்பெயர்ச்சியின் மூன்றாவது அலை எனப்படுவது 1980களின் முற்கூறுகளிலிருந்து தொடங்குகின்றது. இது 1990களில் அதன் பிரம்மாண்டமான வளர்ச்சியைப் பெறலாயிற்று. இயல்பாகவே விடா முயற்சியும், உழைப்பார்வமும், சேமிப்பார்வமும் மிக்க ஈழத் தமிழ்ச் சமூகமானது மிகக் குறுகிய கால கட்டத்துள் நிதிப்பலமுடைய நாட்டுப் பற்றுமிக்க ஒரு புலம்பெயர் சமூகமாக எழுச்சிபெற்றது.

தொடக்கத்தில் வேரற்ற அடையாளமற்றவர் உதிரிச் சமூகமாகக் காணப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்கள் நிதி ரீதியாக பலமடையத் தொடங்கிய கால கட்டத்தில், புலம்பெயர்ந்த நாடுகளில் தமது கூட்டு இருப்பை உறுதிப்படுத்தவும், கௌரவப் படுத்தவும் வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதே காலப்பகுதியில் தாய்நாட்டில் தனிப்பெரும் சக்தியாக எழுச்சி பெற்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கமும் அது கட்டியெழுப்பிய சிற்றரசும் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு, அவர்களுக்குத் தேவையாக இருந்த கூட்டு அடையாளங்களை அல்லது தேசிய அடையாளங்களை வழங்கலாயின.

இது படிப்படியாக புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமும் புலிகளின் சிற்றரசும் ஒன்று மற்றையதில் தவிர்க்கவியலாமல் தங்கியிருக்கும் ஒரு வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் நிலைவரை நீண்டது.

புலிகளின் வீழ்ச்சியையடுத்து தமிழர்களின் அடுத்த கட்ட அரசியல் தங்களிடம்தான் கையளிக்கப்பட்டிருக்கிறது என்று புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் நம்புமளவிற்கு இப்பொழுது நிலைமைகள் காணப்படுகின்றன.

ஈழத்தமிழர்களின் அரசியலை அஞ்சலோட்டத்துடன் ஒப்பிடும் ஒருபகுதியாக புலம் பெயர் தமிழர்கள் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின் அஞ்சலோட்டக் கோல் தங்களிடமே கையளிக்கப்பட்டிருப்பதாக மிக விசுவாசமாக நம்புகிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் எழுச்சியோடு ஈழத்தமிழ் அரசியலானது இரண்டு பின்தளங்களைப் பெற்றுவிட்டது. முதலாவது தமிழ்நாடு. இரண்டாவது புலம்பெயர்ந்த தமிழர்கள். இலங்கை இந்திய ஒப்பந்த காலத்தில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு பின்தளமாக பூரண வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. ஆனால், ஒரு துருவ உலக ஒழுங்கின் எழுச்சியோடு புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமானது ஒரு பலமான இரண்டாவது பின்தளமாக மேலெழுந்துவிட்டது. இதனால், ஈழத் தமிழர் பிரச்சினையானது, திரும்பி வர முடியாத அளவிற்கு மேற்கு மயப்பட்டு விட்டது. அதாவது, மேற்குமயமாதல் எனப்படுவது அதன் மிகத் தூலமான வடிவத்தை அடைந்துவிட்டது.

மேற்சொன்ன மூன்று காரணங்களின் விளைவாக தமிழர் பிரச்சினை மேற்கு மயப்பட்டு வந்த ஒரு காலச் சூழலில் தான் ரணில் - பிரபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. மேற்படி உடன்படிக்கையின் மூலம் இலங்கை இனப்பிரச்சினையானது, பிராந்திய அரங்கிற்கு வெளியே போய்விட்டதுபோலத் தோன்றியது. ஆனால், அனுசரணையாளராக செயற்பட்ட சொல்ஹெய்ம் பேச்சுவார்த்தைகளின் போது கொழும்புக்கு வரமுன்போ அல்லது கொழும்புக்கு வந்தபின்போது

(சூரியகாந்தி 23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத்துக்காக போராடும் தமிழக மாணவர் அமைப்பு என்பதை அனைத்து மாணவர்களும் இணைந்து ஆரம்பித்து வைத்தார்கள். இவ்வாறு அமைப்பு ரீதியாக இணைந்து ஓர் இடத்தில் கூடி மாணவர்கள் போராடத் தொடங்கினால் அது புரட்சியாகிவிடும் என அரசு அஞ்சியது.




# தகிக்கும் தமிழகம்

■ ஜெரா

அவர்கள் எதிர்ப்படும் இடங்களிலெல்லாம் ''சீ'' என்ற அனுபவத்தை தருபவர்கள். யாரையும் மதிக்கமாட்டார்கள். எந்தப் பெரியவராவது அறிவுரை சொன்னால், ''யோவ்'' வேலையைப் பாருய்யா என் வேல எனக்குத் தெரியும்'' என்பதோடு சில கெட்ட வார்த்தைகளையும் சேர்த்து வீசிவிட்டுப் போவதுதான் அவர்களின் இயல்பு.

40 கிலோமீற்றர் வேகத்தை பேருந்தும், இரயிலும் ஓடிக்கடந்த பின் பறந்து வந்து தொற்றி ஏறுவதில் அவர்கள் சிறப்புத் தேர்ச்சிப் பெற்றவர்கள். நிற்கும் பேருந்திலோ, ரயிலிலோ அவர்களில் ஒருவன் தானும் மறந்துபோய்க் கூடு ஏறமாட்டார்கள். யாராவது இப்போதும் அறிவுரை சொன்னால், ''என்னை திருத்த நீ யாருய்யா? அப்பனா..? நீ பெரிய பருப்பா?'' எவ்வளவு கேவலப்படுத்தலாமோ, அவ்வளவுதூரம் கேவலப்படுத்திவிட்டு கடந்துபோகும் கெட்டவன்கள்.

இவர்கள் ஏறும் பேருந்துகளில் யாரும், அமைதியாக, இயற்கையை ரசித்தபடி, பிடித்த இசையை கேட்டபடி, கற்பனை வாசலை திறந்து விட்டபடி பயணிக்கவே முடியாது. பேருந்தின் கதவும், தகரப் பக்கங்களும் மேளமாகவும், அனைவரின் காதையும் கிழிக்கும் பறையாகவும் மாறியிருக்கும். அங்கிருக்கும் அனைவருமே இவர்களின் எதிர்காலம் குறித்து ''வழிதவறியவர்கள்'' என்று கவலைப்பட்டாலும், அந்த இளைஞர்கள் யார் குறித்தும் கவலைப்படமாட்டார்கள். ''செம ஜாலி மச்சி'' என்ற வார்த்தைக்குள் அனைத்து அட்டகாசங்களையும் புரிந்து இறங்கிப் போய்விடுவர். இதனால்தான் இவர்களை யாரும் மதிப்பதில்லை. மரியாதையில்லை. ''தறுதலைப் பயப்புள்ளைக'' என அக்கறையுடைய பழசுகளின் ஆசி வாங்கியவர்கள்.

இவர்களையும் நல்லவனாக்க ஒருவன் வந்தான். உயிரோடு அல்ல. உயிர் பிரிந்து 4 ஆண்டுகளுக்குப் பின் நிழற்படமாக. அவனின் ஒற்றைப் பார்வை இவர்கள் அனைவரையுமே தீயாக்கி, ஒரே வாரத்தில் அகிம்சைப் போராளிகளாக்கி களமிறக்கியுள்ளது. தன் ஒற்றை இறுதிப் பார்வையில் இவர்களை நல்லவன்களாகவும், வல்லவன்களாகவும் மாற்றியவனான் அவன். பிரபாகரன் பாலச்சந்திரன், பலலட்சம் காந்திகளை உருவாக்கியவன்.

எந்தப் பொறுப்பும் அற்றவர்கள், அவனிடமிருந்து பெரும் பொறுப்பொன்றை ஒருபொழுதில் பெற்றுக் கொண்டனர். அதை அகிம்சையான போராட்டமாக்கினர்.

பலரும் அமெரிக்கத் தீர்மானத்தை வலியுறுத்தித் தான் தமிழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள் என நினைக்கின்றனர். தமிழர்களுக்கு உதவாத ஊடகங்களும் அப்படித்தான் பரப்புரை செய்கின்றன. அது முற்றிலும் தவறு.

''ஐ.நாவில் அமெரிக்கா அளித்துள்ள தீர்மானத்தில் எந்த இடத்திலுமே 'இனப்படுகொலை' என்ற வார்த்தையே இல்லை. இதுபோன்ற பல காரணங்களால் தான் அமெரிக்கத் தீர்மானமும் வெறும் நாடகம் என்கின்றோம். இலங்கையில் சர்வதேச விசாரணையும், ஈழத்தமிழர்கள் பிரிந்து செல்வதற்கான பொதுவாக்கெடுப்பும் நடத்த வேண்டும். அதற்கான தீர்மானத்தை இந்திய அரசே முன்மொழிந்து கொண்டுவரவேண்டும். ஆசிய நாடுகள் எதுவும் சர்வதேச விசாரணைக் குழுவில் இடம்பெறக்கூடாது. தமிழக அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்று, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். தமிழகத்தில் இருந்து இலங்கைத் துணைத் தூதரகத்தை அகற்ற வேண்டும். மத்திய அரசு தலையிட்டு, தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும்'' என்கின்றனர் போராட்டத்தை ஆரம்பித்து வைத்த, லயோலா கல்லூரியைச் சேர்ந்த திலீபனும், ரமேஷும்.

இவர்களுடன் ஜோ.பிரிட்டோ, ஷாஜிபாய் அன்ரனி, மணிகண்டன், சண்முகப்பிரியன், லியோ ஸ்டாலின், போல் கென்னட் ஆகிய மாணவர்களே இந்தத் தீயை பற்றவைத்தவர்கள். எட்டுப் பேரும் இப்போதுதான் இருபது வயதைத் தொடுகின்றனர்.

மணிகண்டன், ''முதலில் எங்கள் கல்லூரி வளாகத்தில் உண்ணாவிரதம் இருக்கலாம் என்று முடிவுசெய்தோம். எங்கள் கல்லூரிக்கு அருகிலேயே இலங்கை துணைத் தூதரகம் இருப்பதால், பொலிஸ் கெடுபிடி அதிகமாக இருந்தது. கல்லூரியில் அமர்ந்து போராட்டம் நடத்துவதை விட, பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் நடத்தினால் போராட்டம் கூடுதல் வலுப்பெறும் என்று நினைத்தோம். அதனால் தான் முதல் நாள் கல்லூரியிலும், இரண்டாம் நாள் முதல் கோயம்பேடு பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள செங்கொடி அரங்கத்திலும் போராட்டத்தை தொடர்ந்தோம்'', என்கின்றார்.

இவர்களின் போராட்டக் கொள்கைகளைப் பார்த்து புத்திஜீவிகளே மிரண்டுபோனார்கள். பல அரசியல்கட்சிகளுக்கு இனிமேல் அரசியல் பேசுபொருளுக்கான விடயங்களையே இவர்கள் இல்லாமல் ஆக்கிவிட்டனர் என்கின்றனர். இனப்படுகொலை எனப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை மிக மிக முக்கியமானது. இதைச் சாதாரண அரசியல் புரிதலுள்ளவர்களால் கொள்கையாக பிரகடனம் செய்யமுடியாது. இவ்வளவு நாளும் ''பொறம்போக்கா'' திரிந்தவர்களிடம் இவ்வளவு அரசியல் புரிதலா? மூக்கின்மேல்விரல் வைக்கின்றனர் புத்திஜீவிகள்.

இதனால்தான் தமிழகத்தின், மைய- பக்க அரசியல் குழாம் லயோலா கல்லூரி மாணவர்களின் போராட்டத்தைக் கண்டு நடுங்கியது. முளையிலேயே கிள்ளத் திட்டம்தீட்டியது. இந்தப் போராட்டம் முடக்கப்படுவதில் பல அரசியல் கட்சிகளுக்கு லாபம் இருந்தது. ஏனெனில் போராடும் மாணவர்கள் எந்த அரசியல் கட்சிகளின் ஆதரவையும் கோரவில்லை. தயவுசெய்து எங்கள் போராட்டத்தை அதன் வழியே விட்டுவிடுங்கள் எனக் கூக்குரலிடுகின்றனர். அதையும் மீறி தமது அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்ள போராட்டத்துக்குள் நுழையும் காங்கிரஸ்காரர்களையும், கருணாநிதியின் 'காற்றுப் போன டெசோ' கூட்டத்தையும் ஓட ஓட விரட்டினர். இதனால் 'அம்மா'வுக்கு வந்தது கோபம். மாணவர் போராட்டக் களத்தில் 'இரும்புக்கரம்' கொண்ட ஜெயலலிதாவின் பொலிஸ் குதித்தது.



(03 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்ணாவிரதம் இருந்த எட்டு மாணவர்களையும் தூக்கி அம்புலன்ஸில் ஏற்றி ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அந்த இடத்தில் மாணவர்கள் கட்டி வைத்திருந்த பதாகைகள் அனைத்தையும் கழற்றி எறிந்து 'சீல்' வைத்தனர்.

இந்தச் செய்தி சமூக வலைத்தளங்களிலும், சில தொலைக்காட்சிகளிலும் தீயாகப் பரவியது. மறுநாள் இதுகுறித்து எந்தப் பத்திரிகைகளும் குட்டிச் செய்திதானும் போடவில்லை. அனைத்தும் 'ஜெ'யின் பக்கம். சமூகவலைத்தளங்களில் ஒவ்வொரு மாணவனும் தமது பங்களிப்பை உறுதிப்படுத்திக் கொண்டேயிருந்தனர்.

அடுத்த நாளே 27 கல்லூரிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தன. களத்திலும் குதித்தன. மறுநாள் 68 ஆகபோராடும் கல்லூரிகளின் எண்ணிக்கை மாறியது. இந்தக் கட்டுரை தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் 280 கல்லூரிகளில் போராட்டங்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

முதலில் கலை, அறிவியல் கல்லூரிகள் மட்டுமே போராட்டத்தில் குதித்தன. பிரச்சாரங்களும், மாணவர்களுக்கு இடையிலான பரஸ்பர புரிதலும் அதிகரிக்க பிற கல்லூரிகளும் போராட்டத்தில் குதித்தன. தவிர்க்க முடியாதபடி சில தனியார் பல்கலைக் கழகங்களும், இன்ஜினீயரிங், தொழில்நுட்பக் கல்லூரிகளும் போராட்டத்தைத் தொடர்ந்தன.

சென்னையில் அம்பேத்கார் சட்டப் பல்கலைக் கழகம் விடுமுறைக் காலத்திலும் போராட்டத்தை தொடர்ந்தது. சுற்று அடிப்படையில் மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். தெலுங்குப் பெண் கூட ஈழப்படுகொலையைக் கண்டித்து உண்ணாவிரதமிருந்தார். சென்னையில் இருக்கின்ற பெரும்பாலான கல்லூரிகள் போராட்டக் களமாகின. அது விரைவாகவே பிற தமிழக மாவட்டங்களிலும் பரவியது. கடலூர், திருச்சி, கோவை, நெல்லை, சேலம், சிதம்பரம், தூத்துக்குடி, மதுரை என அனைத்து மாவட்டங்களுக்கும் போராட்டம் போனது.

கல்லூரிகளிலிருந்து போராட்டம் பாடசாலைகளுக்கும் பரவியது. 12 வயது மாணவர்கள், மாணவிகள் கூட தெருவில் முழங்காலில் நின்று போராடினர்.

மதுரையில் போராட்டம் நடத்திய கல்லூரி மாணவர்கள் மத்திய தபால் மையத்தை முற்றுகையிட்டனர். அங்கிருந்த ஹிந்தி எழுத்துகளை அடித்துநொறுக்கினர். ரயில் பாதைகளும் தடைசெய்யப்பட்டன. பிரதான சாலைகளில் மறியல் போராட்டம் நடந்தது.

இவ்வாறு தீவிரம் பெற்ற எல்லா மாணவர்களின் கோசங்களும் லொயோலா கல்லூரி மாணவர்கள் முன்வைத்த கோரிக்கைளை முன்மொழிந்ததாகவே இருந்தது. போராட்டம் ஒரு கிழமையைத் தொட்டிருக்கையில் நாளுக்கு நாள் அதில் இணைந்துகொள்ளும் கல்லூரிகளின் எண்ணிக்கையும்அதிகரித்துக் கொண்டே போனது. இந்தத் தருணத்தில் தான் மாணவர்கள் ஒரு அமைப்பானார்கள்.

இந்தப் போராட்டத்தில் ஜெகதீசன் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றார். இடுப்புக்கு கீழான பகுதி இயக்கம் இல்லாத மாற்றுத் திறனாளி அவர். இதுவரை 2009 ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா அமைப்புக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் தொடர்ச்சியாக, ஈழப்படுகொலையை சர்வதேச விசாரணை ஒன்றுக்கு உட்படுத்தக்கோரி மின்னஞ்சல் அனுப்பி வந்திருக்கின்றார். மாணவர்கள் நடத்திய இந்தப் போராட்டத்தை அவரும் பயன்படுத்திக் கொண்டார். அவர்களோடு இணைந்து தானும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

தமிழீழத்துக்காக போராடும் தமிழக மாணவர் அமைப்பு என்பதை அனைத்து மாணவர்களும் இணைந்து ஆரம்பித்து வைத்தார்கள். இவ்வாறு அமைப்பு ரீதியாக இணைந்து ஓர் இடத்தில் கூடி மாணவர்கள் போராடத் தொடங்கினால் அது புரட்சியாகிவிடும் என அரசு அஞ்சியது. ஏற்கனவே பொலிஸாரையும், நிர்வாகத்தையும் கொண்டு மாணவர்களை மிரட்டிப் பணியவைக்கப் பார்த்தார் ஜெ. அது இயலாது போயிற்று. எத்தனை ஆயிரம் மாணவர்களைக் எப்படி கைது செய்ய முடியும்? கைதுகள் தொடரத் தொடர போராடும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இப்படியெல்லாம் மிரட்டியும் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள்.

## மிரட்டல்கள்

**அதை இப்படி விளக்குகின்றார் திருச்சியைச் சேர்ந்த வினோத்.**

''நீங்க படிக்க வந்துருக்கிங்களா இல்லை இப்படி தண்ட சோறு மாதிரி போராட வந்தீங்களா? எங்கயோ எவனோ செத்தா உங்களுக்கு இங்க என்ன போராட்டம். உங்க எல்லா பேரையும் 'டிஸ்மிஸ்' செய்றேன் என கல்லூரி முதல்வர் மிரட்டினாரு.... உளவுப் பிரிவோ, காலையில் இருந்து நீங்க போராடினீங்கண்ணா உங்களை விடுதலைப் புலிகள்னு உள்ள தள்ளிடுவோம் உங்க எதிர்காலமே போயிடும். அரசு வேலை கிடைக்காது. காலத்துக்கும் கோர்ட்டுக்கும் போலிஸ் ஸ்டேசனுக்கும் நடையா நடந்துகிட்டே இருக்கணும்னு பயமுறுத்தி வந்தாங்க... காவல்துறையோ, உங்க எல்லோரையும் தூக்கி உள்ள போட்டுடுவோம். சிறையில களி திங்கணும்னு மிரட்டினாங்க. இதுலதான் எங்கள் உள்ளிருப்பு போராட்டம் கொஞ்சம் தொய்வு அடைந்தது. ஆனாலும் மாலை வரை நடத்திட்டோம்''

ஒவ்வொரு கல்லூரிகளின் அதிபர்களும், போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களை 'தனியே கவனிக்கப் போவதாக மிரட்டுகின்றனர். பலர் வகுப்பு நீக்கம், நிரந்தர வகுப்பு நீக்கம், செய்யப்பட்டிருக்கின்றனர். போராடும் மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளில் தண்டிக்கப்படுவர் என வெளிப்படையாகவே பல ஆசிரியர்கள் பேசியிருக்கின்றனர்

இந்த செய்திகளும் சமூக வலைத்தளங்களில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டன. எந்த கல்லூரி ஆசிரியர், எப்படி பேசுகின்றார் உள்ளிட்ட விடயங்கள் பகிரப்பட்டன. அவரின் தொலைபேசி இலக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டு, அதனைப் பார்க்கும் அனைவரும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு, பொலிஸ்காரர்களுக்கு பேசும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர். இவ்வாறு மாணவர்களை பேசிய ஆசிரியர்கள் பலர் அதற்குப் பின்பு மாணவர்களிடமே மன்னிப்பு கேட்ட சம்பவங்களும் நடந்தன.

இவ்வாறு எந்த மிரட்டலையும் தமக்கு சாதகமாக்கிக் கொள்ளும் மாணவர்களை ஒடுக்க ஜெயலலிதாவிடம் கடைசி பாணம் இருந்தது. அதை இது மாதிரியான மாணவர் போராட்டம் ஒன்றில் கருணாநிதியும் பாவித்திருந்தார். கல்லூரிகளுக்கு காலவரையறையற்ற விடுமுறை.

விடுமுறை அளித்தால் போராட்டம் முடிவுக்கு வந்துவிடும். மாணவர்கள் கல்லூரிக்கு வராவிட்டால் போராட்டமில்லை. என்கின்ற தந்திரத்தோடு இப்போது இந்த திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. ஆனால் மாணவர்கள் இதனைக் கருத்திலெடுக்கவில்லை. போராட்டம் தொடர்ந்தும் நடக்கும் என்கின்றனர். ''பொழுதுபோக்காகப் போராட வந்தவர்கள் மட்டுமே விடுமுறையைக் கொண்டாட சுற்றுலா போவார்கள். நாம், உணர்வோடும், அறிவோடும் போராட வந்திருப்பவர்கள். விடுமுறைக் காலத்திலும் திட்டமிட்டபடி போராட்டம் நடக்கும்'' என்கின்றார் தமிழீழத்துக்காக போராடும் தமிழக மாணவர் சங்கப் பிரதிநிதி திவ்யா.

இந்த விடுமுறையோடு உண்ணாவிரதப் போராட்டங்கள் கைவிடப்படக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றது. ஆனால், திட்டமிட்டபடி ஒரு கோடி மாணவர்களைக் கூட்டி கிண்டி பாலத்தை-சென்னைக்கான பிரதான நுழைவாயிலை எதிர்வரும் 18, 20ஆம் திகதிகளில் முற்றுகையிடவுள்ளோம் என்கிறார் பிரசாந்த் தமிழ்.

''இந்த எழுச்சி இத்தோடு முடிவுற்றாலும் நாம் வெற்றியடைந்திருக்கின்றோம். எமது எண்ணம் வெளியுலகுக்கு சென்றிருக்கின்றது. ஈழத்தில் நடந்த படுகொலையும், தமிழீழத்துக்கான தேவையும் எமது தலைமுறைக்கும், எமக்கு அடுத்து தலைமுறைக்கும் இதனூடாகக் கடத்தப்பட்டிருக்கின்றது. இத்தோடு முடிவுக்கு கொண்டுவர இது அரசியல்வாதிகளின் போராட்டம் அல்ல. தன்னெழுச்சி கொண்ட மாணவர் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்'' என்கிறார் விழுப்புரத்தில் உண்ணாவிரதம் இருக்கும் பிரபாகர்.

ஈழப் போராட்டத்திலும், தமிழினப் படுகொலையிலும் அக்கறை காட்டுகின்ற வைகோ, சீமான், பழ.நெடுமாறன் உள்ளிட்டோர், மாணவர் எழுச்சி குறித்து ஒரே பார்வையையே கொண்டிருக்கின்றனர். தம்மாலான அனைத்து ஆதரவுகளையும் மாணவர்களுக்கு வழங்கி விட்டு போராட்டத்துக்கு வெளியே நின்றுகொள்கின்றனர்.

இது மாணவர்களின் போராட்டம். அது அவர்கள் தொடங்கியது. அவர்களே முடிக்கட்டும். எங்கள் அரசியல் அதில் கலந்து விடக்கூடாது என்கிறார் ம.தி.மு.க செயலாளர் வைகோ. இது போன்றதொரு மாணவர் எழுச்சியைத்தான் தமிழகத்தில் எதிர்பார்த்திருந்ததாகக் கூறுகின்றார் பழ.நெடுமறான். சீமான் வாயே திறக்கவில்லை. ஆகவே இது மாணவர் தனித்து, சுய எழுச்சி கொண்டு நடத்திய போராட்டம் என வரலாறு பதிவிட்டுக் கொள்ளும்.

இந்த இளைஞர்களை நம்பித்தான் தமிழ் சினிமா உழல்கின்றது. மாணவர் புரட்சியை எத்தனையோ படங்களில் காதலியை கடத்துவதற்காக தமிழ் சினிமா இயக்குநர்கள் பயன்படுத்தியிருப்பர். ஆனால் ஆக்கபூர்வமான இந்த மாணவர் போராட்டத்தில் எந்த இயக்குநரும், ஈழம் பற்றி அக்கறையுடைய நடிகர்களும், நடிகைகளும் கலந்து கொள்ளவில்லை. ஆக டீ. ஆரும், அவரின் வாரிசு சிம்பும் மாணவர்களுக்கு ஆதரவாக களம் வந்து மனம்திறந்து பேசியிருந்தனர்.

ஈழத்து இளைஞர்கள் பெரிதும் கொண்டாடும் 'தல' அஜீத்தும், 'ஆக்சன் கிங்' அர்ஜீனும் வெளிப்படையாகவே இதை ஆதரிக்கவில்லை. மாணவர் போராட்டம் அடக்கப்படவேண்டும் என்று கூறியிருந்தனர். எங்களது படங்களை ஈழத்தில் யாரும் பார்ப்பதில்லை. ஆகவே நாம் இந்தப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்கின்றனர் அவர்கள்.

இப்படியாக பல்வேறு அரசியல் சூட்சுமங்களுக்கு மத்தியில் தமிழக மாணவர்களின் போராட்டம் ஒரு நிலையை அடைந்திருக்கின்றது. ஜெயலலிதாவினதும், கருணாநிதியினதும் ஈழ விசுவாசத்தின் மெய்முகத்தை மறுபடியும் இந்த மாணவர்கள் கிழித்திருக்கின்றனர். அதற்கான மக்கள் தண்டிப்பை அவர்கள் வழங்கியே தீர்வர் என்பதை ஒவ்வொருவரின் ஆதங்கமும் சொல்லிக் கொண்டேயிருக்கின்றது.

இதெல்லாம் இருக்க, இவ்வளவு போராட்டங்களும் நடந்து கொண்டிருக்கையில் நம் சூழலில் (ஈழத்தில்)என்ன நடந்தது? காதல் கவிதை புத்தகம் வெளியிடப்பட்டது. பல்கலைக் கழகத்தில் ராகிங் நடந்தது. பெரும் இராஜ தந்திரப் போர்கள் எனச் சொல்லப்பட்டவை நடந்தன. ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானம் நிறைவேறும் ஆனால் தீர்வு கிடைக்குமா?




ஜெனிவாவின் ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து **ஆர்.சிவராஜா**

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையின் முடிவு என்னவாகும் என்பது தான் தற்போது பலரது மனங்களிலும் தொக்கி நிற்கும் கேள்வி... நிச்சயம் அந்த பிரேரணை பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேறும். அதில் சந்தேகம் இல்லை என்பதை இங்கு ஜெனிவாவில் நடைபெறும் நிகழ்வுகள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த வாரம், அதாவது பத்தாம் திகதியளவில் தனது ராஜதந்திரப் போரை இங்கு ஆரம்பித்தது அமெரிக்கா. மனித உரிமைகள் பேரவையின் ஒரு அரங்கத்தில் ஓரங்க நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த அமெரிக்கா, இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து உறுப்பு நாடுகளின் ராஜதந்திரிகளுக்கும் விளக்கமளித்தமை அருமை.

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், இந்தோனேசியா, கியூபா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்காக வக்காலத்து வாங்கிய விதம், சொல்லில் அடங்காது. பிரேரணையில் திருத்தங்கள் செய்யப்பட முன்னர் அது சம்பந்தமான நாடுகளின் கருத்தை அறிய அமெரிக்கத் தூதுவர் அழைப்பு விடுத்தார்.

உடனடியாக கொதித்து எழுந்தார் கியூபாவின் பிரதிநிதி. இந்த அமெரிக்கத் தீர்மானத்தின் பல பகுதிகளில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறித் தனது வாதத்தை ஆரம்பித்தார். ஆனால், ஐரோப்பிய ஒன்றியம், கனடா, ஒஸ்ரியா , சுவிஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் தாங்கள் மட்டும் என்ன சளைத்தவர்களா என்று கேட்கும் வகையில் "இந்தப் பிரேரணை மென்மையாக உள்ளது. இது இன்னமும் கடினமாக ஆக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்திக் கூறினர் .

முக்கியமாக கனடா சார்பில் வந்திருந்த பெண் பிரதிநிதி, இலங்கை என்னதான் வாக்குறுதிகளை அள்ளி வழங்கினாலும், அவை ஒரு போதும் நடைமுறைக்கு வராதென்றும், இலங்கைக்கு சில விடயங்களை அழுத்திக் கூற வேண்டுமென்றும் சுட்டிக்காட்டினார்.

கனடாவின் கருத்துக்கள் கியூபா மற்றும் பாகிஸ்தான் பிரதிநிதிகளுக்கு பெரும் ஆத்திரத்தை உண்டு பண்ணிவிட்டன போலும். இரண்டு பிரதிநிதிகளும் இணைந்து தாக்கத் தொடங்கினர். "இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. நீங்கள் ஏதோ நினைத்ததெல்லாம் இங்கு சொல்கிறீர்கள். இது சபையின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறும் செயல். நாங்கள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் முறையிட வேண்டிவரும்" என்று ஒரு போடு போட்டார் கியூபா பிரதிநிதி. இங்கு முக்கியமான ஒரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். கியூபாவின் பிரதிநிதி ஒவ்வொரு முறையும் பேசிவிட்டு வெளியில் சென்று தொலைபேசியில் ஏதோ அவசர அவசரமாக பேசுவார். பின்னர் உள்ளே வந்து இலங்கைக்கு ஆதரவாக தீவிரமாக பேசுவார். தொலைபேசியில் அவர் யாருடன் பேசினார், என்ன பேசினார், இந்த விடயம் இல்லாமல் வேறு விடயங்கள் பேசினாரா என்பது அவருக்கும் கடவுளுக்கும்தான் தெரியும்.

கியூபாவின் பிரதிநிதிக்கு ஒரு கட்டத்தில் கோபம் எல்லையை தாண்டி விட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழு என்ன செய்கிறதென்றே தெரியவில்லை?" என்று மேசை மீது ஒரு தட்டு தட்டினார். எல்லோரும் ஒருகணம் அதிர்ச்சியாகி விட்டனர். கியூபா பிரதிநிதியின் இந்த அளவு கடந்த "இலங்கை பக்தி" கூட்டத்துக்குத் தலைமை வகித்த அமெரிக்க தூதுவர் டோனஹோவை சற்று விசனமடையச் செய்தது. அவரது முகத்தை பார்க்கும் போது அதை அறிய முடிந்தது. தூதுவர் ஏதோ சொல்ல முயன்றபோது பாகிஸ்தான் பிரதிநிதி கருத்து வெளியிட்டார். "கொடூர போருக்கு பின்னர் இப்போது தான் இலங்கை நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அதற்குள் இவ்வளவு அழுத்தங்களை வழங்கக் கூடாது" என்றார் பாகிஸ்தான் பிரதிநிதி.

ஆனால் அமெரிக்க தூதுவர் அவர்களின் கன்னத்தில் அறைந்தால் போல் பதில் அளித்தார். "இவை ஒன்றும் புதிய பிரேரணைகள் அல்ல. கடந்த முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இலங்கை அரசால் நிறைவேற்றப்படாத விடயங்கள்தான் இவை. இவை ஒன்றும் புதிய விடயங்கள் அல்ல" என்று அமெரிக்க தூதுவர் சொன்னதும் கியூபா மற்றும் பாகிஸ்தான் பிரதிநிதிகள் சற்று அமைதியாகினர்.

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் தங்களின் கருத்துக்களை மிகவும் அமைதியாகவும் ஆனால் ஆழமாகவும் முன்வைத்தன. "இலங்கை இப்போதுதான் படிப்படியாக எல்லா வேலைகளையும் செய்ய ஆரம்பித்துள்ளது. அவற்றை ஊக்குவிக்க வேண்டும்... அதை விடுத்து இப்படி காரமான வார்த்தைகளை பிரயோகிப்பது நன்றல்ல.. மென்மையான வார்த்தைகளை பயன்படுத்தலாமே" என்று குறிப்பிட்டார் சீனாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய பெண் இராஜதந்திரி. ரஷ்யாவின் பிரதிநிதியோ சில திருத்தங்களை செய்வதற்கு ரஷ்யா விரும்புவதாகவும் இலங்கை விடயத்தில் தேவையற்ற தலையீடுகள் இருக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஆதரவாக இப்படி நாடுகள் குரல் கொடுக்கையில் ஐரோப்பிய ஒன்றியமும் ,கனடா, பிரிட்டன் ,சுவிஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ,இந்த பிரேரணை மிகவும் மென்மையாக இருப்பதாகவும் இது இன்னமும் கடினமாக்கப்படாலே இலங்கைக்கு பொறுப்புகூறும் கடப்பாட்டில் அக்கறை வரும் என்றும் குறிப்பிட்டனர்.

எப்படியோ இந்த நாடுகளின் கருத்தை கேட்ட அமெரிக்கா அவர்களின் திருத்த யோசனைகளை குறிப்பெடுத்துக்கொண்டது.

மாலை 4 மணி முதல் இரவு வரை நடைபெற்ற இந்த ஓரங்க கூட்டத்தில் இப்படியான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இவற்றை விட ஒரு முக்கியமான விடயமும் நடந்தது. இந்தியாவின் பிரதிநிதியாக ஒரு பெண்மணி வந்து இவற்றை எல்லாம் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தார். ஆனால் வாயே திறக்கவில்லை. இந்திய பிரதிநிதி ஏதாவது திருத்தங்களை முன்மொழிவாரோ என்பதை எதிர்பார்ப்பது போல அவரை நோக்கி பெரும்பாலான நேரங்களில் அமெரிக்க பிரதிநிதி பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் இந்திய பிரதிநிதி மௌனவிரதம் இருந்தார் போலும். இறுதிவரை வாயே திறக்கவில்லை. அமெரிக்கத் தீர்மானம் வலுவானதாக இருக்க வேண்டுமெனக்கோரி இந்தியாவில் மாணவர்களின் போராட்டம் தீவிரம் அடைந்து இருந்த காரணத்தினால் இந்திய பிரதிநிதி ஏதாவது சொல்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் கடந்த ஓரங்க கூட்டங்களில் கலந்து கொள்ளாத இந்தியா இம்முறை வந்திருப்பது ஏதாவது முக்கிய விடயத்துக்காக இருக்கலாமென பலரும் எதிர்பாத்து இருந்தனர். ஆனால் உதவி செய்யாவிட்டாலும் பிரச்சினையில்லை உபத்திரவம் செய்யாமல் இருப்போம் என்பது போல மௌனம் காத்து வெளியேறினார் இந்தியப் பிரதிநிதி.

இந்தியாவின் இந்த நடவடிக்கை அங்கு வந்திருந்த எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதேசமயம், இந்தக் கூட்டத்தில் இலங்கை பிரதிநிதிகள் எவருமே கலந்து கொள்ளவில்லை. எப்படியோ அமெரிக்கா வெல்லப்போகிறது என்பதால் பலவீனமான ராஜதந்திர முயற்சிகளை எடுப்பதில் அர்த்தமில்லை என்று சிலசமயம் இலங்கை நினைத்திருக்கக் கூடும்.

இலங்கைப் பிரதிநிதிகளின் சமூகம் இல்லாமலும் இந்திய பிரதிநிதிகளின் திருத்தங்கள் எதுவும் இல்லாமலும் பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க அமெரிக்கா தீர்மானித்தது. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இதர நாடுகளின் திருத்தங்களை அமெரிக்க உள்வாங்கியதுதான்.

இந்த ஓரங்கக் கூட்டம் முடிவடைந்த பின்னர் அங்கு நின்று கொண்டிருந்தவர்களிடம் அமெரிக்கத் தூதுவர் டோனஹோ கலந்துரையாடிக் கொண்டிருந்தமை விசேட அம்சமாகும். அதில் குறிப்பாக காணாமல் போன இலங்கை ஊடகவியலாளர் பரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா, படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் சகோதரிகளுடன் அவர் எதையோ சீரியசாக பேசிக் கொண்டிருந்ததை காண முடிந்தது.

இலங்கை விடயம் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட பல்வேறு நாடுகளில் இருந்தும் தமிழ் இன ஆர்வலர்கள் வந்திருந்தனர். அவர்கள் தங்களின் வியூகங்களுக்கமைய இராஜதந்திரிகளுடன் பல்வேறு மட்டத்தில் சந்திப்புக்களை நடத்தினர்.

மனித உரிமைகள் சபையின் பொது விவாத வேளையில் தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கு உரையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்போது வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று சர்வதேச மேற்பார்வையுடன் வேண்டுமென்றும், மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை இந்த ஏற்பாடு வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலையில் கொல்லப்பட்ட தமிழ் மாணவர்கள் 5 பேரில் ஒருவரான ரஜீகரின் தந்தையார் சபையில் உரையாற்றியபோது முழு சபையும் அவரின் பால் கவனத்தை செலுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இடை இடையே கண்ணீருடன் பேச்சும் தடுமாறி அவர் ஆற்றிய உரை அங்கு வந்திருந்த இலங்கை பிரதிநிதிகளுக்கு பெரும் தர்மசங்கடத்தையும், மேற்குலக இராஜதந்திரிகளுக்கு பெரும் அதிர்ச்சியையும் கொடுத்தது.

"வருடங்கள் பல கடந்தும் இன்னமும் நீதி கிடைக்கவில்லை. இலங்கையின் நீதித்துறையில் எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள்தான் நீதி தர வேண்டும்" என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளிடம் கோரிய அவர், உரையைத் தொடர முடியாமல் இடைநடுவில் நிறுத்திக் கொண்டார்.

பின்னர் சபைக்கு வெளியில் ஈரமான கண்களுடன் எம்மிடம் கருத்து வெளியிட்ட டாக்டர் மனோகரன், **"தம்பி இந்த அநியாயத்துக்கு பதில் வேண்டும்... எல்லா இடத்துக்கும் நாங்கள் சென்று விட்டோம்... இன்னும் நம்பிக்கையுடன் இருக்கிறோம். பிரிட்டிஷ் பிரதமர் எங்களை சந்திக்க அழைத்துள்ளார்... நாளை லண்டன் போகிறோம்... அவருக்கும் இந்த அநியாயத்தை சொல்வோம்... நாங்கள் கேட்பதெல்லாம் ஒரே நீதிதான்"** என்றார் நா தழு தழுக்க .

முன்னதாக, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் சந்தித்தபோது அந்த நிகழ்வில் கலந்து கொண்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் சகோதரிமாரும், ஊடகவியலாளர் பரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவும் கண்களில் கண்ணீருடன் அவருக்கு தமது துயரங்களை மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் சொல்லிக் கொண்டிருந்ததை காண முடிந்தது.

ஜெனிவாவில் உள்ள இலங்கை அரசின் தூதரக முக்கியஸ்தர்கள் இந்த விடயங்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்தது தான் யாருக்குமே தெரியாத விடயம். எப்படியோ இந்த வாரம் இலங்கைக்கு இன்னும் பல சத்திய சோதனைகள் உள்ளன.

இந்தியாவில் மத்திய அரசுக்கான அழுத்தம் தமிழ்நாட்டில் என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பது சில சமயம் இங்கே ஜெனிவாவில் தாக்கங்களை ஏற்படுத்தி விடக்கூடும். ஆனால் இங்குள்ள தமிழ் உணர்வாளர்கள் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு எந்த நன்மைகளையும் செய்து விடாது என்ற கருத்தைத்தான் வெளிப்படுத்துகின்றனர்.

ஒருவிதமாக கடந்த வாரம் ஓடி விட்டது. இந்தவாரம் இலங்கைக்கு அக்கினிப் பரீட்சை தான். ஏனெனில் 21 ஆந்திகதி அமெரிக்கத் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெறும். அதற்கு முன்னர் இராஜதந்திரநகர்வுகள் தாராளமாக இடம்பெறும் .

எப்படியோ தமிழர்களின் நலன் என்ற போர்வைக்குள் தங்களது அரசியல் , இராஜதந்திர நலன்களை அனைவரும் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இது வேதனை தரும் விடயம்தான். ஆனால் தமிழர்களுக்கு வேறு என்னதான் வழி இருக்கிறது. இந்தத் தீர்மானங்களால் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்குமா என்பதுதான் கேள்வியோடு நிற்கிறது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முகமூடி பிசாசுகள்

## பெற்றோர்களே உஷார்!

■ ஜெகதீஷ்

பல்வேறு இழுத்தடிப்புக்களின் மத்தியில் ''மாணவர்களுக்காக மட்டும்'' சிநேகபூர்வ போட்டியாக கடந்த 12, 13ஆம் திகதிகளில் ''இந்துக்களின் போர்'' என்ற கிரிக்கட் போட்டியை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு நடத்தியும் முடிக்கப்பட்டது. கடந்த சில வருடங்களாக பெருமெடுப்பில் இடம்பெற்ற இந்தப் போட்டி இம்முறை சாதாரண நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டமை இந்துக்கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கு பெரிய ஏமாற்றத்தை அளித்ததினால் சகலரது ஆதரவினையும் இம்முறை பெற முடியவில்லை. அதற்கு மைதானத்திற்கு வருகை தந்த பார்வையாளர்களே சாட்சி!

ஆனாலும், இந்தப் போட்டியை கைவிடும் அளவிற்கு இந்துக்கல்லூரிகளின் சமூகம் முடிவெடுக்கக் காரணம் கடந்த காலங்களில் மாணவர்கள் சிலரினால் மேற்கொள்ளப்பட்ட அநாகரிக செயற்பாடுகளே! தேவையற்ற சர்ச்சைகளை தவிர்ப்பதற்காகவும், பாடசாலைகளின் நற்பெயர்களுக்கு களங்கம் ஏற்படாத வகையிலும் போட்டியைக் கைவிடுவது என எடுக்கப்பட்ட முடிவு சரியானதே! இருந்தும், பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் விளையாட்டை நேசிக்கும் மாணவர்களுக்காக போட்டி நடந்தேறியது.

எதிர்பார்த்தது போலவே இருபது தொடக்கம் முப்பது வரையானவர்கள் அடங்கிய சிறு குழுவினர் போட்டியைக் குழப்பும் விதத்திலும், போட்டி இடம்பெற்ற மைதானச்சுற்றி குழப்பமான சூழலைத் தோற்றுவிக்கும் விதத்திலும் நடந்து கொண்டமை போட்டியைக் காண வந்திருந்தவர்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கியது. அக்குழுவில் பாதியளவானவர்கள் பாடசாலைச்சீருடையிலும், மற்றையவர்கள் சாதாரண உடையிலும் காணப்பட்டனர். அவர்களை கூர்ந்து அவதானித்தால், அரைவாசிப்பேர் பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள். அதிலும் சிலர் இந்துக்கல்லூரிகளின் மாணவர்கள் அல்லாதவர்கள் என்பது ஆகக் கொடுமையான விடயம். அவர்கள் அனைவரும் நிறை போதையில் இருந்தார்கள். அவர்களின் நோக்கம் குழப்பம் விளைவிப்பது மட்டுமே!

இப்படியான பிரகிருதிகளை இன்று தெருக்கோடிகளிலும், கோயில் நிகழ்வுகளிலும், பாடசாலை மைதான நிகழ்வுகளிலும் காண்பது அரிதன்று. தங்களைப்பாடசாலை மாணவர்களாக காட்ட முயன்றவர்கள் கல்லூரிகளின் கொடியையும், ''எந்த இந்துவின் மைந்தன்?'' என்பதை இனங்காட்ட விரும்பாத அதிபுத்திசாலி (அப்படித்தான் தங்களை நினைத்துக் கொள்கிறார்கள்) மாணவர்கள் இரண்டு கல்லூரி வர்ணங்களாலும் தங்களை மறைத்துக் கொண்டு வீதியில் நின்று அடாவடி செய்தார்கள். வீதிப்போக்குவரத்துக்கு இடையுறு செய்து கொண்டும் வீதியால் செல்பவர்கள் அனைவரையும் மறித்து அவர்களிடம் இருந்து காசைப்பிடுங்கும் கைங்கரியங்களையும் மேற்கொண்டார்கள். அடிக்கடி மைதானத்துக்குள் எதையாவது விட்டெறிந்து போட்டியைக் குழப்பும் நோக்கிலும் செயற்பட்டார்கள்.

கிடைத்த இடைவேளையைப் பயன்படுத்தி மைதானத்துக்குள் பன்சர்களுடன் நுழைந்த 12 'மாணவ சிரோன்மணிகள்' ஆடுகளத்தை நான்கு தடவை சுற்றி வந்ததுடன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், விருந்தினர்கள் இருந்த பக்கத்தை நோக்கி ஆபாசமாக சைகைகளைச் செய்ததுடன், தூஷண வார்த்தைகளையும் பேசிச்சென்றார்கள். முகமூடித்திருடர்கள் போல் முகத்தை மறைத்துத் துணியைக் கட்டியிருந்த இவர்கள் தங்கள் மோட்டார் சைக்கிள்களின் இலக்கத்தகடுகளையும் மறைத்திருந்தார்கள். இக்குழுவில் சில அரைக்காற்சட்டை பையன்களும் இருந்தது கவனிக்கத்தக்கது. வழிப்பறி செய்த பணத்தைக் கொண்டு இடையிடையே மதுப்போத்தல்களை வாங்கி மறைவான இடத்தில் இருந்து சோமபானம் அருந்தினார்கள். இவர்களின் இந்த சேஷ்டைகளை பல கண்களும், கமராக்களும் படமெடுத்ததை இவர்கள் அறியார்கள். ''அவங்க இருந்திருந்தா இவங்க இந்த ஆட்டம் ஆடுவங்களா?'' என பலரும் பெருமூச்சு விட்டதைக் காணமுடிந்தது.

பெற்றோர்களே! இன்றைய காலங்களில் சவால்கள் உங்களை நோக்கியதே. குடித்துவிட்டு வரும் பையனை இனங்காண்பது ஒன்றும் அவ்வளவு கடினமான காரியமல்ல. பிள்ளைகள் விடயத்தில் மிகவும் அவதானமாக இருங்கள். உங்கள் பிள்ளை கெட்டவனாக இல்லாவிட்டாலும் அவனைக் கெடுப்பதற்கு ஒருவன் இருப்பான். இன்று குடாநாட்டின் கலாசார நிலமை அதுவும், இளவயதினரிடையே மிக வேகமாக கெட்டுவருவதை கண்கூடாக பார்க்கிறீர்கள். அதற்கேற்றது போல உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.



## அங்கும்... இங்கும்...

■ உமா

ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குச் சரியானதொரு நிரந்தரத் தீர்வு கோரி தமிழகத்திலுள்ள கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையே தற்போது ஊடகங்களில் பரபரப்பான செய்தியாக உள்ளது. ஈழப் போராட்டத்தின் இறுதிச் சமர் இடம்பெற்ற வேளையில் மீறப்பட்ட மனித உரிமைகள் தொடர்பாக நீதி கோரியதாகவும் ஈழத்தமிழர்களுக்குத் தமது நிலங்களில் வாழ்கின்ற உரிமையைக் கோரியதாகவும் தொப்புள்கொடி உறவுகளாய் தமிழக மாணவர்கள் மேற்கொண்டுள்ள இந்தப் போராட்டமானது எம்மவர் தலைவிதியை மாற்றுமோ என்னவோ பல்தரப்பட்ட மட்டங்களில் எம்மவரது நிலை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு மாணவர்கள் உணவு தவிர்த்து உதரம் சுருங்கி சுருண்டு போயுள்ள காட்சிகள் காந்தி தேசமான இந்தியாவின் தலைமையை உறுத்துமா என்பது சந்தேகமே. எனினும், இவை பார்ப்பவர்களின் உள்ளங்களை நெகிழ வைப்பதோடு நல்லைக் கந்தனின் வீதி வரை கடந்த காலங்களை இழுத்துச் செல்லத் தவறவில்லை. கடந்த காலப் பதிவுகளையும் காணொளியிற் கண்ட இன்றைய தர்மயுத்தத்தின் நினைவுகளையும் மனதிற் சுமந்தவாறு யாழ்ப்பாண வீதிகளில் பயணித்த போது எமது கல்லூரி மாணர்வளையும் இளைஞர்களையும் காண வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.


யாழ்ப்பாணத்தின் பிரபலமான கல்லூரிகள் யாவற்றுக்குமே வருடாந்த துடுப்பாட்டப் போட்டிகளை நடத்துகின்ற காலமே இந்தக் காலம். அதனையொட்டி அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களும் அவர்களைச் சேர்ந்த, அவர்கள் போன்ற பாவனையில் உலாவருபவர்களும் இணைந்து வழங்கிக் கொண்டிருக்கின்ற தெருக் கூத்துக்கள் கட்டுக்கடங்காததாக எல்லைமீறிச் சென்று கொண்டிருக்கிறது. [illegible] வீதிகளின் [illegible] நிறுவனங்கள், பாடசாலைகள் முன்பு சத்தமிட்டு அநாகரிக முறையில் நடந்து கொள்வது, கற்கள் எறிந்து தாக்குதல், வேறு சில கல்லூரிகளினுள் (குறிப்பாக மகளிர் கல்லூரிகளினுள்) அத்துமீறி நுழைந்து இடையூறு விளைவிப்பது, தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்பது போன்ற ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடுவதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இது தொடர்பாகக் குறித்த கல்லூரிகளின் நிர்வாகங்கள் கூட இந்த நடவடிக்கையையும் எடுக்க இயலாதவர்களாகக் காணப்படும் நிலை எமது எதிர்காலச் சமூகம் தொடர்பான பயத்தை அதிகப்படுத்துவதாக உள்ளது. சில கல்லூரிகள் இது போன்ற சம்பவங்கள் காரணமாக இனிவரும் காலங்களில் இந்தத் துடுப்பாட்டப் போட்டிகளை நடத்தவது தொடர்பில் பரிசீலிப்பதாகவும் கூறப்படுகிறது.

தமிழக மாணவர்கள் ஈழத் தமிழர்களது விடுதலைக்காக உண்ணாவிரதப் போராட்டத்தில் உயிர் கரைகின்ற அதேசமயம் ஈழத்தமிழ் மாணவர்களின் இவ்வாறான செயல்கள் புண் போதையிலிருப்பதையும் மருந்துகள் கண்ணீர் வடிப்பதையும் காட்டுவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவின் நிழலை சர்வ



■ செந்தூரி

"நல்லெண்ணத்துக்கான வேட்கையுடைய சகல மக்களும், இலங்கையில் உண்மையும், நீதியும் நிலைநாட்டப்படுவதையே விரும்புகின்றார்கள் என நான் நம்புகின்றேன்"- உலகத் தலைவரல்லாத, அரசியல் பின்னணியில்லாத, அதிகார மமதையில்லாத சாமானியன் ஒருவனால் தன்னை யொத்த சாமானியனுக்கு சொல்லப்பட்ட மேற்படி வார்த்தைகள், கடந்த வாரம் இணையத்தளங்களில் பெரிதும் பேசப்பட்டன.

சமூக வலைத்தளமொன்றில், தன்னைப் பின்தொடர்பவரான, தமிழக பயனீட்டாளர் ஒருவருக்கு பதிலளிக்கும் விதமாக, எளிமையான தன் வார்த்தைகளால் தன்னுள்ளக்கிடக்கையை வெளியிட்டவர் கெலும் மக்ரே (Callum Macrac) சனல் - 4 தொலைக்காட்சியின் பிரபல ஆவணத் தொகுப்பாளரும், ஊடகவியலாளரும்.

இணையத்தின் வசதிகளில் ஒன்றான சமூக வலைத்தளங்களில், ஒருவரையொருவர் முன் பின் அறிந்திராமல், ஒத்த கருத்தினால் இணைக்கப்பட்டுள்ள பலரைச் சேர்ந்த குழுமங்கள் இருக்கும்.

கருத்தொருமைப்பாடு, பிரபலம், தனிப்பட்ட விருப்பம் போன்ற பல்வகை காரணங்களுக்காக எவரும் எவரையும் தன் நட்பு வளையத்தினுள் சேர்த்துக் கொள்ள முடியும்.

பேஸ்புக்-அவ்வாறு இணைக்கப்பட்டுள்ளவர்களை "நண்பர்கள்" எனும் சொல்லாலும், டுவிட்டர் - அவ்வாறு இணைக்கப்பட்டுள்ளவர்களை "பின்தொடர்பவர்கள்" எனும் சொல்லாலும் அடையாளப்படுத்துகின்றன.

'கெலும் மக்ரேயின் பொய்பூசாத வார்த்தைகள் வெளிப்பட்டமைக்கு காரணமாக அமைந்த சம்பவப் பின்னணி சற்றே சுவாரசியமானது.

**அம்பலமானது ஸ்டாலினின் பொய்**

டெசோ மாநாடு என்ற பெயரில், கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யும் பொழுது போக்குக் கும்பல் ஒன்றின் மேல் கடுஞ்சினத்திலிருக்கின்றார்கள் உலகத்தமிழர்கள். சிவப்பு-கறுப்பு கரை வேட்டித் தமிழர்கள் சிலரைத் தவிர்த்து, தமிழகத்து உறவுகளில் பெரும்பான்மையோருக்கும் இந்த கபட டெசோ நாடகத்தில் உச்சக் காட்சி சுயலாபம், பெயரீட்டலை நோக்காகக் கொண்டதென்பதுவும் தெரியும்.

தம்மைச் சுற்றியிருப்பவர்கள் யாவரையும் தலையாட்டும் பொம்மைகளாக மாற்றி வைத்திருக்கும், முத்துவேலர் கருணாநிதியின் ஆட்சி வாரிசு மு.க.ஸ்டாலின் தலைமையிலான போராட்டத்தின்போது வெளியிடப்பட்ட அறிக்கையில் டெசோ மாநாட்டின் மூலம் ஈழத்தமிழரின் உரிமைகள் நிலைநாட்டப்படுவதாக, சனல் - 4 இன் கெலும் மக்ரே தனது வாழ்த்துக்களை "டெசோ" வுக்கு தெரிவித்துள்ளார் என்று அள்ளி விடப்பட்டது.

இந்தவிடயம் தொடர்பில் தமிழகத்திலிருந்து கெலும் மக்ரேயை டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் "பின்தொடர்பவரான" சங்கபாஜ் எனப்படும் சுரேஸ் குமார் கேட்ட சந்தேகத்திற்கு கெலும் மக்ரே கொடுத்த பதிலான, "I hope all ppl of good will call for truth and justice in srilanka- but I're not praised any particular party-that would be wrong" என் மூஞ்சிலடிப்பது போல் நீங்கள் முதலில் கண்டது.

நல்ல கார் காலத்தில், தாங்கள் உப்பு விற்கப் புறப்பட்டு மூக்குடைபட்டதை தாமதமாகவே உணர்ந்து கொண்ட வார்த்தை வல்லவர்களான 'டெசோ' கும்பல் தலைவர்கள், கெலும் மக்ரேயை நாங்கள் வாழ்த்தினோம் என்பதைத் தான் சொல்ல விழைந்தோம் என்று செம்மொழித் தமிழால் குறுக்கே வார்த்தைகள் கிழித்து பாய்ந்து தப்பினர்.

**நினைவில் நின்றவர்கள்**

பொது அறிவு தகவல்கள் எனும் தேவைக்கு மேலதிகமாக எம்மால் ஆத்மார்த்தமாக நினைவில் கொள்ளப்பட்ட ஐரோப்பியர்களின் பெயர்கள் வெகு சொற்பமே! பிரிட்டனின் 'அடேல்', நோர்வேயின் 'எரிக்சொல்ஹெய்ம்', போன்று தாமாகவே எம் நினைவில் தங்கி விட்டவர்கள் வரிசையில் இறுதியாக இணைக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றார் 'கெலும் மக்ரே'.

நைஜீரியாவிலும், ஸ்கொட்லாந்திலும் தன் பாடசாலைப் பருவங்களைக் கழித்த மக்ரே, 'எடின்பேர்க் சித்திரக் கல்லூரியில்' ஐந்து வருடமாக வரைதற் கலையையும், வண்ணமிடலையும் முதற்படிப்பாக முடித்து வெளியேறினார்.

இன்றைக்கு உலகத்தினோரால் வலிந்து விசாரிக்கப்படும் இவன், தொழிலுலகில் தன் முதல் இரு வருடங்களும், வர்ணக் கலவையாளனாகவும், தூசு அகற்றுபவனாகவும், அடுத்த ஆறு வருடங்கள் ஒலிபரப்பு நிலையம் ஒன்றிலும், அடுத்த ஏழு வருடங்கள் இடைநிலைப் பாடசாலை ஆசிரியராகவும் வயிறு நிரப்ப வேண்டியிருந்தது.

பட்டப்படிப்பை மேற்கொண்ட எடின்பேர்க் நகரசிவில் அமைப்புகளில் உறுப்பினராக இருந்து தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமளவுக்கு தன்னை மக்கள் தொடர்பாடலிலும் ஈடுபடுத்திக் கொள்ள தவறவில்லை. பிரபல 'டைம்ஸ்' பத்திரிகையின் கல்விமிதழ் ஒன்றுக்கான கார்ட்டூன் தொடரில் தயாரிப்பாளராக இருந்து கடந்த இரண்டு வருடங்களின் முடிவில், தன்னை முழுநேர ஊடகவியலாளனாக அர்ப்பணித்ததுடன் புகழ் வாய்ந்த பத்திரிகைகளான 'ஸ்கொட்ஸ்மன்', த ஹெரால்ட், 'த கார்டியன்' போன்றவைகளில் ஆக்கங்களை எழுதும் வாய்ப்பையும் பெற்றார்.

துரித வளர்ச்சி கண்டு பத்திரிகைத் துறையில் உச்சமாக 'தி ஒப்சேவர்' பத்திரிகையின் ஸ்கொட்லாந்து செய்தியாளராக இணைந்து கொண்டதுடன் மூன்றே வருடங்கள் அனுபவத்துடன், 1992 ஆம் ஆண்டுக்கான "பிரசாரப் பத்திரிகையாளர்" விருதையும் வென்றார். அதே புகழுடன், சமவருடமே சனல் - 4 தொலைக்காட்சியில் வாராந்திர சஞ்சிகை நிகழ்ச்சியொன்றின் செய்தி விபரிப்பாளராக பணியாற்றும் வாய்ப்பினை ஏற்று எழுத்தாடகத்திலிருந்து, பல்லூடகத்துக்கான தனது மாற்றத்தை ஏற்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 இல் [illegible] அலெக்ஸ் சதெர்லண்ட்டுடன் இணைந்து தொலைக்காட்சி வரிசை ஒன்றை ஆரம்பித்ததுடன், தொடர்ந்தும் உலகின் பிரபல்யமான தொலைக்காட்சிகளான பி.பி.ஸியின் பனோரமா, ஐ.டி.வியின் நெற்வேர்க், பெ(f)ஸ்ட், பைல் போன்ற நிகழ்ச்சிகளுக்கான இயக்குநராகவும், தொகுப்பாளராகவும், தயாரிப்பாளராகவும் அவ்வப்போது செயற்பட்டு வருகின்றார்.

**ஆவணப்படங்களின் அவதாரன் மக்ரே**

அநீதிக்கெதிராக கொதித்தெழுகின்ற தூயமனது, இலகுவில் யாவர்க்கும் வாய்த்து விடுவதில்லை. அவ்வாறே யாயினும் அவர்களால் கவனிக்கப்படும் உயரத்தில் இருக்க முடிவதில்லை. ஆனால் இவ்விரண்டு தகுதிகளையும், தன் பலமாக சம்பாதித்து உலகின் சகல கோணங்களிலும் அடக்கு முறையினால் அல்லலுற்று அழுத கண்களுக்காக தனது 'கமெரா' வினைத் திருப்பி 'அவலத்தின் தோழனாக' தன்னைத் தானே செதுக்கிய பெருமை கெலும் மக்ரேவுக்கு உண்டு.

**'அறிக்கையிடப்படாத உலகு'**

(Un neported world) உகண்டாவில் இடம்பெற்ற உள்ளூர் போரை ஆவணப்படுத்தி, தானே இயக்கிப் படமாக்கிய ஆவணப்படம் இது. அரச படையினர் உகண்டாவின் போராளிகளைத் தேடி, மக்கள் குடியிருப்புக்கள் மீது தொடுத்த மனிதவேட்டையை வெளிப்படுத்திய தொகுப்பாக உலகின் பார்வைக்கு படையலிட்டார்.

உகண்டாவின் பசுமை போர்த்த வயல்களிலும், சொட்டுத் தண்ணீருக்காக உதடுகள் ஏங்கும் வரண்ட வெளிகளிலும், திட்டுத்திட்டாய் உறைந்து கிடந்த அப்பாவிகளின் இரத்தத் துளிகளை, ஐரோப்பாவுக்குள் திரட்டிக் கொணர்ந்து, நீதி கேட்ட மக்ரேவின் முதல் முயற்சியின் பயனாக, சூடான்-உகண்டாவின் எல்லையில், சூடானிய புரட்சிப்படையின் மீது கட்டற்று ஏவிவிடப்பட்ட காட்டுத் தாக்குதலை ஆவணப்படுத்தும் வாய்ப்பும் கிடைத்தது.

**'போரின் ஒரு நாள்'**

(A Day of war) என்று தலைப்பிடப்பட்ட வட உகண்டாப் போர்க்களங்களை ஐரோப்பியர்களின் வரவேற்பறைக்குள் கொண்டு வந்து உண்மை சொன்ன இந்த ஆவணப்படம் இன்றைக்கு தென் சூடான் விடுதலை பெற்று தனித்தேசமாக முடிசூடியமைக்கு துணைக் காரணமாகவும் அமைந்தது.

**'சூடான் போரும் சுதந்திரமும்'**

சுதந்திர தென் சூடான் அமைந்ததன் பின்னால், 2011 ஆம்

# தேசங்களில் பூசியவன்

ஆண்டின் பிற்பகுதியில் 'சூடான்-போரும் சுதந்திரமும்' (Sudan War and Independence) எனத் தலைப்பிடப்பட்ட ஆவணப்படத்தினை அல்-ஜெசீரா தொலைக்காட்சிக்காக இயக்கிப் படமாக்கினார்.

வெள்ளையினத்தவர்களால் வளம் சுரண்டப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டு, சிதைக்கப்பட்ட கறுப்பினத்தவர்களின் விடுதலையைக் கண்டு வெளிப்படுகின்ற மகிழ்ச்சியின் உற்சாகக் குமிழிகளை மீதுறப் பவி திரையில் வெளியிடும்காணொளிகளுக்கு மட்டுமல்லாது, மக்ரேவின் மனதும் ஆழமாகவும்- அகலமாகவும் இருந்திருக்கின்றது.

தென் கோர்டோபானின் நுபா மலைப்பிரதேசங்களில் மீது அறிவிக்கப்பட்ட பறப்பில்லாத பிரதேசங்களில்(No- FLY ZONES) வாழும் சிவிலியர்கள் மீது குண்டுவீசப்பட்ட கொடூரத்தின் ஆதாரங்களை சேகரிப்பதற்காக யாருக்கும் தெரிவிக்காத யாரிடமும் அனுமதி பெறாத பயணமொன்றுக்கு மெக்ரேயுடன் துணையிருந்தவை 'ஜோன் டிமைக் கிழுக்' என்ற இணைத் தயாரிப்பாளரின் நட்பும், மட்டற்ற மனவுறுதியும்மட்டுமே 'SPLA-N' படைகளின் தலைவரான அப்துல் அஜீஸ் அல்-ஹிலுவின் முதலாவது நேர்காணல் இந்தப் பயணத்தின் மூலமாக ''உலகத் தொலைக்காட்சிகளில் முதன் முறையாக'' திரையிடப்பட்டது.

**'ஈராக்கின் பில்லியன் இலக்கு'**

(Iraq's mission Billions) அமெரிக்காவினால் தொடுக்கப்பட்ட ஈராக் மீதான போரின் இறுதியில் ஒரே ஒரு சாதாரண அணுவாயுதம் கூட கண்டுபிடிக்கப்படவில்லை என்ற உண்மையை உலகமே அறியும். ஆயினும், வல்லாதிக்க அமெரிக்க நிலைப்பாட்டிற்கு எதிராக வெகுண்டெழும் கோபம் எவரிடத்திலும் ஏற்படுத்தப்படவேயில்லை.

ஆனால், ஈராக்கில் அல்லலுறும் மக்களின் துயர் நீக்கும் நிவாரணப் பணிகளுக்காக சேகரிக்கப்பட்ட பில்லியன் கணக்கிலான, கணக்குக் காட்டப்படாத பணத்துக்கு என்ன நடந்தது என்று மக்ரே கேள்வி எழுப்பினார்.

சேகரிக்கப்பட்ட நல்லெண்ண நிதியத்தின் ஒரு பகுதி, அதே மக்களுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்ட ஆயுதங்களுக்கும் செலவழிக்கப்பட்ட அநியாயத்தை அத்தாட்சி வீடியோக்களினால் வினாவுக்குள்ளாக்கினார். பிரிட்டன் வாசியான கெலும் மக்ரேவின் கண்களுக்கு ஏனைய கொடூரங்கள் கண்ணை மறைத்தது எப்படி என்று கேலி பேசிய ஏனைய தொலைக்காட்சி நிறுவனங்களின் வாய்கள் அடுத்த ஆவணப்படத்தின் பின் தானாகவே மூடிக் கொண்டன.

**'யாருடைய உத்தரவின் பேரில்'**

(On Whose Orders) ஈராக்கிய தாக்குதல்களில் பிரிட்டிஷ் துருப்புகளும் பயன்படுத்தப்பட்ட நிலையில் பிரிட்டனை தளமாகக் கொண்ட சனல் - 4 தொலைக்காட்சியும் கெலும் மக்ரேயும் அமெரிக்க ஏகாதிபத்தியப் போருக்கு எதிராக ஒற்றை வசனமேனும் பேசி விடப்போவதில்லை என்று தத்தமது நேயர்களிடம் சூளுரைத்துக் கொண்டிருந்த போட்டி நிறுவனங்களின் நினைப்பில் மண் விழுந்தது வெகு விரைவில்!

பி.பி.ஸியின் பனோரமா தொடர் தொகுப்புகளுக்காக விசாரணை நோக்கோடு எடுக்கப்பட்ட இந்த ஆவணப்படம், பிரிட்டிஷ் துருப்புகள் ஈராக்கில் நிகழ்த்திய சட்டபூர்வமற்ற கொலைகளையும், நிராயுதபாணிகள் மீது மேற்கொண்ட தாக்குதல்களையும், போர்க் கைதிகள் மீது கைக்கொண்ட மனிதாபிமானமற்ற தண்டனைகளையும், காட்சியாக்கியது. வாராந்திரத் தொகுப்பின்படி சுமார் 6 மாதங்களுக்கு ஆட்சியாளர்களை உலுக்கிப் போட்டது.

திருமணம் முடித்து மூன்று வாரங்களில் -நேசப் படைகளோடு இணைந்த பிரிட்டிஷ் இராணுவ சிப்பாய், தன் கணவனை மீண்டும் காண முதலே தன்னுயிரை மாய்த்துக் கொண்ட இளம் தாதியொருத்தியின் மரணத்தின் வலி, பிரித்தானிய மக்களின் மனங்களில் இன்னமும் நீங்காத குற்றவுணர்வினை விளைவாக்கிச் சென்றது.

**இலங்கையின் கொலைக்களங்கள்**

(Srilanka's Killing Fields) மிகநீண்ட காலமாகத் தான்குடியிருந்தவாடகை வீடொன்றின் அருகிலிருந்த இலங்கைத் தமிழர் ஒருவரை தான் அவதானித்து வந்ததாகவும், திடீரென ஒருநாள் மாரடைப்பினால் அவர் இறந்து போக, அவரது பிள்ளைகளும்-மனைவியும், குடும்பத்தினரும் சோகத்தினை வெளிப்படுத்திய விதம் தன்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாகவும் 'மக்ரே' தனது பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அன்பு-பாசம்-நம்பிக்கை என்பவற்றுக்கான புதியதொரு வரைவிலக்கணத்தைத் தன்னிடம் விதைத்துச் சென்ற அந்தக் குடும்பமே, 2009 இன் பின் சேகரிக்கப்பட்ட பெரும்பாலான காணொளிகளின், புரியாத மொழியிலான சம்பாஷனைகளின் உண்மை வடிவத்தை தனக்குள் தத்ரூபமாக புரிய வைக்க காரணமானது என்றும் நெகிழ்கின்றார்.

'போர்க் குற்றங்கள்' என்ற வாதம் முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என்ற காரணத்தினால், ஆயுதமேந்தாத சிவிலியன்களின் படுகொலைகள் தொடர்பாகக் கிடைத்த ஆதாரங்கள் யாவற்றையும், தனது இரண்டாவது தொகுப்புக்காக தாமதித்தது டன், முதலாவது ஆவணப்படம், முற்று முழுதாக போராளிகளுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை சுற்றிப்பின்னப்பட்டதாக முதன்மைப்படுத்தப்பட்டது.

காட்சிப்புலக் கலைக்கு இருக்கும் 'உடனடி வசீகரம்' எனும் இயல்புதான், பல்வேறு நாடுகளையும் சேர்ந்த பிரதிநிதிகளையும், உலக மக்களையும் ஈழத்தில் இடம்பெற்று முடிந்த போர்- திட்டமிட்ட இனவழிப்புத்தான் என்ற உண்மைக்கு, ஊகங்களிலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தது. இலங்கை அரசு சனல் -4 இன் செய்தியாளர்களை நாட்டுக்குள் அனுமதிக்காத வெறுப்பை வெளிக்காட்டுமளவுக்கு 'இலங்கையின் கொலைக்களங்கள்' 2012 இல் இடம்பெற்ற ஐக்கியநாடுகளின் மனித உரிமைகள் கவுன்சிலின் பேரவையில், தமிழனின் நிற்காத துயர நதியில் கண்ணீர்த் துளிகளை தனித்தனியாக பிரித்து இனங்காட்டியது.

> மிக நீண்ட காலமாகத் தான்குடியிருந்தவாடகை வீடொன்றின் அருகிலிருந்த இலங்கைத் தமிழர் ஒருவரை தான் அவதானித்து வந்ததாகவும், திடீரென ஒருநாள் மாரடைப்பினால் அவர் இறந்து போக, அவரது பிள்ளைகளும்-மனைவியும், குடும்பத்தினரும் சோகத்தினை வெளிப்படுத்திய விதம் தன்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாகவும் 'மக்ரே' தனது பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச நிறுவனம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொலைக்காட்சி என்ற பெருமை 'சனல் 4'க்கு கிடைக்கவும் வழி செய்தது.

**தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்**

முதலாவது ஆவணப்படத்தின் பிற்சேர்க்கையாக, காலக்கிரமத்தில் கிடைத்த யுத்த களத்துக்கு பின்னான காட்சிகள் 'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' (War Crimes Unpunished)- எனத் தலைப்பிடப்பட்டது. இனமொன்றின் விடுதலைக்காக ஆயுதமேந்தியவர்களின் இறுதிக் கணங்கள், அவர்களின் எதிரிகளின் விளையாட்டுக் கொலை சூழ் இருளுக்குள் அமிழ்த்தப்பட்ட கொடூரத்தில் உலகை திடுக்கிட வைத்தன.

வெறுமனே ஐ.நாவின் மனிதவுரிமைப் பேரவையின் கவனத்தை ஈர்ப்பது மட்டும் நோக்கல்லாது, ஐ.நாவின் பெண்கள்- சிறுவர்களுக்கான அமைப்புக்களை ஈழத் தமிழ்ப் படுகொலைகளை நோக்கி நியாயம் கேட்கச் செய்யும்ஆவேசம்கெலும்மக்ரேவின் தயாரிப்பு நுணுக்கங்களில் குறிப்பிடத்தக்கதொன்று.

**சூட்டு தவிர்ப்பு வலயம்**

முகமறியாத எண்ணற்ற பெண் போராளிகளின் உயிரற்ற உடல்களுக்கு நடுவில், இனங்காணப்பட்ட 'இசைப்பிரியா' முதலாவது ஆவணப்படத்தில் போர்க் குற்றப் பட்டியலில் முன்னிலைப்படுத்தப்பட்டது போன்றே, உறுப்பிழந்து, உயிரிழந்து துடிதுடித்த சிறுவர்களின் நடுவில், உயிருடன் பிடித்துப் படுகொலை செய்யப்பட்ட பாலச்சந்திரனின் கண்களில் நிறைந்திருந்த ஏக்கத்தினை தனது இரண்டாவது தொகுப்பான 'சூட்டு தவிர்ப்பு வலயம்' (No Fire Zone)- எனப் பெயரிடப்பட்ட ஆவணப்படத்தில் முதன்மைப்படுத்தியிருக்கிறார்.


'அரசியல் போராளிகள் கொல்லப்பட்டமை', 'சரணடைந்தவர்களின் மீதான சித்திரவதைகளும், படுகொலைகளும்', 'பெண் போராளிகள் மீதான வன்புணர்வு கொலைகள்', 'சந்தேகநபர்களை சித்திரவதைப்படுத்தியமை', 'போராளிகளின் குடும்பத்தினரை கொடுமைப்படுத்தியமை', 'புனர்வாழ்வின் பின்னான நெருக்குவாரங்கள்', 'போர்க்குற்ற ஆதாரங்களை வலிந்து அழித்தமை' போன்ற பல்பரிமாண குற்றச்சாட்டுக்களைக் கொண்ட இந்த மூன்றாவது ஆவணப்படம், அதீத வீரியம் செலுத்துவது 'குழந்தைக் கொலை' என்ற புள்ளியிலேயே!

பாலச்சந்திரனின் திட்டமிடப்பட்ட படுகொலையை வெளிப்படுத்துகின்ற ஆதாரங்கள், இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு எதிராக உடனடி விளைவை ஏற்படுத்தத் தவறினாலும்கூட, எதிர்காலத்தின் 'சிறுவர் உரிமைகள்' பற்றிய பல்வேறு கோணங்களிலான விசாரணைகளின் முடிவில், அறுதியானதும், நீதியானதுமான தீர்ப்பொன்றுக்கு குற்றமிழைத்தவர்களையும், தூண்டியவர்களையும் நிச்சயம் இட்டுச் செல்லும் என இறுக நம்புகின்றார் கெலும் மக்ரே!

மறக்கவொண்ணாதவர்களை சாவின் பின்னரே சிலையாக நிற்க வைத்து 'தண்டிக்கும்' (?) கொடுங்குணம் எமக்குமுண்டு. வாழும் நாளில் அவர்களை வாழ்த்திப் பேசும் ஒற்றை வார்த்தைக்கு கூட எண்ணற்றுச் சிந்தித்து, இறுதியில் எதுவுமில்லாமல் குனிந்தே கடக்கும் பெருங்குணம் தமிழரின் பிறவிப் பயன்களின் ஒன்று!

மனிதத்துவ உணர்ச்சிகளைக்கூட அச்சடித்த காகிதப் பணத்தாள்களினால் அளவிடுகின்ற வர்த்தக உலகில், எம்மையும், எம்மினத்தின் கண்ணீரையும் தனக்குள் கருவேற்றிக் கொண்ட இம்மனிதனின் முயற்சிகள் - 2009 இன் பின்னான ஈழத்தமிழனின் இன விடுதலைப் போராட்டத்தினை உலகளாவிய அங்கீகாரத்துக்கு இட்டுச் சென்றது என நம்புவதில் என்ன தவறு?

காலத்தினால் கரைத்தழிக்க முடியாத ஞாலப் பெரும் உதவிக்குரிய கெலும் மக்ரே வாழும்திசையை நோக்கி, கண்ணீர் திரையிடும் கண்களை மூடி காலக்கறை சுமக்கும் விரல்களை கூப்பித் தொழுது, உண்மைகள் உறைந்த வெற்றுத் தகடுகளால் முணுமுணுக்கின்றோம். காற்றுக்கும் கேளாமல்- ''நன்றிகள் நண்பனே!'' ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நடப்புகள் ஒரு பார்வை

# ஈரான் – பாக். எரிவாயு குழாய் திட்டம் அமெரிக்க உறவுகளுக்கு உலை வைக்குமா?

■ ரெங்கன்

அணு ஆயுத உற்பத்தியில் அக்கறை கொண்டு செயற்படுவதாக அமெரிக்காவின் சந்தேகத்துக்குள்ளாகி, அந்த நாட்டின் ஆத்திரத்துக்கு மட்டுமன்றி ஐரோப்பிய யூனியன் நாடுகளின் கோபத்துக்கு, உள்ளாகி, பொருளாதாரத் தடைகளால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள ஈரான், பாகிஸ்தானுடன் எரிவாயு விநியோகக் குழாய் அமைப்புக்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருப்பது, பொருளாதாரத்தடை பாகிஸ்தான் மீதும் விஸ்தரிக்கப்படுவதற்கான ஆபத்தைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த எரிவாயு விநியோகத் திட்டமானது பாகிஸ்தானின் எரிவாயு பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, முடங்கிப் போயிருக்கும் ஏராளமான தொழிற்சாலைகள் மீண்டும் உயிர்ப்புக் கொள்ள உதவுவதுடன், உள்நாட்டுப் பொருளாதார சீரமைப்பையும் மேம்படுத்தும் என்று பாகிஸ்தான் தலைவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதே வேளை மேற்கு நாடுகளினதும் ஐ.நாவினதும் பொருளாதாரத் தடை நெருக்கடிகளுக்குள்ளாகியிருக்கும் ஈரான் பாகிஸ்தானுக்கு குழாய் மூலம் எரிவாயுவை வழங்குவதன் மூலம் ஓரளவுக் காகுதல் அதனைச் சரிசெய்து கொள்வது சாத்தியமாகும் என்று கருதப்படுகின்றது. அதுமட்டுமன்றி, பாகிஸ்தானுடனான இந்த ஏற்பாடு பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கும் நாடுகளுக்கும் ஒரு பாடத்தைப் படிப்பிப்பதாக இருக்கும் என்று அந்த நாடு கருதக்கூடும்.

எதுவானாலும் அண்டை நாடுகளுடன் சுமுகமான ஒரு நிலையை விரும்புவதாகக் காட்டிக் கொள்ள விரும்பும் பாகிஸ்தான், இந்தச் செய்கை மூலம் தனது பாரம்பரிய நட்பு நாடான அமெரிக்காவின் எதிர்ப்பை அதிகரித்துக் கொள்ளப் போகிறது என்ற அச்சம் நிலவுகின்றது. ஏற்கனவே ஈரானிலிருந்து எரிவாயுவை பாகிஸ்தானுக்கு கொண்டுவருவதற்காக குழாய் அமைக்கும் திட்டத்தை அமெரிக்கா ஆட்சேபித்திருக்கிறது. ஈரானின் அணு ஆயுத உற்பத்தி முயற்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதாரத் தடை முயற்சிகளை, இந்தக் குழாய் அமைப்பு கெடுத்துவிடும் என்று அமெரிக்கா கருதுகிறது. இந்த ஏற்பாடு செயல் உருப்பெற்றால் - ஈரானுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் எரிவாயு பகிர்ந்துகொள்ளும் குழாய் அமைப்பு பூர்த்திசெய்யப்பட்டால், ஈரான் மீதான எமது பொருளாதாரத் தடைத் திட்டம் மிக மோசமாகப் பாதிக்கப்படும். பொருளாதாரத் தடையைப் பாதிக்கும் திட்டம் எதிலும் பாகிஸ்தான் இறங்காது என்று எதிர்பார்க்கிறோம் என்றவாறு அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் விக்டோரிய நூலன்ட் கடந்த வாரம் வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார். இதற்குப் பதிலாக மத்திய ஆஸியாவிலிருந்து எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்கான குழாய் மார்க்கம் ஒன்றை அமைத்துக்கொள்ள உதவி புரிவதாகவும் அமெரிக்கா ஏற்கனவே வாக்களித்துள்ளது.

பாகிஸ்தான் அதிபர் அஸிப் அலி சர்தாரியின் கட்சி வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கும் தறுவாயில் ஈரானுடன் இந்த ஒப்பந்தத்தை செய்து கொண்டிருப்பது அதற்குத் தேர்தலில் சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்தித் தரலாம் என்று அக்கட்சி கருதலாம். ஆனால் நிதி ஊழல்கள் மற்றும் நீதிமன்ற அவமதிப்புகள் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கும் சர்தாரியின் அரசு, தேர்தலில் எந்த அளவு சமாளிக்கும் என்பதை இப்போது அறுதியிட்டுச்சொல்ல முடியாது. தேர்தல் எவ்வாறு முடிவுற்றாலும், இந்த ஒப்பந்தத்தின் காரணமாக பாகிஸ்தான் மீது அமெரிக்கா வித்தியாசமான ஒரு கண்ணோட்டத்தை செலுத்தும்படியான நிலைமையை உருவாக்கி விடும் என்பதை தவிர்க்கமுடியாது.

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி, அண்மையில் ஈரானுக்கு இரண்டாவது முறையாக பயணம் மேற்கொண்டிருந்தபோது, பிரச்சினைக்குரிய இந்த எரிவாய்க்குழாய் அமைக்கும் ஒப்பந்த வைபவத்தில் ஈரானிய அதிபர் மகம் மவுத் அகமடி னெஜாய் மற்றும் அந்நாட்டின் எரிபொருள் அமைச்சர் ரோஸ்தம் காசெம் ஆகியவர்களுடன் கலந்து கொண்டார். ஈரானின் தென் துறைமுக நகரான சாபகார் என்ற இடத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கான தொழுகையொன்றில் முதலில் கலந்து கொண்டதன் பின்னர் கட்டுமானம் ஆரம்பிக்கும் இடத்தில் விவரப்பலகை ஒன்றை அவர்கள் திறந்து வைத்தனர்.

1,931 கிலோ மீற்றர் (1,200 மைல்) தூரமுள்ள இந்தக் குழாய்த் திட்டம் பூர்த்தியாகும் போது, அது பாகிஸ்தானில் எரிபொருள் தட்டுப்பாட்டை ஒழித்துக்கட்டும் கடந்த கோடை காலத்தில் மூடப்பட்ட பல தொழிற்சாலைகளுக்கு புத்துயிர் அளிக்கும்.

பாகிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் ஈரான் 900 கிலோ மீற்றர் தூரத்துக்கு எரிவாயுக்கு குழாயை அமைத்து முடித்துள்ளது. மிகுதிப் பகுதி பாகிஸ்தான் பகுதியில் அமைத்தாக வேண்டும். 2010 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் கீழ் தினம் 21.5 மில்லியன் கலன் கனமீற்றர் எரிவாயுவை ஈரான் பாகிஸ்தானுக்கு 25 வருட காலத்துக்கு வழங்கும். அதன்பின் மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் நீடிக்கப்படலாம். அளவும் 30 மில்லியன் கலன் கன மீற்றருக்கு உயர்த்தப்படும்.

உலகில் வாழும் 1.2 பில்லியன் (120 கோடி) கத்தோலிக்க கிறிஸ்தவ சமய மக்களின் புதிய தலைவராக (பாப்பரசராக) ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த ஆர்ச் பிஷப் ஜோர்ஜ் மரியோ பெர் கோக்லியோ தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது சகல ஊடகங்கள் வாயிலாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து பாப்பரசர் ஒருவர் தெரிவாகியிருப்பது இதுவே முதல் தடவை. போப் முதலாம் பிரான்சிஸ் என்று இவர் இனிமேல் அழைக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலுமிலிருமிந்து வத்திக்கான் நகரில் கூடிய 115 கர்தினால்கள் இரண்டு நாள்கள் ஆலோசனைகள் நடத்தியதன் பின்னர் புதிய பாப்பரசரை தெரிவு செய்தார்கள்.

பாப்பரசரின் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் வத்திக்கானிலுள்ள செண் பீட்டர்ஸ் தேவாலயத்தில் அவர்கள் பிரார்த்தனையை நடத்தினார்கள். பின்னர் அங்கிருந்து சிஸ்டைன் ஆலயத்துக்குள் சென்று கதவுகளைத் தாழிட்டதன் பின்னர் இரகசிய காப்பு பிரமாணம் ஒன்றைச் செய்து பிரார்த்தனையை முடித்துக்கொண்டு புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் பணியில் ஈடுபட்டார்கள்.

கடந்த வாரம் கர்தினால்கள் சாதாரண சந்திப்பு நடத்தி கத்தோலிக்க சபையை எதிர்நோக்கும் பல பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். கர்தினால்களின் முதலாவது சந்திப்பிலேயே (கொன்கிலேவ்) பாப்பரசர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு விடலாம் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டு நாள்கள் ஆலோசனைகள் இடம் பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டு விட்டார் என்பதை குறிக்க வெண்புகையும் தெரிவு செய்யப்படவில்லை என்பதை அறிவிக்க கரும்புகையும் கர்த்தினால்களின் ஒன்று கூடல் முடிவுற்றதின் பின்னர் தேவாலயத்தின் புகைபோக்கி மூலம் வெளியிடப்படுவது வழக்கம்.

இந்தப் புகை எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதைப் பற்றிய விவரம் கடந்த திங்கட்கிழமை வத்திக்கானில் வெளியிடப்பட்டது. கரும் புகையை வெளியிடுவதற்கு வத்திக்கானில் உள்ள தொழில் நுட்பவியலாளர்கள் சில வகை இரசாயனங்களை இம்முறை பயன்படுத்தியுள்ளார்கள். இரசாயனக் கலவைக்குத் தனியான சூட்டடுப்பும், வாக்குச் சீட்டுக்களை எரித்து வெண் புகையை வெளியிட வேறு ஒரு சூட்டடுப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளன. [illegible] வெளிப்படுத்த நனைந்த வைக்கோலே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் அது தவறான செய்தியையும் சில சமயம் வெளிப்படுத்துவதாய் இருந்துள்ளமையால், இம்முறை இரசாயனக் கலவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

கர்தினால்களின் பாப்பரசர் தெரிவுக்கான சந்திப்பு (கொன்கிலேவ்) என்பது மத்திய காலத்திலிருந்து பின்பற்றப்பட்டு வரும் முறையாகும். கொன்கிலேவ் என்ற சொல் திறப்பு என்ற கருத்தைக் கொண்டுள்ளது. 13 ஆவது நூற்றாண்டிலிருந்து இது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அந்தக் காலத்தில் பாப்பரசர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு கர்தினால்கள் இரண்டு வருடங்களுக்கு மேல் எடுத்துள்ளார்கள் . பாப்பரசர் தெரிவுக்கு கால தாமதம் ஏற்படுவதை விரும்பாத மக்கள் கர்தினால்கள் கூடியிருந்த கட்டடத்தின் கூரையைக் கிழித்து எறிந்து அவர்களை பூட்டி வைத்ததுடன் பாப்பரசர் தெரிவாகும்வரை ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு என்று கட்டுப்படுத்தி இருந்தார்கள்.

இந்தத் தகவலை ஜோர்ஜ்டவுன் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் வண. வேடவிட் கொலின்ஸ் தெரிவித்துள்ளார்.

### பஸ்ஸில் பயணம்

புதிய பாப்பரசர் தெரிவின் போதும் பின்னரும் நிகழ்ந்த சம்பவங்கள் பற்றிய செய்திகள் வெளி வந்துள்ளன. பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பாப்பரசர் பிரான்சிஸ் தமக்குரிய சிறப்பு வாகனத்தில் பயணத்தைத் தவிர்த்து, ஏனைய கர்தினால்களுடன் தொடர் பஸ் வண்டியிலேயே வத்திக்கானிலுள்ள தங்கும் விடுதியில் உணவு உண்பதற்காக புறப்பட்டுச் சென்றார்.

இது அவருடைய எளிமையைக் காட்டுவதாக இருந்தது என்று நியூயோர்க் கர்த்தினாலான திமோதி தொலான் தெரிவித்தார். ஆர்ஜென்ரீனாவின் ஜோர்ஜ் பெங்கொக்லி பாப்பரசராகத் தெரிவானதையடுத்து நிகழ்ந்த சில சம்பவங்களை வெளிப்படுத்துவதாகக் கர்தினால் திமோதியின் கருத்து அமைந்தது.

பெரும்பாலான கர்தினால்கள் தமது இருப்பிடத்துக்கு பஸ்களில் போய்ச் சேர்ந்த பின்னர் புதிய பாப்பரசரை வரவேற்பதற்காக வரிசையில் காத்திருந்தார்கள். ஏற்கனவே பாப்பரசருக்குரிய சிறப்பு வாகனம் அப்போஸ்தலர்கள் மாளிகையின் அருகில் நின்றிருப்பதை அவர்கள் பார்த்திருந்துள்ளார்கள். ஆனால் கடைசி பஸ் வந்து சேர்ந்தபோது யாரும் எதிர்பாராதவிதமாக அதிலிருந்து புதிய பாப்பரசர் இறங்கி வந்தார் என்றார் தொலான்.

அஸிஸைச் சேர்ந்த செண். பிரான்சிஸ் புனிதரைக் கௌரவிக்கும் வகையில் தாம் பிரான்சிஸ் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்திருப்பதாக தம்மை தெரிவு செய்த 114 கர்தினால்களிடம் புதிய பாப்பரசர் கூறியுள்ளார். புனிதர் பிரான்சிஸ் ஆனவர் உலகப் பொருள்கள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டவர் என்பதால் 'ஏழ்மையான சிறியவர்' என்று அறியப்பட்டிருந்தார். ★

**பிறந்த இடம்:** புலனர்ஸ் அயர்ஸ் -ஆர்ஜன்ரீனா
**திகதி:** டிசெம்பர் 17.19.1936
**பூர்விக பெயர்:** ஜோர்ஜ் மாரியோ பேர் கொக்லியோ
**கல்வி:** வேதியல் மற்றும் தத்துவத்தில் பட்டம்
**சமயப் பணி:** 1969 இல் ஜேசு சபையில் திரு நிலைப்படுத்தல், இலக்கியம், மனோதத்துவம் மற்றும் இறை இயல்பற்றி கற்பித்தல். 1992 இல் புவனர் அயர்ஸ் பங்கின் பிஷப்பாக நியமனம்
**தனித்துவம்:** எளிமையாக வாழ்தல், 2001 இல் கர்தினாலாக நியமனம் பெறல், தனித் தாய்மார்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு ஞானஸ்தானம் வழங்க மறுக்கும் குருமார்களைக் கண்டித்தல்.1,200 ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் ஐரோப்பியர் அல்லாத ஒருவர் பாப்பரசராக நியமனம் பெறல் 19 மார்ச் - 2013அன்று செண்.ஜோசப் தேவாலயத்தில் புதிய பாப்பரசராகப் பொறுப்பேற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

42

■ பா.உண்மை

‘பகைவன் தூரத்தில் இல்லை; உன் அருகிலேயே இருக்கிறான்.’ என்று ஒரு பழமொழி உண்டு. இது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, லிங்கனுக்கு மிகவும் பொருந்தும். அமெரிக்காவில் நடந்தது உள்நாட்டு யுத்தம். தெற்குப் பகுதி ஆதரவாளர்கள் வடக்குப் பகுதியிலும், வடக்குப் பகுதி ஆதரவாளர்கள் தெற்குப் பகுதியிலும் இருந்தார்கள். அதனாலேயே உள் பகைவர்களை எதிர்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத ஒரு விடயமாக ஆகிவிட்டது லிங்கனுக்கு.

சில சமயங்களில் மிக ரகசிய மானதிட்டங்கள்கூட எதிரி முகாமுக்கு எளிதாகப் போய்ச் சேர்ந்துகொண்டிருந்தன. காரணம், உள் பகைவர்கள்.

தெற்குப் பகுதிக்கு உளவு சொல்லும் ஓர் உளவாளியைக் கஷ்டப்பட்டுக் கைது செய்வார்கள். அந்த ஆளிடம் விசாரணையைக்கூட ஆரம்பித்திருக்க மாட்டார்கள். அதற்குள் கைது செய்யப்பட்டவரின் சார்பில் நீதிமன்றத்தில் ‘ஹேபியஸ் கார்பஸ்’ மனு போடப்பட்டிருக்கும். ஹேபியஸ் கார்பஸ் போடப்பட்டு விட்டால், சம்பந்தப்பட்ட நபரை நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கும் அவகாசத்துக்குள், கோர்ட்டில் முற்படுத்த வேண்டும். உளவாளியிடம் எந்த விடயத்தையும் வாங்குவதற்கு முன்பாக, அவர் கோர்ட்டில் முற்படுத்தப்பட்டு, பிணை வாங்கிக் கொண்டு போய்விடுவார்.

இந்த ‘ஹேபியஸ் கார்பஸ்’ மிகப் பெரிய தலைவலியாக இருந்தது லிங்கனுக்கு. பார்த்தார். தமது தளபதிகளுக்குச் சிறப்பு அதிகாரங்களை வழங்கினார். ‘ஐக்கிய அமெரிக்க ராணுவம் கைது செய்யும் பிரிவினைவாதிகளுக்கு, நீதிமன்றத்தின் இந்த ‘ஹேபியஸ் கார்பஸ்’ அதிகாரம் பொருந்தாது’ என்று சட்டம் கொண்டுவந்தார். 1863 இல் நாடாளுமன்றம் வழங்கிய அதிகாரப்படி, கிட்டத்தட்ட வடக்குப் பகுதியில் இருந்த எல்லா மாநிலங்களிலும் ‘ஹேபியஸ் கார்பஸ்’ ஆணை ரத்துச் செய்யப்பட்டது.

என்ன இருந்தாலும் இது மனித உரிமை மீறல் இல்லையா? ஆயிரம் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாதில்லையா? அதைத்தானே சட்டமும் சொல்லுகிறது? ஹேபியஸ் கார்பஸ் ரத்து செய்யப்பட்டால், ஓர் அப்பாவியைக்கூட, தனக்கு வேண்டாதவன் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, இஷ்டப்படி எங்கேயோ கொண்டுபோய், அடைத்து வைக்கும் அதிகாரம் ராணுவத்துக்கு வந்துவிடுமே? இப்படியெல்லாம் குரல்கள் எழுந்தன.

அதற்கேற்றாற்போல், ஸ்டாண்டன் பிரிவினருக்கு ஆதரவளிப்பவர்கள் என்று ஒரு லிஸ்ட்டைப் போட்டு, 13, 000 பேரைக் கைது செய்து சிறையில் அடைத்தார். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களில் பலர் இதற்கு எதிர்ப்புக் குரல் எழுப்பினார்கள். அப்படிக் குரல் எழுப்பியவர்களில் முக்கியமான ஒருவர் கிளெமென்ட் வல்லண்டிகாம் (Clement Vallandigham).

> ‘பகைவன் தூரத்தில் இல்லை; உன் அருகிலேயே இருக்கிறான்.’ என்று ஒரு பழமொழி உண்டு. இது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, லிங்கனுக்கு மிகவும் பொருந்தும்.

வல்லண்டிகாம், ஸ்டீபன் டக்ளஸின் நண்பர். இந்த ஒரு காரணம் போதாதா, லிங்கனுக்கு எதிராக அவர் குரல் கொடுப்பதற்கு. அவர் மாநிலங்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர். அதனாலேயே, ஐக்கிய அரசைவிட, தென்மாநிலப் படைகளுக்குத்தான் அமெரிக்காவை ஆளும், வழிநடத்தும் அதிகாரம் இருப்பதாக நம்பினார். ராணுவம் சார்பாக வெளியிடப்படுகிற ஒவ்வொரு சட்டத்தையும் எதிர்த்தார். தெற்குப் படைதான் வெற்றிபெறும் என்று பகிரங்கமாக அறிவித்தார்.

‘தோல்வி, கடன் சுமை, வரிகள், கல்லறைகள் இவைதான் உங்களுடைய வெற்றிச் சின்னங்கள்’ என்று லிங்கனைவிட்டுவிளாசினார் வல்லண்டிகாம். ஆபிரஹாம் லிங்கன் ஜனாதிபதிப் பதவியிலிருந்து பதவி விலக வேண்டும் என்பது வல்லண்டிகாமின் அறிவுறுத்தல்.

எக்கச்சக்கமாகப் பேசியே மாட்டிக் கொண்டார் வல்லண்டிகாம். 1863, மே 1 ஆம் திகதி ஒரு மேடையில் அவர் லிங்கனை வழக்கம்போல, தாக்கு தாக்கென்று தாக்கினார். இதற்காகவே காத்திருந்த ராணுவம், மே ஐந்தாம் தேதி அவரைக் கைது செய்தது. அவருடைய ஆதரவாளர்கள் கொதித்தெழுந்தார்கள். குடியரசுக் கட்சிக்குச் சொந்தமான டேடன் ஜர்னல் (Dayton Journal) என்ற பத்திரிகைக்குச் சொந்தமான அலுவலகங்கள் கொளுத்தப்பட்டன. எல்லாவற்றையும் அடக்கினார் லிங்கன்.

வல்லண்டிகாமுக்காகப் போடப்பட்ட ஹேபியஸ் கார்பஸ் மனு, நிராகரிக்கப்பட்டது. இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட வல்லண்டிகாமுக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்றம். ‘தேசத் துரோகம் செய்தார், அரசுக்கு எதிராகப் பேசினார்’ என்பது அவர்மேல் போடப்பட்ட குற்றச்சாட்டு. ஆனால், லிங்கன் பல்வேறு விடயங்களை யோசித்துப் பார்த்தார். வல்லண்டிகாம் சிறையில் இருந்தாலும், அவருடைய ஆதரவாளர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். ஏதாவது குடைச்சல் கொடுத்துக் கொண்டுதான் இருப்பார்கள் என்று அவருக்குத் தோன்றியது. எனவே, வல்லண்டிகாமை நாடு கடத்த உத்தரவிட்டார். வடக்குப் பகுதியைத் தாண்டி அவர் போய்விட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இந்த வல்லண்டிகாம் பெர்முடாவுக்குப் போய், அங்கிருந்து கனடாவுக்குப் பயணம் செய்து, ஒஹியோ மாநிலத்தின் கவர்ணராகத் தன்னைத் தானே அறிவித்துக் கொண்டார். பிறகு அரசியலில் பழம் தின்று, கொட்டை போட்டு, தனது ஐம்பதாவது வயதில் எதிர்பாராதவிதமாகத் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு இறந்து போனார். அது தனிக்கதை.

ஆனால், லிங்கன் தம் அரசுக்கு எதிராக ஒரு குரல் எழுந்ததும், அதை அடக்கி ஒடுக்கியது விமர்சனத்துக்கு உள்ளானது. சர்ச்சையைக் கிளப்பியது. ‘வெளிப்படையாக அவரைப் பற்றிப் பேச எல்லோரும் பயப்படுகிறார்கள்’ என்றுகூட எதிரிகள் புரளி கிளப்பினார்கள். அதனாற்றான் லிங்கன், ‘சர்வாதிகாரி’ என்று அழைக்கப்பட்டார்.

*(மீட்பர் வருவார்)*

---

# எங்கும் பரவி......

மனித நேய
உணர்வுகள்
மன அலைகளின்
கொந்தளிப்பின்
எரிமலையாய்
ஆர்ப்பரித்து

அடிமை வாழ்வை
தொலைத்து
சுதந்திர வானத்தில்
பறப்பதற்கு
ஆசை கொண்ட போது
அதிகார கழுகுகளின்

இரும்பு
அலகுகளால்
கொத்தி கொத்தி
குதறப்பட்ட
செய்திகள்
ஆயிரம் ஆயிரம்

மனித நேயம்
மீண்டும்
மணி என்ற
மாமனிதன் உருவில்
அங்கு எழுந்த
தீ நாக்குகள்
எங்கும் பரவி
பொசுக்கட்டும்
[illegible]...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குப் போ!

பிரம்மதத்தன் காசியை ஆண்ட காலத்தில் அங்கு சேனகர் என்ற மாபெரும் யோகியாக போதிசத்வர் அவதரித்திருந்தார். அதே சமயம், அந்த நகருக்குப் பக்கத்துக் கிராமத்தில் பிச்சை எடுத்துப் பிழைக்கும் ஒரு பிராமணன் இருந்தான்.

ஒருநாள் அவன் ஏதோ ஒரு ஊரில் பிச்சை வாங்கிக் கொண்டு காட்டு வழியே தன் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போது ஒரு அசரீரி வாக்கு ''பிராமணா! நீ இன்று வீட்டிற்குப் போகாமல் இருந்தால் இறந்து விடுவாய். நீ வீட்டிற்குப் போனாலோ உன் மனைவி இறப்பாள்'' என்று கூறியது.

பிராமணன் சுற்றிலும் பார்த்து யாருமே இல்லாதது கண்டு தன்னை எச்சரித்தவன் யாராவது யட்சனோ கந்தர்வனோ அல்லது பிசாசோ என்று சந்தேகப் பட்டான். அவன் மனத்தில் பயம் ஏற்படவே, எப்படியாவது சட்டென வீட்டிற்குப் போய் விட வேண்டும் என்று அவன் துடித்தான். ஆனால் வீட்டிற்குப் போனால் அவன் மனைவி இறந்து விடுவாளாமே. இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் அவன் தவித்தான்.

அவன் நகருக்குள் நுழைந்து ஒரு வீதி வழியாகப் போனபோது சேனகரான போதிசத்துவர் மக்களுக்கு தர்மோபதேசம் செய்து கொண்டு இருப்பதைக் கண்டான். அவர் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருக்க, மக்கள் அவரைச் சுற்றிலும் கூடி இருந்தார்கள்.

அந்தப் பிராமணனும் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு போதிசத்துவர் கூறுவதைக் கேட்கலானான். போதிசத்துவர் பேச்சை முடித்ததும் மக்கள் கூட்டம் கலைந்து சென்றது.

ஆனால் அந்தப் பிராமணன் மட்டும் ஆடாமல் அசையாமல் மரம் போல நின்றான்.

அவனுக்குக் காட்டில் கேட்ட அசரீரி வாக்கு மிகுந்த குழப்பத்தை உண்டாக்கி இருந்தது. எப்படிப் பார்த்தாலும் கணவன், மனைவி இருவருள் யாராவது ஒருவர் இறந்தாக வேண்டும். இருவரும் இறக்காமல் இருக்க என்ன வழி என்று அறிந்து கொள்ள அவன் துடித்தான்.

அவனைக் கண்ட போதிசத்வர் அவனைத் தன்னருகே வரும்படி அவனுக்குச் சைகை செய்தார். பிராமணனும் அவரருகே போய் அவரை வணங்கி எழுந்து தலை குனிந்து நின்றான். போதிசத்துவரும் ''நீ எதற்காக இப்போது வேதனைப்படுகிறாய்?'' என்று கேட்டார். பிராமணனும் காட்டில் தன்னை யாரோ எச்சரித்ததைக் கூறி ''இப்போது நான் என்ன செய்வேன்? வீட்டிற்குப் போனாலோ, என் மனைவி இறந்து விடுவாளாம். போகா விட்டாலோ நான் இறந்து விடுவேனாம். இருவரும் இறக்காமல் இருக்க ஏதாவது வழி கூறுங்கள்'' என வேண்டினான். அப்போது போதிசத்வர் ''நீ அந்த எச்சரிக்கையைக் கேட்கும் முன் என்ன செய்து கொண்டிருந்தாய்?'' என்று கேட்டார். ''நான் ஓரிடத்தில் உட்கார்ந்து பையிலிருந்த உணவை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்'' என்றான்.

(தொடரும்)




## படிப்பு ஒரு சுமையல்ல

தேர்வு காலம் வந்தாச்சு
திறமை காட்ட வாருங்கள்
தேர்வு காலம் என்றாலே
திறமை காட்டும் காலம் தான்
படிக்கும் நேரம் படிக்காமல்
பயனில்லாமல் ஊர் சுற்றும்
விடலைக் கூட்டம் சேராமல்
வெற்றி காணப் படித்திடுவோம்,
நமக்கு முன்னே உயர்ந்தோரும்
நம்மைப் போல படித்தோரே
சுமையாய்ப் படிப்பை எண்ணாமல்
சுவையாய் அதனை ஏற்போமே
அம்மா அப்பா நினைவெல்லாம்
அருமை செல்வம் நம்முடைய
செம்மையான எதிர்காலம்
சிறப்புமிக்க புகழ் வாழ்க்கை
சின்னச் செடியே பின்னாளில்
செழித்துப் பெரிய மரமாகும்
சின்ன வயதுப் பழக்கம் தான்
திறமை என்று வளர்ந்திடுமே
நாளைய தலைவர் நாமென்று
நம்பும் பெரியோர் கனவதனை
நாளும் உணர்த்தும் கடமையென
நம்மை உயர்த்தும் வழி நடப்போம்

**வி.கீர்த்தனா,**
**சுதுமலை.**

## பறவைகள் பறப்பதன் இரகசியம்



'ஆர்க்டிக் டெர்ன்' போன் பறவைகள் ஒரு சீஸனில் வட துருவத்தில் இருந்து தென் துருவம் வரை பறக்குமாம்.

ஆனால் பறக்கும் போது அவை சக்தியை விரயம் செய்யாமல், அவ்வப்போது மிதந்து காற்றின் திசையைப் பயன்படுத்துவது மட்டுமன்றி, உடலின் வடிவத்தை காற்றின் வேகத்தை எதிர்க்கும் வகையில் 'ஏரோடைனமிக்' அக மாற்றி அமைக்குமாம்.

இது தன் ஜோடிப் பறவையைப் பார்த்ததும் உடலைத் தாழ்த்திக் கொண்டு தன் அலகில் மீனைக் கவ்விக் கொண்டு வந்து அதற்குப் பரிசாகக் கொடுக்குமாம். 'பெரிக்ரென் பால்கன்' என்ற கழுகுப் பறவை மணிக்கு 362 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் ஆற்றல் கொண்டது.

சா.ஜிந்துஜா.

## நாகரிகங்கள் உலகுக்கு அளித்துள்ள கொடைகள்

இந்துநதி நாகரிகம்:- நகர நிர்மாணம், வீட்டு நிர்மாணம், ஆபரணம்
மொசப்பத்தோமியா நாகரிகம்:- நிலவரைபட முறை, கணித முறை, நட்சத்திர விஞ்ஞானம், நாள்காட்டி
குவாங்கோ நாகரிகம்:- அலங்கார மட்பாண்டங்கள்
நைல்நதி நாகரிகம்:- பிரமிட் நிர்மாணத் தொழில்நுட்பம்
மாயா மற்றும் இன்கா நாகரிகம்:- நகர நிர்மாணம், சொக்லட், பானம்.

**பி.தரன்சிகா, தரம் 9,**
**வ.கனகராயன்குளம் ம.வி.**

## விடை தெரியுமா? 202

### உங்களுக்கும் பரிசுகள்

1. தனக்கென தாய்மொழி இல்லாத நாடு எது?
2. நவீன ஓவியங்களின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
3. உலகிலே முதன் முதல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு?
4. மனிதனுக்கு அடுத்த படியாக அறிவுத் திறன் கொண்ட விலங்கு எது?
5. எந்த நாட்டு முத்திரையில் அந்த நாட்டின் பெயர் இல்லை?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 23.03.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 200

1. அமெரிக்கா
2. பிரித்தானியா
3. முசோலினி
4. நகம், மயிர்
5. ஜெனிவாவில்


### வெற்றி பெற்றோர் விவரம் (200)

* சூ.பிரியதக்ஷி, தரம் –9சி, மெதடிஸ்த.பெ.உ.பா, பருத்தித்துறை
* சூ.விமலேசன், ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.




**நா.[illegible], தரம்–7பி,**
யாழ்ப்பாணக் கல்லூரி



**இ.[illegible], தரம்–2[illegible],**
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை




**ல.செந்தூரன், தரம்–10ஏ,**
யா/றோ.க.வித்தியாலயம்



**த.தேனுஷா, தரம்–9,**
யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தகம் போட்ட கதை

**எஸ்.எம்.கோபாலரத்தினம்**

## அந்த நாள் ஞாபகம்..



பண்டிதர் நெ.வை.செல்லையா என்ற பெருமகன் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜ பெருமாள் கோயில் ஆதீனப்பரம்பரையான பத்மசாலிச் செட்டிப்பிள்ளைகள் வம்சத்தைச் சேர்ந்தவர். 1878 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்று பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் மருகர் வித்துவ சிரோன் மணி ந.ச. பொன்னம்பலப்பிள்ளையவர்களிடம் சிறிது காலம் தமிழ் ஆராய்ச்சி நூல்கள் பற்றிய விளக்கங்களை கற்று மலேயா சென்றார். அங்கு ஈப்போக் கத்தில் திருவள்ளுவர் கலாசாலைத் தமிழ் ஆசிரியராக 1931 ஆம் ஆண்டு வரை பணியாற்றி கொழும்பு திரும்பி அங்கு ஸாஹிரா கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார். இக்காலத்தில் முதலியார் செ. இராசநாயகத்துடன் ஏற்பட்ட நட்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலை இருவரும் இணைந்து செயற்பட்டு அச்சிட்டு வெளியிட்டனர். யாழ்ப்பாணச் சரித்திரம் இரண்டாம் பாகம் தயாராகிக்கொண்டிருந்த நிலையில் முதலியார் இவ்வுலக வாழ்வின் தமது சரித்திரத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

பண்டிதர் செல்லையா பற்றிய வரலாறு முழுமையாக இதுவரை நூலுருவில் வெளியிடப்பட வில்லை மிகச் சமீபத்தில் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் நெ.வை. செல்லையா அவர்களின் தம்பியார் நெ.வை. கிருஷ்ணபிள்ளையின் மகன் வை.கி. வேதாசலம் பண்டிதர் பற்றியும் வேங்கடேச பெருமாள் ஆலய வரலாறு பற்றியும் மிகச் சுருக்கமாக சிறியதொரு நூலாக அவரது மகன் வே.விஜயகுமாரன் உதவியுடன் வெளியிட்டிருக்கிறார். எந்த வருடம், எந்த மாதத்தில் இச்சிறு நூல் வெளியிடப்பட்டதென்ற விவரம் இந்தநூலில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் நான் கூறியிருக்கும் தகவல் இச் சிறுநூலில் தொகுத்தேன் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆலயம் பற்றிய வரலாற்று விவரம் ஆலயச் சிறப்பு மலர் ஒன்றில் சீனிவாசக மாஸ்ரர் எழுதியிருந்தார். வேறு சில பிரசுரங்களை வாசித்துமிருக்கிறேன். இச்சிறு நூலைப் பார்க்கும் போது அந்தப் பிரசுரங்கள் எதுவும் இப்போது கோயிலில் இல்லையென்றே நினைக்கத் தோன்றுகிறது. அல்லது எனது " கோபுர தரிசனம்" ஒலி நாடாவுக்கு நடந்த கதையே அவற்றிற்கும் ஏற்பட்டதோ தெரியவில்லை .

எழுபதுகளின் தொடக்கத்தில் என்று நினைக்கிறேன், பண்டிதர் செல்லையாவின் மகன் அருணகிரிநாதன் ஒரு 'புரோட்டாக்கடை' க்கு சனிக் கிழமையன்று மதியம் நான் மதிய உணவுக்குச் செல்லுகையில், தம்பி கோபால்! உன்னுடன் இரண்டு நிமிஷம் ஒரு விஷயம் பேச வேண்டும் என்று என்னை நிறுத்தினார்.

தேரடியில் நாரந்தனை அல்லது சரவணை ஏதோ ஓர் இடத்திலிருந்து பல்லாண்டுகளாக ஒரு சமூகத்தைச் சேர்ந்த சில குடும்பங்கள் வந்து மூன்று நான்கு தினங்கள் முகாமில் சமையல் செய்து அன்னதானம் செய்து வெங்கடேசனைத் தரிசித்துச் செல்வது இன்றும் தொடர்ந்து வரும் நடைமுறை.

இவர்கள் முகாமிட்டுள்ள இடத்தில் தான் செந்தில் (அருணகிரிநாதனின் வீட்டுப் பெயர்) அவர்களும் நானும் நின்று பேசினோம். " இந்த அன்னதானத்தில் போய் சாப்பிடுவோமா?" என்று அவரைக் கேட்டேன். "எனக்கும் சாப்பிட விருப்பம் வா. போவம்" என்றார். நாங்கள் அங்கு நகர்ந்தோம், ஆனால் சாப்பாடு தயாராவதற்கு அதிக நேரமாகும் போல் தெரிந்தது. பசி இருவருக்கும் கடுமை. "இன்னொரு நேரம் பார்ப்ப போம்" என்று செந்தியரே சொன்னார்.

"என்ர அப்பாவின் நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளும் நிறையக்கிடக்கின்றன. அவற்றையெல்லாம் பார்த்து புத்தகம் போட வேண்டும். தம்பி இதற்கு உதவி செய்வதற்கு நீ தான் பொருத்தமான ஆள் என்று நினைத்து உன்னைச் சந்திக்க வேண்டுமென்று காத்திருந்தேன். இப்பதான் உன்னைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தது. உனக்கு எப்ப வசதியாக இருக்குமென்று யோசிச்சுச் சொல்லு. இரண்டு பேரும் இருந்து அவற்றையெல்லாம் பார்த்து பிரித்து "புத்தகம் போடுவதற்கு ஏற்பாடு செய்யலாம்" என்றார் இது நல்ல விஷயம் நான் உதவி செய்கிறேன்" என்று சொன்னேன்.

சில நாள்களின் பின் ஒரு நாள் மதியம் செந்தி மாரடைப்பால் அலுவலகத்திலேயே மயங்கி கீழே விழுந்து போய்ச் சேர்ந்து விட்டதாகச் செய்து கிடைத்தது. எனக்கு அது பெரும் கவலை. செந்தி ஓர் அரசாங்க ஊழியர், யாழ்.கச்சேரியில்தான் வேலை செய்தார் என்று நினைக்கிறேன்.

பண்டிதர் நெ.வை. செல்லையா அவர்கள் பற்றிய வரலாறும் அவரது பாடல்கள், படைப்புக்கள் யாவும் எப்போதோ நூல்களாக வெளிவந்திருக்க வேண்டும். முன்பு தான் கோயிலுக்கு வருமானம் குறைவு நூல்கள் வெளியிடும் வசதியிருக்கவில்லை என்று சொல்லலாம்

இப்பொழுது வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் இலங்கையில் அதிக வருமானம் உள்ள கோயில்கள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. வாழ்க்கையில் எந்தத் தொழிலும் செய்திராத பத்மசாலிச்செட்டிப் பிள்ளைகள் பரம்பரையென்ற ஒரே தகுதியுடன் கோயில் மடத்துக் கட்டடத்துக் காணிக்குள் அத்துமீறி 1960 ஆம் ஆண்டுக்குள் புகுந்து அந்தப் பரம்பரையின் பெயரால் பின்னர் அறங்காவலராகி இன்று கோயில் வருமானத்தில் மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பளமாக ஒருவர் பெற முடியுமென்றால் நெ. வை. செல்லையா என்ற பெரும் புலவரின் படைப்புக்களை கோயில் நிர்வாகமே ஏன் கோயில் செலவில் வெளியிட முடியாது. இதற்குரிய செலவை நூல் விற்பனையின் மூலம் கோயில் பெற்றுக் கொள்ளலாமே இப்பொழுது அறங்காவலர் சபையும் பதினைந்து பேர் கொண்ட கூட்டம் தானே!

இப்போதுள்ள அறங்காவலர் சபையின் செயற்பாடுகளும் இந்தச் சபைகளிலிருந்து பலர் புறக்கணிப்பிலிருப்பது பற்றியும் ஆலய நிர்வாகம் நிதி மோசடிகள் பற்றியும் ஆலயத்துக்கு திருப்பணி செய்து வரும் பொதுமக்கள் கேட்பதற்கு உரிமை உள்ளவர்கள். எனது வீடும் வீட்டிலிருந்த பொருட்களும் எப்படி ஏன் கொள்ளையடிக்கப்பட்டன என்பது பற்றியும் விசாரணை செய்யப்பட வேண்டும். இது பற்றி அடுத்த முறை விவரமாக எழுதுகிறேன்.

*(நினைவுகள் நீளும்)*

# ஏகலைவ வலி

புதைக்கப்பட்ட தேசம் அது
தொலைக்கப்பட்ட என் நண்பனை தேடிக் கொண்டிருக்கிறேன்
நெளிந்த மண்டையோடு ஒன்று
ஊகம் கூறி உதிர்ந்து போனது
அவனின் அடையாளங்கள் எல்லாம்
தேசத்துடன் சேர்ந்து புதைந்திருக்க வேண்டும்
இப்போது எல்லாம் அடிக்கடி
பூச்சியமாக்கப்படுகிறேன் நான்
வார்த்தைகளை எல்லாம் சுவாசிக்க வைத்தவன் அவன்
சுவடுகள் ஏதும் இன்றிய அவன் தொலைதல்
இறுக்குகிறது
உங்களில் யாரேனும்
புதையுண்ட தேசங்களில்
எதையேனும் அல்லது யாரையாவது
தொலைத்திருக்கிறீர்களா....?
இவன் தொலைக்கப்பட்டிருக்கிறான்
விரல் இழந்த ஏகலைவன் வலி இது!

*மதுஷா மாதங்கி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடைகளைத் தாண்டி மேலெழும் பெண்கள்



புதிய மிலேனியத்தில் பெண்ணிய நடவடிக்கைகள் உத்வேகம் அடைந்துள்ள நிலையில், பெண்களின் வாழ்வில் சாதகமான பல அம்சங்கள் நிறைவேறி வருகின்றன. எனினும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைவடைவதாக இல்லை. அதிலும் பாலியல் துஷ்பிரயோகங் களும், பாலியல் வன்முறைகளும் முன்னரை விட அதிகமாக தரிசனமாகின்றமை வேதனையளிக்கிறது.

சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பரவலாக்கப்பட்டு வரும் பெண்ணிய முயற்சிகள் திருப்திகரமானதாக உள்ளன. பெண்கள் மத்தியிலான விடுதலை அம்சங்களும், விளைவும் படிப்படியாக மேலோங்கி வருகின்றமை சாதகமான அம்சங்கள் எனினும், சமத்துவ அறுவடையை எட்டுவதில் பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கின்றது.

இன்றும் கூட பெண்களில் சிலர் தாம் அடிமைப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ளாது அறியாமை இருளில் மூழ்கியுள்ளார்கள். ஓரளவு புரிந்து கொண்டவர்கள் கூட அதிலிருந்து மீள்வதில் அக்கறை செலுத்தாமல் ஏனோ தானோ என்றிருக்கிறார்கள். பால் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான போராட்டத்தில் பின்னடைவுகளைச் சந்திக்கும் போது இன்னும் சிலர் சலித்துப் போகிறார்கள். போராட்டத்தில் சந்திக்கும் எதிர் விளைவுகளால் ஒதுங்கிப் போகின்ற பெண்கள் ஏராளம். எனினும் முன்குறிப்பிட்ட விடயங்களைத் துணிச்சலுடன் எதிர் கொண்டு மீள்வதன் மூலமே பெண் விடுதலையை எட்ட முடியும். பாரம்பரியமாக வரும் அடக்கு முறைகளுக்கு எதிராக மேலெழுந்து தடைகளைத் தாண்டும் போது, தரிசிக்கின்ற அடக்கு முறைகளினால், சில வலுமிக்க பெண்கள் கூட சோர்ந்து போகின்றார்கள். ஆனால் இவ்வாறு தளர்வுறும் போது ஆணாதிக்கம் மேலெழுந்து விடும். எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் சலிப்புறாது அவற்றை எதிர்கொண்டெழுந்து, ஆக்க பூர்வமாக சிந்தித்து மாற்று வழிகளைக் காண வேண்டும். இவ்வாறான ஆக்கபூர்வமான சிந்தனைக் கருவூலங்களும், மாற்று செயற்பாடுகளும், பின்னடைவுகளிலிருந்து பெண்ணை விடுவிப்பதற்கு உதவும். இதன் மூலம் பெண் விடுதலைப் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர முடியும்.

எந்த ஒரு போராட்டத்திலும் தொடர்ந்து எதிர்த்து நிற்றல் என்பது அசாத்தியமானது. இடையிடையே ஏற்படுத்தப்படும் சமரசமும், கருத்துப் பரிமாற்றமும், இலக்கை எட்டுவதற்கு வழிவகுக்கும். இன்றைய பெண் விடுதலைப் போராட்டத்தின் பல் பரிமாணங்களும் பகுத்தாராயப்பட்டே செயல் வடிவம் பெற வேண்டும். இதற்கு மிக ஆழமான அறிவு நிலைப்பட்ட விவாதங்களும், முன்னெடுப்பு முறைகளும், செயற்பாடுகளும் அவசியமாகும். பெண்களின் விடுதலையை ஈட்டும் முன்னெடுப்புக்களின் போது, ஆளுமை விருத்தியும், ஆற்றல் வெளிப்பாடும், பரவலான பங்களிப்பும் அவசியம். பெண்களை மாத்திரமன்றி ஆண்களையும் பங்குபற்றுவதில் இணைக்க வேண்டும். இந்தப் போராட்டம் என்பது ஆண் வர்க்கத்திற்கு எதிரானது அல்ல என்பதுவும், ஆண் ஆதிக்கத்துக்கு எதிரானது என்பதும் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

போராட்டம் என்றதும் வெறும் எதிர்ப்புணர்வும், எதிர்ச் செயற்பாடும் மாத்திரமல்லாத தில்லை. ஒடுக்கப்பட்டோர், தம்மை நிலை நிறுத்த முயல்வதும், தமக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதுமே போராட்ட இலக்காகும். பால் ரீதியிலான ஏற்றத்தாழ்வும், அதன் கூறான ஒடுக்கு முறையும், ஓர வஞ்சனையும் பெண்களில் ஏற்படுத்துகின்ற பின்னடைவைப் போக்குவதற்கே இன்று பெண்கள் எழுச்சியுற்று பரவலாக போர்க்கொடி உயர்த்துகிறார்கள். பெண் விடுதலை முன்னெடுப்பில் சமூக அனுபவங்களின் செயற்பாடுகள் இணைந்திருப்பதுடன் பால் வேறுபாடின்றி இருபாலாருக்கும் புரிதல், புரியவைத்தல் என்ற தளங்களிலேயே போராட்டச் செயற்பாடுகள் அமைய வேண்டும். ஆணாதிக்க சமூகத்தின் மனவுலகில், பெண்கள் பற்றிய கருத்துக்களில் பெரிய மாற்றங்கள் காணப்பட வேண்டிய கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆண்களின் மனதில் பாரம்பரிய ரீதியில் மூழ்கி வெளிப்படுகின்ற ஆணாதிக்க சிந்தனைகளும், கருத்துக்களும் உடைபட்டு, சீரமைக்கப்பட்டு ஆழமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சமூக அடுக்குகளிலுள்ள கட்டமைப்புக்களில் பெண்ணுக்குப் பாதகமாக உள்ள அம்சங்களை இனங்கண்டு அவற்றை நீக்க முயல வேண்டும். பெண் விடுதலைப் பயணத்தில் தடைகளைத் தாண்டி வெற்றிப் பயணத்தைத் தொடர வேண்டும்.

> “பெண்களின் விடுதலையை ஈட்டும் முன்னெடுப்புக்களின் போது, ஆளுமை விருத்தியும், ஆற்றல் வெளிப்பாடும், பரவலான பங்களிப்பும் அவசியம். பெண்களை மாத்திரமன்றி ஆண்களையும் பங்குபற்றுவதில் இணைக்க வேண்டும். இந்தப் போராட்டம் என்பது ஆண் வர்க்கத்திற்கு எதிரானது அல்ல என்பதுவும், ஆண் ஆதிக்கத்துக்கு எதிரானது என்பதும் தெளிவ படுத்தப் பட வேண்டும்.

# அவளும் ஒரு பெண்...



திருமதி வ.ஒளிவண்ணன்

அதிகாலை ஆரவாரமற்று அடங்கிக் கிடக்கிறது. மாசிப்பனி மூசிப் பெய்து இருளை இறுக்கிப் பிடித்த வண்ணம் உள்ளது. இறுகப் போர்த்துப் புரண்டு படுக்க மனம் துடிக்கின்றது முடியுமா? பெண் அல்லவா அவள். நான்கு மணி அலாரம் அடித்து ஓய்கிறது. துடிப்புடன் துள்ளி எழுந்தவள் தன் குல தெய்வம் அம்மனை மனதில் நினைத்துக் கொள்கிறாள். தன் சுயதேவைப் பூர்த்திகளைச் செய்து முடித்தவள் அடுப்பினை அதிரடியாக மூட்டுகிறாள். எரியும் நெருப்புப்போல் எண்ணங்களும் செயற்படுகின்ற குழந்தைகள் அறையை எட்டிப் பார்க்கிறாள். ஆழ்ந்து தூங்கும் அவர்களை எழுப்ப இளகிய மனம் இடம்தரவில்லை. இருப்பினும் தேநீர் ஊற்றிய வண்ணம் அன்பான குரலில் எழுப்புகின்றாள். மறுக்கும் பட்சத்தில் அதிகார ஒலியுடன் பிள்ளைகளை எழுப்புகின்றாள். அந்த ஒலியும் போடும் ஆரவாரச் சத்தமும் கேட்டு சினந்த வண்ணம் கணவரும் எழும்புகின்றார். தேநீர் சுவைத்த வண்ணம் அவரவர் தன் தன் வேலையில் ஈடுபட காலை உணவு தயாரிக்கும் வேலையில் முனைகிறாள். அது கூட இரவு படுக்கையில் சிந்தித்ததுதான்.

''கொண்டவர்க்கெது பிடிக்கும் குழந்தைகள் எதை விரும்பும் தண்டூன்றி நடக்கும் மாமன் மாமிக்கு தக்கதென்ன'' என்று அவரவர்க்கு ஏற்ற உணவைத் தயாரித்து உணவுப் பெட்டிகளில் போடுவதுடன் கணவனும் பிள்ளைகளும் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக கூப்பிடும் ஒவ்வொரு குரல்களுக்கும் ஓடிப்போய் அந்தத் தேவைகளை நிறைவு செய்கின்றாள். பம்பரமாய் சுழலுகின்றாள். காலையில் ஊற்றிய தேநீர் ஞாபகம் வர ஆறிய தேநீரை மடக்கென குடித்துவிட்டு சமைத்த உணவை, ஊட்டியாவது விடும் துடிப்புடன் பிள்ளைகளை அணுகுகின்றாள். கணவர் அலுவலகமும் பிள்ளைகள் பாடசாலையும் செல்ல வேண்டிய ஒழுங்குகளை செவ்வன செய்து முடித்தவள். நிமிர்ந்து நேரத்தைப் பார்க்கிறாள். 7.40 தன்னை நினைக்கின்றாள். ஓடிப்போய் அவசரக்குளியல் அவசர வெளிக்கிடுகை..... இரவு நித்திரை விழித்து ஆக்கிய பாடசாலைக்குத் தேவையான குறிப்புகள், பொருள்களை அள்ளி எடுத்தவள். வீட்டைப் பூட்டிக் கொண்டு விரைகின்றாள். பாடசாலையை அணுகுகிறாள். புதிய உலகிற்கு வந்தவள் போல் பாடசாலை நினைவில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துகின்றாள். பாடசாலை முடித்து வேகமாக வீடு வந்தவள் போட்டது போட்டபடி கிடக்கும் வீட்டைச் சீர்செய்து கூட்டித்துடைப்பதுடன் மதிய உணவிற்காக விட்டுச் சென்ற சில வேலைகளை முடித்து வைக்கிறாள். காலையில் குளித்து விட்டுப் போட்ட அனைவரது உடுப்புகளையும் தோய்த்து உலரவிட்டு நாளைய தேவைக்கான உடுப்புகளையும் ஆயத்தம் செய்கின்றாள்.

வளவு கூட்டி பூங்கன்றுகளுக்குத் தேவையான நீரையும் ஊற்றுகின்றாள். மதிய உணவை வழங்கி ரியூசன் சென்றர்களுக்குப் பிள்ளைகள் போக, கடைக்குச் சென்று தேவையான பொருள்களையும் வாங்கி வருகின்றாள். இரவு 6 மணி வீடு களேபரம்

கணவன் பிள்ளைகள் ஆரவாரம் சில்வற்றில் பங்கெடுத்தும் சிலவற்றில் பங்கெடுக்காதும் இரவு உணவு தயாரிப்பில் ஈடுபடுகின்றாள்.

வீடு முழுவதும் சாம்பிராணியும் சந்தனக்குச்சு வாசம் கமழ அனைவரும் ஆறுதலாக அமரும் நேரம். இத்தனைக்கு மத்தியில் அவள் மனம் மகிழ்கின்றது. காரணம் இரவு உணவு பரிமாறும் போது குழந்தைகளும் கேட்பார்கள்.

அம்மா உங்களுக்கு இருக்கா நீங்களும் சாப்பிடுங்கள் என்று, கணவனும் கேட்பார் நீ சாப்பிட்டியா? சாப்பிடு? என்று அப்பொழுதாவது அவர்கள் சிந்திக்கின்றார்கள். அந்தப் பாச வார்த்தைக்காக அவள் இவை மட்டுமல்ல இன்னும் செய்வாள் அவள்.

> ''கொண்டவர்க்கெது பிடிக்கும் குழந்தைகள் எதை விரும்பும் தண்டுன்றி நடக்கும் மாமன் மாமிக்கு தக்கதென்ன'' என்று அவரவர்க்கு ஏற்ற உணவைத் தயாரித்து உணவுப் பெட்டி களில் போடுவதுடன் கணவனும் பிள்ளைகளும் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக கூப்பிடும் ஒவ்வொரு குரல்களுக்கும் ஓடிப்போய் அந்தத்ஷ தேவைகளை நிறைவுசெய்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....




## உறவுகளை மேம்படுத்த 10 வழிகள்

**முன்னிலைப்படுத்துங்கள் :-** உறவுகள் தான் மிக முக்கியமானது. நமக்கு முக்கியமான உறவுகளுக்கு முன் வேலை, செதி, விருப்பங்கள் எல்லாம் இரண்டாம் பட்சம் தான்.

**சுதந்திரம் கொடுங்கள் :-** மற்றவர்களுக்குத் தனிப்பட்ட விடயங்களில் சுதந்திரம் கொடுப்பதென்பது மிக முக்கியமானது. ஒத்த ஆர்வமுடையவர்களை நண்பர்களாகக் கொண்டிருப்பது நல்லது. நன்றாகப் பழகிய பிறகுதான் ஒருவரைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பிறகுதான் நட்பும் வலுப்படும்.

**பரஸ்பர நம்பிக்கை :-** சந்தேகம் உறவுகளைக் கெடுக்கும். திறந்த மனத்துடன் இருங்கள். ஒருவரை ஒருவர் நம்புங்கள். நேர்மையாகவும் இருங்கள். உங்களின் அக்கறைகள், கருத்து வேறுபாடுகளைப் பற்றியும் கூடப் பேசுங்கள்.

**மதித்தல் :-** நீங்கள் செய்யும் வேலையின் மூலம் நண்பர் செய்யும் வேலையை விட இரண்டு மடங்கு சம்பாதிக்கிறீர்கள் என்றால் உங்கள் வேலை முக்கியமானது என்று அர்த்தமில்லை. நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான திறமை இருக்கும். வெவ்வேறு விதமான இலக்குகளும் இருக்கும். அதனால் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும்.

**மன்னிப்பு :-** அனைவருமே தவறு செய்பவர்கள் தான். அதற்காக அற்புதமான உறவைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**அதிக நேரம் எடுத்துக்கொள்ளுதல்:-** வருடங்கள் போகப் போக நாமும் மாறுகிறோம். அதனால் உங்கள் வேலையில் புதிய யோசனைகளையும், செயல்பாடுகளையும் புகுத்த வேண்டும். பழையவற்றைப் பிடித்துக் கொண்டு தொங்கக் கூடாது. தேவையெனில் புதிய முறைகளை அமுல்படுத்துங்கள். தயங்கக்கூடாது.

**வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்:-** தவறுகள் செய்தால், உடனே ஆமாம் என ஒத்துக்கொள்ளுங்கள். அதை மறைக்க முயன்றால் உறவுகள் பாதிக்கப்படும். தவறு செய்துவிட்டேன் என்று கூறி, மன்னிப்புக் கோருவது சிறந்தது.

**முக்கியமான நாள்கள் நினைவிருக்கட்டும்:-** நண்பர்களின் பிறந்த நாள், திருமண நாள் போன்ற முக்கியமான திகதிகளை மறக்காதீர்கள். மறந்துபோகும் என நினைத்தால் அதை எழுதி வையுங்கள்.

**அக்கறையை வெளிப்படுத்துங்கள்:-** மற்றவர்களைச் சாதாரணமாக எடுத்துக் கொள்வதென்பது எளிதான விடயம். அதுவும் பல வருடங்கள் ஒன்றாக இருப்பதால், அது இன்னும் எளிதானதாகிவிடும். பழைய நண்பர்கள் தங்களுக்குக்கிடையே உள்ள அன்பை, அக்கறையை அடிக்கடி வெளிப்படுத்திக் கொள்வதில்லை. ஆனால் அவ்வாறு இருக்கக் கூடாது. அவர் எவ்வளவு முக்கியம் என்பதை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

*உறவைச் சரிசெய்தல்-* எல்லா உறவுகளிலும் மேடு, பள்ளம் இருக்கத்தான் செய்யும். ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்யும்போதுதான் விடயம் ரொம்ப மோசமாகிவிடும். அதனால் மனம் விட்டுப் பேசி வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டும். தெளிவாகப் பேசி விட்டால் பிரச்சினையே இருக்காது. மனம் விட்டுப் பேசினால் பிரச்சினை பெரிதாகி விடுமோ என்று பயப்படுவதை நிறுத்துங்கள். முன் தீர்மானம் இல்லாத, திறந்த மனதுடன் பேசுவது பிரச்சினையைச் சரி செய்ய உதவும். சில சமயங்களில் பேசுவதை விட, எழுதுவது எளிதானதாக இருக்கும். மின்னஞ்சல் கூட அனுப்பலாம்.

**எல்லா உறவுகளிலும் மேடு, பள்ளம் இருக்கத்தான் செய்யும். ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்யும் போதுதான் விடயம் ரொம்ப மோசமாகிவிடும். அதனால் மனம் விட்டுப் பேசி வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டும். தெளிவாகப் பேசி விட்டால் பிரச்சினையே இருக்காது. மனம் விட்டுப் பேசினால் பிரச்சினை பெரிதாகி விடுமோ என்று பயப்படுவதை நிறுத்துங்கள்.**

## குருவியின் கனவுகள்

புலோலியூர் வேல்நந்தன்

அந்தச்
சின்னக் குருவியின்
பென்னம் பெரிய
பறப்புக்களை
கருவறுக்க நினைத்த
கழுகுப் பார்வைகளில்
கருகிப்போயின
குருவியின் கனவுகள்
இன்றும்
அதே கழுகுகள்
அந்தக் குருவியின்
உறவுகளில்
பாசம் கொண்டு
நடித்திட
பாவப்பட்ட குருவிகள்
கழுகுகள்
தரப்போவதாய்
நினைக்கும்
சுதந்திரத்திற்காய்
மீண்டும்
கனவு காண்கின்றன.




## நினைவுகளின் கொழுத்துகையில்

கனவுகள் விதைத்த
நிலத்தின் வெடிப்பில்
சிதறிப்போன
பயிர்களின்
குவியற் காட்சிகளாய்
மீண்டும்
மொழிபெயர்க்கப்படும்
எங்கள்
துயரத்தின் நாட்கள்
காலக் கடப்பொன்றின்
கனவுகளாய்
மீளும் நினைவுகள்
அடிக்கடி நிகழும்
நினைவுகளின்
கொழுத்துகையில்
ஒளிர மறுக்கிறது
எங்கள் எதிர்காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 257



அனுப்புபவர் பெயர்:................................................

விலாசம்:................................................

................................................

கையொப்பம்:................................................

### இடமிருந்து வலம்

1. பிறப்பு நிகழ்வு
4. சமய
6. (மொட்டை) வழி(த்தல்)
7. இதற்கு அடைக்கும் தாள் உண்டோ?
8. விலக்குதல்
11. மேரு
12. பெரியவர்
13. போக அல்ல
14. மனிதன் போன்ற மேல் உயிர்களை ஒருவகையிலும் ஏனையவற்றை மறுவகையிலும் வகுக்கும் பிரிவு
15. தமயந்தியை மறந்தவன்
16. சிங்கம்
17. தெரியாமல் அபகரி
18. பாணம், தனு- இரண்டும் சேர வருவது
20. நசி.
22. துவானத்துளி
23. காப்பியப் பெண் பாத்திரம்

### மேலிருந்து கீழ்

1. அமைச்சர்களின் சிரேஷ்டர்
2. யுத்தம்
3. போகும் பாதையில் உதவி
4. கணவன்
5. மனைவியை இழந்தவன்
7. இரவு
9. பெறுமதி
10. நிலம்
13. அமாவாசைக்குப் பின்னரான சந்திரன்
14. கெட்டுப்போதல்/ மாற்றம்
15. புதிய
16. சமயலறையில் அரைப்பதற்கானது
17. படிப்புடன் சம்பந்தப்பட்ட துறை
18. ஒன்றைச் சுட்டும் சொல்
19. கடவுச் சீட்டில் பெறப்படும் பயண அனுமதிக்கு இப்படிப் பெயர்
21. புன்னகை செய்

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 255 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அஞ்ஞாதவாசம் (6) பலவிதம் (8) தாபகம் (10) கபோதி (12) தினம் (13) சம்சாரி (14) கோடை (15) முகமன் (17) பகுதி (19) துட்டு (20) தர (15) ரம்பம் (16) சதாம் (18) அம்மி (20)விலை (21)குடி (22) கண்ணியம்.

**மேலிருந்து கீழ்**

(1) அந்தாதி (2) ஞாபகம் (3) தலம் (4) வாவி (5) சதகம் (7) மாதிரி (9) பனங்கட்டி (11) போசாக்கு (13)சடை (14)கோன் (15) முதுகு(16) மடு (17) பரணி (18) திறம் (20) தண்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 257**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (27.03.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.257 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 31.03.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 254 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

**த.ராகவி,**
ப/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை.

**2 ஆம் பரிசு**

**த.ராஜராமணன்,**
இல.116, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

**3 ஆம் பரிசு**

**பா.கேதீஸ்வரி,**
கிருஷ்ணா நகர், முழங்காவில்.

**4 ஆம் பரிசு**

**கா.வேலுப்பிள்ளை,**
காயத்திரி ஜுவலரி, இல.38, மில் வீதி, வவுனியா.

**5 ஆம் பரிசு**

**நா.தெட்சணாமூர்த்தி,**
இல.145/3 பிரப்பங்குளம் ரோட், யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**தி.புவனேஸ்,**
வேரற்கேணி கந்தசாமி கோவிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**ச.நிலானி,**
'கந்தன் அருள்', இருபாலை, கோப்பாய்.

**திருமதி த.ஜெயகரன்,**
3 ஆம் ஒழுங்கை, இல.16 8/1 பண்டாரிகுளம், வவுனியா.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலத்திரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

# கண்முன்னே...



தூரத்தில் ஆட்காட்டிகள் குரல்களில்
விழித்துக்கொள்கிறது மனது
இடிந்த கட்டடங்களும் தலையில்லா மரங்களும்
நடந்ததுக்கு சாட்சியாய்
ஆங்காங்கே

பாதிச்சாமத்தில் தொலைவில்
நாய்களின் ஊளையிடலில்
மனதுக்குள்ளும் சப்பாத்துக்கால்களின் சத்தமும்
விளங்காத பாஷைகளும் மெதுவாய்

எல்லாம் இயல்பாய் போவது போல தெரிந்தாலும்
எங்கோ ஒரு மூலையில்
நடந்தவைகள் எல்லாம்
ஆறாத ரணமாக வலிக்கின்றது

எழுதுவதற்கு எவ்வளவோ இருந்தும்
எழுத நினைத்தாலும்
என் கண்முன்னே
இவை மட்டும்தான்
எப்போதும் நீள்கிறது.....

**எஸ்,மதியின் 2 கவிதைகள்**

# தலைகீழ் விம்பங்கள்



கறைபடிந்தபடியே வீசுகிறது காற்று
நேற்றைய மேகங்களை சுமந்தபடி
இழப்புகள் மீது மாக்கோலம் போட்டு
மாவிலைகள் தொங்கவிடப்பட்டுள்ளது
இரத்தம் கலந்த நிலத்தை மறைத்து
கார்பெற் வீதிகள் நீள்கிறது

எதை நினைத்து அழுவது
இழந்ததற்காகவா?
மறுக்கப்பட்டதற்க்காகவா?
காரணங்கள் தெளிவாக் சொல்ல
வார்த்தைகளில்லை என்னிடம்
சூனியத்தை வெறிக்கிறது விழிகள்
எதைஎதையோ ஞாபகப்படுத்துகிறது
இடியும் மின்னலும்

எதிரியான
என் நண்பனின் தோளில் கைபோடும் போதும்
மனது கடினப்படுகிறது
நரம்புகள் இறுகிறது
கறுப்பு வெள்ளைப் படமாய்
ஏதோ கண்முன்னே தோன்றி மறைகிறது
நிஜங்கள் என்னை சுடுகிறது
மறக்கப்பட்டவைகள் பற்றியே
மனது அசைபோடுகிறது

கால்கள் மேற்கு நோக்கியே
நடக்க தலைப்படுகிறது
இழப்புகளை நினைத்து
புலம்புகிறது இதயம்
கடினப்படுகிறது கண்கள் மீண்டும்.................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

17.03.2013 முதல் 23.03.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- நண்பர், உறவினர்களிடம் முன் வேடிக்கையாகக் கேட்ட உதவி, எதிர்பாராமல் கிடைக்கும். புத்திரர் திறமை வளர்ந்து படிப்பில் முன்னேற்றம் அடைவர். இடையூறு அணுகாத, சுமுகவாழ்வு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக ஈடுபாடு கொள்வீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உத்தியோகத்தர் சிறப்பாகச் செயற்பட்டு, நற்பெயர் பெறுவர். மாணவர்கள், கவனமுடன் படித்து நல்ல தேர்ச்சி விகிதம் பெறுவர்.

**இடபம்**- தகுந்த அக்கறையுடன் செயற்பட்டு, அதிக பணவரவும், புகழும் பெறுவீர்கள். குடும்பத்தின் அத்தியாவசியத் தேவையை, தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி, உபரி பணவரவு பெறுகிற நன்னிலை உண்டு. பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, ஊக்கத்தொகை கிடைக்கும். மாணவர்கள் நல்ல சூழ்நிலை அமைந்து கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்**- செயல்களில் சாதனை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன், நடந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில் வகையில், பிறருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதால் மட்டுமே நற்பெயரும், பணவரவும் சீரான அளவில் இருக்கும். பணியாளர் அதிக பொறுப்பு உணர்வுடன் செயற்படுவது அவசியம். மாணவர்கள் அதிக பயிற்சியினால் மட்டுமே, நல்ல தேர்ச்சியை அடையமுடியும்.

**கடகம்**- வாழ்வில் கூடுதல் வளம் பெற, தேவையான முன் முயற்சிகளை மேற்கொள்வீர்கள். தடைக்கற்கள் விலகி, நம்பிக்கை தரும் வகையில், புதிய வழிவகை உருவாகும். உடன் பிறந்தவர்களால் உதவி உண்டு. நிலுவைப் பணக்கடன் செலுத்தி, நிர்ப்பந்த சூழ்நிலை வராமல் தவிர்ப்பீர்கள். இல்லறத்துணை உங்கள் எண்ணங்களை புரிந்து, உதவிக்கரமாகச் செயற்படுவார். தொழில், வியாபாரத்தில் முயற்சிகளுக்கேற்ப அபிவிருத்தியும், உபரி பணவரவும் கிடைக்கும். உத்தியோகத்தர் நிர்வாக நடைமுறை சிறக்க, சிறந்த கருத்துக்களைப் பதிவு செய்வர்.

**சிங்கம்**-கடந்த தினங்களில், நீங்கள் கஷ்டப்பட்டு நிறைவேற்றிய நல்ல செயல்களுக்கான பலன் தாமாகத் தேடி வரும். உறவினர், நண்பர் மனமுவந்து வாழ்த்துவர். வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதிகளை அளவுடன் செயற்படுத்துவீர்கள். இல்லறத்துணையின் நியாயமான கருத்துக்களை ஏற்று நடப்பதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தன்மைகளை கவனமுடன் பாதுகாப்பது அவசியம். தொழில் நுட்ப பணியாளர், திறமைவளர்க்க கூடுதல் பயிற்சி மேற்கொள்வர். மாணவர்கள், படிப்பு, விளையாட்டு பயிற்சிகளில் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும்.

**கன்னி**-மனதில் தெய்வீக சிந்தனை வளரும். திட்டமிட்ட பணிகளை, ஆர்வமுடன் செயல்படுத்துவீர்கள். பணவரவும், நன்மையும் திருப்திகரமான அளவில் கிடைக்கும். உங்களிடம் அதிருப்தி எண்ணம் கொண்டவர்களிடம், நிதானமாகப் பேசுவது நல்லது. இல்லறத்துணையிடம், குடும்பத்தின் பழைய விவகாரம் குறித்த சர்ச்சையைத் தவிருங்கள். தொழில், வியாபாரம் செழித்து நன்மதிப்பு உருவாகும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு, சலுகைப் பயன் உண்டு. மாணவர்கள், நல்ல சூழ்நிலை அமைந்து, கவனமுடன் படித்து சிறந்த தேரச்சி பெறுவர்.

**துலாம்**- உங்களின் நற்செயல் திறன், கண்டு சிலர் பொறாமையுடன் பேசுகிற சூழ்நிலையை எதிர்கொள்வீர்கள். அவர்களிடம் விலகுவதால், காலவிரயம் ஏற்படாமல் மன அமைதியைப் பாதுகாக்கலாம். நிலுவைப்பணம் கிடைக்கும். இல்லறத்துணை, உங்களின் சிரமம் குறைய ஆலோசனை, உதவி வழங்குவார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற மந்த நிலையை, மாற்று உபாயத்தால் சரிசெய்வீர்கள். உத்தியோகத்தர், நிர்வாகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற கூடுதல் கவனம் கொள்வர். மாணவர்கள் கல்வியில் செலுத்துதல் அவசியம்.


**விருச்சிகம்**- சந்தோஷ எண்ணம் மனதை உற்சாகப்படுத்தும். ஓரளவு சமூகப்பணியில் ஈடுபடுவீர்கள். பணக்கடன் கொஞ்சம் செலுத்துவீர்கள். இல்லறத்துணை, சாந்த குணத்துடன் நடந்து, உங்களின் பாராட்டு பெறுவார். பணியாளர்களுக்கு, சிறியளவில் சலுகைப்பயன் கிடைக்கும். பெண்கள், குடும்ப உறுப்பினர்களை உபசரிப்பதில், அதிக அக்கறை கொள்வர். மாணவர்கள், படிப்புக்கான பணவசதி கிடைத்து மனதில் நிம்மதி அடைவர்.

**தனுசு** - பிறர் மனம் அறிந்து பேசி நற்பெயர் பெறுவீர்கள். எதிர்மனப்பாங்கு உள்ளவரும், உங்களின் பொறுமைக் குணத்தை பார்த்து வியந்திடுவர். உடல்நலத்தில் கூடுதல் கவனம் கொள்வது நல்லது. இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களிடம், பகைமை வராத அளவிற்கு செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரம் செழித்து எதிர்பார்த்த பணவரவைத் தரும். மாணவர்கள், உரிய பயிற்சியினால் கல்வியில் தேர்ச்சி பெறுவர்.

**மகரம்** - தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். இல்லறத்துணை, உங்களின் அருமை, பெருமையை உறவினர்களிடம் சொல்லி பெருமிதம் கொள்வார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி செய்து, பணப்பரிவர்த்தனையை அதிகரிப்பீர்கள். மாணவர்கள், நன்றாக படித்து ஆசிரியர், பெற்றோரிடம் பாராட்டு பெறுவர்.

**கும்பம்** -வாழ்வியல் தேவைகளில், பொறுப்பை உணர்ந்து செயற்பட்டு, சிரம சூழ்நிலையை சரிசெய்வீர்கள். தவிர்க்க இயலாத அளவில், புதிய செலவினம் உருவாகும். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து உங்கள் மனதில் கூடுதல் நம்பிக்கை உருவாக்குவார். தொழில், வியாபாரத்தில் சராசரி இலக்கை அடைய அதிக முயற்சியும், உழைப்பும் உதவும். மாணவர்கள், சக மாணவர்களின் உதவியால் படிப்பில் ஏற்படுகிற சந்தேகத்தை நிவர்த்தி செய்வர்.

**மீனம்**- எந்த செயலையும் நன்கு பரிசீலித்துச் செய்வதால் மட்டுமே, எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். உங்களின் பொன்னான நேரத்தை வீணாக்கி பேசுபவரிடம் விலகுவதால் பலவிதமான நன்மை கிடைக்கும். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க, அர்ப்பணிப்பு உணர்வுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். மாணவர்கள், ஒருமுகத் தன்மையுடன் படிப்பதால் மட்டுமே, தரத்தேர்ச்சி சீரான அளவில் கிடைக்கும்.



# காதலித்துப்பார்.

காதலித்துப் பார்....
உள்ளம் கள்ளத்தனமறியும்
காட்டிக் கொடுப்புகளை
வெட்டிக் கொள்ளும்- உன்
விழி வாழிகள்...
இதயம் வெடி சுமந்து
வீற்றிருக்கும்
எல்லை தாண்டும் எதிரியை
குறிபார்த்து
தன் மானம் தளிர்க்கும்
தளராத நம்பிக்கை
துணிவு கொள்ளும்
காதலித்துப்பார்...
நீயே உன்
சுயநலத்தை சுட்டெரிப்பாய்
தீண்ட முடியாத
தியாகி தீனி போடத் துணியும்
பாதங்கள்...
போலி வேஷங்களுக்கும்
பொய்மைக்கும் புரளிக்கும்
முடிவு கட்ட முடிவெடுக்கும்
பேராசைகளுக்கு சிறை கட்டி
பணத்துக்கும் பதவிக்கும்
ஆகாத அத்தனைக்கும்
போகாதிருக்க உன்னையே
புடம் போடும் உன் சிந்தனை...
காதலித்துப் பார்...
வேகாமல்
விளைந்து கொள்ளும்
வீணானவைகளை
உன் வியர்வை எரிக்கும்
மரியாதைக்கும் மாட்சிமைக்கும்
கௌரவத்திற்கும்
உன்னுயிர் உரிமை கூறும்
பட்டறிவுத் தூண்களில்
பலமாக நிற்பாய்
வழி காட்டி வடமேடு
வலம் வரும் உனக்கு
தோழமைகள் துணை கொள்ளும்
காதலித்துப்பார்...
உயிரும் உடலும் குருதியும்
உன்னைப் பிழிந்தாலும் - நீ
பரிவு காட்டுவாய்
உறவுகளிடம் இருக்கின்ற பசி
உணவை விட
உன்னத மானதால்
உன்னை மறந்த உழைப்பு
உன்னிடமிருக்கும்
நித்திரையிலும் நீண்ட தூரம் பயணிப்பாய்
அத்திவாரம் போடுவதற்கு
சித்தத்தை துளைப்பாய்
காதலித்துப்பார்...
உன் நேச
தமிழ் மண்ணை.

கவிஞர் த.பருத்திதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடலுக்கும் பாடலுக்கும் அணிசெய்யும் அருங்கலைஞர்

## லயஞானக் கலாநிதி வி.ஜம்புநாதன்

■ வைரவிளான் தவமைந்தன்

தமிழர் முழவியற் கலைகளுள் நுட்பமான, இனிமையான கருவியாக விளங்குவது தண்ணுமை என அழைக்கப்படும் மிருதங்கம் ஆகும். இசை, நடன அரங்குகளில் பிரதான தோற்கருவியாகவும் இதுவே அணி செய்கின்றது. எனினும் வாசிப்பு முறையில் இசைக் கச்சேரிகளிலும் நாட்டிய நிகழ்வுகளிலும் தனித்துவமான அளிக்கை முறைமைகளைக் கொண்டதாகவே இந்தக் கருவியானது பயன்படுத்தப்படுகின்றது.

ஈழத்தின் தமிழிசைக் கலைஞர்களுள் அதிகமானவர்கள் மிருதங்கக் கலைஞர்களே. எனினும் மிருதங்கத்தை நாதசுகத்துடன் வாசிப்போரை அரிதாகவே காணமுடிகிறது. அதைவிட எவரோ ஒருவர் வாசித்த ஒலிப்பதிவிற்குக் கையசைத்துத் தலையசைத்து முகபாவம் காட்டி மத்தளக் கலையின் மேதைபோல் மேடையில் நடித்து விருதுகளிற்காகத் தவம் கிடக்கின்ற தற்புகழ்ச்சியின் உச்சத்தைத் தொட்ட முழவியல் வாரிதிகளையும் நாம் தற்காலத்தில் காணவேண்டி இருப்பது வேதனைக்குரியதே.

எனினும் மிருதங்க ஆற்றுகைக்குரிய விதிமுறைகள் அனைத்தையும் முழுமையாகக் கற்றுணர்ந்த மிருதங்கக் கலைஞராகவும் ஜதிலயாலய என்னும் இசைக் கல்லூரியின் அதிபராகவும் கொழும்பு கட்புல அரங்கேற்றுக் கலைகள் பல்கலைக் கழகத்தின் மிருதங்கப் போதனாசிரியராகவும் முந்நூற்று ஐம்பதிற்கும் அதிகமான நடன அரங்கேற்றங்களில் மிருதங்கம் வாசித்துச் சாதனை படைத்த விற்பன்னராகவும் எண்ணற்ற மாணவர்களை அரங்கேற்றியும் கலாவித்தகர்களாக உருவாக்கியும் ஆசிரியத் துறையில் தடம் பதித்த மேதையாகவும் கடந்த முப்பது ஆண்டுகளிற்கும் மேலாகக் கலைப்பணியாற்றி வருபவர் இசைக்கலைமணி வி.ஜம்புநாதன்.

மறைந்த விஸ்வநாதஐயர் - அர்த்தநாரீஸ்வரியம்மா தம்பதிகளின் மகனாக 20.12.1958 இல் தெல்லிப்பழையில் இவர் பிறந்தார். தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை, தெல்லி.மகாஜனாக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் தனது தந்தையிடமே வாய்ப்பாட்டு இசையைக் கற்றுக் கொண்டார்.

இவரது தந்தையாரால் நிர்வகிக்கப்பட்டு வந்த யாழ்.இரசிக ரஞ்சன சபாவில் மிருதங்க மேதை வே.அம்பலவாணர், சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா போன்றோரிடம் தனது ஒன்பதாவது வயதில் இருந்து மிருதங்கக் கலையைக் கற்று, அதன்பின்னர் தனிப்பட்ட முறையில் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவிடம் பல ஆண்டுகள் கற்று 1974இல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புற அரங்கேற்றம் கண்டார்.

மிருதங்கக் கலைஞராக மிக விரைவில் வளர்ச்சியடைந்த இவர் 1977இல் வட இலங்கைச் சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டத்தைப் பெற்றதுடன் இராமநாதன் நுண்கலைக் கழகத்திலும் இணைந்து நான்கு ஆண்டுகள் கற்று இசைக் கலைமணி எனும் டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இக்காலத்தில் மிருதங்கப் பேராசான் சிதம்பரம் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களிடம் கற்றுத் தனது லய ஞானத்தையும் தண்ணுமையின் நுட்பங்களையும் ஆழமாகக் கற்றுணர்ந்து நிறைவான மிருதங்கக் கலைஞராக யாழ்ப்பாணத்தில் அந்தக் காலத்தில் நடைபெற்று வந்த இசை விழாக்களில் பெரும் புகழ் பெற்று வந்தார்.




கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவராக இருந்த போதும் கட்டடப் பொறியியல் மேற்பார்வையாளராக 1984இல் சவூதி அரேபியாவிலும் 1994இல் இருந்து இலங்கைப் பொறியியல் நிறுவனத்திலும் அதிகாரியாகவும் பொருள் கொள்வனவு மேற்பார்வையாளராகவும் பணியாற்றி 2002இல் ஓய்வு பெற்றவர்.

ஈழத்தின் முதுகலைஞர்களான சண்முக.ராகவன், ஏ.கே.கருணாகரன், எஸ்.பத்மலிங்கம், திலகநாயகம் போல், பூமணி இராஜரட்ணம், பொன்.சுந்தரலிங்கம், கிருஷ்ணமூர்த்தி ஐயர் போன்றவர்களின் இசையரங்குகளிலும் நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகளின் இசைச் சொற்பொழிவுகளிலும் மிருதங்கக் கலைஞராக அணி செய்த இவர் 1979இல் இணுவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் பத்து நாட்கள் தொடராக நடைபெற்ற திருமுருக கிருபானந்த வாரியாரின் இசைச் சொற்பொழிவிலும் அணிசெய் கலைஞராகப் பணியாற்றி வாரியாரின் அன்பையும் மதிப்பையும் பெற்றுக் கொண்டவர்.


1978இல் கலைஞர் வேல்.ஆனந்தனின் கதகளி நடன நிகழ்வில் முதல் முறையாக மிருதங்கத்தை இசைத்து நாட்டிய அரங்குகளிலும் தனது திறன்களை வெளிப்படுத்தி வந்தார். இனிமையாகவும் பாடலை அனுசரித்தும் நடனக் கோலங்களை விளங்கியும் ஏனைய கலைஞர்களை அனுசரித்தும் இராக பாவத்தை மனதில் நிறுத்தியும் மிருதங்கத்தை வாசிக்கும் இயல்புடைய இவர் தமிழ்நாட்டின் சிதம்பரம் நாட்டியாஞ்சலி நிகழ்விலும் நோர்வேயில் நடைபெற்ற கலை விழாவிலும் கலந்து சிறப்பித்தமை போற்றுதற்குரியதாகும்.

கடந்த சில ஆண்டுகளாகக் கொழும்பில் வசித்து வரும் இவர் பல நூற்றுக் கணக்கான பரதநாட்டிய அரங்கேற்றங்களில் மிருதங்கம் வாசித்ததுடன் நாட்டியநாடகங்கள் வானொலி, தொலைக்காட்சி நிகழ்வுகளிலும் முதன்மையான மிருதங்கக் கலைஞராக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார்.

எனது குருநாதர் க.ப.சின்னராசா அவர்களைப் போல் சிறந்தவொரு ஆசிரியரை என்னால் எங்குமே காண முடியாது. அவர், மாணவரின் தரமறிந்து கற்பிப்பதிலும் கலைஞர்களின் குணமறிந்தும் பழகுவதிலும் தன்னிகரற்றவர். அவரிடம் கற்று அரங்கேற்றம் கண்டதை பெரும் பாக்கியமாகவே நான் கருதுகின்றேன்.

மிருதங்கம் என்பது பக்க வாத்தியமே தவிர பக்கா வாத்தியம் அல்ல என்பதை அவர் எனக்குக் கற்றுத்தந்தார். பாடகரை அனுசரித்தும் இசையரங்கின் தன்மைகளை உணர்ந்தும் மிருதங்கத்தை வாசிக்க வேண்டும் என்பதே எனதும் எனது குருவினதும் கொள்கையாகும். இதனையே நானும் எனது மாணவர்களிற்குக் கற்பித்து வருகின்றேன். ஏனெனில் ஒரு இசை நிகழ்வைச் சிறப்புறச் செய்யும் பக்கவாத்தியங்களுள் மிருதங்கம் முதன்மையானதாகும்.

தனியாவர்த்தனம் வாசிப்பது போல் பாடலிற்கும் மிருதங்கத்தை வாசித்தால் பாட்டுக் கச்சேரியானது திசைமாறிப் போய்விடும். கீர்த்தனை, நிரவல், கற்பனாஸ்வரம், கணக்கு வழக்கு போன்ற இசை நுட்பங்களைத் தெரிந்து, உணர்ந்து மிருதங்கத்தை வாசித்தால் அந்தக் கச்சேரியானது பஞ்சாமிருதம் போல் இனிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. எனவே பக்கவாத்தியப் பண்பாட்டின் வழிநின்று தோற்கருவிகளை இசைக்கக்கூடிய இளம் கலைஞர்களை எதிர்காலத்தில் உருவாக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும் என சந்தம் மிககாத கருத்துக்களைக் கூறுகின்றார் கலாவித்தகர் வி.ஜம்புநாதன்.

**உதயனின் "சூரியகாந்தியில்" உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா?**
**சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.**

**உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;**

சூரியகாந்தி
உதயன்
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுப்பர்' இன கால்நடைகளை உருவாக்கும் முயற்சி

> ஒரு குறிப்பிட்ட அளவு சிறந்த பாலை வழங்கக்கூடிய அல்லது இறைச்சியைத் தரக்கூடிய ஆட்டை அல்லது பசுவை 'குளோனிங்' முறையில் உருவாக்குவதாகவே இருக்கும் என்றாலும் ஒரே குளோனிங் மூலம் நூற்றுக் கணக்கான ஆடுகளை அல்லது மாடுகளை பிறப்பிக்க முடியும் என்பதே இதன் சூட்சுமமாகும்.


ஆடு, மாடுகளில் இருந்து கிடைக்கும் உணவுகளில் பல நாடுகளின் மக்கள் தங்கியிருக்கிறார்கள். பிரதானமாக பால், பால் பொருள்கள் , இறைச்சி மற்றும் அவைகளின் தோல், எலும்புகளில் இருந்தெல்லாம் அதிக பயன்பெறும் நாடுகள் உண்டு. சில நாடுகளின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களே இந்த மாதிரி கால்நடைகளில் இருந்து கிடைக்கும் பொருள்களாகவே உள்ளன. இந்தப் பொருள்களின் பயன்பாட்டுக்கு இன்றும் ஊக்கமளிக்கும் வகையில் விஞ்ஞானிகள் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டுள்ளார்கள்.குறிப்பாக மிருகங்களை மேலும் வளப்படுத்தி அதிக பயன்களை அளிக்கும் வகையில் புதிய ஆடு, மாடுகளை உருவாக்கும் முயற்சி இப்போது நடைபெற்று வருகின்றது.

இந்த ஆராய்ச்சியின்படி அதி உயர்ந்த ரக ஆடுகளையும், மாடுகளையும் உருவாக்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இப்பொழுதும் கூட பாலுக்கும், இறைச்சிக்குமான சிறந்த கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. ஆனால் புதிய கண்டு பிடிப்புக்களின்படி ஒரேவித சிறப்பைக் கொண்ட ஆடு,மாடுகளை ஏராளமாக உருவாக்கக்கூடிய வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட அளவு சிறந்த பாலினை வழங்கக்கூடிய அல்லது இறைச்சியை தரக்கூடிய ஆட்டை அல்லது பசுவை 'குளோனிங்' முறையில் உருவாக்குவதாகவே இருக்கும். என்றாலும் ஒரே குளோனிங் மூலம் நூற்றுக்கணக்கான ஆடுகளை அல்லது மாடுகளைப் பிறப்பிக்க முடியும் என்பதே இதன் சூட்சுமமாகும்.

'டொலி' என்ற செம்மறி ஆட்டினை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட அதே குளோனிங் முறைதான் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அண்மையில் ஜப்பானிய விஞ்ஞானிகள் இதே முறையைப் பயன்படுத்தி 25 சுற்று குளோனிங் செயற்பாட்டில் ஒரே எலியின் மாதிரியில் எந்தவித மாற்றமும் இன்றி 600 எலிகளை உருவாக்கி சாதித்திருக்கிறார்கள். இவ்வாறு உருவாக்கப்பட்ட எலிகள் எந்தவித வித்தியாசமுமின்றி சாதாரண எலிகள் போலவே உள்ளன. காலத்துக்கு முன்பே வயதாகிவிடாதது மட்டுமின்றி உள மற்றும் உடல் ரீதியாகவும் சிறப்பாக உள்ளன. இந்த குளோனிங் முறையில் மிருகங்களை பண்ணைகளில் வளர்த்து பால் உற்பத்தியையும் இறைச்சி உற்பத்தியையும் வெகுவாக அதிகரித்து விடலாம் என டாக்டர் டெருகி கோவாக்யாமா என்ற ஜப்பானிய விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இதே முறையைப் பயன்படுத்தி ஒரேவித (சுப்பர் இன) மனிதர்களையும் படைத்துவிட முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அவ்வாறாயின் எம் மத்தியில் வாழும் மாமேதைகளின் மரபணுக்களைக் கொண்டு நூற்றுக்கணக்கான மகாமேதைகளைக் கண்டு பிடிக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்று சொல்லலாம் அல்லவா?

■ ரம்யன்



# விஸ்வரூபம் எடுத்துள்ள கமலஹாசன்



கமலஹாசன் 6 வயதாக இருந்த போது குழந்தை நட்சத்திரமாக திரைப்படத்தில் அறிமுகமானார். 1960 ஆம் ஆண்டு களத்தூர் கண்ணம்மாவில் நடித்தமைக்காக சிறந்த குழந்தை நட்சத்திரத்துக் கான விருதைப் பெற்றார்.

**அசை போட 70 ஒரு விடயம்**

நடிகர் கமலஹாசனின் விஸ்வரூபம் தமிழ்நாட்டில் சக்கைபோடு போடுகிறதாம். அந்தப்படத்தைத் திரையிடுவதில் பெரும் போராட்டங்களை நடத்தியுள்ள கமலஹாசன் இப்பொழுது மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் இருக்கிறார்.

வெளிநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவிலும் லண்டனிலும் வெற்றிகரமாக ஓடியுள்ள விஸ்வரூபம் தமிழ்நாட்டில் இப்பொழுதும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதுபற்றி கமலஹாசன் கூறும் போது ''தமிழ்நாட்டில் எனது இரசிகர்கள் விஸ்வரூபத்துக்கு அபரிமிதமான ஆதரவை வழங்கி வருகிறார்கள். தொழில் ரீதியில், வாழ்க்கையில் இது எனக்கு பெரியதொரு வெற்றியாகக் கூறமுடியும்'' என்று கூறியுள்ளார்.விஸ்வரூபம்-2 படத்துக்கான ஏற்பாடுகளில் கமலஹாசன் ஏற்கனவே இறங்கி விட்டார் என்றும் கூறப்படுகிறது-

**நடிகர் கமலஹாசன் சில தகவல்கள்:**

இந்தியாவில் தேசிய அளவில் அதிகப்படியாக விருதுகளைப் பெற்றுள்ள நடிகர் கமலஹாசன் தான். இந்தியாவில் 18 'பிலிம்பெயார்' விருதுகள் பெற்றுள்ள முதல் மற்றும் ஒரே நடிகரும் கமலஹாசனே. பிரபல இந்தி நடிகர் திலீப் குமாரும் கூட 14 விருதுகளை மாத்திரமே பெற்றிருக்கிறார். கமலஹாசன் கர்நாடக இசையாலும், இந்திய நடன முறைகளிலும் பயிற்சி உள்ளவர். பிரபல கர்நாடக இசைக் கலைஞர் டாக்டர் பாலமுரளிகிருஷ்ண விடம் கமல் கர்நாடக இசை பயின்றுள்ளார்.

இந்திய சினிமாத்துறையின் ஒஸ்கார் விருதுகளுக்காக அவர் நடித்த 7 படங்கள் அதிகாரபூர்வமாக பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

கமலஹாசன் 6 வயதாக இருந்த போது குழந்தை நட்சத்திரமாக 'களத்தூர் கண்ணம்மா' என்ற திரைப்படத்தில் அறிமுகமானார். 1960 ஆம் ஆண்டு 'களத்தூர் கண்ணம்மாவில்' நடித்தமைக்காகச் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதைப் பெற்றார்.

படங்களுக்காக 'ஸ்டன்ட்' காட்சிகளில் நடித்தபோது 34 தடவைகள் எலும்பு முறிவுகளுக்குள்ளானவர் .

## மரத்தின் உச்சியில் 451 நாள்கள் வாழ்ந்த முன்னாள் ஆசிரியை

தாய்மானியாவில் ஈக்லிப்டஸ் (கற்பூரத்தைல மரம்) மரம் ஒன்றின் மீது 451 நாள்கள் 200 அடி உயரத்தில் தங்கியிருந்து போராட்டம் நடத்திய மிரண்டா கிப்சன் என்ற பெண்மணி அண்மையில் மரத்திலிருந்து கீழே இறங்கி தனது போராட்டத்தைக் கைவிட்டார்.

பயன்தரு மரக்காடுகள் அழிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிப்சன் மரத்தில் ஏறி இருந்து கொண்டுஇறங்க மறுத்து வந்தார். 2011 டிசெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் உலகம் முழுவதும் மக்கள் கவனத்தை ஈர்த்திருந்தது. ஆஸ்திரேலிய பசும்சோலை இயக்கத்தின் தலைவர் கிறிஸ்டியன் மின்னே, தாஸ்மானியாவில் திருமதி கிப்சன் இருந்த மரத்தடிக்குச் சென்று அவரைப் பாராட்டினர். உலகம் முழுவதிலும் பயன்தரும் மரக்காடுகள் அழிக்கப்படுவதற்கு எதிராக கிப்சனின் இந்தப் போராட்டம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார்.அந்தப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயின் காரணமாகவே திருமதி கிப்சன் மரத்திலிருந்து கிழே இறங்க நேர்ந்ததாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்லும் இந்தப் பாதை?




டிலீப்

புதிய தேர்வாளர், புதிய அணித் தலைவர், புதிய பந்து வீச்சுப் பயிற்சியாளர், ஆனால் ஆட்டத்தில் மட்டும் முன்னேற்றமில்லை. இதுதான் இன்றைய இலங்கை கிரிக்கெட் அணியின் நிலைமை. இலங்கை மண்ணில் வைத்து, இலங்கையின் கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டியுள்ளது பங்களாதேஷ் அணி. பல அணிகள் சாதனை படைப்பதற்கு களம் அமைத்துக் கொடுப்பது பங்களாதேஷ் அணிதான். இன்று அந்த அணி இலங்கை அணியை வைத்து தான் சாதனை படைத்திருக்கின்றது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணமாக வந்துள்ளது பங்களாதேஷ் அணி. இரு அணிகளுக்குமிடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இடம்பெற்று வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 8 ஆம் திகதி காலியில் இடம்பெற்றது. இந்த ஆட்டம் சமநிலையில் முடிவுற்றுள்ளது. காலி டெஸ்ட் அரங்கில் மிக நீண்ட காலத்தின் பின்னர் ஆட்டம் ஒன்று சமநிலையில் நிறைவுற்றுள்ளது. காலி டெஸ்ட் மைதானத்தில் 4 நாள்கள் வரையிலேயே பெரும்பாலும் ஆட்டங்கள் இடம்பெறுவதுண்டு. அந்தளவுக்கு சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான மைதானம். இருப்பினும் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதிய முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மைதானம் நேர் எதிர்மாறாக துடுப்பாட்டத்துக்கு சாதகத்தை வழங்கியிருந்தது.

காலி மைதானத்தில் இதுவரை 23 ஆட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் 4 ஆட்டங்களே இதுவரையில் சமநிலையில் நிறைவுபெற்றுள்ளன. அதில் 3 ஆட்டங்கள் மழை காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டவை. தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஓர் ஆட்டமே சமநிலையான முடிவை இதுவரை வழங்கியிருந்தது. இந்த நிலையில் பங்களாதேஸுக்கு எதிரான ஆட்டம் மழை காரணமாக பாதிக்கப்படாத நிலையில் சமநிலை என்ற முடிவை எட்டியுள்ளது. அத்துடன் இந்த மைதானத்தில் ஓர் இன்னிங்ஸில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டமாக பங்களாதேஷ் அணி பெற்றுக் கொண்ட 638 ஓட்டங்களே காணப்படுகின்றது.

காலி மைதானம் சுழலுக்கு ஒத்துழைக்காமையினால் மாத்திரம் இலங்கை அணி பின்னடைவை எதிர்கொண்டதாக கருத முடியாது. ஏனெனில் எந்தவொரு திறமையான அணியும் முற்றாக மைதானத்தை சார்ந்திருப்பதில்லை.

இலங்கை கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் முத்தையா முரளிதரனின் ஓய்வுக்குப் பின்னர் அணி தடுமாறிக் கொண்டே வருகின்றது.

முரளி அணியில் இணைந்து கொள்வதற்கு முன்னர் இலங்கை அணி 38 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 2 ஆட்டத்தில் மாத்திரமே வெற்றியைப் பெற்றிருந்தது. முரளி பங்குபற்றிய 132 ஆட்டங்களில் 54 இல் வெற்றியும் 41 இல் தோல்வியும் 37 ஆட்டங்கள் சமநிலையிலும் முடிந்திருந்தன. முரளி ஓய்வு பெற்றதன் பின்னர் இடம்பெற்ற 27 ஆட்டங்களில் இலங்கை அணி 4 ஆட்டங்களில் மாத்திரமே வெற்றியைப் பெற்றிருந்தது. எஞ்சிய 11 ஆட்டங்களில் தோல்வியும் 12 ஆட்டங்களில் சமநிலையையும் பெற்றிருந்தது. முரளியால் ஏற்படுத்தப்பட்ட வெற்றிடம் அணியில் இன்னமும் நிரப்பப்படவில்லை. சரியான வீரர் முரளியின் இடத்துக்கு இனங்காணப்படவில்லை.

வெறுமனே தேர்வாளரை மாற்றுவதோ, புதிய அணித்தலைவரை நியமிப்பதோ, புதிய பந்து வீச்சுப் பயிற்சியாளர்களை நியமிப்பதோ முரளியின் இடத்தை நிரப்பப் போவதில்லை. இலங்கை அணி இன்னொரு முரளியை உருவாக்கா விட்டாலும், இருக்கின்ற சுழல் பந்து வீச்சாளர்களை முரளியின் தரத்துக்கு திரும்ப வைத்தாலே இலங்கை அணியால் மீண்டும் சாதிக்க முடியும்.

இலங்கை அணி, பங்களாதேஷ் அணியை இரண்டு தவறாக எடை போட்டது. இதனால்தான் அணியில் இரண்டு சிரேஷ்ட வீரர்கள் இடம்பெறுவார்கள். ஏனைய வீரர்கள் இளையவர்கள் என்று முடிவெடுத்தது. அந்த முடிவு இன்று தாக்கத்தைச் செலுத்துகின்றது. மத்தியூஸ் புதுமுக அணித் தலைவர். இவ்வாறான தப்பான எடை போடல் அணியை தோல்விக்கே கொண்டு செல்லும் என்பதை இதிலிருந்து பாடம் படித்துக் கொள்ள வேண்டும்.

இலங்கை அணி துடுப்பாட்டத்தில் பலமானதாகவே உள்ளது. பங்களாதேஷ் அணி பலவீனமான பந்து வீச்சைக் கொண்டிருந்ததால் இலங்கை அணி துடுப்பாட்டப் பலத்தை வெளிக்காட்டியது. உண்மையில் பங்களாதேஷ் அணி மிகச் சிறந்த பந்து வீச்சைக் கொண்டிருக்குமாக இருந்தால் இலங்கை அணியின் நிலை கேள்விக்குறியே.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில் வேகப் பந்து வீச்சுப் பயிற்சியாளராக சமிந்த வாஸ், சுழல் பந்து வீச்சு ஆலோசகராக முரளி என்று பந்து வீச்சுக்குப் பெரும் அணி சேர்ந்தும், களத்தில் நிலைமை வேறாக இருக்கின்றது. இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சையும், சுழல் பந்து வீச்சையும் பங்களாதேஷ் அணி இலாவகமாக எதிர்கொண்டாடியது.

குலசேகரா, ஹேரத், அஜந்த மெண்டிஸ் என்று அனுபவப் பந்து வீச்சாளர்கள் இலங்கை அணியிலிருந்து என்ன பயன்? ஓர் இலக்கை கைப்பற்ற ஓராயிரம் பந்துகள் வீசுகின்றார்கள். மாயாஜால பந்து வீச்சால் பலமான அணிகளை சிதறடித்துக் கொண்டிருந்த அஜந்த மெண்டிஸால், சாதாரணமான பங்களாதேஷ் அணியின் இலக்குகளை இலகுவாக கொய்ய முடியவில்லை.

இலங்கை அணி தான் விட்ட தவறுகளிலிருந்து திருந்தாவிட்டால் அடுத்த ஆட்டத்தில் பங்களாதேஷ், இலங்கையை தோற்கடித்தாலும் ஆச்சரியமில்லை.

## ஆங்கிலத்தில் ஆளுநருக்கு.....

கண்கெட்ட இடமாற்றத் திட்டங்களால்
கலங்கித் தவிக்கிறது
எங்கள் தாய்க்குலம்.
கைக்குழந்தைகளோடு என் வீடு நோக்கி
படையெடுக்குது ஆசிரிய பட்டாளம்.
இரண்டு வயதுக் கைக்குழந்தையை தவிக்க விட்டு
இரண்டு வருடம் எப்படி நான்
வன்னி போய் வருவேன் என்கிறாள் ஒருத்தி
சொன்னாலும் கேட்கினமில்லை
யாரிடம் சொல்லியழ வாசனண்ணா
ஆங்கிலத்தில் ஆளுநருக்கு
அப்பீல் ஒன்று எழுதித் தாங்கோ
என்று அழாக்குறையாய் புலம்பி நிற்கிறாள்.
தாலாட்டச் சொன்னால்
பாட்டொன்று பாடுவார் என் கணவர்
பாலுட்டச் சொன்னால் அவரென்ன செய்வார்
என்று அழுது வெதும்பினாள்.
மேலுமொருத்தி
பிள்ளையில்லை எனக்கு
ஆனாலும் பாரிசவாதப் படுக்கையில்
கணவர் முடங்கியுள்ளார்.
எப்படி நான் வருவேன் வன்னி மண்ணுக்கு
போதாக்குறைக்கு இரண்டு மாதக் கர்ப்பம்.
வன்னிப் பாதையின் பஸ் குலுக்கலுக்கு
கருக்கலைந்தால் யாரிடம் போவேன் !
யார்க்கெடுத்துரைப்பேன் !
வாசனையா
ஆங்கிலத்தில் ஆளுநருக்கு
அப்பீல் ஒன்று எழுதித் தாங்கோ
என்று அவள் அழுது அடம் பிடித்தாள்.
வேறொருத்தி வந்தாள்
வெம்பிய முகத்தோடு
வயதான பெற்றோரெனக்கு
வாழவெட்டியாய் ஒரு தங்கை வேறு
குடும்பப் பாரமோ என் தோளில்
எப்படி நான் வன்னி போவேன்
இத்தனை மைல் கடந்து
எடுத்துச் சொல்லியும் புரியவில்லை
கல்வியதிகாரிக்கு
என்று கதிகலங்கி நின்றாள்.
வாசன் அங்கிள்
ஆங்கிலத்தில் ஆளுநருக்கு
அப்பீல் ஒன்று எழுதித் தாங்கோ.
என்று ஒற்றைக் காலில் நின்றாள் .
இப்படி எத்தனை கொடுமைகள்.
இத்தனை பேருக்கும்
கடிதம் எழுத நானென்ன
சத்தியக் கடதாசி தயாரிக்கும்
சமாதான நீதவானா?
இத்தனை சோகங்களையும் சுமந்து கொண்டு
பள்ளி செல்லும் பாதையில்
கண்ணகியாய் தலைவிரித்து
வழிமறித்தாள் இன்னொருத்தி
வாருமையா வாசனையா
வந்ததையா விபரீதம்
எனக்கு வற்றாப்பளைக்கு இடமாற்றம்
அடிக்கடி எனக்கு காக்கை வலிப்பு வரும்
உடுக்குச் சத்தம் கேட்டால் அம்மன் கலை வரும்
குடும்பச் சுமை வேறு
எப்படி நான் வன்னி சென்று மாடு மேய்ப்பேன்
ஆங்கிலத்தில் ஆளுநருக்கு
அப்பீல் ஒன்று எழுதித் தாருமையா
இக்கணமே அனுப்புகின்றேன் ஈமெயிலில்
தக்க பதில் இல்லையேல்
இப்பொழுதே
போகிறேன் கைக்குழந்தையோடு
ஆளுநர் பணிமனைக்கு.
என்று அன்று நீதி கேட்டாள் சோழநாட்டாள்-
போல
இன்று நீதி கேட்டாள் இந்த ஈழநாட்டாள்.
காக்கை வலிப் பிரச்சினைக்கு
சீ இஸ் அன் எப்பிலெப்ரிக்
(She is an epileptic)
என்று குறிப்பிடலாம்
அம்மன் கலையாட்டத்துக்கு
ஆங்கிலப் பதம் தேடி நான்
அண்ணாமலைப் பல்கலைக்கா
செல்ல முடியும் !
ஐயகோ இறைவா !
கண்கெட்ட இடமாற்றக் கொள்கையால்
கலங்கித் தவிக்கிறது எங்கள் தாய்க்குலம்


யாழ். வதிரிவாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.பொ.வின் ஓடிக்கொண்டிருக்கும் மணிக்கூடு

■ த.அஜந்தகுமார்

ஒரு
சோம்பேறியின்
பக்கம்



மூத்த எழுத்தாளர்களுக்கு உரிய மரியாதையை இளம் எழுத்தாளர்கள் கொடுக்கிறார்களா? என்ற கேள்வி இன்று பரவலாகியுள்ளது. மூத்த எழுத்தாளர்களின் இலக்கியப் பிரதிகளை கேள்விக்குட்படுத்துவது ஒருவகை, மூத்த எழுத்தாளர்களின் வாழ்க்கையை கேலிக்குட்படுத்துவது இன்னொரு வகை, புனைவுப் போக்குலுள் அவர்களின் வாழ்க்கையை அடைத்து 'சீற விடுவதில' வேடிக்கை பார்க்கச் செய்து இன்புறுவது இன்னொரு வகை என்று நகர்கிறது இலக்கிய உலகின் 'இளவரசர்களின்' எழுத்துக்கள். இலக்கியப் பிரதிகளை மதிப்பிடுவதும் கேள்விக்குட்படுத்துவதும் அவசியமான, கட்டாயமான பணிகளே. ஆனால் வேடிக்கை காட்டுவது மோசமான செயற்பாடாகும்.

மூத்த எழுத்தாளர்களின் 'ஆசீர்வாதத்துக்காய்' ஏங்கித் தவங்கிடந்து ஒரு சொல் உதிர்ப்பில் இன்புற்று சிலிர்க்கும் இளவரசர்களும் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் அந்த இளவரசர்களுக்கும் கொம்பு முளைக்கும் காலம் வெகு தூரத்தில் இருப்பதில்லையாயினும்,

சில மூத்த எழுத்தாளர்களை காணவேண்டும் என்று - பேச வேண்டும் என்று மனம் துருதுருப்பது இயல்பு.

சென்ற மாதம் தமிழகம் செல்லக்கிடைத்தபோது எஸ்.பொவை சந்திக்கும் சந்தர்ப்பம் பேராசிரியர் செ.யோகராசா மூலம் கிடைத்தது. நானும் க.குணேஸ்வரனும் உடன் சென்றிருந்தோம்.

'எஸ். பொ' என்ற எழுத்தாளரின் ஆளுமையை எல்லோரும் அறிவர். அவரது 'தீ', 'சடங்கு' போன்ற நாவல்களின் பேசு பொருளால் 'இந்திரிய எழுத்தாளர்' என்று பேராசிரியர் கைலாசபதி போன்றவர்களால் விமர்சிக்கப்பட்டவர். ஆயினும் வித்தியாசமான முயற்சிகளால் இலக்கிய வரலாற்றில் மறைக்கப்படவோ மறக்கப்படவோ முடியாத ஆளுமை இவர்.

இவரது '?' என்ற நூலும் நனவிடை தோய்தல் என்ற நூலும் வரலாற்றில் வாழ்தல் என்ற சுயவரலாற்று நூலும் வித்தியாசமான பாரிய முயற்சிகள்.

கோடம்பாக்கத்தில் உள்ள அவரது மித்ர பதிப்பகத்தில் சந்திக்கக் கிடைத்தது. 'யாரது' என்ற அதிகாரத் தோரணையுடன் அவர் குரல் தொடங்கியது. யுகமாயினி 'சித்தன்', ஈழவாணி ஆகியோரும் அங்கு இருந்தனர். யோகராசா சேர் கிட்டச் சென்று 'தான்' என்பதைக் காட்டிக் கொண்டார்.

அருகில் உள்ள தனது இல்லத்துக்கு வரும்படி வேண்டிக் கொண்டார். நேரம் சென்றிருந்ததால் அவருடைய வீட்டில் அதிகம் நேரத்தைச் செலவளிக்க முடியவில்லை. நாளை மறுதினம் சனிக்கிழமை தான் அவுஸ்திரேலியா செல்ல இருப்பதாகவும் அன்று காலை எம்முடன் காலை உணவு உண்ண விரும்புவதாகவும் கூறினார். மனைவி பயண ஆயத்தம் செய்ய தனக்கு ஓய்வு இருக்கும் என்றும் கூறினார்.

எண்பது வயதிலும் அவரிடம் இருக்கும் வற்றாத ஆர்வமும் பெருகிச் செல்லும் எழுத்தும் தழுவிக் கதைக்கும் பிரியமும் ஆச்சரியமாகவே இருந்தன.

சனிக்கிழமை காலை உணவு உண்ணாமல் எமக்காக காத்திருப்பேன் என்றார் விடைபெற்றோம்.

சனிக்கிழமை காலையில் மித்ர பதிப்பகத்தில் அவருடன் இணைந்து சித்தனும் நின்றார். நாங்கள் மூவரும் அவர்களுடன் கடையை நோக்கி நடந்தோம். அண்மையில் செய்து முடித்த பத்து ஆபிரிக்க நாவல்களின் மொழிபெயர்ப்புப் பற்றிக் கூறினார். நைஜீரியாவில் ஆபிரிக்க இலக்கியத்தைக் கற்பிக்கும் ஓர் ஆசிரியராக அவர் இருந்தார் என்பதற்காக அந்த மொழிபெயர்ப்புக்கள் சாதாரணமாக செய்துவிடக்கூடியவை என்று சுருங்கிவிட முடியாது. அவை அவரது கடும் உழைப்பின் பிரசவங்களே.

**'இம்மெனும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மெனும் முன்னே ஆயிரமும்'**

பாடக்கூடிய காளமேகப் புலவர் வசையினால் தன் ஆளுமையை சரியாக வெளிப்படுத்த முடியாதது போல எஸ்.பொவும் மற்றவர்கள் மீதான அவதூறுகளைச் சொல்லிச் சொல்லியே தன் ஆளுமையைச் சிதைத்தவர் என்ற குற்றச்சாட்டு உண்டு.

ஆனால் வெவ்வேறு பத்து ஆபிரிக்க நாடுகளின் நாவல்களை மொழிபெயர்ப்புச் செய்து முடித்துவிட்டும் 'அப்பாடா' என்று எண்பது வயதில் கூட ஓய்ந்துவிடாமல் 'நணம்' என்ற நாவலை இப்போது எழுதிக் கொண்டிருக்கிறார். தன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட எழுத்தாளர்களின் நூல்களைப் பற்றி மிகச் சரளமாகச் சொல்கிறார். எழுத்தும் வாசிப்பும் என்று இந்த வயதிலும் இயங்குவது அபூர்வம்தான்.


அவதூறுகள், வசைகள் செய்கின்ற எஸ்.பொவை நான் நியாயப்படுத்தவில்லை. ஆனால் தனது எழுத்துக்களை தீவிரமாகத் தொடரும் அந்த ஆளுமை பற்றி வியக்காமலே இருக்க முடியவில்லை. சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது மு.பொ.வின் கதை வந்தது அப்போது திடீரெனச் சொன்னார் ''அவற்ற மணிக்கூடு நின்டிட்டுது' என்று.

திரும்பவும் அவதூறா? என்று மனம் யோசித்தாலும் மு.பொ.வின் மணிக்கூடு நின்றுவிட்டதா என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் எஸ்.பொ.வின் மணிக்கூடு ஓடிக்கொண்டுதான் இருக்கிறது' என உறுதியாகச் சொல்வேன்.

---

## தாய் நிலம் 9

–சடா கோபன்



பங்குனி
பிறந்திருக்கிறது
கூடுகிற வெக்கை தணிய
கொஞ்சமென்றாலும்
மழை பெய்தாக வேண்டும்

மேகங்கள் கூடுகின்றன
பொழிதலொன்று
நிகழுமோ இல்லையோ
மேகங்கள் கூடுகின்றன

இருட்டு மூடிய என் நிலத்தில்
கையில்
விளக்கேந்தி வருகின்றாள்
ஒரு அம்மா!

அம்மா...! என்னிடம்
இருக்கின்ற வார்த்தைகளில்
உனக்கான பதில் இல்லை

நீ தேடுகின்றவனைத்தான்
நானும் தேடுகின்றேன்

அவன் காணாமல் போய்
காலம் பல கடந்தாகி விட்டது

கடைசியாக பஸ் வண்டியில்
ஏற்றப்பட்ட போது
பாதிரியாரோடு
அவன் இருந்ததாக
கண்டவர்கள் சொன்னார்கள்

அம்மா...!
நீ தேடுகின்றவனைத் தான்
நானும் தேடுகின்றேன்

துப்பாக்கிக் குண்டுகளாலும்
பல்லுச் சக்கரங்களால்
நகர்த்தப்படுகின்ற
ராட்சத சுடுகுழல்களாலும்

சப்பாத்துகளாலும்
இரும்புக் கம்பிகளாலும்

மிதக்கின்ற பறக்கின்ற
எல்லாக் கலன்களாலும்

மாய்மால வார்த்தைகளாலும்

உன் போன்ற
ஆயிரமாயிரம் அன்னையர் பெற்ற
குழந்தைகள் மீதான
கொடூரங்களாலும்

கால காலமாக
அவன்
காணாமல் போகின்றான்

ஆப்கானிஸ்தானில்
வியட்நாமில் போலந்தில்
ஈராக்கில் கொஸோவாவில்
றுவண்டாவில் சிரியாவில்
கிழக்கு தீமோரில்
தெற்கு சூடானில்

எங்கெங்கெல்லாமோ அவனை
தொலைப்பதும் தேடுவதுமான
இந்த விசமச் சூழல்
நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது

அம்மா அழாதே !
நீ தேடிக் கொண்டிருப்பவனைத் தான்
நானும் தேடிக் கொண்டிருக்கிறேன்

கைவிளக்கோடு
இப்போது நீ போகின்ற பாதை
முக்கியமானது
இந்தப் பாதையில்
நீ அவனைச் சந்திப்பது
நிச்சயமானது

மூடுவதற்கு முன்னரான
உனது விழிகளில் தெரிந்த
நம்பிக்கையின்
உட்பொருள்
இப்போதெனக்கு புரிகிறது
அம்மா
இந்தப் பாதையில்
நீ அவனைச் சந்திப்பது
நிச்சயமானது

சந்தித்து
உன் மடியில் ஒருமுறை
தூங்க வைத்து
ஒரு கவளம் சோறுமூட்டி
என்னிடம் அனுப்பி வை

அம்மா
நீ தேடுபவனைத்தான்
நானும் தேடிக் கொண்டிருக்கிறேன்

என் பிரிய நண்பனே
மனிதாபிமானமே
உன்
அன்னையைச் சந்தித்த கையோடு
என்னையும் சந்திக்க வந்துவிடு

ஏனெனில்
வன்னியில் தொலைந்த உன்னை
ஜெனிவாவில் தேட
நானொன்றும் முட்டாளில்லை

பங்குனி பிறந்திருக்கிறது
கூடுகிற வெக்கை தணிய
கொஞ்சமென்றாலும்
மழை பெய்தாக வேண்டும்

மேகங்கள் கூடுகின்றன
பொழிதலொன்று
நிகழுமோ இல்லையோ
மேகங்கள் கூடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜினிதேவி சிவலிங்கம்

# காகிதப் பூக்கள்

அவள் எங்கள் கிராமத்துக்கு வந்து ஒரு மாத மாகின்றது. வீட்டை விட்டு வெளியிலே நடமாடு வது குறைவாக இருந்தது. எங்களது வீடு அருகிலே இருந்தும் எங்கள் வீட்டில் உள்ளவர்களுடன் கூட அவள் ஒதுங்கியிருந்தது எங்களுக்கு ஆச்சரிய மாகவேயிருந்தது.

நான், என் மனைவி கமலாவிடம் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களைப் பற்றிக் கேட்ட போது அவளும் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். இது அவர்களைப் பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வம் இன்னும் அதிகரித்தது. அன்று சனிக்கிழமை லீவு நாள் தினசரிப் பத்திரிகையில் மூழ்கியிருந்தேன்.

"சேர்... சேர் வீட்டில யாருமில்லையா?" இனிய பெண் குரல், எங்கள் வீட்டு வாசலில். கதிரையி லிருந்து எழுந்து வெளியே வருகின்றேன். எங்கள் பக்கத்து வீட்டில குடியேறிய அந்தப் பெண்ணும் ஒரு சிறிய பெண்ணும் நின்றிருந்தனர்.

" உள்ளே வாருங்கோ. வீட்டிலதான் எல்லாரும் இருக்கிறம். வாங்கோ..."

வீட்டினுள்ளே நுழைந்த அந்தப் பெண்ணைப் பார்க்கின்றேன். சுமார் முப்பது வயதிருக்கும். மாநிறம். நீண்ட நாசி. அழகிய நீண்ட பெரிய விழிகள். இடுப்புக்கு கீழே தொங்கும் கூந்தல். தலைக்கு சிலைட் ஒன்றைப் போட்டுக் கூந்தலை விரித்து விட்டிருந்தாள். தன்னை நான் கவனிப் பதை உணர்ந்த அவளது முகம் சிவந்தது. தலையைக் குனிந்து கொண்டவள்,

"வீட்டில அக்கா இல்லையோ சேர்..." திடுக் கிட்ட நான் எனது நிலைக்கு வெட்கப்பட்டேன் ஒரு பெண்ணை -திருமணம் செய்து தாய்மை அடைந்த பெண்ணை- இமை கொட்டாது பார்த்தது எனக்கே அவமானமாகவிருந்தது.

"கமலா... கமலா இங்க யார் வந்திருக்கிற தெண்டு வந்து பார். உன்னைத் தேடித்தான் ஆட்கள் வந்திருக்கினம்"

அந்த இடத்தை விட்டு விலகிச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் வீட்டின் உட்புறம் சமையலறையில் வேலையாக இருந்த எனது மனைவியை அழைத்தேன்.

" அப்பிடி யாரப்பா என்னைத் தேடி வந்தி ருக்கினம்..."

முன் விறாந்தைக்கு வந்த என் மனைவி கதிரையிலே அமர்ந்திருந்தவர்களைக் கண்டதும் திகைத்துவிட்டாள். அவள் முகம் மலர்ந்தது. அந்த இளம் பெண்ணின் கைகளை அன்புடன் பற்றிய என் மனைவி சிறுமியின் தலைமுடியையும் அவர் களுடன் கலகலப்பாக உரையாடத் தொடங்கினாள்.

இந்தச் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்த நான் வீட்டின் உட்புறத்துக்கு நகர்ந்தேன். "அந்தப் பெண் எதற்காக எங்களது வீடு தேடி வந்திருக்கிறாள்? இதுவரை எங்களுடன் எந்தவித தொடர்பும் இல் லாதிருந்தவர்கள். என்ன விஷயமாக இருக்கும்" என் மனம் அதனை அறிந்து அருகில் வந்த மனைவி

" எங்கன்ட பக்கத்து வீட்டுப் பெண்ணின் கதையை கேட்டா பரிதாபமாயிருக்குது. அவை போன பிறகு சொல்லிறன்..."

எனது ஆவலைத் தூண்டிவிட்டுச் சென்றாள் என் அருமை மனைவி. சிறிது நேரத்தில் ,

"இங்க வாருங்கோ. உமாவும் பிள்ளையும் போகப் போகப் போகினமாம். உங்களிட்ட சொல்லிப் போட்டுப் போகவாம். ஒருக்கா வாங்கோ..."எனது மனைவியின் அழைப்பைக் கேட்டு வெளியே வருகிறேன். என்னைக் கண்டதும் அந்த இளம் பெண்ணும், அவள் மகளும் கதிரையை விட்டெழுந்தனர். "சேர் நாங்க போட்டு வரப் போறம். நீங்கள் தான் எங்களுக்கு உதவியாயிருக்க வேணும். நாங்கள் உங்களை நம்பித்தான் அந்த வீட்டில இருக்கிறம். ஒரு நாள் எங்கன்ட வீட்டுக்கு நீங்கள் ரண்டு பேரும் வரவேணும்....." கரங்குவித்து விடைபெற்ற உமாவையும் அவள் மகளையும் எங்கள் வாசல்வரை வந்து எனது மனைவியும் நானும் வழியனுப்பி வைத்தோம்.

அவர்கள் எம்மிடம் விடைபெற்றதும் உமாவைப்பற்றி அறியும் ஆர்வத்துடன் எனது மனைவியை அணுகினேன் .

"உமாவுக்குத் திருமணம் முடிந்ததும் மூன்று மாதத்தில வெளிநாட்டுக்குப் போன கணவனைப் பற்றி எந்தத் தகவலும் வரேல்லையாம். குழந்தை பிறந்தது கூட அவனுக்குத் தெரியாதாம். லண்டனில அவன் வேறையொரு பெண்ணைத் திருமணம் செய்திட்டானாம்.ஊரில உமாவை கேள்வி மேல் கேள்வி கேட்டு அவள் மனதை நோகடிக் கினமாம்.அதுதான் அவையளுக்குத் தெரியா மல் அவையளின்ர கண்ணில இருந்து மறைஞ்சிருக்கத்தான் இங்க வந்திருக்கினமாம்....."

என் மனைவி ஆதங்கத் தோடு கூறினாள். எனக்கும் உமாவின் நிலையைக் கேட்டபின் அவள் மீது பரிதாபம் தான் ஏற்பட்டது.எங்கள் வீட்டுக்கு உமா வந்த சென்ற பின் எனது மனைவியும் நானும் ஒருதடவை அவள் வீட்டுக்குச் சென்றோம்.

எனது மனைவியும் உமாவும் அதன் பின்னர் நெருங்கிய தோழிகளாகி விட்டனர். உமாவின் மகன் தேனருவிஎங்கள் வீட்டிலேயே பொழுதைக் கழித்தான்.

உமாவிற்கு ஏதாவது உதவி செய்யவேண்டிய சந்தர்ப்பங்களில் எனது மனைவி அங்கு செல்லும் படி கூறுவாள். நானும் அடிக்கடி தேனருவியை அழைத்து வருவதற்கும் , அவர்களுக்கு உதவி செய் வதற்கும் அங்கு செல்வது வழக்கமாகிவிட்டது.

உமாவும் அடிக்கடி என்னை உதவிக்கென்று அழைப்பது வழக்கமாகிவிட்டது.அவளை ஒரு நாளைக்கு ஒருதடவையாவது பார்க்கவேண்டும் என்று அலைபாய்வதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. உமாவின் அன்பான உபசரிப்பு , அவள் அழகு, அவள் என்னிடம் காட்டிய பரிவு என்னை மெய்மறக்கச் செய்தது.

கள்ளமில்லா என் மனைவிக்கு துரோகம் செய்கிறோம் என்று மனம் அடித்துக் கொள் ளும் வழமைபோல உமாவின் வீட்டுக் குச் செல்வதற்கு வாசல் வரை வந்த என்னை நெற்றியில் விபூதி துலங்க கையில் அர்ச்சனைத் தட்டுடன் முகமெல்லாம் மலர்ச்சியாக வந்த கமலா இடமளித்தாள்.

"என்ன அவசரமா போறீங்கள்? உமா ஏதா வது அவசரமான வேலை இருக்கிறதா சொன் னாளா? இந்த விபூதிப் பிரசாதத்தையும் நான் தந்ததெண்டு அவளிட்டக் குடுங்கோ....."

தடுமாறிய மனதுடன் தலை குனிந்தவனாக அவளிடம் கோயில் பிரசாதத்தை கையில் வாங்கிக் கொண்டு உமா வீட்டுக்கு விரைகின்றேன்.

வீட்டிற்குப் பின்புறமுள்ள தோட்டத்தில் தேனருவி விளையாடிக் கொண்டிருந்தாள். வீட்டின் வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள்.

உமாவின் வீட்டுக்கு யார் வந்திருப்பார்கள்? வழமையாக வீட்டின் கதவைத் திறந்து செல்லும் நான் கதவில் கையைவைப்பதற்கு கதவிற்குக் கிட்டச் செல்கிறேன்.

வீட்டின் உள்ளே கலகலவென்று சிரிக்கும் உமாவின் குரலோடு ஓர் ஆணின் குரலும் சேர்ந்தொலித்தது. சிரிப்பின் மத்தியில் உமாவின் குரல் தெளிவாகக் கேட்டது.

"சுதாகர் நான் ஊரில இருக்கேலாமத்தான் இங்க வந்தனான். நீங்க கனகாலமா என்னைப் பார்க்க வரேல. என்னோட எந்தத் தொடர்பும் இல்லாமல் என்னைக் கைவிட்ட புருசனைப் பற்றிக்கூட நான் கவலைப்படேல.நீங்க இருக்கிற துணிவில இருந்தனான்".

> "உமாவுக்குத் திருமணம் முடிந்ததும் மூன்று மாதத்தில வெளிநாட்டுக்குப் போன கணவ னைப் பற்றி எந்தத் தகவலும் வரேல்லையாம். குழந்தை பிறந்தது கூட அவனுக்குத் தெரியாதாம். லண்டனில அவன் வேறையொரு பெண்ணைத் திருமணம் செய்திட்டானாம்.ஊரில உமாவை கேள்வி மேல் கேள்வி கேட்டு அவள் மனதை நோக டிக்கினமாம்.அதுதான் அவையளுக்குத் தெரியாமல் அவையளின்ர கண்ணில இருந்து மறைஞ் சிருக்கத்தான் இங்க வந்திருக்கினமாம்....."

அவளை மேலே பேச விடாது தடுத்த ஆண் குரல் "உமா இப்பதான் நான் வந்திட்டனே. இனி என்ன கவலை....." அவன் அன்புடன் கூறு வது எனது காதில் தெளிவாக விழுந்தது.உமா அவனிடம்-

"எங்கன்ட பக்கத்து வீட்டில ஒரு குடும்பம் இருக்கு. அவா நல்ல குணமானவா. ஆனா அவருக்கு கொஞ்சம் சபல குணம் இருக்கு. அவரின்ர பலவீனத்தை பயன்படுத்தி நான் அவரைக்கொண்டு வேலை வாங்கிப் போடு வன். தனியா இருக்கிற எங்களுக்கும் அந்த ஆள் துணையா இருக்கிறார்..."

கூறியவளுடன் இணைந்து சுதாகரும் சிரித் தான். நான் கூனிக்குறுகிப் போனேன். கை களிலே என் மனைவி தந்த கோயில்பிரசாதம் என்னைப் பார்த்து சிரித்தது. குற்ற உணர்வு மனதை உறுத்த என் வீட்டை நோக்கி விரைந் தேன். மனம் முழுக்க மனைவியின் எண்ணமே நிறைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் அம்பலமாகும் வடக்கின் வசந்தம்

சந்திரசேகர ஆஷாத்

**வடக்கின் வசந்தம் வன்னியை வளப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி ஒரு புதுயுகம் படைத்துக் கொண்டிருப்பதாகத் தேசிய மட்டத்தில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் ஒரு மாயை உருவாக்கப்படுகிறது.**

அது போர் இடம்பெற்ற காலம். கிளிநொச்சி வளர்ந்து வரும் ஒரு நகரமாக உருப்பெற்றிருந்த நாள்கள். விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகங்கள் அத்தனையும் அங்குதான் மையம் கொண்டிருந்தன.

அப்போது அங்கே அகன்ற அழகான ஏ-9 வீதி இருக்கவில்லை. ஓங்கி உயர்ந்த கட்டடங்கள் இருக்கவில்லை. பிரதான வீதியால் பறக்கும் நவீன வாகனங்களையோ பெரும் கனரக வாகனங்களையோ காணமுடியாது.

எனினும் நகரம் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். கிபிர் வரப் போகும் முன்னறிவிப்பு விசில் அடித்ததுமே மக்கள் ஆங்காங்கே இருக்கும் பதுங்கு குழிகளுக்குள் இறங்கி விடுவார்கள். ஒரு சில நிமிடங்களில் நகரம் வெறிச்சோடிவிடும். கிபிர் விமானம் குண்டுகளைப் பொழிந்துவிட்டு மேலெழுந்ததுமே கரும்புகை மண்டலம் அடங்குவதற்கு முன்பே நகரம் மீண்டும் இயங்கத் தொடங்கி விடும். பொருளாதாரத் தடை காரணமாக எரிபொருள் முதற்கொண்டு பல பொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு. எனினும் இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ மக்கள் பழகிவிட்டனர். உரப்பசளைகள் இல்லாத போதும் இயற்கைப் பசளைப் பாவனை மூலமும், அமுதம் என்ற உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பசளைகளையும் உள்ளீடு செய்து விவசாயம் செழித்தோங்கியது. அரிசி, மரக்கறி, மீன், இறைச்சி என்பன மலிவான விலையில் கிடைத்தன.

நடுச் சாமத்திலும் பெண்கள் நகைகளுடன் அச்சமின்றி நடமாடுமளவுக்கு களவு, கொள்ளை என்பன காணாமலே போய்விட்டன. பாலியல் வல்லுறவு, காடைத்தனம் என்பனவும் இல்லாமற் போய்விட்டன. அரசகாரியாலயங்கள் சீராக இயங்கின. லஞ்சம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

போரின் அவலங்கள் மத்தியிலும் வசதிகள் குறைவாக இருந்த போதிலும் அப்போது வசந்தம் வீசியது. மக்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

போர் உக்கிரமடைந்து வசந்தத்தைத் துடைத்துவிட்டு புயலைத் திணித்தது. தொடர் இடப்பெயர்வுகளும், சாவுகளும் உடல் உறுப்பு இழப்புகளுமென அவலங்கள் மக்களை முள்ளிவாய்க்கால் வரை தள்ளிச் சென்றன.

உயிர் தப்பியவர்கள் செட்டிக்குளம் முட்கம்பி முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். அங்கும் கூட அவலத்தின் மேல் அவலங்கள். கைதுகள், காட்டிக் கொடுப்புக்கள், காணாமற் போதல்கள், உணவுக்கும் நீருக்கும் நீண்ட வரிசைகள் என மக்கள் மீது பல்வேறு அவலங்கள் சுமத்தப்படுகின்றன.

மீண்டும் மீள்குடியேற்றம் என சொந்த இடங்களில் கொண்டு வந்து கொட்டப்பட்ட போது இடிந்த சுவர்களும் கூரையற்ற சுவர்களும் எஞ்சிக் கிடந்தன. கிளிநொச்சி நகரம் இடிபாடுகளின் நகரமாகவும் பற்றைகளின் மையமாகவும் மாறிக் கிடந்தது. அது அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைந்துவிட்டது.

இப்போது போர் முடிந்த நான்காவது ஆண்டை நெருங்கக் கூடிய காலம். நான்கு வாகனங்கள் ஒரே நேரத்தில் போகக் கூடிய அகன்ற அழகான ஏ-9 வீதி. அதன் இருபுறமும் ஓங்கி உயர்ந்த கட்டடங்கள் பல வண்ணங்களில் எழுந்து நிற்கின்றன. இலங்கையின் அத்தனை வங்கிகளும் அடுக்குமாடிகள் அமைத்து அங்கு குடி வந்துவிட்டன. வாடகைக் கொள்வனவுக்கு வாகனங்களை வழங்கும் லீசிங் நிறுவனங்களும் கிளிநொச்சியை நிறைத்துவிட்டன. மேலும் சுப்பர் மாக்கற்றுகள், பூட் சிற்றிகள், எங்கும் கண்ணாடி மயப்பட்ட அழகான வர்த்தக நிலையங்கள், இடையிடையே கிளிநொச்சியைச் சொந்த இடமாகக் கொண்ட வர்த்தகர்களும் சில குச்சுக் கடைகளில் ஒண்டிக் கிடக்கின்றனர்.

எனினும் கிளிநொச்சி, தென்னிலங்கையில் கவர்ச்சிகரமான வர்த்தக சந்தையாகக் காட்சி கொடுக்கிறது. வடக்கின் வசந்தம் பாரீர் எனப் பூரித்துப் போய் நிற்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின்கூட்டத்தொடரில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவும் முன்வைக்கும் வடக்கின் துரித அபிவிருத்தியின் சாட்சியங்களாக அகன்ற ஏ-9 வீதியும் உயர்ந்த வண்ணக் கட்டடங்களும் எழுச்சி பெற்று நிற்கின்றன.

ஆனால் இந்த அலங்கார அபிவிருத்தி வீசிய சுருக்கு வலையில் பலியாகிப் போன அப்பாவிகளின் சாட்சியங்களாகச், சிந்தப்படும் கண்ணீரும், இழக்கப்பட்ட குருதியும், பறிக்கப்பட்ட உழைப்பும், மௌனச் சாட்சியங்களாகக் குமுறுகின்றன. நின்ற வெள்ளத்தையும் வந்த வெள்ளம் கொண்டு சென்றுவிட்டதைப் போன்று போரின் போது ஏற்பட்ட பேரிழப்புகளின் பின்பும் எஞ்சிக் கிடந்த ஒன்றிரண்டு சொத்துகளும் கூட துடைத்துப் பறிக்கப்பட்டு விட்டன. கைநிறைந்த கடன் மட்டுமே எஞ்சிக் கிடக்கும் ஒரே ஒரு சொத்தாகிவிட்டது. இடப்பெயர்வின் பின்பு வன்னி விவசாயிகள் மீண்டும் பழைய வாழ்வுக்குத் திரும்பிவிடும் தாகத்துடன் விவசாயத்தில் இறங்கினர். வங்கிகளும் போட்டி போட்டுக் கொண்டு கடன் வழங்கின. நகைகளுக்கென வென எழுந்து போயின. மண் கைவிடவில்லை. நன்றாகவே விளைந்து கொடுத்தது. அறுவடையில் பொலி பெருகியது. ஆனால் விளைந்த நெல்லைச் சந்தைப்படுத்த முடியவில்லை. தற்காலிகக் கூடாரங்களுக்குள்ளும் சிறு தகரக் கொட்டிலுக்குள்ளும் அடுக்கி வைக்கப்பட்ட நெல் மழையில் நனைந்து பழுதடைந்தது. வேறு வழியற்ற நிலையில் தனியார் வியாபாரிகளுக்கு அறாவிலைக்கு நெல்லை விற்க வேண்டி வந்தது.

நெற் சந்தைப்படுத்தும் சபை உரிய நேரத்தில் வரவில்லை. காலம் தாழ்த்திவந்த போதும் ஒரு சிறிய அளவு கொள்முதல் செய்துவிட்டுப் போய்விட்டது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி இல்லை, களஞ்சிய வசதி இல்லை எனக் கூறித் தட்டிக் கழித்துவிட்டன.

எனினும் விவசாயிகள் நஷ்டமடைந்த போதிலும் ஓரளவு கடனையாவது திருப்பிச் செலுத்திக்கொண்டனர். மீண்டும் அடுத்த வருடமும் வங்கிக் கடன்களும் அடைவு கடைகளுமே விவசாய முதலீட்டின் அடிப்படைகளாகின. ஆனால் மழையும் வெள்ளமும் ஆடிய வெறியாட்டத்தில் வயல் நிலங்கள் பேரழிவுக்குள்ளாயின.

முதலில் கடன்களைத் தள்ளுபடி செய்யப் போவதாகக் கூறிய அரசு, பின்பு கடன்களைத் திருப்பக் கால அவகாசம் வழங்கப் போவதாகவும், அந்தக் காலப் பகுதிக்கு வட்டி அறவிடப் போவதில்லை எனவும் அறிவித்தது. அந்த அறிவிப்பு வடக்கின் வசந்தத்தை நெருங்கவேயில்லை. கடன்களை உடனடியாகக் கட்டும்படியும், இல்லையேல் நீதிமன்றத்தில் நிறுத்தப்போவதாகவும் வங்கிகள் விவசாயிகளை மிரட்டுகின்றன. அடைவு நகைகள் மீட்கப்படாத நிலையில் விலை போய்க் கொண்டிருக்கின்றன.

இன்றைய வன்னி விவசாயி, வடக்கின் வசந்தத்தின் நிழலில் படுபாதாள நிலைக்குத் தள்ளப்பட்டு மூச்சுத் திணறுகின்றான்.

ஏ-9 வீதியின் இருமருங்கிலும் லீசிங் நிறுவனங்கள் குவிந்து கிடக்கின்றன. இவை ஒரு பகுதி முற்பணம் பெற்றுக் கொண்டு தவணைக் கட்டண அடிப்படையில் வாகனங்களை வழங்குகின்றன. பல விவசாயிகள் கிடந்தவற்றை விற்றோ, கடன்பட்டோ முற்பணம் கட்டி உழவு இயந்திரங்களை வாங்கினர். வெள்ளத்தில் விளைச்சல் அழிந்தது. தவணைப்பணம் கட்ட வழியில்லை. லீசிங் நிறுவனங்கள் உழவு இயந்திரத்தைப் பறித்துச் சென்றுவிட்டன. இப்போது கட்டிய தவணைப் பணமும் இல்லை; இடையில் கட்டிய முற்பணங்களும் இல்லை; உழவு இயந்திரமும் இல்லை.

நாளை என்ன செய்வது என அறியாது விவசாயிகள் நடுத் தெருவில் நிற்கிறனர்.

**ஞாயிறு காரம்**

வீதி அபிவிருத்தி, கட்டடப் பணிகள் என்பன பெருமளவு மேற்கொள்ளப்படும் நிலையில் உழைக்கமுடியும் என்ற நம்பிக்கையில் பலர் வாடகைக் கொள் முதல் அடிப்படையில் முற்பணம் கட்டி 'ரிப்பர்' வாகனங்களை வாங்கினர். ஒப்பந்தக்காரர்களே வாகனங்களைத் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வந்து பயன்படுத்துகின்றனர். ரிப்பர் வாகனங்களுக்கு தொழில் கிடைப்பது குறைவடைந்தது. எனவே தவணைப்பணம் கட்ட முடியாத நிலையில் ரிப்பர்கள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றன. வாகனத்தை வாங்கியவரோ இருப்பதையும் உழைப்பின் பயன்களையும் லீசிங் நிறுவனங்களுக்குத் தாரை வார்த்து விட்டு நடுத்தெருவில் நிற்கிறார்.

'ஹைஏஸ், முச்சக்கரவண்டி என லீசிங் அடிப்படையில் கொள்முதல் செய்தவர்களும், இப்போ ஒவ்வொன்றாகப் பறி கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். வறுமைக்குள் தள்ளப்பட்ட வன்னி மக்கள் பஸ்ஸில் பயணம் செய்யக் கூடப் பணமின்றித் திண்டாடும்போது 'ஹைஏஸ்' வாகனத்தை வாடகைக்கு அமர்த்தவோ முச்சக்கரவண்டியில் பயணம் செய்யவோ முடியுமா?

இது தான் வன்னியில் வடக்கின் வசந்தத்தின் நிலை. அதாவது கொடுப்பது போல் கொடுத்து இருப்பதையும் பறித்தெடுத்து நடுத்தெருவில் வன்னி மக்களை விட்டுள்ளது வடக்கின் வசந்தம்.

அதேவேளையில் போரில் கணவன்மாரையோ, தந்தை தாயாரையோ இழந்த பெண்களின் நிலைமையோ படுமோசமாக உள்ளது. இவர்கள் இரு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஒன்று குடும்பத்தை உழைத்துக் காப்பாற்ற வேண்டிய தேவை. மற்றது படையினராலும் சமூக விரோதிகளாலும் பாலியல் ரீதியில் வேட்டையாடப்படுதலிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளல். இந்த இரு விடயங்களுமே அவ்வளவு இலகுவாக இல்லை.

இந்த நிலைமையைப் பாவித்து பெண்களை இராணுவத்தில் சேர்த்தல், ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை பெற்றுத் தருவதாகவும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும் சொல்லி ஏமாற்றி தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லல் போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இராணுவத்தில் இணைக்கப்பட்ட பெண்களில் பலர் உளநலப் பாதிப்புக்கு உள்ளாகி அண்மையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கு ஏன் அத்தகைய பாதிப்பு ஏற்பட்டது என்பதை எவராலும் இலகுவாக ஊகித்துக் கொள்ள முடியும். அதேவேளையில் ஆடைத்தொழிற்சாலை வேலை, வெளிநாடுகளுக்கு அனுப்புதல் எனத் தென்னிலங்கைக்கு அழைத்துச் செல்லப்படும் பெண்கள் பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாக தகவல்கள் வெளிவந்தன. தப்பி வந்த சில பெண்கள் தாம் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டமை வெளியே தெரிந்தால் தங்கள் எதிர்காலமே சிதைவடைந்து விடும் என்பதால் அதுபற்றி எதுவுமே வெளியே சொல்ல முடிவதில்லை.

அடிப்படையில் வடக்கின் வசந்தம் வன்னியை வளப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி ஒரு புதுயுகம் படைத்துக் கொண்டிருப்பதாகத் தேசிய மட்டத்தில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் ஒரு மாயை உருவாக்கப்படுகிறது. அதற்கு ஆதாரமாக ஏ-9 வீதியின் அகன்ற அழகான தோற்றமும் இரு மருங்கிலும் அமைந்துள்ள பெரும் வர்த்தக நிலையங்களினதும் நிதி நிறுவனங்களினதும் கட்டடங்களும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

வடக்கின் வசந்தம் வன்னியில் வீசுவது உண்மைதான். அது வங்கிகள், நிதி நிறுவனங்கள், வாகன விற்பனையாளர்கள், தரகர்கள், கட்ட ஒப்பந்தகாரர்கள், சமூக விரோதிகள், படையினர், லஞ்ச ஊழல் பேர்வழிகள், அரசுக்கு வால்பிடிக்கும் அடிவருடிகள் ஆகியோருக்கு வளம் தரும் வசந்தமாக வீசுகிறது. வன்னி மக்களைச் சுரண்டிச் செல்லும் களமாக மாறி அவர்களுக்கு வளமான வசந்தமாக வீசுகிறது.

போரின் போது சகலவற்றையும் இழந்து வெறுங்கையுடன் வந்த வன்னி மக்கள் மீண்டும் தமது கடும் உழைப்பின் மூலம் தலைநிமிர முயன்ற போது அவற்றையும் வழித்துத் துடைத்தெடுக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு வடக்கின் வசந்தம் வறட்சியின் வசந்தமாக மாறி எரிந்து கொண்டிருக்கிறது.

எவ்வளவுதான் அழகான அறிக்கைகளும் அலங்கார வார்த்தைகளும் முன்வைக்கப்பட்ட போதிலும் வடக்கின் வசந்தம் வன்னியில் அம்பலப்பட்டுப் போய்நிற்கின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் போராட்டம்

■ தகனன்



## மாற்றத்துக்கான போராட்டமா....

நேற்று ஐயா, இன்று அம்மா, நாளை மீண்டும் ஐயா என்பது தமிழக அரசியலை பீடித்திருக்கின்ற தொற்று நோய். தமிழர்களது நலனுக்காக இவர்கள் இருவரும் எதுவுமே செய்யாத நிலையிலும், மாற்றுச் சக்தியொன்று இல்லாத காரணத்தால் கடந்த இரண்டு தசாப்த காலமாக கருணாநிதியும், ஜெயலலிதாவும் தமிழகத்தில் மாறி மாறி ஆட்சியமைப்பது எழுதப்படாத விதியாகிவிட்டது.

### மாற்று அரசியலுக்கான முதல் அதிர்வு

இந்த இரு கட்சிகளின் எதிர்காலத்தை ஆட்டிப் பார்க்கும் முதல் அதிர்வு கடந்த 8ஆம் திகதியன்று சென்னை "லொயோலாக் கல்லூரி" மாணவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையில் நடந்த இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தக் கோரி, சென்னை "லொயோலாக் கல்லூரி "மாணவர்கள் கடந்த 8ம் திகதி எவ்விதமான அரசியல் கட்சிகளின் அனுசரணையுமின்றி தாமாகவே உண்ணாவிரத போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் இவர்களது போராட்டத்தையாருமே கண்டுகொள்ளவில்லை. எனினும் நாள்கள் செல்லச் செல்ல தமிழகம்முழுவதும் இப்போராட்டத்திற்கு ஆதரவு பெருகத் தொடங்கியது.

தமிழகத்தின் பலபாகங்களிலும் மாணவர்கள் பேராட்டங்களில் குதித்தனர். நிலைமை மோசமடைவதை உணர்ந்த தமிழக அரசு போராட்டத்தை ஒடுக்க முயற்சி யெடுத்தது. உண்ணாவிரதம் இருந்த லொயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேரையும் தமிழக காவல் துறையினர் 12 ம் திகதி நள்ளிரவு நேரத்தில் கைது செய்து ராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

ஆனால்எதிர்பார்ப்புக்குமாறாக மாணவர் போராட்டம் முன்னரை விட உக்கிரமடைந்தது. தமிழகத்தின் சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, திருநெல்வேலி உள்ளிட்ட முக்கிய நகரங்களின் கல்லூரி மாணவர்கள், இலங்கை அரசுக்கு எதிராக போராட்டங்களில் குதித்துள்ளனர். பல நாள்களாக உண்ணாவிரதம் இருந்துவரும் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது, சிலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவை எதனையும் பொருட்படுத்தாது தமிழக சட்டக்கல்லூரிகள் உள்ளிட்ட பலமுக்கியகல்லூரி மாண வர்களின் கால வரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்துநடைபெற்றுவருகின்றது.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக இந்தியாதீர்மானம் கொண்டு வரவேண்டும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கவேண்டும், ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியே மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

### அரசியல் கலப்பற்ற போராட்டம்

தமிழகம் முழுவதும் இவ்வாறு திடீரென திரட்சியாகும் மாணவர் சக்தியினால் ஆளும் அ.தி.மு.க அரசும், காவல் துறையினரும் அதிர்ச்சி அடைந்திருப்பதாகத் தெரிகிறது. மறுபுறத்தே திரளும் மாணவர் சக்தியை தமதுஅரசியல் கட்சிகளோடு இணைத்துக் கொள்வதில் அரசியற் தலைவர்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் அறியமுடிகிறது. எனினும் தமது போராட்டத்தில் அரசியல் கலப்பதை மாணவர்கள் விரும்பவில்லை.

உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த சென்னை லொயோலா கல்லூரி மாணவர்களைக் காண வந்த தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு மாணவர்களால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கச் சென்ற தி.மு.க உறுப்பினர்கள் சிலரும் மாணவர்களால் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். தமது போராட்டத்தை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டாம் என மாணவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளார்கள்.

### ஜெனிவா பிரேரணை - மாணவர்கள் எதிர்ப்பு : கருணாநிதி கொதிப்பு

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணைக்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அப்பிரேரணை வெறும் கண்துடைப்பு நாடகம் என கூறும் இவர்கள், இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச போர்க்குற்ற விசாரணையே அவசியமானது என வலியுறுத்தி வருகின்றனர்.

இது தி.மு.கவின் டெசோ அமைப்பின் கொள்கைக்கு எதிரான விடயம் என்பதனால் தி.மு.கவினர் வெளிப்படையாகவே மாணவர் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, "ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை குறை கூறுவது,குட்டையை குழப்பும்முயற்சி "எனகுற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் நகர்வால் தான் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி உலக மக்களிடையே அக்கறை ஏற்பட்டது எனவும், குறைந்தபட்சம் அமெரிக்க தீர்மானத்தையாவது தற்போது உரிய திருத்தங்களுடன் ஆதரிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஒடுக்கப்படும் போராட்டங்கள்

2009 இல் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் துயரம் தாங்காமல் முத்துக்குமார் என்ற இளைஞன் தீக்குளித்து உயிரிழந்ததைத் தொடர்ந்து தமிழக மாணவர்கள் இதேபோன்றதொரு போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள். அப்போதும் தமிழகம் முழுவதும் ஈழத்தமிழர் ஆதரவு அலை உக்கிரமடைந்திருந்தது. எனினும் அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க அரசு பல்கலைக்கழகங்களையும், கல்லூரிகளையும் மூடி மாணவர் போராட்டத்தை முடக்கியது.

இப்போது இந்தப் பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது தமிழகத்தில் உள்ள அனைத்துக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு காலவரையறையற்ற விடுமுறையை தமிழக அரசுஅறிவித்துள்ளதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

இலங்கைக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் வலுப்பெற்று வருவதால் அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மேலும் மாணவர்களின் கொந்தளிப்பு தணியும் வரை கல்லூரிகளைத் திறக்க வேண்டாம் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

தமிழக காவல் துறையினரும் போராட்டங்களை ஒடுக்கக் கடும் பிரயத்தனம் செய்துவருகின்றனர். நான்கு நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த லொயோலாகல்லூரி மாணவர்கள் எட்டு பேரை பொலிஸார் நள்ளிரவில் திடீரென கைதுசெய்தமை மாணவர்கள் மததியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. பந்தலில் போடப்பட்டிருந்த நாற்காலிகளைப் பொலிஸார் அடித்து நொறுக்கியதாகவும் கூறப்படுகின்றது. மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வந்தர்களையும் போலீசார் கைது செய்திருந்தார்கள். 2009 இல் தி.மு.க.மேற்கொண்ட அதே நடவடிக்கையை தற்போதைய அ.தி.மு.க. அரசும் மேற்கொண்டுவருகின்றது.

### போராட்டம் வெற்றிபெறுமா?

தமிழகத்தில் மாணவர்கள் போராட்டங்கள் நடப்பது இது ஒன்றும் முதல் முறையல்ல. 1965 இல் ஹிந்திஎதிர்ப்பு போராட்டத்தில் தமிழக மாணவர்களே முன்னிலை வகித்திருந்திருந்தார்கள். 1965 ஜனவரி 25 இல் தொடங்கி இரண்டு மாதகாலமாக நடைபெற்று 76 உயிர்களை காவு கொண்ட இந்தப் போராட்டத்தினால் தமிழக அரசியல் நிலையே முற்றிலும் மாறிப்போனது. இம்முறையும் மாணவர்களின் போராட்டம் தமிழகஅரசியல் சூழலைமாற்றும் சாத்தியங்கள் இருக்கின்றது.

ஆனாலும் தமிழகமெங்கும் நடத்தப்படும் போராட்டங்களில்,மாணவர் கோரிக்கைகள் ஒன்றுக்கொன்று முரண்படுவதால் போராட்டம் தோல்வியடையும் சாத்தியமும் இருக்கிறது. அனைத்து மாணவர் இயக்கங்களும் ஒரே கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதற்காக, தமிழகம் எங்கும் உள்ள கல்லூரி மாணவர்களை ஒன்றிணைத்து தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக தமிழீழவிடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு எனும் அமைப்பை உருவாக்கி தொடர்ந்து போராட போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாணவர்களின் போராட்டம் தமிழகஅரசியலில் மாற்றத்தை கொண்டுவருமா? மாணவர்களின் இந்தபோராட்டமானது ஈழத்தமிழருக்கு எத்தகைய தீர்வினைப் பெற்றுத் தரப்போகின்றது? மாணவர்கள் தமதுபோராட்டத்தின் மூலமாக இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தாலும், ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசு செய்யக் கூடியது என்ன? என்பவை விடை தெரியா வினாக்களாகவே இன்னமும் இருக்கின்றன. ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் கைது ஜெனிவா எதிரொலியா....?



என்றுமில்லாதவாறு இப்போது இந்திய மீனவர் விவகாரம் இலங்கையிலும் இந்தியாவிலும் சூடு பிடித்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணை மீதான ராஜதந்திரப் போர் உக்கிரம் அடைந்துள்ள அதே வேளையில் இங்கு இந்திய மீனவர் விவகாரம் உத்வேகம் அடைந்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணைக்கு இந்தியா தனது ஆதரவை வழங்க வேண்டும் எனக் கோரி தமிழகத்திலும் புதுடில்லியிலும் போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் மேற்கொண்டுவரும் போராட்டங்களுக்கு அப்பால் கல்லூரி மாணவர்களின் எழுச்சியே மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. அதேநேரத்தில் இந்திய நாடாளுமன்றத்திலும் இலங்கைக்கு எதிரான கருத்துக்களை அரசியல் கட்சிகள் அள்ளிவீசுகின்றன. இந்தப் பின்னணியில்தான் இப்போது இந்திய மீனவர் விவகாரமும் முக்கியம் பெற்றுள்ளது.

கடந்த இரு தினங்களுக்குள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் 53 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இலங்கை கடற்படை திடீரென இவ்வாறான நடவடிக்கையில் இறங்கியமை குறித்து இப்போது பலத்த சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு இந்தியா கடைசி நேரத்தில் ஆதரவளித்திருந்தது. அவ்வாறானதொரு நிலைப்பாடே இம்முறை பிரேரணையின் போது ஏற்படும் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். இதனால் சினம் அடைந்துள்ள இலங்கை, இந்தியாவை மிரட்டி தன் பக்கம் சாய்த்துக் கொள்வதற்காக இப்போது இந்த இந்திய மீனவர் விவகாரத்தை கையில் எடுத்துள்ளதாக சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களை மிரட்டிக் கலைப்பதே இலங்கைக் கடற்படையின் வழமையான பாணியாக இருந்து வந்தது. ஆயினும் இம்முறை அவர்களை கைது செய்யும் அளவுக்கு இலங்கைக் கடற்படை நடந்து கொண்டமை இந்தியாவை மிரட்டும் ஒரு நடவடிக்கையே. இந்த நடவடிக்கை மூலம் ஜெனிவாவில் அமெரிக்கப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்குவதை தடுத்துக் கொள்ள முடியும் என்று இலங்கை கருதுகின்றதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த இரு தினங்களுக்கு முன் நெல்லியடிப் பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய தம்பதியினர் கைது செய்யப்பட்டனர். இங்கு பல இந்திய வியாபாரிகள் உள்ள போதும் திடீரென இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக வரும் பிரேரணையின் எதிரொலிதான் இந்திய மீனவர் கைது விவகாரம் என்று அரசியல் வட்டாரங்கள் பேசிக் கொள்கின்றன.

# மூன்றாவது....

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிற்குச் சென்று பேச்சுக்களின் விவரங்களை அங்கு தெரிவித்து வந்ததை இங்கு சுட்டிக்காட்டலாம். ஒரு துருவ உலக ஒழுங்கின் கீழ் இந்தியாவும் அமெரிக்காவும் பூகோளப் பங்காளிகளாகிவிட்டன. எனவே, தனது ஆடுகளத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை ஒன்று, தனது பங்காளியின் ஆடுகளத்திற்கு மையப்பெயர்ச்சி அடைந்ததை இந்தியா ஓரளவிற்குச் சகித்துக்கொண்டது. புலிகள் இயக்கத்திற்கும் புதுடில்லிக்கும் இடையிலிருந்தது உண்மையில் ஒரு சட்டப்பூட்டு அல்ல. அது ஒரு அரசியல் பூட்டுத்தான். அதைத் தொடர்ந்தும் ஒரு சட்டப்பூட்டாகவே பேணுவது என்று இந்தியா எடுத்த முடிவானது, ஓர் அரசியல் தீர்மானந்தான். எனவே, மத்தியஸ்தம் மேற்கு நாடுகளிடம் சென்றமை ஒழுங்குக்கு புறம்பானதல்ல.

ஆனால், புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சிக்குப் பின் சட்டப் பூட்டிற்கான அவசியம் குறைந்து விட்டது. எனினும் மேற்குலக அரங்கிலேயே பிரச்சினை தொடர்ந்தும் கையாளப்பட்டு வருகின்றது.

மேற்குலகாலும் ஒரு கட்டத்திற்கு மேல் இந்த விடயத்தில் இறக்கிப் பிடிக்கமுடியாத நிலையே காணப்படுகின்றது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் ரணில் - பிரபா ஒப்பந்த காலத்திலிருந்த இலங்கைத் தீவல்ல இப்போது இருப்பது. மேற்கிற்கு விருப்பமானவரான ரணில் இருந்தவரை, இலங்கைத் தீவு குறித்து அமெரிக்காவிற்கு அநேகமாக கவலைகள் இருக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழர்களைத் தூண்டியதன் மூலம் புலிகள் இயக்கம் ரணிலைத் தோற்கடித்தது. அங்கிருந்து தொடங்கி, இலங்கைத்தீவில் அமெரிக்காவின் தெரிவுகள் சுருங்கிப் போய் விட்டன. இப்பொழுது தனக்குச் சௌகரியமான தெரிவுகளை உருவாக்குவதற்காக, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் தமிழர் பிரச்சினையைக் கையாண்டு வருகிறது.

புலிகள் ஆதிக்கத்தில் இருந்த வரை, இலங்கைத்தீவில் இந்தியாவிற்கும் தெரிவுகள் சுருங்கிக் காணப்பட்டன. புலிகளின் சரிவுக்குப் பின்னரும் நிலைமைகள் அப்படியொன்றும் பிரகாசமாக இல்லை.

தமிழர்களைப் புறக்கணிப்பதன் மூலம் கொழும்புடன் தேனிலவைப் பேணுவதால், சீனாவின் பிரசன்னத்தை குறைக்கலாமென்று இந்தியா சிந்தித்தது. ஆனால், பீஜிங்குடனும், புதுடில்லியோடும் ஒரே நேரத்தில் தேனிலவைக் கொண்டாடுவதற்கு கொழும்பு தயாராகக் காணப்படுகிறது என்பதை அது புரிந்தே வைத்துள்ளது. எந்த நோக்கத்தோடு புதுடில்லியானது தமிழர்களை உதாசீனம் செய்துவிட்டு கொழும்பை நெருங்கி வந்ததோ, அது ஈடேறவில்லை. இத்தகைய பொருள்படக் கூறின், இந்தியா தனக்கு விருப்பமான தெரிவுகளை இலங்கைத்தீவில் உருவாக்க முடியாமல் இருக்கிறது என்றே அர்த்தம்.

அதாவது, தொகுத்துக் கூறினால் மிகச் சிறிய மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்கள் மத்தியிலிருந்து தோன்றிய சிறிய விடுதலைப் புலிகள் இயக்கமானது, உலகின் சக்திமிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களையெல்லாம் வெற்றிகரமாகக் குழப்பிவிட்டு, இறுதியில் தானும் வீழ்ச்சியுற்றுவிட்டது.

இப்பொழுது புலிகள் இயக்கம் அரங்கில் இல்லாத இலங்கைத்தீவில், உலகின் ஏகப்பெரு வல்லரசும் பிராந்திய வல்லரசும் தமக்கான தெரிவுகளை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றன. அதற்கான அரங்கே ஜெனிவாவில் நடக்கும் மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆகும்.

இதிலுள்ள துயரம் என்னவெனில், எந்தவொரு தரப்பு பிரதான நடிகர்களில் ஒருவராக இருக்கவேண்டுமோ, அந்தத் தரப்பு, அதாவது, தமிழ்த் தரப்பு பார்வையாளர்களாக அல்லது நொந்தியங்களாக அல்லது அமுக்கக் குழுக்களாக அதாவது "லொபியாக" சுருங்கிக் காணப்படுகிறது. எந்தத் தரப்பு பிரதான மத்தியஸ்தராக இருக்கவேண்டுமோ, அந்தத் தரப்பு, அதாவது இந்தியாவானது கிரிக்கெட்டில் வரும் மூன்றாவது அம்பயரைப் போல நிலைமைகளை மௌனமாக கவனித்துக்கொண்டிருக்கின்றது.

ஜெனிவாவில் எத்தகைய முடிவு எடுக்கப்பட்டாலும், அது அதன் இறுதி வடிவத்தைப்பெற முன் புதுடில்லியோடு கலந்தாலோசிக்கப்பட வேண்டும். இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில், இறுதி முடிவுகளை இந்தியாதான் எடுக்கமுடியும். [illegible] இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கா தனது எந்தவொரு முக்கிய முடிவையும் எடுக்காது. இத்தகைய பொருள்படக்கூறின், ஈழத் தமிழரைப் பொறுத்த வரையில் புதுடில்லிதான் ஜெனிவா.

இலங்கை அரசு இதை நன்கு விளங்கிவைத்திருக்கிறது என்பதனால்தான், அவர்கள் முதலில் இந்தியாவைக் கையாள முற்பட்டார்கள். ஒரு இந்தியரான சுப்பிரமணிய சுவாமியைக் கையாள முற்பட்டார்கள். ஆனால், சனல்- 4 தமிழ் நாட்டில் உருவாக்கியுள்ள கொந்தளிப்பான உளவியலை நிதானமாகக் கையாள வேண்டி இருப்பதனால், இந்தியா தன்னுடைய மூன்றாவது அம்பயர் என்ற வகிபாகத்தைத் தொடர்ந்து தந்திரமாகப் பேணியபடி, அமெரிக்காவுடன் பேசுமாறு கொழும்பிற்கு ஆலோசனை கூறியது. கொழும்பானது, இந்த ஆலோசனையின் பிரகாரம் இரு முனைகளைத் திறந்தது. ஒன்று புலம்பெயர் தமிழர்களுக்கு அல்லது தமிழ் "லொபிக்கு" எதிரான தமிழர் என்று சொல்லப்படும் சுப்பிரமணிய சுவாமியின் நகர்வு. மற்றது ஜப்பான்.

ஜெனிவாவில் நிகழ்வது இலங்கை அரசுக்கும் புலம்பெயர்ந்த புலிகளின் 'லொபி'க்கும் இடையிலான ஒரு பலப்பரீட்சையே என்ற சித்திரத்தை, சுப்பிரமணிய சுவாமியும், கொழும்பிலுள்ள சில ஊடகங்களும் ராஜதந்திரிகளும் அரசியல்வாதிகளும் உருவாக்கி வருகிறார்கள்.

ஜெனிவா தீர்மானத்தின் மூலம் புலிகள் இயக்கம் மீள உயிர்ப்பதற்குத் தேவையான ஒக்சிஜன் வழங்கப்படக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவதன் மூலம், மேற்கு நாடுகளின் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்த இவர்கள் முயற்சிக்கிறார்கள். இது ஒரு முனை.

மற்றொரு முனை ஜப்பானில் திறக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் இலங்கைத்தீவின் பாரம்பரிய நண்பன். முன்பொருமுறை அனைத்துலக அரங்கில் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜப்பானுக்காகப் பரிந்து பேசியிருக்கிறார். அமெரிக்காவுக்கு மிக நெருக்கமான நாடு ஜப்பான். எனவே, ஜப்பானுக்கூடாக அமெரிக்காவைக் கையாளலாமா என்று இலங்கை அரசு எத்தனிக்கிறது.

இந்த இடத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்டலாம். இலங்கை அரசு இந்தியாவிற்கு ஊடாகவே, நிலைமைகளைச் சுதாகரிக்க முற்படுகிறது. ஒருபுறம் கொந்தளிக்கும் தமிழ்நாடு. இன்னொரு புறம் முறிக்கப்படவியலாத் தேனிலவு. இரண்டுக்குமிடையே கிழிபடுகிறார் மூன்றாவது அம்பயர்.

அரசினை உடைய தரப்பாகவும், பெரும்பான்மை இனமாகவும், வெற்றிபெற்ற தரப்பாகவும், காணப்படும் ஒரு தரப்பானது முன்வளமாக அரங்கைத் திறக்கிறது. அதாவது இந்தியாவுக்கு ஊடாக நிலைமைகளைக் கையாள முற்படுகிறது. ஆனால், அதேசமயம் அரசற்ற தரப்பாகவும், சிறுபான்மை மக்களாகவும், தோல்வியுற்ற தரப்பாகவும், காணப்படும் ஒரு தரப்பானது, பின்வளமாக, அதாவது மேற்கு வாசல்களுக்கு ஊடாக நிலைமைகளைக் கையாள வேண்டியிருக்கிறது என்பது ஒரு துயரமான முரண்பாடுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனிவாவில் இருந்து குகா

சுவிற்சர்லாந்தின் சமாதான நகர் என அழைக்கப்படும் ஜெனிவா நகரில் இப்போது சூடு பறப்பது ஜெனிவா விவகாரம் தான்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடர் பெப்ரவரி 25 ஆம் திகதி ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது. இம்மாதம் 22 ஆம் திகதி இந்தத் தொடர் முடிவடையும்.

இது வரை நாளும் வேறுநாடுகளில் இடம்பெறும் போர், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரங்கள் இடம்பெற்றன. அவை தொடர்பாக பல்வேறு தீர்மானங்களும் முன்னெடுக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தொடரின் இறுதி நாள்களில்தான் இலங்கை விவகாரம் வர இருக்கின்றது. இறுதிநாள்களில் இலங்கை விவகாரம் சூடுபிடிக்கும் நிலையிலும் தொடரின் ஆரம்ப நாளில் இருந்து இன்று வரை இடை இடையே இலங்கை விவகாரம் வந்து போனது.

பிரதான கூட்ட அரங்கில் இலங்கைப் பிரதிநிதி அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் உரையும், பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் உரையும் இடம்பெற்றுள்ளன. இந்த உரைகள் மீதான உறுப்பு நாடுகளின் கருத்துரைகளும் இடம் பெற்றுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதி தான் இலங்கை விவகாரம் பிரதான கூட்டத்தொடராக இடம் பெறப் போகின்றது. அப்போது தான் விவாதமும், உறுப்பு நாடுகளின் ராஜதந்திரிகளின் உரையும் கருத்துரைகளும் இடம் பெறப் போகின்றன.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்மொழிந்துள்ள பிரேரணையும் அந்த நாள்களில்தான் விவாதத்துக்கு வரவுள்ளது. அந்தப் பிரேரணையின் நோக்கம் குறித்து அமெரிக்கா தனது கருத்தை முன் வைக்கும். அதன் பின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டை வெளியிடுவர். இலங்கை தனது பதிலை வழங்கும். தேவைப்பட்டால் வாக்கெடுப்பு நடக்கும்.

இந்த விவாதங்களும் வாக்கெடுப்பும் சில சமயங்களில் ஒரு நாளில் முடிந்து விடலாம். சில சமயங்களில் இரண்டு நாள்களுக்கும் இழுபடலாம்.

கூட்டத்தொடர் ஒரு மாத காலம் இடம்பெறுகின்ற போதும் இலங்கை விவகாரம் வரும் நாள்களுக்காகவே சர்வதேசம் காத்திருக்கின்றது.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை கொண்டுவந்த போது இருந்த நிலைமையை விட இம்முறை நிலைமை வேறுபட்டு நிற்பதை அவதானிக்கமுடிகின்றது.

கடந்த பிரேரணை வந்தபோது ஒரு மாதத்துக்கு முன்னரே அமைச்சர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்டவர்கள் களம் இறக்கப்பட்டிருந்தனர். இம்முறை இலங்கை சார்பில் 20,30 அதிகாரிகளே ஜெனிவாவில் அலைகின்றனர்.

முன்பு களமிறக்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட இலங்கை அமைச்சர்கள், அதிகாரிகள் ஜெனிவாவை முற்றுகையிட்டு அட்டகாசம் புரிந்தனர். இந்த முறை அந்த அட்டகாசத்தைக் காண முடியவில்லை.

தமிழ், முஸ்லிம் அமைச்சர்களை களம்இறக்கி அவர்கள் மூலம் அந்த இனங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சர்வதேசத்துக்குக் காட்ட கடந்த ஆண்டு அரசு முனைந்தது. அந்த முயற்சி எல்லாம் படுதோல்வியில் முடிந்த காரணத்தால் இம் முறை அதிகாரிகள்மட்டத்தைகளம் இறக்கியுள்ளது இலங்கை அரசு.



நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள், கனடா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இயங்கும் தமிழர் பேரவைகளின் பிரதிநிதிகள், உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் ஆகியோர் ஜெனிவாவில் ராஜதந்திரிகளுடனான சந்திப்புக் களை தொடர்ந்து நடத்திவருகின்றனர்.

# ஜெனிவாவில் நடப்பது என்ன?

## ஒரு பார்வை

### அரசின் பரப்புரை

அமெரிக்காவின் பிரேரணையைக் கண்டு கொள்ளப் போவதில்லை என்றும் ஆதரவு திரட்டப் போவதில்லை என்றும் அரசு பகிரங்கமாகக் கூறினாலும், அதிகாரிகள் மட்டக் குழு புதுவகையிலான ஆதரவு தேடும் படலத்தை ஆரம்பித்துள்ளது.

ஒருபுறம் அரசின் உயர்மட்ட அதிகாரிகள், சபையின் பிரதான கூட்டங்களிலும் பக்க நிகழ்வுகளிலும் கலந்து கொள்கிறார்கள். பக்க நிகழ்வாக ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களிலும் ஓர் அதிகாரி கலந்துகொள்வார். ''இங்கு முன்வைக்கப்படும் விடயங்கள் யாவும் பொய்" எனக் கூறிவிட்டு வெளியேறிவிடுவார். அது மட்டுமே அவருக்குத் தரப்பட்ட கடமை. அவரது உதவியாளர் மட்டும் அங்கு இருந்து குறிப்பு எடுப்பார்.

முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிப்பதை விடுத்து, அங்கிருந்து நழுவுவதுதான் இலங்கை அதிகாரிகளின் போக்காக இருப்பதை இம் முறை அவதானிக்க முடிகிறது.

கடந்த கூட்டத்தொடரில் இத்தகைய பக்க நிகழ்வுகளில் அமைச்சர்கள் மட்டக் குழு பங்குபற்றி எழுப்பப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்திருந்தது. இம்முறை நிலைமை மாறிவிட்டது.

மறுபுறம் உறுப்புநாடுகளின் ராஜதந்திரிகளை தமது கைகளில் போடுவதற்காக புதிய யுக்தியை இலங்கை முன்னெடுத்துள்ளது. ராஜதந்திரிகளைபெரியஹோட்டல்களுக்கும் களியாட்ட விடுதிகளுக்கும் அழைத்துச் சென்று நன்றாக கவனிக்கிறார்கள். இதற்காக பெரும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பணம் தண்ணீராய்ச் செலவழிக்கப்படுகிறது. அவர்களுக்கு பெறுமதியான நினைவுப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

அமெரிக்காவின்பிரேரணைக்கு எதிராக ஒன்றும் சொல்ல முடியாத நிலையில் அபிவிருத்தி, மீள்குடியேற்றம் போன்றவை தொடர்பாக அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகின்றது.

கடந்த தடவை பிரேரணை வந்தபோது புலம்பெயர்ந்துள்ள சிங்களவர்கள் போராட்டங்களை ஐ.நா. முன் நடத்தினார்கள். இலங்கைக்கு ஆதரவாகக் கோஷம் எழுப்பினார்கள். இம் முறை அப்படி [illegible] எதும் இதுவரை நடக்கவில்லை. புலம்பெயர்ந்துள்ள சிங்களவர்களைக் கூட அந்தப் பக்கத்தில் காணவில்லை.

### தமிழர் தரப்பு பதிலடி

இலங்கை அரசின் போக்கு இவ்விதம் காணப்படும் அதே வேளை. தமிழர் தரப்பு ஆதரவு தேடி முடுக்கிவிடப்பட்டுள்ள பரப்புரை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

கடந்த கூட்டத்தொடரின் போது ஜெனிவா பக்கமேவராத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இம்முறை நேரத்தோடு வந்து தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.சிறீதரன், பா.அரியநேந்திரன், வி.யோகேஸ்வரன் ஆகியோர் இருவாரம் தங்கி வெளிநாடுகளின் ராஜதந்திரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தினர்.

பக்க நிகழ்வான உப குழு கூட்டங்களில் அவர்கள் பங்கேற்றனர். பிரதான கூட்டத் தொடரில் பங்கேற்கவில்லை.

இதற்குப் புறம்பாக தமிழ் மக்கள் தேசிய முன்னணியினரும் ஜெனிவா வந்து தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். அக் குழுவின் உறுப்பினர்களில் இருவர் நாடு திரும்பிய நிலையில் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ந்து ஜெனிவாவில் தங்கி நின்று ராஜதந்திரிகளுடன் சந்திப்பு நடத்தி வருகின்றார்.

இவர்களைத் தவிர புலம்பெயர் நாடுகளில் இயங்கும் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஜெனிவாவில் முகாமிட்டு ஆதரவு தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள், கனடா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இயங்கும் தமிழர் பேரவைகளின் பிரதிநிதிகள், உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் ஆகியோர் ஜெனிவாவில் ராஜதந்திரிகளுடனான சந்திப்புக்களை தொடர்ந்து நடத்திவருகின்றனர்.

தமிழர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை ராஜதந்திரிகளுக்கு விளக்குவதற்காக பக்க நிகழ்வாகஉபகுழுக்கூட்டங்களை அவர்கள் ஏற்பாடுசெய்து நடத்துகின்றனர். இலங்கையில் காணாமல்போனோர் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பக்க நிகழ்வான உப- குழுக்கூட்டத்தில் காணாமற்போனோரை தேடிக் கண்டறியும் குழுவின் சார்பில் நவ சமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான சுந்தரம் மகேந்திரனும், காணாமற்போன ஊடகவியலாளர் எகனெலிகொடவின் மனைவி சந்திரிகா எகனெலிகொடவும்பங்குபற்றினர்.

காணாமற்போனோர் தொடர்பிலான விவரங்களைச் சமர்ப்பித்த நா.கஜேந்திரன், இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்தார். கொழும்பில் உள்ள மேற்குலக, ஐ.நா.ராஜதந்திரிகளை தமது நாடுகளுக்கு திருப்பி அழைக்க வேண்டும், அதன் மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என அவர் யோசனை ஒன்றையும் உப குழுக் கூட்டத்தில் முன் வைத்தார். காணாமல் போன தனது கணவனை மீட்டுத் தர ஐ.நா. உதவவேண்டும் என்று சந்திரிகா எகனெலிகொட மனு ஒன்றைக் கையளித்தார்.

தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இடம்பெற்ற உபகுழுக் கூட்டத்தில், இலங்கையில் இருந்து வந்த மனித உரிமை அலுவலர் நிமல்கா பெர்னாண்டோ உட்பட பல மனித உரிமை ஆர்வலர்கள் பல குற்றச்சாட்டுக்களை முன் வைத்தனர்.

தொடர்ந்து கொண்டிருக்கும் சபையின் கூட்டத்தில் இலங்கை மேலும் நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டி வரும். இவற்றுக்கு எல்லாம் பதில் கூற முடியாத நிலையில் இலங்கை திக்கு முக்காடி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைப்பொழுதில் சருமம் விழித்தெழ



புதிய கிளீன் அன் கிளியர் மோனிங் எனஜி ஃபேஸ் வொஷ்

இதிலுள்ள குமிழ்மணிகளில் அடங்கியுள்ள இயற்கை பழச்சாரங்கள் சருமத்துக்கு சக்தியளித்து, தினந்தோறும் காலைப்பொழுதில் முகத்துக்கு புதுப்பொலிவைத் தரும்.

## 3 வகை பழச்சாரங்களுடன்




பளபளபாக்கும் பெரி பழச்சாரத்தில் அடங்கியுள்ள இயற்கையான உயிர் வளியேற்ற எதிர்ப்பொருள் மற்றும் சலிசிலிக் அமிலம் இறந்த சரும கலங்களை அகற்றி, சூரிய கதிர் தாக்கத்தினால் உண்டாகும் எதிர்மறை விளைவுகளை கட்டுப்படுத்தி, சருமத்துக்கு பளபளப்பையும், பிரகாசத்தையும் பெற்றுத்தரும்.

புத்துணர்வூட்டும் லெமன் பழச்சாரத்தில் விட்டமின் சி கூடுதல் செறிவுடன் காணப்படுகிறது. இது சருமத்தின் மங்கலான பகுதிகளை பிரகாசமாக்கி, மேலதிக எண்ணெயை அகற்றி, துவாரங்களை இறுக்கமாக்கி, சருமத்துக்கு புத்துணர்வையும், புதுப்பொலிவையும் பெற்றுத்தரும்.

தூய்மையாக்கும் பச்சை அப்பிள் பழச்சாரத்தில் உயிர் வளியேற்ற எதிர்ப்பொருள் மூலக்கூறுகள் அடங்கியுள்ளன, இவை சரும கலங்கள், திசுக்கள் பாதிப்படைவதை தடுக்கும். இதிலுள்ள இலாத்தின், கொலாஜன் சருமத்தை தூய்மையாக்கி, இளமைப் பொலிவைப் பெற்றுத்தரும்.

ரூ.165 இலிருந்து

Response Marketing

Clean & Clear

f Clean & Clear Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான ஆண்கள் அதிகம் சம்பாதிக்கின்றார்களாம்







ஆஸ்திரேலியாவின் ஓய்வு பெற்ற முன்னாள் பொருளாதார நிபுணர் ஆண்ட்ரூ லெய்க். மெல்போர்ன் ப்ல்கலைக்கழக பேராசிரியரான ஜெப் போர்லேண்ட் ஆகியோர் தலைமையிலான குழுவினர் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர். அதில், மிக அழகான ஆண்கள் மற்றவர்களை விட 22 சதவீதம் அதிகம் சம்பாதிப்பது தெரியவந்தது. ஏனெனில் இவர்களின் கவர்ச்சிகரமானபார்வை பலரை வசீகரிக்கும். அதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்து வருமானம் பெருகுகிறது.

அதேநேரத்தில் பார்க்க அவலட்சணமக இருக்கும் ஆண்கள் வழக்கத்தைவிட 26 சதவீதம் வருமானம் குறைவாகவே ஈட்டுகின்றனர். பெண்களை பொறுத்தவரை அழகான பெண்களின் வருமானம் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருப்பதில்லை. ஏனெனில் ஒரு கத்தியில் இரு முனைகள் இருப்பதுபோன்றுஅதுவே அவர்களுக்கு பரச்சினையாகி விடுகிறது.

அழகான பெண்கள் வேலையில் புத்திசாலித்தனமாக நடப்பார்கள் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் பலரோ இவர்களின் அழகால் உற்பத்தித் திறன் பெருகுவதில்லை என்றே நம்புகின்றனர்.

இந்த தகவல் ஆய்வில் வெளியிடப்பட்டுள்ளது.

பூமி மீது ரியன் உமிழும் வெப்பம் வரலாறு காணாத அளவில் அதிகரிப்பு!

வரலாறு காணாத அளவுக்குப் பூமி மீது சூரியன் உமிழும் வெப்பம் அதிகரித்து இருப்பதாக அதிரவைக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

உலகம் முழுவதும் உள்ள 73 ஆராய்ச்சி நிலையங்கள் அளித்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில், 11,300 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த வெப்ப அளவைக் காட்டிலும் இப்போது 80 சதவிகிதம் வெப்பம் கூடியிருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய அத்தியட்சகருக்கு எதிராக கல்முனையில் ஆர்ப்பாட்டம்



மண்டூர், மார்ச் 17

கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலையில் தற்போது கடமையாற்றும் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம். ஜாபீருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று காலை கல்முனை வைத்தியசாலை முன்பாக இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை கல்முனை சமூக சீர்திருத்த அமைப்பும், தமிழ் இளைஞர் அணியினரும் இணைந்து நடத்தியிருந்தார்கள். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மணற்சேனை போன்ற இடங்களில் இருந்து அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர்.

அங்கு கூடியவர்கள் கைகளில் சுலோக அட்டைகளை ஏந்தியவண்ணம் கோசங்களை எழுப்பியவாறு வைத்திய சாலைக்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழினத்தின் துரோகியே வைத்திய சாலையை விட்டு உடன் வெளியேறு, ஜாபீர் எங்கள் வைத்தியசாலைக்குத் தேவையில்லை, நித்தியானந்தருக்கு ரஞ்சிதா ஜாபீருக்கு ஒரு...வைத்திய சாலையில் விடுதி இருக்கும் போது உமக்கு உல்லாச விடுதி தேவைதானா? ஜாபீரே வேலைசெய்வது அரச உத்தியோகம் அதைமறந்து நீசெய்திருப்பது படுபாதாளம் போன்ற சுலோக அட்டைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கல்முனை வடக்குஆதாரவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் இரண்டு வருடங்களாக கடமைப்பொறுப்பை ஏற்றதில் இருந்து இந்த வைத்தியசாலையை இல்லாமல் செய்வது அல்லது தரத்தை குறைப்பது என்பதில் மிவும் குறியாக இருந்துவருவதாகவும் இதனால் இங்கு வைத்தியர்களாகக் கடமையாற்றிய தமிழ் வைத்தியர்களை பதிலீடு இல்லாமல் இடமாற்றம் செய்வதோடு முஸ்லிம் வைத்தியர்களை நியமிப்பதில் குறியாகவும் இருந்து வருவதாகவும் ஆர்ப்பாட்டத்திற்கு வருகைதந்த மக்கள் கருத்துத்தெரிவித்தனர்.

இந்த வைத்தியசாலையில் பதினைந்துக்கும் மேற்பட்ட தமிழ்வைத்தியர்கள் கடமையாற்றியதாகவும் ஜாபீர் கடமைப் பொறுப்பை ஏற்றதில் இருந்து தற்போது 13ற்கும் மேற்பட்ட தமிழ்வைத்தியர்கள் பதிலீடு இன்றி வேறு வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். அத்தோடு இவ்வைத்தியசாலைக்கென்று அரசாங்கத்தினால் அனுப்பவைக்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை ஜாபீருக்கு விருப்பமான வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு விட்டன என்றும் கூறினார்கள்.

ஆர்ப்பாட்டம் நடந்துகொண்டிருந்த வேளை நாடாளுமன்ற உறுப்பினர் பொ.பியசேனவும் அவ்விடத்திற்கு வருகைதந்தார். அவர் மக்கள் முன் கருத்துக்கூறும்போது இந்த வைத்தியரை மாற்றுவதற்கான ஏற்பாடுகளை தான்செய்து தருவதாகவும் இதனை இந்த மாதத்திற்குள் செய்து தருவேன் எனவும் உறுதியளித்தார்.ஆர்ப்பாட்டத்தின் முடிவில் அமைச்சர் தயாரத்னவின் செயலாளர் சுனில் சந்திரலாலிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது.



மகா சிவராத்திரியை முன்னிட்டு மாதுமை அம்பாள் சமேத கோணேசப் பெருமானின் நகர் வலத்தின் இறுதி நாளான நேற்றுக் காலை அம்பாள் திருகோணமலை நகர சபை வீதியூடாக ஆலயம் நோக்கிச் செல்வதைக் காணலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனிவா பிரேரணை தொடர்பில்

# மன்மோகன் – சோனியா டில்லியில் மந்திராலோசனை





புதுடில்லி, மார்ச் 17

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவருகின்ற பிரேரணையை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியுடன் தீவிரமாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

புதுடில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்திலும் இலங்கை விவகாரம் தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி உள்ளிட்ட கட்சியின் முக்கிய தலைவர்கள் கொண்டனர்.

ஜெனிவா தீர்மானம் குறித்து ஆராய்வதற்கான இந்தக் கூட்டத்துக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி, நிதி அமைச்சர் ப.சிதம்பரம், சோனியா காந்தியின் அரசியல் செயலர் அகமட் பட்டேல் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதற்கிடையே, இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையில் இலங்கை போர்க் குற்றங்கள் குறித்தும், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்தும் தி.மு.க., அ.தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் பிரச்சினை எழுப்பின.

அதற்குப் பதிலளித்துப் பேசிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், "இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், நடுநிலையான - சுதந்திரமான - வெளிப்படையான விசாரணை தேவை என்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்துகிறது. இலங்கைத் தமிழர்கள் கௌரவமாக வாழத்தக்க வகையில், சமமான உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

இந்த நோக்கத்துடன் தான் ஜெனிவாவில் கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. அதேநோக்கத்தில் மத்திய அரசின் நிலைப்பாட்டை இறுதி செய்யும் பணிகளில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் மத்திய அரசின் நிலைப்பாடு நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்படும்'' என்று சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

''பிரேரணையை அமெரிக்கா சமர்ப்பிப்பதற்காக இந்தியா காத்திருக்கின்றது'' என்று கூறியிருக்கிறார் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன்.

''இலங்கையின் நடவடிக்கைகளை கடந்த ஆண்டு நாம் கடுமையாகக் கண்டித்திருந்தோம். அமெரிக்கா சமர்ப்பித்த பிரரேரணையை நாம் ஆதரித்திருந்தோம். எங்கள் நோக்கத்தை அதுவே பிரதிபலித்துவிட்டது'' என்றார் அவர். (உ-01)

# விலகிப் போய் விடுவோம்; கருணாநிதி மிரட்டல்

## வழமையான பாணியில் இம்முறையும்



ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படும் தீர்மானத்தில் இலங்கை படுகொலைகள் குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும். இந்த நிபந்தனையை இணைக்க இந்தியா உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய மத்திய அரசில் தொடராது என்று அதன் தலைவரான மு. கருணாநிதி எச்சரித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை தொடர்பில் இந்திய அரசு இன்னமும் தனது நிலைப்பாட்டை உத்தியோக பூர்வமாக அறிவிக்காமல் மௌனம் காத்துவரும் நிலையிலேயே கூட்டணி அரசின் பங்காளிக் கட்சியான தி.மு.கவின் தலைவர் கருணாநிதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற இனப் படுகொலை குறித்தும், அந்தப் படுகொலைக்குக் காரணமான போர்க் குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது குறித்தும், அப்படி அடையாளம் காட்டப்படுபவர்கள் மீது சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தி குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தை அமெரிக்க அரசின் தீர்மானத்தில் சேர்ப்பதற்கான முயற்சியை எந்த ஐயப் பாட்டுக்கும் இடம் கொடுக்காத வகையில் இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

அத்தகைய கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில், தி.மு.க. இந்திய அரசின் அமைச்சரவையிலே இனிமேலும் நீடிப்பதென்பது அர்த்தமற்றதாகி விடும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் தி.மு.க தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது .







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சம்பத் காசோலையினை உபயோகப்படுத்துபவராக இருந்தால், அது உங்களைப்பற்றி ஒரு நன்மதிப்பினை கூறும். ஸ்ரீலங்காவின் வங்கித்துறையின் ஆரம்பகர்த்தா என்ற மதிப்பினை வென்ற வங்கியில் கணக்கு வைத்திருக்கின்றீர்கள் என்று கூறும். நீங்கள் சமூகத்தில் அதி உயர் ஸ்தானத்தில் இருக்கின்றீர்கள் என்பதை முழு நாட்டிற்கும் அறியத்தரும்.

- சம்பத் பொது நடைமுறைக் கணக்குகள் - அதி துரிதமாக செயல்படும் நடைமுறைக் கணக்கு. உங்கள் காசோலைகளை வேகமாக செயல்பட வைத்து உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதோடு பல சலுகைகளையும் வழங்குகின்றது.
- சம்பத் சுப்ரீம் நடைமுறைக் கணக்குகள் - இந்த நடைமுறைக் கணக்கினை வைத்திருக்கும் எமது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் மூன்று வருடங்களுக்கு மேலாக கணக்கினை எந்தவிதமான குறைபாடுமற்று பேணி வருபவர்களுக்கு சேவையாற்றவே இந்தக் கணக்கு.
- சம்பத் கொடுப்பனவிற்கு உத்தரவாதம் அளிக்கும் காசோலைகள் - ஸ்ரீலங்கா வங்கித் துறையில் சம்பத் வங்கி எதிர்காலத்தின் தேவையறிந்து முதன் முதலாக அறிமுகப்படுத்தும் இந்த வங்கி முறை அதி நவீன கொடுப்பனவிற்கு உத்தரவாதம் அளிக்கும் சேவையாகும்.




சம்பத் காசோலைகள்
உங்களைப் பற்றி நிறைய பேசுகின்றது

இந்த சேவைகளை நாடளாவிய 209 வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

## உங்களது பணத்தை வீண் விரையமாக்கவோ அல்லது உயிரை ஆபத்தில் இட்டுச்செல்லவோ வேண்டாம்



பிரெண்டன் ஓ கொணர்
அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை தொடர்பான அமைச்சர்

இதுபற்றி மிகத் தெளிவாகக்கூற எனக்கு இடமளியுங்கள். மிகவும் நியாயமான ஒரு காரணமின்றி, எந்தவொருவருக்கும் புகலிடம் வழங்க, அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறானவர்கள் இலங்கைக்கு வரும் அடுத்த விமானத்திலேயே மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். எனவே, உங்கள் பணத்தை வீணாக விரையம் செய்ய வேண்டாம். உங்களது உயிரை ஆபத்தில் இட்டுச் செல்ல வேண்டாம்.

ஏற்கனவே இவ்வாறு இங்கு வந்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்திலும் இவ்வாறு வருபவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற மிக நியாயமான காரணம் இல்லையேல், துரிதமாக உங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க நேரிடும். அவ்வாறானவர்களுக்கு பணம் அல்லது வேறு எந்த வகையிலான ஒத்துழைப்புக்களும் கிடைக்க மாட்டாது என்பதைக் கூறவேண்டும். தனது பணத்தை வீண் விரையம் செய்து, உயிரைப் பணயம் வைத்து, கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு வர முயற்சி செய்வது சிறிதேனும் பயனுள்ள ஒரு முயற்சியல்ல. மீண்டும் இலங்கைக்கு வரக்கிடைப்பது மாத்திரமே அதன் ஒரேயொரு பிரதிபலனாகும்.

உங்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல பொய் கூறுவார்கள். பொய் சத்தியம் செய்வார்கள். அவ்வாறு வருபவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். எந்தவித துரித பிரதிபலனும் கிடைப்பதில்லை. எவ்விதமான விசேட கவனிப்புகளும் கிடைக்காது.

மிகவும் ஆபத்தான முறையில் மேற்கொள்ளப்படும் படகுப் பயணங்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது.

## அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை எவ்வாறு மாற்றியுள்ளது?

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதேச கொள்கைகளுக்கு அமையாத அனைவரும், துரிதமாக மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள்.

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்று மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வ கொள்கைகளுக்கு அமையாத இலங்கைச்


ஒரு ஜன்னல் இருக்கவில்லை. சூரியனைக் கண்களால் காணாது மூன்று வாரங்கள் நாம் நீண்ட தூரம் மிதந்து சென்றோம். உணவும், நீரும் மிகக் குறைந்தளவிலேயே எம்மிடம் இருந்தது. பசியும், வியர்வையும் தாங்க முடியவில்லை. நாங்கள் அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்ததும், சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் என்று எம்மைக் கைது செய்தனர். அவுஸ்திரேலியாவில் எமக்கு தொழில் இல்லை என்றும், வீணாக உயிரைப் பணயம் வைத்து இவ்வாறான ஒரு பயணத்தை மேற்கொள்ள முன்னர், சற்று சிந்திக்க இருந்ததாகவும் அவர்கள் எம்மிடம் கூறினர். நான் ஒரு பொறியில் மாட்டிக்கொண்டேன் என்பது அப்போதுதான் எனக்குத் தெரிய வந்தது. நான் நினைத்தவாறு எதுவுமே நடக்கவில்லை. IOM மூலமாக, எங்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. உயிரைப் பணயம் வைத்து, இவ்வாறான ஆபத்துமிக்க பயணத்தை மேற்கொள்ள நினைக்கவும் வேண்டாம் என்றுதான் நான் கூறுவேன்.”

(இதில் குறிப்பிடப்படும் பெயர் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளது)

## அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை ஏன் மாற்றியது?

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் சவாரிகளினால், மக்களைக் காப்பாற்ற அவுஸ்திரேலிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் அவர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. உயிரைப் பணயம் வைத்து இங்கு வந்தாலும், அவர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கு கிடைக்கும் ஒரேயொரு விடயம் யாதெனில், கையிலுள்ள பணம் விரையமாவதுடன் ஆழ்கடலில் தமது உயிரை மாய்த்துக்கொள்வதும் மாத்திரமே.

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் சவா...ல், மக்களைக் காப்...




## ஹஸிதவின் பயங்கரமான அந்த உண்மைச் சம்பவம்

“எனது பெயர் ஹசித. எனக்கு நன்கு அறிமுகமான ஒருவர் என்னிடம் வந்து “படகு மூலமா அவுஸ்திரேலியா செல்ல முடியும்” என்று கூறினார். சுமார் 20,000 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் என்றாலும், பணக் கஷ்டம் காரணமாக, படகில் அவுஸ்திரேலியா செல்ல நான் தீர்மானித்தேன். இதற்காக நான் வட்டிக்கு பணம் பெற்றேன். கடன்களை வாங்கினேன். வீட்டுப் பத்திரத்தையும் அடகு வைத்தேன். ஒரு நாள் இரவு சுமார் [illegible] எம்மை [illegible] படகில் ஏறியது. காற்று வரக்கூட படகில்

அவுஸ்திரேலியாவுக்கு படகில்
போக வேண்டாம்
Australian Government

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மாத நிலையான வைப்பு

15.5% நிலையான வைப்பு

16.5% சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு

உயர் நம்பிக்கை

உயர் சலுகைகள்

உயர் பாதுகாப்பு

| காலம் | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | சாதாரண | வ.மொ.வ.வி | சாதாரண | வ.மொ.வ.வி | சாதாரண | வ.மொ.வ.வி |
| 1 | 14.75% | 15.79% | | | 14.75% | 15.79% |
| 3 | 14.85% | 15.90% | | | 15.00% | 15.87% |
| 6 | 15.00% | 16.08% | | | 15.25% | 15.83% |
| 12 | 15.25% | 16.36% | 15.50% | 15.50% | 15.50% | 15.50% |
| 24 | 15.50% | 16.65% | 15.75% | 15.75% | 16.00% | 14.89% |
| 36 | 15.75% | 16.94% | 16.00% | 16.00% | 16.25% | 14.15% |
| 48 | 16.00% | 17.23% | 16.25% | 16.25% | 16.35% | 13.41% |
| 60 | 16.25% | 17.52% | 16.35% | 16.35% | 16.50% | 12.79% |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி
(55 வயதிற்கு மேற்பட்ட)

## லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

(ஒரு LOLC குழுமக் கம்பனி)

**லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி**

மின்னஞ்சல்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602



# Gold Medal Winning Brand in Malaysia
## Year 2011

fujipure
Breathe in life

## யாழ் குடா நாட்டு மக்களுக்கு ஓர் நற்செய்தி

**இப்போது நீங்கள் தங்க பதக்கம் பெற்ற Fujipure குளிரூட்டிகளை எமது யாழ் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.**

மிகச் சிறந்த விற்பனைக்குப் பிந்திய சேவை

## GLOBAL TECH AIR CONDITIONING & REFRIGERATION (Pvt) Ltd.

**கிளை அலுவலகம்**

320A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 221 9870
சுதர்ஷன் - 077 2106044
கோகுல் - 077 3204173
வெங்கட் - 077 3202854
கணேஷ் - 077 2106050

**தலைமை அலுவலகம்**

32, பத்தரமுல்ல வீதி, எத்துல் கோட்டே
தொலைபேசி: 011 5357773 / 4
தொலை நகல்: 011 2053060

மின்னஞ்சல்: adm.gtssl@sltnet.lk
இணையதளம்: www.globaltech-group.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இதுவரை தெரிந்திராத செவ்வாழையின் உன்னதமான பலன்கள்..!

எளிமையும், எண்ணற்ற சத்துக்களும் கொண்டது வாழைப் பழம். வாழைப்பழத்தில் பல வகை உண்டு. சிலவற்றில் உயிர்ச்சத்தும், சிலவற்றில் சுண்ணாம்புச்சத்தும், இரும்புச் சத்தும் காணப்படுகின்றன. பலரும் அரிய அளவிலேயே உட்கொள்ளும் செவ்வாழைப் பழம் பல மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது.

செவ்வாழையின் தாயகம் அமெரிக்க நாடுகளான கோஸ்டாரீகா, மற்றும் கியூபா எனக் கூறப்படுகிறது. இதில் உள்ள பீட்டா கரோட்டீன் கண்நோய்களை குணமாக்கும். செவ்வாழையில் உயர்தர பொற்றாசியம், உள்ளது. இது சிறுநீரகத்தில் கல் ஏற்படுவதை தடுக்கிறது. இதில் விற்றமின் 'சி' அதிகம் உள்ளது. செவ்வாழையில் ஆண்டி ஒக்ஸிடென்ட் காணப்படுகிறது. இதில் 50 சதவிகிதம் நார்ச்சத்து காணப்படுகிறது.

**மாலைக்கண் நோய். . .**

கண்பார்வையால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு செவ்வாழை சிறந்த மருந்தாகும். கண்பார்வை குறைய ஆரம்பித்தவுடன் தினசரி செவ்வாழை பழத்தை சாப்பிட, பார்வை தெளிவடையும்.

மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இரவு ஆகாரத்திற்குப் பின்னர் தொடர்ந்து 40 நாள்கள் செவ்வாழைப்பழத்தை சாப்பிட்டு வர மாலைக்கண்நோய் குணமாகும்.

**பல்வலி குணமடையும். . .**

பல்வலி, பல்லசைவு, போன்ற பலவகையான பல் நோய்களையும் செவ்வாழைப்பழம் குணமாக்கும். பல் தொடர்புடைய நோய்கள் ஏற்பட்டால் தொடர்ந்து 21 நாட்களுக்கு செவ்வாழை சாப்பட்டு வர ஆடிய பல் கூட கெட்டிப்படும்.

**சொறி சிரங்கு நீங்கும். . .**

சொறி, சிரங்கு, தோலில் வெடிப்பு போன்ற சரும நோய்களுக்கு செவ்வாழை சிறந்த நிவாரணம் தரும். சிரங்குக்கு மருந்து போடாவிட்டாலும், செவ்வாழைப்பழத்தைத் தொடர்ந்து ஏழுநாள்களுக்குச் சாப்பிட்டு வர சருமநோய் குணமடையும்.

**நரம்புத் தளர்ச்சி குணமடையும்.**

நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டால் உடலில் பலம் குறையும். ஆண்மைக் குறைபாடு ஏற்படும். எனவே நரம்பு தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் தினசரி இரவு ஒரு செவ்வாழைப்பழம் சாப்பிட்டுவரவேண்டும். தொடர்ந்து 48 நாள்களுக்கு செவ்வாழைப்பழம் சாப்பட நரம்புகள் பலம் பெறும். ஆண்மைத் தன்மை சீரடையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org